# தர்மாம்பாள்

ஓர் இனிய தமிழ் நாவல்

இது

பண்டித வி. கே. சுப்பிரமணிய சாஸ்திரியார்

இயற்றியது.

இரண்டாம் பாகம்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

சென்னை, திருவல்லிக்கேணி,

ஸ்ரீவித்தியா புஸ்தகசாலையாரால்

வெளியிடப்பட்டது.

1916

Copyright Registered] [விலை அணா 10

# தர்மாம்பாள்

## இரண்டாம் பாகம்.

### ஒன்பதாவது ஆச்வாஸம்.

### விபத்தரண ஸகாயம்.

குளித்தலை கோபாலசாமி அய்யர் ஏதோ ஒரு அநாத தாவார்சு வியாஜ்யத்தில் வாதியாயிருக்கிறாரென்றும் அதற்காகச் சுமார் லக்ஷ ரூபாய்வரையில் கடன்வாங்கி செலவழித்திருக்கிறாரென்றும் முன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறோம். அவருக்கு அந்த வியாஜ்யம் ஜயித்தால் சுமார் 15 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் கிடைக்கும்; அந்த வியாஜ்யம் அஸலில் அவருக்கனுகூலமானதின்மேல் பிரதிவாதிகளால் அப்பீல் செய்யப்பட்டு ஹைகோர்ட்டில் விசாரணைக்கு வந்திருந்தது. அதற்காக கோபாலசாமியய்யர் சென்னைக்குப்போயிருந்தார். அச்சமயத்தில் பட்டாபிராமய்யர் குளித்தலைக்கு வந்து தனது பெண் கமலத்துக்குக் கலியாணம் மதுரையில் நடக்கவேண்டியதாயிருப்பதால் முன்னமே செய்யவேண்டிய தேவதா பிரார்த்தனைகளை இராமபுரத்திலேயே முடித்துக்கொண்டு கலியாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே மதுரை போகவேண்டியிருக்கிறதென்றும், அதற்காக 20௳ செய்யவேண்டிய சுமங்கலிப்பிரார்த்தனைக்கு உன்னை அழைத்துப்போகவந்தேனென்றும் ஸாவித்ரியிடம் சொன்னார். அவள் அதைக்கேட்டுத்தனது பர்த்தா ஊரில்லாத சமயம் தான் பிறந்தகம்போவது அனுசிதமென்று யோசித்துப் பிறகு தர்மனுடன் கலந்து யோசனைசெய்தாள்.

ஸாவித்ரி:—அப்பா தர்மா! கலியாணத்திற்காக முந்தியே செய்யவேண்டிய ஸுமங்கலிப் பிரார்த்தனைக்கு நான் வரவேண்டுமென்று என் தமையன் அழைக்கவந்திருக்கிறார்; உனதபிப்பிராயமென்ன?

தர்ம:—அம்மா! கட்டளையிடுபவளைக் கேட்பதுபோல் கட்டளையின்படி நடக்கும் என்னைக்கேட்கிறாயே, உனதிஷ்டத்துக்கு மாறுவதுண்டோ?

ஸாவி:—நானதற்காகச் சொல்லவில்லை. உன் பிதாவின் உத்தரவன்றியில் நான் இவ்வீட்டைவிட்டு மற்றொரு இடத்திற்குப்போவது தகுதியன்று; அவரிப்போது இவ்விடத்திலில்லாமலிருப்பதால் அவருக்குப் பிரதிநிதியான உன்னைக் கேட்டு உனக்கது உசிதமாய்த் தோன்றினால் அவ்வாறு நடத்தலாமென்பது என் கருத்து.

தர்ம:—அம்மா! நீ சொல்வதைக் கேட்பதற்கு மாத்திரம் இப்பொழுது நான் கட்டுப்பட்டவனே தவிர அப்பாவுக்குள்ள அதிகாரத்தை எவ்விதத்திலும் செலுத்த நானருகனல்லன். ஆனாலும் நீ கேட்டதற்குப்பதிற்சொல்லாமலிருக்கலாகாதெனச்சொல்லுகிறேன்; நம்மகத்திலும் கலியாணத்திற்கு முன் தேவதா பிரார்த்தனைசெய்யவேண்டியதவசியம் தானே.

ஸாவி:—ஆம், செய்யவேண்டியதுதான், உன்பிதா வரவேண்டியதையெதிர்பார்க்கிறேன்.

தர்ம:—அப்படியிருக்க நீ இப்பொழுது இராமாபுரம் போகவேண்டிய தவசியமாய்த் தோன்றின், போய் வருவதில் யாதொன்றும் எனக் காக்ஷேபமில்லை.

ஸாவி:—பிறந்த வீட்டில் நடக்கும் சுமங்கிலிப் பிரார்த்தனைக்குப் பெண்கள் இருக்கவேண்டியதவசியமென்று ஸ்திரீ

ஸம்பிரதாயமறிந்தவர்கள் சொல்வார்கள். அதிலும் நான் மூத்தபெண்ணானதால் அவசியம் இருக்கவேண்டியதெனச் சொல்வார்கள்; உங்கள் அப்பா வரச் சில நாட்செல்லும் போலிருக்கிறது; அதற்குள் நான் திரும்பிவந்துவிடுகிறேன்.

தர்மன்:—நீ போவதிலும் எனக்காக்ஷேபமில்லை, நீ தாமதிக்காமல் திரும்பிவந்துவிடுவாய் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. நீ யிந்தச் சமயம் தனியாய் அவ்விடத்திற்குப் போவதில எனக்குச் சங்கை கொஞ்சம் உண்டாகின்றது.

ஸாவி:—என்ன சங்கை? அதைஸங்கோசமின்றிச்சொல்.

தர்மன்:-சங்கோசமென்ன உன்னிடம்சொல்ல, சொல்லுகிறேன் கேள். கொஞ்ச நாளைக்குமுன் உன்தமையன் உன்னிடம் வந்து தன் பெண்ணை எனக்குக் கொடுப்பதாய்க்கேட்க, அதை நீ ஒப்புக்கொள்ளாததின்பேரில் உன்னைப் பணம் கேட்டு அதற்கும் நீ மறுத்து விட்டபடியால், அவருன் பேரில் மிகுந்த கோபத்துடன் போயிருக்கிறார். அவருடைய குணங்களும் செய்கைகளும் அவ்வளவாகத்திருப்திகரமாய்க் கேட்கப்படவில்லை; அதனால் உன்னை இந்தச் சமயம் தனியாயனுப்ப என்மனம் துணியவில்லை; அப்பா ஊரிலிருந்தால் நானாவது பின்றொடர்ந்து வருவேன்; கடைசியாக நான் சொல்வது அப்பாவந்தபிறகு நீ போவதுதான் உசிதம்; உன்னையனுப்பும் அதிகாரமும் அவருக்கேயுள்ளது. பிறகு உன் உசிதம் போல் நீ நடந்துகொள்வதில் எனக்குத் தடையொன்றும் இல்லை.

இதைக்கேட்ட ஸாவித்ரீ கொஞ்சம் யோசித்தாள். தானும்தனது தமையனும் முன்றொருநாள் இராத்திரி பேசிக் கொண்டிருந்ததை இவன் எங்கேயோ பதுங்கியிருந்து கேட்

டிருக்கிறனென்று தீர்மானித்தாள். ஆனாலும் தாய்வீட்டில் நடக்கும் ஸுமங்கலிப்பிரார்த்தனைக்குத்தான் போகாமலிருப்பது தவறென்றும் தன்வீட்டுக் காரியங்களை யுத்தேசித்துத் தான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறதென்றும் தர்மன் சந்தேகிக்கிறபடி யாதொன்றும் கெடுதல் சம்பவிக்க நியாயமில்லையென்றும் ஒருவாறு தீர்க்காலோசனைசெய்து, மறுபடி தர்மனைப்பார்த்து "அப்பா தர்மா! நீ பயப்படாதே, இது வெள்ளைக்காரர் ராஜ்யம், ஒருவருக்கொருவர் கெடுதல்செய்யக்கூடிய காலமிதுவல்ல, இச்சமயம் நானவ்விடம் போகாமலிருந்தால் பலபேர் பல வார்த்தைகளைச்சொல்ல நேரிடும். உனது தகப்பனார் வந்தபிறகு போவதென்றால், அவர் வரும் சமயமின்னதென்று நிச்சயமாய்த் தெரியவில்லை. அவர் ஊருக்கு வரும் முன்னமேயே நான்போய் திரும்பி வந்து விடுவேன். அவர்ஸ்தானத்தில் நீ என்னையனுப்பவும் நியாயமுண்டு ஆகையால், நீ என்னைத்தடையில்லாமலனுப்பு" என்று நிர்ப்பந்தமாய்க்கேட்கும் சாவித்ரிக்குத்தர்மன் அனுமதிகொடுத்து அவள் தமையனுடன் இராமாபுரத்திற்கனுப்பிவிட்டுத் தனது பிதாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஸாவித்ரீ ஊருக்குப்போனபிறகு ஒருவருமில்லாத அவ்வீட்டில் சமையற்காரனாலளிக்கப்பட்ட ஆகாரத்தைச் சாப்பிட்டு 5, 6 தினங்களை நமது தர்மன் சிரமப்பட்டுத் தள்ளினான். பிறகு ஒருநாள் காலையில் தனது ஸ்நானஸந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு கொஞ்சம் சிற்றுணவருந்தி ஏதோ ஒரு புத்தகத்தைக்கையிலேந்தி ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்தான். அவனுக்கு மனதிலே கவலையிருந்தாலும் புத்தகத்தை யெடுத்தால் அவைகளெல்லாமகலும் வழக்கமுண்டு. அன்று அவன் மனதில் குடிகொண்டிருந்த கவலைகள் அவன் படிக்கும் புஸ்தகத்தில் ஒருவரிக்காவது அர்த்தத்தை மன

தில்வாங்க இடங்கொடுக்கவில்லை. புஸ்தகமும் கையுமாய் ஒரு திண்டிற் சாய்ந்து பின்வருமாறு சிந்திக்கலானான்.

"இன்றைக்குத் தைமீ தேதி 22 ஆய்விடுகின்றது; 30ெ கலியாணமென்றும், அதற்குப் புறப்பட முன்ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றும், கலியாணம் திருச்சிறுப்பள்ளியி லேயே நடக்கிறதென்றும் காமேசுவரன் இவ்விடம்வந்து சொல்லிவிட்டுப்போய் ஒருவாரமாகின்றது. மற்றப்படி அப் பெண்ணைப்பற்றி அவன் சொல்லியிருப்பனயாவும் நமது பிதா அப்பெண்ணைப்பார்த்துவந்தவுடன் சொல்லிய விஷயங் களால் உண்மையெனவே விளங்குகின்றன. நான் நேரில் பார்த்ததிலும், மந்தஹாஸத்தா லழகிய உதடுகளும் ஆகர் ணாந்தம் நீண்ட கண்களுமுள்ள அவளது முகத்தில் பிரகா சிக்கும் ஒருவித தேஜஸை அவளை நல்ல புத்திமதியென்றும், விதவிபாவதியென்றும், சீலவதியென்றும், விளக்குகின்றன. நாம் வெகுநாளாய் இப்படிப்பட்ட பெண்ணையே பாணிக்கிர ணம்செய்கிறதென்று நினைத்தபடி இப்பொழுது நேர்ந்தி ருப்பதைக் கருணாநிதியெனவும் தீனரக்ஷகனெனவும் சுருதி ஸ்மிருதி இதிகாஸங்களில் உத்கோஷிக்கப்பட்டிருக்கிறபடி பரமேசுவரனே முடித்துவைக்கவேண்டும். நற்காரியங்க ளுக்கு இடையூறுகள் அநந்தமென்று சொல்லியபடி அதற் கனேக அசந்தர்ப்பங்களுமிருக்கின்றனபோலும் தோன்று கின்றது.

அதாவது "இவ்விடம் வந்துபோன இராமபுரம்பட்டா பிராமணுக்கு நமது சிற்றன்னை எப்படியோ அப்படியே அப் பெண்ணின் சிற்றன்னையும் தங்கையே; அவனொரு பெரிய அயோக்கியன்; நம்மிடத்திலும் நம் சிற்றன்னையிடத்திலும் அவனுக்கு விரோதமுமிருக்கின்றது. நாம் கேள்விப்பட்ட

வரையில் மதுரையிலிருக்கும் அவனுடைய தங்கையும் அவ்வளவாக நல்லகுணமுள்ளவளல்லவென்று தெரியவருகிறது. அவனோ தனது பெண்ணுக்கு மதுரையில் கலியாணம் நடத்துகிறேனென்றும் அதுவும் 30உ நடக்கிறதென்றும் சொல்லிப்போயிருக்கிறான். சென்ற வருஷத்தில் அப்பெண் நம் மகத்திற்கு வந்திருந்தபோது பார்த்ததில் அவளையும் மணம் புரிய வொருவன் இருப்பானோவென நினைக்க வேறுவாக இருக்கிறது. திருச்சியில் நமது கலியாணம் நடக்கும் தேதியாகிய 30உயன்றே மதுரையில் அவன் தங்கையின் வீட்டில் தன் பெண் கமலத்துக்கும் கலியாணமென்று அவன் சொல்லியிருப்பது அஸம்பாவிதமாயிருக்கிறது; அவன் தங்கையாகிய மீனாக்ஷியன்றியில் இவ்விரண்டில் ஒரு கலியாணமும் நடக்க நியாயமில்லையே; இதிலேயேதோ விசேஷமிருக்கின்றது; நாமதை யறிந்தேதீரவேண்டும்."

இவன், இவ்வாறு சிந்தைகளால் கட்டுண்ட அந்தக்கரணத்தில் மற்றொரு விஷயத்திற்கு இடமில்லாமல் தவித்துக்கொண்டிருக்கையில் ஒரு வண்டிக்காரன் ஓடிவந்து பரபரப்புடன் திருச்சியிலிருந்து யாரோ ஒருவர் வந்திருக்கிறதாகவும் அவர் தர்மனை அவசரமாய் தேடுவதாயும்சொல்ல, உடனே எழுந்திருந்தான் தர்மன், பார்த்தான் காமேசுவரனை, தொலைத்தான் கவலையை,உடனே அவனை கையிற்பிடித்தழைத்துக்கொண்டு வந்து முன்னிருந்த ஊஞ்சற்பலகையில் உட்கார்ந்து,அடியில் வருமாறு சொன்னான்.

"மித்திரமனே காமேசுவரா! ஒருதேசத்தில் வெகுகாலமாய் மழையில்லாமல் எல்லாரும் தவித்துக்கொண்டிருக்கையில் பயிரிடுவதையன்றி வேறுதொழிலை யறியாத ஒரு குடியானவன் திடீரென்று ஸப்தகாளமேகங்களும் சேர்ந்து வே

ண்டியமட்டில் வர்ஷித்தால் எவ்வித சந்தோஷமடைவாளே அவ்விதமிப்பொழுது நானுனது ஸமாகமத்தால் ஆனந்திக்கிறேன். உனது பெயருக்குத்தக்கவாறு நீ நடந்துகொள்கிறாய். காமங்களென்றால்-விருப்பங்கள், ஈசுவரனென்றால்-ஆளுபவன். ஆகவே எல்லாருடைய அபீஷ்டங்களையு முசிதப்படி யளிப்பவனெனத் தாத்பரியமாகின்றது. அப்படிப்பட்ட பெயரை உனக்கிட்ட உன் தகப்பனாரை இப்பொழுதொருதரம் நமஸ்கரிக்கிறேன். எனது மாதாபிதாக்கள் ஒருவரும் இல்லாத இந்தவீட்டில் தனியே எவ்விதம் காலங்கழிப்போமென்று பரிதவித்துக்கொண்டிருந்த சமயத்தில் உன்னை நானிப்போ கடைந்தது நிதியைடைந்ததுபோல் தோன்றுகின்றது" என்று இவ்வாறுபிரியவசனங்கள் கூறிக்காமேசுவரனுக்குப்பிராதகாலத்துக்குரிய ஆதித்யஞ்செய்தான்.

காமேசுவரனும் உண்டுகளித்துச் சற்றுநேரம் வேடிக்கையாய்ப்பேசிக் கடைசியாய் தர்மனைப்பார்த்து "தர்மமித்திரமணே! நான்வந்தது நிரம்ப சௌகரியமான காலமெனவே நினைக்கிறேன்" என்றான்.

தர்ம:—சகே! ஆம் சௌகரியமான காலந்தான்; வீட்டிலொருவருமில்லாதபடியால் நாம் ஸ்வச்சந்தமாய் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், உன் முகத்தைப் பார்த்தால் நீ யேதோ ஒரு முக்கியமான காரியார்த்தமாய் இவ்விடத்திற்கு வந்திருப்பாயென நினைக்கவேண்டியதாயிருக்கிறது. அப்படி யேதாவது இருந்தால் நீ யிந்தச்சமயம் தாராளமாகவே சொல்லலாம்.

காமே:—நண்ப! நீ புத்திசாலியாயும் இங்கிதங்களையறிந்தவனாயுமிருப்பதால் எனக்குக்கொஞ்சம்கூடக்காரியங்க

ளில் கவலையில்லை. நீ இப்போதே புறப்பட்டு 10-மணி டிரெயினில் என்னுடன் திருச்சிக்கு வரவேண்டும்.

தர்ம:—காமேசுவரா! நீயென்ன இப்படித் திடீரெனக் கூப்பிடுகிறாய்; என்ன விசேஷம், இவ்வளவு அவசரத்திற்கு?

காமே:—காரணத்தைச் சொல்லாமலா உன்னை யழைத்துப்போவேன்; புறப்படு சீக்கிரம், வண்டி தப்பாமற்போகவேண்டும்.

தர்ம:—அவசியம் நான் வரவேண்டுமோ? அகத்தில் ஒருவருமில்லை. அப்பாவரும் சமயம் இன்னதென்று நிச்சயிக்க முடியவுமில்லை.

காமே:—அதற்குக்கவலைப்படாதே; சாயந்திரவண்டியில் நீ திரும்பிவந்துவிடலாம்; அவர்வந்தால் இனி ராத்திரிவண்டியில் தானே வரவேண்டும்?

தர்ம:—சரி, வருகிறேன், விசேஷத்தைச்சொல்?

காமே:— நீ இதைவிட்டுப் புறப்பட்டாயானால் திருச்சி வரையில் சொல்லிக்கொண்டே வருவேன்.

இதைக்கேட்ட தர்மன் குமஸ்தாவைக்கூப்பிட்டுத்தான் கொஞ்சம் அவசரகாரியமாய்க்கோட்டைக்குப்போய் சாயந்திரம் திரும்பிவந்துவிடுவதாய்ச் சொல்லி வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்து, காமேசுவரனுடன் புறப்பட்டான். சொந்தமாயுள்ள குதிரைவண்டியைக்கூடக் கவனிக்காமல் ஒரு வாடகைவண்டி யமர்த்திக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார்கள் இருவரும்.

வாசகர்களே காமேசுவரன் இவ்வளவு அவசரமாய்த்தர்மனையழைத்துப் போகவேண்டிய காரணத்தைப்பற்றிச்சற்றுக் கவனித்து விட்டு மேலேபோவோம்.

திருச்சியில் இந்தக்கலியாணம்தீர்மானமானபிறகு நமது காமேசன், பிரதிதினமும் அல்லது சௌகரியப்படாவிட்டால் இரண்டுநாளைக்கொருதரமாவது சுந்தரம் தர்மாம்பாள் இவர்களை, அவர்களிலும் தர்மாம்பாளைக்கட்டாயம் பார்த்துப் பேசாமலிருப்பதில்லை. இவர்களுடன் மதுரையிலிருந்துவந்த சுப்பு பேசிக்கொண்டிருந்ததினம் சாயங்காலம் காமேசன் தர்மாம்பாள் வீட்டிற்குப்போனான்.

அப்போது சுந்தரம் தான் படிக்கும் காலேஜில் யாரோ ஒரு துரை பிரசங்கஞ் செய்வதாய் அழைப்புக் கிடைத்ததின்பேரில் அங்கே போயிருந்தான். தர்மாம்பாள் மாத்திரமிருந்தாள். அவள் காமேசவரனைத் தனது ஸகோதரனாகப் பாவித்துத்தனது அந்தரங்கமான அபிப்பிராயங்களை வெளிக்காமலும் ஸ்வாபாவிகமான லஜ்ஜையைக்கூடப் பாராட்டாமலும் சொல்வதுண்டு. அதற்குக் காரணம் அந்தக் காமேசன் தனது தமையனுக்கும், தான் அடைய விரும்பியிருக்கும் பிராணநாதனான தர்மராஜனுக்கும் பிரியமித்திரனாகையாலும், தன் அம்மானுக்குப் பரம ஆப்தனாயிருப்பதாலும் அவனாலேயே இந்தக் கலியாணம் ஏற்பட்டிருப்பதை யவள் நன்றாக அறிந்துகொண்டிருப்பதாலும் அவளுக்கு அவனிடம் அவ்வளவு ஸ்வாதீனபாவம் உண்டாயிருந்தது.

அன்றைககு அவள் அந்தக் காமேசுவரனைக் கண்டவுடன் செய்யவேண்டிய நாகரிகமான மரியாதையைச் செய்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு "என்னடியம்மா தர்மாம்பா! இன்றைக்கு உனவதனம் ஆதபத்திலிருந்தப்பட்ட அம்புஜம்போல் வாடியிருக்கிறது" என்று கேட்க, அதற்கு தர்மாம்பாள், காலமே சுப்புவந்து சொன்ன சமா

சாரத்தை விடாமற்சொல்லித் தானும் சுந்தரமும் அவ்விதம் கலியாணத்தன்றை ராத்திரி மதுரையைவிட்டு வருகையில் தனது நாதனாகிய தர்மன் மதுரை ரெயில்வே ஸ்டேஷனி லிருக்கவேண்டுமென்றும், இந்தச் சங்கதியைத் தனது பிராணேசனிடம் காமேசனை முன்னிட்டுக் கொண்டுதனியிடத்தில் தானேநேரிற்சொல்லி அவனைத்தனது மனதாரப்பார்த்து ஆனந்தித்துப்பிறகு தான் மதுரைபோக வேண்டுமென்றும் சொல்லித தனக்குவந்த கஷ்டத்தைக்குறித்துத் துக்கித்து அழுதாள்.

அதற்குக் காமேசன் அவளை இனிய மொழிகளால் சமாதானம் செய்து தர்பனைத்தானேபோய் அழைத்து வருவதாயும் சொல்லி வந்தான். பிறகு காமேசன் தன் சொர்தக் குடும்பக் காரியத்தின் தொந்தரவால் உடனே குளித்தலை போகமுடியவில்லை. கடைசியாய் தைமீ 23வ யன்று சுந்தரமும் தர்மாம்பாளும் மதுரைக்குப் போக நாள் பார்க்கப் பட்டிருக்கிறதென்று தெரியவந்ததும் 21வ ராத்திரியே தர்மாம்பாள் காமேசுவரனுக்கு இச்செய்தியைத் தெரிவிக்க, 22வ குளித்தலைபோய் அழைத்துவந்தான். வரும்போது நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சொல்லித் தானழைத்துப்போகும் விஷயத்தையும் சொன்னான்.

தர்ம:—மித்ர! அவர்கள் அவ்வாறு அன்று இராத்திரி புறப்பட அசந்தர்ப்பமாய்ப் போய்விட்டால் கலியாணங்களெல்லாம் முடிந்தல்லவோ போய்விடும்.

காமே:—என்ன அசந்தர்ப்பம் நேரிடப்போகிறது, நானுமச்சமயம் அங்கிருப்பேனல்லவா? சுப்புவின்பிள்ளை உமாகாந்தனும் நாம் சொல்வதைக் கேட்கத் தயாராக இருக்கிறான். தர்மாம்பாளுக்கு வேண்டிய ஸ்திரீ ஸகாயத்திற்கும் சுப்பு விருக்கிறாள்.

தர்ம:—சரிதான். மானுஷபலம் நமக்குச் சரியாகவே இருக்கிறது, தெய்வபலமெப்படியோ? நாமிவ்விதமோசக்காரியங்களில் பிரவேசிக்கவேண்டாமே யென நினைக்கிறேன்.

காமே:—நீயெல்லாமறிந்தும் அறியாதவன்போல் பிதற்றுகின்றாய்; தெய்வ பலமில்லாவிடில் நீ யெவ்விதம் நடத்தினாலும் காரியம் நிறைவேறுவது முயற்கொம்புதான்; அவர்களை அவ்விதம் வஞ்சிக்காத பக்ஷத்தில் நம் கலியாணங்கள் எவ்விதம் நடைபெறும்.

தர்ம:—ஏன், எங்களுக்கிவ்விதமான கலியாணங்களில் இஷ்டமில்லையென்று சொல்லிவிட்டால்?

காமே.—உனது பிதா உனக்கிஷ்டமில்லாத காரியத்தில் உன்னைப் பிரவேசிக்கும்படி ஆக்ஞாபித்தால் நீ யவ்விதம் எனக்கிஷ்டமில்லையெனச் சொல்வாயா?

தர்ம:—சொல்லமாட்டேன், அவரப்படியென்னை ஆக்ஞாபித்தது தப்பிதமென்று அவரே அறிந்துகொண்டுத் தனது உத்திரவை மாற்றும்படியான எண்ணம் அவருக்குண்டாகும்படி நான் முயற்சி செய்வேன்.

காமே:—சரி, அப்படித்தான் இதுவும். பிதாவின் வார்த்தையைத் தட்டமுடியாமல் இவ்வுபாயத்தால் இச்சமயம் இந்த வியூகத்தைக் கடந்துவிட்டால், பிறகு தானாகவே அவர் இந்தக் காரியங்களை நடத்தும்படியாய்ச் செய்துக் கொள்ளலாமென்று உத்தேசம்.

இவ்வாறு இவ்விருவரும் பேசிக்கொண்டு மத்தியானம் 11½ மணிக்கு ரெயிலைவிட்டிறங்கி 12 மணிக்குக் குறிப்பிட்ட பங்களாவிற்கு வந்தார்கள்; அதனுட் புகுந்ததும் அங்கொரு அம்மாள் இவர்களை வாருங்களென்று எதிர்கொண்டழைத்து

ஸ்நானம் முதலான மத்தியான கிரியைகளுக்கு ஜலம் முதலியவைக் கொடுத்து போஜனம் செய்வித்தாள். பிறகு இவ்விருவரும் காற்றுவரக்கூடிய ஒருவிசாலமான அறையில் உட்கார்ந்தார்கள்; அப்போது அத்தம்மாள் எதிரில் வந்து நிற்க, காமேசுவரன் அவளைப்பார்த்து ஜானகி! தர்மாம்பாள் எங்கேயிருக்கிறாளென்று கேட்டான்.

ஜானகி:—இங்கேதானிருக்கிறாள், உங்களிடம்வர வெட்கப்படுகிறாள்.

காமே:—ஜானகி! ஸ்திரீகளுக்கு லஜ்ஜை ஒரு பூஷணம் தான்; ஆனாலும், சில முக்கியமான காரிய காலங்களில் அதைப்பாராட்டக்கூடாது என்பது அவளுக்கே தெரிந்தவிஷயம்; அதிலும் உன்னுடைய ஸாஹசரியமிருக்கையில் அவள் தாராளமாய் இங்குவரலாம்;

இதைக் கேட்டவுடன் ஜானகியம்மாள் அவ்வறையை விட்டு வெளியில் வந்து அவ்வறையின் வாயிற்படிக்குச் சமீபமாய் ஒளிந்துகொண்டு உள்ளே பேசும் பேச்சை கவனத்துடன் கேட்டுக்கொண்டிருக்கும் தர்மாம்பாளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு உட்சென்றாள். அப்போதுநமது தர்மாம்பாளும்தர்மனும்வெகுகாலமாய் கோரப்பட்ட அன்யோன்ய தர்சனத்தை ஸங்கோசமன்றியில் அனுபவித்தார்கள். கூட இருவர் இருந்தமையால் வெட்கத்தால் கொஞ்சம் குனிந்தார்கள்;

பிறகு இவர்கள் நமக்கு ஹிதகாரிகளை தவிர வேறில்லை யாதலால் நாம் "வழியில் பணப்பை கிடக்கையில் குருட நடை நடந்து பார்த்தவன்போல்" அனேக நாளாய் அபேக்ஷித்த அமிர்தம் ஹஸ்தகதமாயிருக்கையிலும்கூட அருந்தாமல் விடக்கூடாதென்று நினைத்துத்துணிந்து நிமிர்ந்

தார்கள். காது மூக்கு முதலான சகல அவயவங்களுக்கும் ரூபத்தைப்பார்க்கும் தன்மையைக் கொடுக்காத ஈசுவரனை அருமையறியாதவரென்று நினைத்தார்கள். தர்மாம்பாளின் கருமேகம்போன்ற கூந்தலின் அழகையும், அதைப்பின்னி அதனுட் செலுத்தியிருக்கும் புஷ்பங்களால் உண்டான அழகையும், இந்த அங்கத்தைப்பார் இந்த அங்கத்தைப் பார் என்று ஜாடையாகச்சொல்வதுபோல் பளீர் பளீர் என்று பிரகாசிக்கும் வைரபூஷணங்களால் சோபிக்கப்பட்ட மூக்கு காது முதலிய அங்கங்களால் அற்புதமாய் விளங்கு முகத்தையும், பாற்கடலிற் பரவியிருக்கும் பவழக்கொடிபோல் மந்தஹாசத்தால் மதிமயங்கச்செய்யும் அதரங்களையும், மற்ற கைகால் முதலிய சர்வாவயவங்களையும் தர்மன் கூச்சமற்றுப் பார்த்ததுபோல் அவளும் அவனுடைய ஸர்வாங்கங்களையும் பார்த்து, இருவரும் வாய்மொழியன்றியில் அசைவற்றிருக்கையில், ஜானகியம்மாள் காமேசுவரனைப்பார்த்து இனி நடக்கவேண்டிய சங்கதிகளை விவரிக்கலாமே என்றாள்.

காமே:—நமக்கொன்றும் பறுவில்லையே, சேர்க்கவேண்டியவர்களைச் சேர்த்துவிட்டோம், இனி அவரவர்கள் அவரவர்களின் மனதிலுள்ளவைகளைச் சொல்லிக்கொள்ளட்டும்; நாம் வேண்டுமானாலும் எட்டிப்போவோம் என்று சொல்லி, புன்முறுவலடைந்தான். இதைக்கேட்ட தர்மன் காமேசுவரா! உனது பரிஹாஸம் ஸார்வகாலிகமாக இருக்கிறதே என்ன, ஜானகியம்மாள் தர்மனைப்பார்த்து தங்களை இங்கு வரவழைத்த காரியம் அத்யல்பமே தவிர பெரிதில்லை யானதாலும், தாங்கள் விசேஷக்ஞர்களானபடியால் தங்களுக்கு ஒரு விஷயத்தையும் அதிகமாய்ச் சொல்வேண்டியதில்லை யாகையாலும், இப்போது சொல்லவேண்டிய இரண்டொரு வார்த்தையைச்சொல்லஎனக்குஉத்திரவுகிடைத்தால் சொல்கிறேன்,

என்றவுடன், தர்மன் அம்மா! என்னையும் குழந்தையாகவே பாவித்துக்கூச்சமற்றுச்சொல்லவேண்டியவிஷயத்தைச்சொல் லுங்களென்றான்.

ஞானகி:—தங்களுக்கு எனது குழந்தை தர்மாம்பாளைப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்க நாங்கள் ஏற்பாடு செய் திருப்பதும், என்குழந்தையின் ஹிருதயம் தங்களிடத்தில் லயித்திருப்பதும், அந்தகலியாணம் ஒருவிதமாக மாறியிருப் பதும், அதற்கு நாங்கள் செய்திருக்கும் உபாயமும் காமேச வர சாஸ்திரிகளால் தங்களுக்குத்தெரிந்திருக்கும்; அதற்கு மேல் சொல்லலாமா?

தர்ம:—ஆம், எல்லாமறிவேன். இவ்விஷயத்தில் நான் செய்யவேண்டிய காரியத்தைச் சொன்னால் அந்தப்படி நடக் கத் தயாராக இருக்கிறேன்.

ஞானகி:—என்னைப்போலுள்ளவர்களெந்தக்கலியாணங் களுக்கும் போகும் வழக்கமில்லாததால் நான் அக்காலத் தில் மதுரைக்கு வர நியாயமில்லை; என் ஸ்தானத்தில் எனது நாத்தனார் பெண் சுப்பு இருப்பாள், நீங்கள் செய்துகொள்ள வேண்டிய காரியங்களை நீங்களே ஒருவருக்கொருவர் சங்கே தம் செய்துக்கொண்டு குழந்தைதர்மாம்பாளும் தாங்களும் முப்பதாநதேதிக்கு மறுநாள் இவ்விடத்தி லிருக்கவேண்டும்.

காமே:—மித்ரமணே! நீசெய்யவேண்டியதுவேறொன்று மில்லை. 30வ இராத்திரி 8-மணிமுதல் மதுரை ரெயில்வே ஸ்டேஷனில் தயாராக இருக்கவேண்டியது ஒன்றுதான்உன் காரியம்.

தர்ம:—மனுஷ்யயத்தினத்தில் அவ்வாறு செய்யத்தவற மாட்டேனெனச் சொல்லத்துணிகிறேன்.

ஜானகி:—(தர்மாம்பாளைப்பார்த்து) குழந்தாய்! உனக்கேதாவது சொல்லவேண்டியதுண்டென்று சொன்னாயே, சொல்லலாமிந்தச் சமயம்.

இதைக்கேட்ட தர்மாம்பாள் ஒன்றும் பதிலுரைக்காமல் தலைகுனிந்தபடிநிற்க, ஜானகியம்மாள் அவளைப்பார்த்து குழந்தாய்! உனது லஜ்ஜையே உனக்கு அலங்காரமாயிருக்கிறது. ஆனாலும் இந்தச் சமயம் உனக்குச் சொல்லவேண்டியதைச்சொல் என்றாள்.

உடனே தர்மாம்பாள் தனது மடியிலிருந்து ஒரு கடிதத்தையெடுத்துவெட்கத்தினால் தலைகுனிந்தபடியே ஜானகியம்மாள் கையிற்கொடுத்தாள்.

அதையவள் வாங்கிக்காமேசுவரனிடம் கொடுத்தாள். அவனதை மேல்பார்த்து, ஸகே தர்ம! உனக்கு விலாஸமிட்ட இந்தக் கடிதத்தை நானுடைத்து வாசிக்கலாமாவென்று கேட்டான்.

தர்ம:—அதற்கென்ன ஆக்ஷேபம்?

காமே:—உனக்கு ஏதாவது ரகஸியம் எழுதப்பட்டிருக்கும்?

தர்ம:—என் ஆத்மாவே நீயாகவிருக்க ஏனிப்படி கேட்கிறாய்.

காமேசன் மந்தஹாஸஞ்செய்துவிட்டு அதைப்பிரித்துப் பின்வருமாறுபடித்தான்.

வாசகர்களே! அக்கடிதம் கீர்வாணபாஷையில் எழுதப்பட்டிருந்தமையால் அச்சொற்களின்சுவை குன்றாதிருக்க விரும்பி அதையப்படியே வரைகின்றோம். அப்பாஷை விளங்காதவர்களை யுத்தேசித்து அதன் கருத்தைத் தமிழிலும் கீழாக குறிப்பிட்டிருக்கிறோம்.

[illegible]

[illegible]

[illegible]

க்ஷேமம், கடிதம்.

என் மனதின் ஆசையாகிற இளங்கொடி சுற்றிக் கொள்ளக் கற்பகத்தருப்போன்ற எனது பிராணநாதருக் கெதிரில் அன்பு அடக்கம் இவைகளுடன் செய்து கொள் ளும் விண்ணப்பம்.

காவேரிக்கரையின் படிகளுக்கு அலங்காரமாக விளங் கிக்கொண்டிருந்த தங்களை நான் பார்த்தபோதே, பரமதய ையுள்ள தாங்கள் பிறருடைய கஷ்டத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் என் மனதை அபகரித்தீர்கள். அது முதல் பலமான பிரயத்னம் செய்தும் அதை (தங்களால் அபகரிக் கப்பட்ட மனதை) மறுபடி யடைய என்னால் முடியவில்லை. முடிவில், அபகரிக்கப்பட்டுப்போனசொத்தை மறுபடியடைய "எனது கையைத்" தாங்கள்மந்திரத்துடன் பிடித்தீர்களானால் கிருதார்த்தையாய் விடுவேன் என்பதே உபாயமெனத் தீர்மா னித்தேன். அக்காரியத்திற்கு இடையூறிருப்பதும் அதை விலக்க உபாயமும்தங்களுக்குத்தங்கள் அருமைத்தோழராகிய காமேசுவரசாஸ்திரிகள் முகமாய்த் தெரிந்தவிஷயமே. இவ்வி ஷயமாய் என்னைச்சேர்ந்தவர்கள் பிரார்த்தித்தார்களாயினும் நானும் பிரார்த்திக்கிறேன். அதாவது நாளது மாஸம் 30ௗ ராத்திரி மதுரை ரெயில்வே ஸ்டேஷனில்தாங்கள் அவசியம் வந்திருக்கவேண்டும். நானப்போது என் தமையன் ஸஹிதமாய் தங்களிடம் வந்து சேருகிறேன்.

இந்தக் கடிதம் அபலைகளுக்கனுசிதமான தைரியத்தை முன்னிட்டு எழுதப்பட்டதாகவாவது, ஸ்திரீகளுக்கு முக்கிய அலங்காரமாகிய நாணத்தைவிட்டுப்பிதற்றப்பட்டதாகவாவது நினைக்கக்கூடாது. கேவலம் ஆபத்தாகிற கடலில் முழுகின எனக்கும், தன்னைச்சரணமாக அடைந்தவர்களிடத்தில் மிகு

ந்த வாத்ஸல்யம் உள்ள தங்களுக்கும் எப்படியாவது சேர்க்கையுண்டாக வேண்டுமென எழுதப்பட்டதெனக்கருதவேண்டுகிறேன். இப்படிக்கு,

தங்களையே உயிராகவுடைய

"தர்மாம்பாள்" எனப்படும் ஊழியக்காரி.

தர்மனுக்கு இக்கடிதத்தைக் கேட்க கேட்கச் சரீரத்திலுண்டான விகாரத்திற்கோரளவில்லை. முகம் வியர்த்தது. உடம்பு சிலிர்த்தது. மார்பு படபடத்தது. மனது மயங்கி நின்றது. புத்தி பிரமித்தது. இவைகளையெல்லாமறிந்த காமேசன் தர்மனைப் பார்த்து "என்ன தர்மா! யுவதீஸமாகமத்திற்போல் உனக்கிப்போதே அவஸ்தா விசேஷங்களுண்டாகின்றன. தைரியத்துடன் விடையளிப்பாய் என்று யெதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு யாதொரு மனோரதத்தையும் முடிக்காமலிருக்கிறாயே என்றான். இதைக் கேட்ட ஜானகியம்மாள் மந்தஹாஸம் செய்தாள். தர்மாம்பாளும் தர்மனுடைய காதலகடாக்ஷத்தாற் கண்டுக்கொண்டு ஆநந்த பரவசமாய்,லஜ்ஜையை முன்னிட்டுக்கொண்டு குனிந்தபடி நின்றாள்.

இவைகளையெல்லாமறிந்த தர்மன் உடனே தன் மனதைச்சீர்திருத்திக்கொண்டு "அப்படியே செய்கிறேன்" என்றான். உடனே காமேசனுடைய கண்ஜாடையின்பேரில் ஜானகியம்மாள் தர்மனைப்பார்த்துத் தங்களை இங்குவரவழைத்தது இதற்காகமாத்திரமல்ல, வேறொரு காரியமுமுண்டு; அதாவது, தங்களைத்தவிர வேறொரு புருஷனுக்கும் கையைக்கொடுப்பதில்லையென யெங்கள் குழந்தை தர்மாம்பாளின் கொள்கையென்பது இப்போதைய நடவடிக்கைகளைக் கொண்டே தாங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். தங்களது அபிப்பிராய

மும் அப்படியே இருக்கலாமென்று ஊகிக்கின்றோம். ஆனு லும் தங்களுடைய தீர்மானமான அபிப்பிராயத்தைத் தங்கள் வாயால் கேட்டாநந்திக்க விரும்புகிறோம்" என்றாள்.

தர்ம.—நீங்கள் ஊகித்தது சுப்பிரதமாய் இருக்கலாமென்று எவ்விதம் தீர்மானித்தீர்கள்.

ஜானகி —நாங்கள் தீர்மானிக்கவில்லை. என்ன இருந்தாலும் புருஷர்கள் ஸ்வதந்திரர்கள். ஒரு காரியத்தைச் செய்யவும் செய்யாமலிருக்கவும் செய்யக் கருதியதை மாற்றவும் அவர்களுக்குச் சக்தியுண்டு.

தர்ம:—அப்படியெல்லாம் சந்தேகப்பட்டு மனம்குழம்ப வேண்டாம். நானும் உமது பெண்ணை தவிர வேறொரு கன்னிகையைக் கையால் பிடிப்பதில்லையென்றே நிச்சயித்திருக்கிறேன் நம்புங்கள்.

ஜானகி:—மிகச் சந்தோஷம். ஒருகால் உங்களிருவர் கலியாணத்திற்கும் ஏதாவது விக்கினம் உண்டானால்?

தர்ம:—அப்படியானல் உங்களுக்கென்ன உத்தேசம்? இவள் பெண்ணானதாலும் இவ்வருஷம் எப்படியும் கலியாணம் செய்தே தீரவேண்டியிருப்பதாலும் இவளை வேறு யாருக்காவது கொடுக்கவேண்டியதாகவே ஏற்படுமல்லவா?

ஜானகி:—அப்படியொருநாளுமில்லை. எவ்வகை இடையூறுகள் நேர்ந்தாலும் தங்களுதவியைக்கொண்டும் பகவான் கிருபையைக்கொண்டும் அவைகளை விலக்கிக்கொண்டு எவ்வித அசந்தர்ப்பங்கள் நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல் தங்களுக்கே வாழ்க்கைப்படுவதாயும் அப்படி நேராவிடில் பிராணதியாகம் செய்வதாயும் இவளது தீர்மானம்.

தர்ம:—நானும் உங்கள் பெண்ணையே பாணிக்ரகணம் செய்கிறதென்றும் அது நேராவிட்டால் விவாகத்தையே மறுத்து விடுகிறதென்றும் தீர்மானித்திருக்கிறேன்.

ஜானகி:—இது ஸத்யம்தானே?

தர்ம.—(காமேசுவரன் முகத்தைப் பார்த்தான்.)

காமே:—ஜானகி! இதற்குமேல் நீ கேட்பது விரஸமாக ஆகும். கதிரவன் குளிர்ந்தவனாக ஆனாலும் நமது தர்மனுடைய வாக்கியம் மாறாது.

ஜானகி:—நாளையதினம் குழந்தைகளை மதுரைக்கு அனுப்பிவிடுவோமா?

காமே:—சரி உத்தேசித்தபடி செய்கிறது.

இம்மட்டில் அந்த கோஷ்டி கலைந்தது.

வாசகர்களே! சுந்தரேசன் தர்மாம்பாள் இவர்களுடன் மதுரையில் 'மீனாக்ஷி செய்திருக்கும் சூதையும், அதற்குத் தான் செய்திருக்கும் ஆலோசனையும் சுப்பு ஒருவருமறியாமல் கூறினதாக முன் சொன்னோமே, இபபொழுது ஜானகிக்கு எவ்வாறு தெரிந்ததென்று ஸந்தேகிக்கலாம், அதை நிவர்த்தித்து மேலே போவோம்.

மதுரையிலிருந்துவந்ததும் சுப்பு முதலில் ஜானகியம்மாளுடன் கொல்லைப்பக்கத்தில் பேசிக்கொண்டிருந்ததை தர்மாம்பாள் கண்டதாய்ச் சொன்னோமல்லவா அப்போதே தானுத்தேசித்துவந்த சமாசாரங்களைச்சுருக்கமாய் ஜானகியினிடஞ்சொல்லி அவளனுமதியின்பேரிற்றான் மாடிமேல்வந்து சுந்தரத்துடனும் தர்மாம்பாளுடனும் சொல்லி முடித்தாள்.

# பத்தாம் ஆச்வாஸம்.

## அநிஷ்டப்பிராப்தி.

தைமீ தேதி 29 வந்துவிட்டது. குளித்தலையில் நமது தர்மன் காலை 8-மணி சுமாருக்குத் தனியாய் உட்கார்ந்து கவலையுள்ள மனதை முகத்தால் வெளிப்படுத்திக் கொண்டு பின்வருமாறு சிந்திக்கலானான்.

இதென்ன விபரீதம்! நமது உத்தேசங்களை யெல்லாம் தெய்வம் அன்யதாவாகவே மாற்றிவிடுகிறதே. நாளை தினமல்லவா முப்பதாம் தேதி. கலியாணம் பங்கத்தை யடைந்திருப்பது எனக்கு மட்டில் தெரிந்திருக்கிறதே தவிர எனது மாதா பிதாவுக்குத் தெரிய நியாயமில்லையே. இந்தக்ஷணம் வரையில் பிதாவும் பட்டணமிருந்து வரவில்லை. மாதாவும் 2-நாளில் வருவதாய்ச் சொல்லிப்போனவள் பத்து நாளாகியும் வந்தபாடில்லை; இதில் ஏதோ அலம்பாவிதமிருக்க வேண்டும். பிதா வராததற்குக் காரணம் நமது கேஸ் ஒருகால் விரோதமாய் முடிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இன்றையதினம் கலியாணத்திற்காகப் புறப்படவேண்டியதால் கடைசியாய் நேற்றிராத்திரியாவது அவரிவ்விடம் வந்து சேர்ந்திருக்கவேண்டும். அப்படி யந்த கேஸ் நமக்கு விரோதமாய் முடிந்திருந்தால் அதன் மூலமாய் நமக்கேற்பட்ட கடன்களை நமதுசர்வசொத்துக்களையும் விற்றே கொடுக்கவேண்டியதாய் நேரிடும். ஏதோ ஈசன் எவ்விதம் வழி விடுகிறானோ தெரியவில்லை. எவ்விதமானாலும் அனுபவித்துத்தீர்ப்போம்.

எனக்கிந்தச் சங்கதியைக்காட்டிலும் அம்மா வராதகாரணம் தான் மிகவும் மனத்தளர்ச்சியைக் கொடுக்கின்றது.

அவள் சகோதரனோ சொத்தை யிழந்தவன், அயோக்யன், மனுஷ்யர்களிடம் தாரதம்யதைப் பாராமல் அக்ரமம் செய்பவன், இவளோ சுமார் லக்ஷரூபாய்களுக்கு மேலான மதிப்புள்ள சகலாபரணங்களுடனும் போயிருக்கிறாள்; முந்தியே அவனிவளைப் பணம்அல்லது நகைகேட்டு இவள் மறுத்திருக்கிறாள். இவைகளை யோசித்தால்; தர்மகுணமும் ஸத்யசீலமுமுள்ள இவள் இந்த ஆபரணங்களால் ஏதாவது ஹிம்ஸையையடைந்திருக்கவேண்டும்; ஆனாலிவ்வித பரியாலோசனை முந்தியே எனக்குண்டு. ஆபரணங்களில் அவளுக்கு சர்வதா பிரீதியானதால் அவற்றைக் கழற்றி வைத்துவிட்டுப் போகச் சொல்ல அச்சமயம் என் மனது கூச்சத்தை யடைந்தது. எப்படியும் வருவன வந்தே தீரும்.

"ஸா வெஷவமதா லக்ஷீஸஞ்சிதம் ச விநஶ்யதி"

"இலக்ஷ்மியிலிகழ்விட்டால் சேர்த்துவைத்தபொருளும் போய்விடும் என்று சொல்லப்பட்ட பழமொழிவீணாகாது"

என்றிவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில், தபாற்காரனால் கொடுக்கப்பட்ட ஒரு கடிதத்தை வேலைக்காரன் வாங்கிக்கொண்டு வந்து தர்மனிடம்கொடுத்தான். தர்மன் அதைப் பரபரப்புடன் வாங்கி தபாலாபீசு முத்திரையைப் பார்த்தான். சென்னை மைலாப்பூர் தபாலாபீஸ் முத்திரை யிருந்ததைக் கண்டு, நமது தகப்பனார் எழுதிய கடிதமாகவே இருக்கவேண்டும் என்று நினைத்துக் கவலையுடன் உடைத்து அதைப்பின்வருமாறு வாசித்தான்.

கடிதம். மைலாப்பூர், சென்னை.
தைமீ 28-ந் தேதி.

க்ஷேமம்.

"எனது செல்வச் சிரஞ்சீவியாகிய தர்மனுக்கு உனதன்புள்ள பிதாவின் ஆசிர்வாதம்—

சென்ற புதன்கிழமைதினம் நமது கேஸ் முடிவு சொல்லப்பட்ட சங்கதியை நானுனக்குத்தெரிவிக்க விசனிக்கிறேன். அது நமக்கு விரோதமாய் முடிந்ததுடன் இதுவரையிலுள்ள செலவுகளையும் நாம் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படி தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கிதுதான் ஒரு பெரிய அனர்த்தமாய்த்தோன்றுகிறது. பிரிவிகௌன்ஸிலில் அப்பீலுக்கு ஹைகோர்ட்டில் உத்தரவு கிடைத்திருக்கிறது; நமது வக்கீல் ஜான் மாரிஸ்டன் என்பவர் எப்படியுமிந்த கேஸ் நமக்கு ஜெயிக்காமற் போகாதென்று உறுதியாய்ச் சொல்லி, தானே லண்டன்போய் வாதம் செய்வதாய் வகாலத்து வாங்கிக்கொண்டிருக்கிறார்; அதற்கிப்போது குறைந்தது பதினாயிர ரூபாய் வேண்டியதாயிருக்கிறது; இனி நமக்கு நம்பக்கத்தில் கடன் கிடைப்பது அரிதாயிருக்குமென்று நினைத்து இவ்விடத்தில் மதராஸ் பாங்கியில் ரூபாய் பதினாயிரத்திற்கு ஏற்பாடுசெய்திருக்கிறேன்; இவ்விடத்திய காரியங்களை எப்படியாவது முடித்துக்கொண்டுதான் நான் வருவதாய் உத்தேசம்; நீ யிதற்காக அதிக கவலையை மனதிலடைந்து சரீரத்திற்கு விபாதியை வரவழைத்துக்கொள்ளாதே; "வருவன வந்தேதீரும்." கலியாண சந்தர்ப்பத்தை சித்திரை மாதத்தில் வைத்துக்கொள்வோமென்று வல்லப சாஸ்திரிகளுக்கும் காமேசுவரனுக்கும் எழுதிவிட்டேன்; உன் தாயாருக்கு தைரியம் சொல்லி, நானில்லாத காலத்தில் அவளையோரிடத்திற்கு மனுப்பவேண்டாம். நமது கக்ஷிக்காரர்களின் காரியங்களைச் சரியான காலங்களில் கவனித்து வரும்படி கிருஷ்ணசாமி ஐயருக்கு மற்றொரு தடவை ஞாபகப்படுத்தவும்.

உனதன்புள்ள பிதா
கோபாலசாமி அய்யர்.

இக்கடிதத்தைப் படித்தவுடன் நமது தர்மனுடைய மனம் பட்டபாட்டிற்கோரளவில்லை. சற்றுநேரம் திக்பிரமம் பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். குறைவு வந்துவிட்டபடியால் நாமினிமெப்படி பழைய மதிப்புடன் வெளிச்செல்லலாமென்று துக்கித்தான். பிரதிவாதி தனது செலவுக்காக நிறைவேற்றி வரும்பக்ஷத்தில் நாமெவ்விதம் அவனுக்கு வகை செய்வதென்று தபித்தான். கடன் நிர்ப்பந்தங்களுக்காக நமது சொத்துக்களை விற்போமென்றாலும் இதையறிந்தவர்கள் ஹீனகிரயங்களுக்கு கேட்பார்களே என்று பயந்தான். நமதன்னை இவ்விடம் இப்போதில்லையானதால் அவளுக்கிந்த துயரச்செய்தியைச் சொல்ல நேராததைப்பற்றி ஒருவாறு சந்தோஷிக்கிறோமென்றாலும் நமது பிதாவின் ஸங்கற்பத்திற்கு விருத்தமாய் நாமவளை யனுப்பிவிட்டோமே யென்று கலங்கினான். இவ்வளவோடில்லாமல் நமது தாயைப்பற்றிய சமாசாரம் ஒன்றும்தெரியாதபடியால் இது நாமாகச்செய்துகொண்ட அனர்த்தமாகையால் புத்திபிசகுப தடுமாறுகின்றது என்று உருகினான்.

இவனிவ்வாறு துக்கக்கடலில் நீர் மனுஷ்யனுடைய தொழிலைச் செய்துகொண்டிருக்கையில், ஒருவர் திடீரென்று எதிரிற்றோன்றி, "என்னப்பா தர்மா! எல்லாம் படித்தும் உலக நடையறிந்தும் கர்மகதிகளை விலக்க முயலுகின்றவன் போல் தபிக்கின்றாய்? இந்தக் கேஸ் தோற்றுவிட்டதால் உனக்கு எப்போதுமுள்ள கௌரவமும்சொத்தும் குறையப் போகிறதில்லை; சொற்ப கடன்கள் ஏற்பட்டு விட்டனவே என்று சிந்திக்கவேண்டிய தவசியம். உனது தகப்பனார் இரண்டுமாசம் கொஞ்சம் அக்கறையுடன் தன் தொழிலை நடத்தினாரானால் இதைப்போல் மூன்று பங்கு கடன்களானாலும் பயப்படாமல் ஊதிவிடலாம்; நீ கவலைப்படாதே" என்று

சொன்ன வார்த்தைகளைக் கேட்ட தர்மன் திடுக்கிட்டு எழுந்திருந்து, வாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர்! என்று கூப்பிட்டு உட்காரவைத்து என் மனக்கவலையால் தாங்கள் வந்ததைக்கூட நான் கவனித்தவனல்லன். அவ்விஷயத்தைப் பற்றி மன்னிப்பு கேட்கிறேன் என்றான்.

கிருஷ்ண:—அப்பா தர்ம! நீ யெனக்கு உபசாரம் செய்யவில்லையென்று நான் கோபிக்கவில்லை. உன் தகப்பனாரிடமிருந்து, கேஸ் தோற்றுப்போய்விட்டதென்று இப்போது தான் கடிதம் கிடைத்தது. அதில் உனக்குத் தைரியம் சொல்லும்படி எழுதியிருக்கிறது. அதைக்கண்ட உத்தர க்ஷணமே இங்கு வந்தேன்.

தர்ம:—தாங்கள் எங்களுக்குச் செய்யும் உபகாரத்திற்குப் பிரதி செய்ய நாங்கள் சக்திடற்றவர்களா யிருக்கிறோம்; எனக்குமிப்போதுதான் கடிதம் கிடைத்தது. அதில் தனது கோர்ட்டு வேலைகளைப்பற்றித் தங்களிடம மற்றுமொரு தடவை ஞாபகப்படுத்தும்படி அப்பா எழுதியிருக்கிறார். தாங்களே தற்செயலாய் இவ்விடம் வந்துவிட்டீர்கள்.

கிருஷ்ண:—உங்களுக்கென்னலாக வேண்டிய காரியங்களில் நானெப்போதும் ஊக்கத்துடனிருக்கிறேன். நானுங்கள் தகப்பனாரால் முன்னுக்கு வந்தவன். நான் சுமார் ஐந்து வருஷங்களுக்குமுன் வக்கீல் பரீட்சையில் தேறி இவ்விடம் வந்து கொஞ்சநாளிருந்து வக்கீல் வேலையின் தந்திரங்கள் தெரியாமையால்வரும்படி கிடைக்காமற்போனதுபற்றிஇனி நமக்கிந்த வக்கீல் தொழில் உதவாதென்று நினைத்து வேறு எதாவது வேலையில் சொற்பசம்பளத்திற்காக அமர்ந்துவிட ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன்; அப்போதுன் பிதா என்னைத்தடுத்துச் சிலதந்திரங்கள் சொல்லிக்கொடுத்து

கொஞ்சகாலவரையில் தன்னிடம் வரும் சில்லரைக்கேஸ்களையென்னிடம் தள்ளிவிட்டும், சிலபெரியகேஸ்களில் தான் கூட இருந்து என்னைப்பேசச்செய்தும் கடைசியாய் சொற்ப காலத்தில் என்னை ஒரு பிரபல வக்கீலாகச்செய்துவிட்டார். நானிப்போது ஏராளமான வரும்படியடைந்து வருவதோடும் கிடைத்த முனிசீப்வேலையைக்கூட மறுத்துவிட்டேன். இவ்வளவும் உன் தகப்பனார் அனுக்ரகமே.

தர்மா:—சரி, நிரம்ப சந்தோஷம், என்னையுத்தேசித்துத் தாங்கள் இவ்வளவுதூரம் வந்ததைப்பற்றி நான் நன்றியுள்ளவளா யிருப்பேன்.

கிருஷ்ண:—நானிப்போது இந்த இடத்திற்கு வந்ததில் எனக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை. நீ ரிவினியூ கிரிமினல் இந்தப் பரீட்சைகளை ராஜதானிக்குள் முதன்மையாய்த் தேர்ந்திருக்கிறாய். உன்னை நமது கலெக்டர் ஒரு லீனியர் அபேக்ஷகராக எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் இந்தவருஷ மார்ச்சுமீ 31வுக்குள் உனக்குக்கட்டாயம்சப்மாஜிஸ்ட்டிரேட் வேலையாய்விடும். அப்போது நீ யிருக்கும் இடத்திற்கு நான் என் தொழில் முறைமையில் ஓடிவந்து உன்னிடம் நின்று பேசவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில்ஒருபையன் கையிலொரு சிவந்த வர்ண லகோடாவை யெடுத்துக் கொண்டு 'ஒரு தந்தி வந்திருக்கிறது' அய்யருக்கு, என்று சொன்னதும், வாசற் காவலாயிருந்த வேலைக்காரன் அதை வாங்கிவந்து தர்மனிடம் கொடுத்தான். தர்மன் கவரைக் கண்டதும் தந்தியெனத் தெரிந்துகொண்டு அதனுடனிருந்த சிறுகடிதத்துண்டில் கையெழுத்துச் செய்து, இரண்டணா பணத்துடன் அதை எடுத்துவந்த பையனிடம்

கொடுக்கச்சொன்னபிறகு, லக்கோடாவை உடைத்து அதி லுள்ள தந்திசமாசாரத்தைப் படித்தான்.

தந்தி. ஈரோட்.

காலை 7-மணி 45-நிமிஷம், தைமீ 29-தேதி.

தர்மராஜ அய்யர்.

வக்கீல் கோபாலசாமி அய்யர்குமாரர்.

குளித்தலை.

"ஸாவித்ரீ மிகுந்த அபாய ஸ்திதியில் இருக்கிறாள். உடனே புறப்பட்டு ஈரோட் லக்ஷ்மி விலாச பங்களாவிற் பார்க்கவும் ரத்னவல்லி"

என்று எழுதியிருந்தது. இதைப் படித்தவுடன் தர்ம னுடைய சித்தம் கலங்கிற்று. முகம் வெளுத்தது. கண்களில் நீர்பெருகிற்று, உடம்புசோர்ந்து சாய்ந்தான். 'அம்மா; இனி நானென்ன செய்வேன்' என்று கூவினான்.

இதையெல்லாம் பார்த்திருந்த கிருஷ்ணஸாமி ஐயர் "தர்மா! ஏதாவது கஷ்டங்கள்நேர்ந்தால் அவைகளைப் பரி ஹரிப்பது எவ்விதமென்று யோசித்தலே புருஷனுக்கு லட் சணம். கஷ்டம் நேர்ந்தவுடன் முன்பின் பாராமற் புலம்பு வது கேவலம் ஸ்திரீகளின்காரியம்" எழுந்திரு இதற்குமேல் யோசிப்போம் என்றார்.

தர்மா:—ஐயா! நான் எனது தாயை பால்யத்தில் இழந் துவிட்டேன். பிறகு கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இவள் எனது தந்தையின் கிருகத்திற்குவந்துவிட்டாள். அதுமுதல் அவள் என்னிடம் வைத்திருக்கும் அன்பிற்கும் அவள் என்னைச் சீராட்டி வளர்த்த அழகிற்கும் நான் நூறு ஜன்மம் அவளுக்குழைத்தாலும் போதாது அவள் எனக்கு மாற்றாந் தாய் என்பது சிலருக்கே தெரியும். இவள் என்னை நடத்தும்

விதத்தினுல் நான் தாயை யிழந்ததே எனது பாக்கியமென்று நினைத்திருக்கிறேன், இவளுக்கு, தன்வயிற்றில் பிறந்த குழந்தைகளைக்காட்டிலும் நானதிகமென்பது அனேக சமயங்களில் எனக்கு விளங்கியிருக்கின்றது.

கிருஷ்ண:—அப்படி யிருப்பதாற்றான் உன் தகப்பனுர் பேருக்கனுப்பவேண்டிய தந்தியை உன் பேருக்கனுப்பச் சொல்லி யிருக்கிருள் என்று நினைக்கிறேன்.

தர்மன்:—அப்படியுமிருக்கலாம்,

கிருஷ்ண:—தந்தியனுப்பியிருக்கிறது ஒருஸ்திரீயெனத் தோன்றுகிறது. ரத்னவல்லியென்பவள் யார்? உனக்குத் தெரியுமா? உனது தாய் ஈரோட்டிற்கு எந்தக்காரியமாய்ப் போயிருக்கிருள்? ஈரோடிலிருக்கும் "லக்ஷ்மீவிலாஸ்" என்கிற பங்களாவை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்; அது கோயம்பத்தூரில் பெரிய மிட்டாதாராகிய ஜம்புலிங்கய்யருக்குச் சொந்தமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

தர்மன்:—எனது தாயாருக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவருமுண்டு. அவள் சகோதரிகள் மூவரில் கடைசியானவளுக்கு ரத்னவல்லியெனப் பெயரென்று என் தயார் சொல்ல நானறிவேன்; அவளை உள்ளூரிலேயே கொடுத்திருக்கிருர்களென்றும் அவள் புருஷன் மிகுந்த சொத்துள்ளவரென்றும் கேள்வி. ஆனல் எனக்கு அவர் பெயர் இன்னதென்று தெரியாது.

கிர்ஷ்ண:—ஒருகால் இந்த ரத்னவல்லி உன் தாயின் தங்கையாய் இருந்தாலும் இருக்கலாம். உனது தாயாரை ஈரோட்டுக்கு உனது பிதா அனுப்பினரா நீ யனுப்பினயா? யாருடன் கூட அவள் போனுள்?

தர்மன் இதைக்கேட்டு, பட்டாபிராமய்யர், வந்ததும் ஸாவித்ரீ தனது பிறந்தகம் போகவேண்டுமென்று தன்னைக் கேட்டதும், தான் ஆக்ஷேபித்ததும் கடைசியாய் நிர்ப்பந்தத்தினால் அவளை அவள் தமையனுடன் சேர்த்தனுப்பியதும் ஆகிய இவற்றையெல்லாம் கிருஷ்ணஸாமிஐயரிடம் சொல்லிவிட்டுப் பட்டாபிராமய்யர் என்பவன் ஒரு பெரிய போக்கிரியானதால் அவனாலேயே அவளுக்கேதாவது விபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்றும், அவள் தங்கையாகிய ரத்னவல்லி தனது தமக்கையின் பரிதாபநிலையை, அவளனுமதியின்பேரில் எனக்கு தந்திமூலமாய்த் தெரிவித்திருக்கவேண்டுமென்றும்" ஈரோட்டிலிருக்கக்காரணம் விளங்கவில்லையென்றும்சொல்லி, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கேட்டான்.

கிருஷ்ண:—இவ்விஷயங்கள் எனக்கு மெத்த வியப்பை உண்டுபண்ணுகின்றன. ஆனாலும் மத்தியானம் ஒரு மணி வண்டியிற் புறப்பட்டால் 5-மணிக்குள் அவ்விடம் போய்விடலாம். அவளையுடன் அழைத்துவரக் கூடுமானால் இராத்திரியே இவ்விடம் வந்துவிடலாம்.

தர்மன்:—அவசியம் தாங்களும் என்னுடன் வரவேண்டும். மேலும் செலவிற்குக் கொஞ்சம் பணமும் தாங்களே எடுத்துவரவேண்டும்.

கிருஷ்ண:—பணம் கொண்டுவருகிறேன், நானெதற்குக் கூடவரவேண்டுமென்கிறாய் ?

தர்மன்:—ஆபத்காலங்களில் ஒருசகாயமிருப்பது சிலாக்கியமல்லவா ?

கிருஷ்ண:—சரியப்படியானால் இன்றைய தினமுள்ள கோர்டுக் காரியத்தை வேறொருவரிடம் ஒப்புவித்துவிட்டு பணத்துடன் 12-மணிக்கு வந்து சேருகிறேன்.

தர்மன்:—சரி தவறாமல் வரவேண்டும் என்று சொல்லி அவளை யனுப்பிவிட்டு, மிகுந்த மனக்குழப்பத்துடன் தானும் ஸ்னானம் செய்ய எழுந்திருந்தான். அப்பொழுது ஒரு அபஸவ்ய கௌளியின் சப்தத்தைக்கேட்டு, நமக்கு இப்போது எந்த பாபகர்மம் பரிணமதசைக்கு வந்திருக்கிறதோ தெரியவில்லை, இப்போது சம்பவித்திருக்கிற கஷ்டம் எப்படிப்பட்ட முடிவிற்போய் நிற்குமோ அதுவும் தெரியவில்லை, நாம்தொட்ட நியாயமான வழக்குத்தோற்றது. ஏராளமான கடன்கள் பெருகிற்று. தாயாருக்கு ஆபத்து நேரிட்டது. இப்போது சொல்லிய கௌளியால் நமக்கும் ஏதாவது தீங்கு நேரிடுமோவென்று சங்கிக்கிறேன். இதோடில்லாமல் நாளையதினம் ராத்திரி மதுரை ரெயில்வே ஸ்டேஷனிலிருப்பதாய்ப் பிரதிக்ஞை செய்து வந்திருக்கிறேன்; அஃதெப்படி நிறைவேறப் போகின்றது; அந்தப் பெண் என்னை நம்பி அசாத்தியமான காரியத்திற் பிரவேசித்திருக்கிறாள்; நானோ அங்கு போகமுடியாதென நினைக்கிறேன்; அதனால் அப்பெண்ணுக்கு எவ்விதத் தீங்கு நேரிடுமோ தெரியவில்லை; வெகுவாய் அநேகவித கஷ்டங்களுக்கே பாத்ரமான என்னையே மணப்பதென்றும் இல்லாவிட்டால் பிராணத்யாகம் செய்வதென்றும் உறுதிவைத்திருக்கிறாளே; பாபியாகிய என்னை மணக்கவிருப்பதால் அவளுக்கும் ஈசுவரன் கஷ்டங்களை விளைவிக்கக் காத்திருப்பார் என்று நினைக்கிறேன். துர்ப்பாக்கியசாலியாகிய எனக்கு அப்படிப்பட்ட அழகும் அதற்குத்தக்க குணமும் அபரிமிதமான கீர்வாண பாஷையில் பாண்டித்யமும் கூடிய பெண் எப்படிக்கிடைக்கநியாயமுண்டு. உலகத்தில் தனக்கனுரூபமாய் ஸ்திரீயையடைய எல்லாருக்கும் இஷ்டந்தான், ஆனால் தெய்வம் அவ்வாறு அநேகமாய் சேர்த்துவைப்பதில்லை; எனக்கந்தக் கன்

யதையின் அழகிலும் லஜ்ஜை முதலிய குணங்களிலும் மோஹமில்லை; தேடினால் இப்படிப்பட்ட அநேக பெண்களை அடையலாம், அவளுடைய ஸம்ஸ்கிருதவ்யுத்பத்தியைப் பார்க்க என் மனம் சலிக்கின்றது; எல்லாம் வல்ல பரமாத்மாவிற்கு அந்தப் பெண்ணை எனக்குச் சேர்க்க இச்சையிருந்தால் நான் நாளையதினம் துரைக்குப்போகாததால் ஒன்றும் தவறிப்போகாது. நானில்லாவிட்டாலும் அப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் தேசம் தேசமாய் அலைந்து அவளுக்குத் தக்கபடி குணம் வித்யை அழகு முதலியவற்றால் நிரம்பின மாப்பிள்ளையைத் தேடி அவளைக் கொடுத்துவிடுவார்கள். எனக்கு மாத்திரம் அப்பெண்மணிபோல் பெண் கிடைப்பதரிது; ஆகையால் அப்பெண் கிடைக்காமற்போனால் விவாகத்தையே மறுத்துவிடுகிறதென்ற எனது சங்கற்பத்தை பகவான் எனது மாதா பிதாக்களின் மனதிற் புகுந்து நிறைவேற்றுவாராக. இவ்விதம் ஆலோசித்துக்கொண்டு தர்மன் ஸ்னான அறைக்குச் சென்றான்.

---

## பதினோராம் ஆச்வாஸம்.

### துர்ஜன காரியம்.

இப்பிறவியில் நானெவ்விதத் தீவினையும் மனதாரச் செய்தவளல்ல; இது முற்பிறவியில் இயற்றப்பட்ட பாபத்திற்கே பலனாகும்; இப்போது நானிருக்கும் ஸ்திதியைநினைத்தால் நான் பிறந்து வளர்ந்த செல்வமும் நான் வாழ்க்கைப்பட்ட விடத்தில் நானடைந்திருந்த பெருமையும் பொய்

யென்றே நினைக்கவேண்டியவளா யிருக்கிறேன். நான் கண்ணை விழித்துப் பார்த்ததும் நிலைதெரியாமற் றவிக்கை யில் கொஞ்சநேரம் கழிந்தவுடன் ஊரியும் கையுமாய்வந்த ரத்னவல்லியைக்கண்டதும், அவள் என் வீட்டிலிருப்பதால் நீ கவலைப்படவேண்டாமென்று சொன்னதும், நாம் எவ் வாறே நமது தங்கையின் வீட்டிலிருக்கிறோமே யென்று சந் தோஷித்தது முழுமையும் நினைத்தாலிப்போது எனக்கு நஞ்சாக விருக்கின்றது. குலத்தைக் கெடுக்கவந்த சண்டாளி யை நினைத்தாலும் பாபம் வரும். கஷ்டம்! கஷ்டம்! நான் படுக்கையிலிருப்பதை லக்ஷியம் செய்யாமல என் கண்களுக் கெதிரிலேயே தனக்கிசைந்த நாயகனுடன் தோளிற்கை போட்டுக்கொண்டு போகிறாளே! பாவி ரத்னவல்லி! நீயேன் நமது வம்சத்திற்பிறந்தாய். உனது கையால் தீர்த்தம்கூட சாப்பிடாமலிருக்க நினைப்போமென்றாலும் பாவி உயிர்பதைக் கிறதே; இங்கேன் என்னைக்கொண்டுவந்து போட்டிருக்கிறு யென்று கேட்டால் தானுகத்தெரியுமென்கிறுயே, உனது தீயதொழிலைக்கண்டு நான் மகிழவேண்டுமென்கிற எண்ணமா உனக்கு? தமயனெனப்பெயர் வைத்துக்கொண்டிருக்கும் அந்த துரோகி என்னையிப்படி வயிறெரியச் செய்ததும் இவள் இவ்விதம் என்னை நடத்துவதும் யாருடைய தூண்டு தலாலோ தெரியவில்லை. நானினி உயிர்தரித்திருப்பதைவிட இறப்பதே மேலென நினைக்கிறேன். நானிந்த ஸ்திதிக்கு வந்த பிறகு சகல குணகரராகிய எனது பிராணநாதனையும் ஜகன் மங்களமூர்த்தியான எனது குழந்தை தர்மனையும் எப்படிப் பார்ப்பேன். குழந்தை தர்மனுக்கு 'தந்திகொடு' தந்திகொடு, என்று நான் பிரதிதினமும் சொல்லியும் என்ன அவசரமென்கிறுள். எனக்குச் சொன்ன வார்த்தை கேட்க வேலைக்காரனுமில்லை. கையிற் காலணக்கூட காசுமில்லை.

ரூபாய் நகைகளையுமிழந்தேன். இவ்வித ஸ்திதியிலிருக்கும் எனக்கு இவ்வூரில் நற்குணமுள்ள ஒரு தோழி கிடைக்க அவளால் எனக்கெவ்வித நன்மை கிடைத்துவிடுமோவெனப் பயந்து இந்தப்பாவி அவளை இவ்விடம் வரக்கூடாதென்று கண்டித்துவிட்டாளே. ஆயினும் ஒரு நாழிகையளவாவது அவளுடன் பேசிக்கொண்டிருந்தது எனக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது. கடைசியாய் அவள், தன் பெயர் ரத்னமென்றும் தர்மனுக்குத் தந்தி கொடுக்கிறேனென்றும் சொல்லிப்போயிருக்கிறாள். அவளவ்வாறு செய்திருந்தால் குழந்தை தர்மனைப் பார்க்கலாமென்று நினைக்கிறேன்-

என இவ்வாறு புலம்பிக்கொண்டு லக்ஷ்மீவிலாச பங்களாவின் ஓரறையில் ஒரு மாது படுக்கையில் படுத்தபடி கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள்.

அப்போது இடையில சுமார் 200 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள உயர்ந்த ஜரிகைப்பட்டாடையுடனும் மிகுந்த பளபளப்புள்ள பொன் ஜரிகையிட்ட ரவிக்கையுடனும், காது மூக்கு கை கால் முதலிய சர்வாங்கங்களினும விலைமதிக்கப்படாத சிமைக்கமலங்களிழைத்த பூஷணங்களுடனும் ஒய்யாரமான நடையுடனும் அகங்காரத்தை விளக்கும் பார்வையுடனும் கோவைப்பழத்தைப் பழித்தவாகைமையுள்ள உதடுகளில் தாம்பூலதாரணத்தால் உண்டான விசேஷச் சிவப்புடனும் ஸ்திரீகளுடைய மனதைக்கூட ஒருவாறு பிரமிக்கச் செய்யும சக்தியுள்ள திவ்ய சௌந்தரியத்துடனும் கூடிய சுமார் 20 வயதுள்ள ஒரு யுவதி அவளுடைய படுக்கையினருகிற்சென்று கம்பீரமான குரலுடன் "என்னடி அக்கா! பொம்மனாட்டிகளெல்லாம் நீலிகளென்றுபுருஷாள்சொல்வதற்குத்தக்கவாறு நீயெப்போதும் கண்ணீர்சொரிந்துகொண்டே

யிருக்கிறயே. நீயென்ன காட்டில் விடப்பட்டிருக்கிறயா? சிறையி லடைக்கப்பட் டிருக்கிறயா? ஏனிப்படி மாமாலம செய்கிறய்? உன் சகவாசம் ஆகாதென்று தெரிந்திருந்து அந்தப்பாவியின் வேண்டுகோளால் சனியனை வரவழைப் பதுபோல் உன்னை இவ்விடம் தருவித்துக்கொண்டேன். உன்குணமறிந்துதானே உன் வீட்டைக்குறித்து நான் இழவுக்கும் வருவதில்லை; கலியாணத்திற்கும் வருவதில்லை. உனக்கிருந்த ஆகம்பாவத்தை ஈசனிப்போது அடக்கிவிட் டார். உன் தேகத்தில் இருந்த பளபளப்பும் நக்ஷத்திரங்களை போல உடம்பு முழுவதும் மின்னிக்கொண்டிருந்த நகை களும் அபாரமான கர்வத்தை யுனக்குண்டாக்கிக்கொண் டிருந்தன? அவையெல்லாம் இப்போதெங் கிருக்கின்றன பார்த்தாயா? அபரிமித கர்வத்தை யடைந்தவர்களை யடக்க அருள் நிறைந்த கடவுள் ஒருவர் இருக்கிறர் என்பதை நீ மறந்திருந்தாய்" என்றிவ்வாறு இராம பாணங்களைப்போல வார்த்தைகளை இச்சிறுமி தொடுத்துக்கொண்டிருக்கையில் படுத்திருப்பவள், பின்னும் பெருகிவரும் நேத்திர ஜலத்தை முந்தானையாற்றுடைத்துக்கொண்டு மிருதுவான குரலுடன் "அம்மா ரத்னவல்லி! எனக்கிவ்வித ஆபத்து எந்தவிதமாய் வந்ததோ எனக்கேதெரியவில்லை. ஆயினும் இப்படிப்பட்ட ஆபதகாலத்தில் நீயெனக்கு உதவிசெய்ததற்கு ஈசனுனக்குக் கருணைபுரிவாராக. நீ க்ஷேமமாய் இருப்பாய். நான் மிகுந்த பொல்லாதவளென்று உனக்குத் தெரிந்திருந்தும் நீ யெனக் காக அநுவசியமாய்க் கஷ்டப்படவேண்டாம். என் குழந் தைக்கு ஒரு கடிதமாவது போட்டு அவனை வரவழைத்து என்னையவனிடம் ஒப்புவித்துவிட்டாயானல் உன் பாரம் நீங்கிவிடும். தயவுசெய்து இனியாவது அப்படிச செய்துவிடு" என்றாள்.

அதற்கு ரத்னவல்லி, "என்னடி நீ மெத்த பேச்சுக்காரி தான்; எனக்கு நன்றாகத் தெரியுமுன்னை; கிறுத்து குழந்தையாம், கடிதமாம், பெற்றுவளர்த்தவள் மாதிரிதான். இரு இரு உன் நல்லாம்படையான் வருவான்" என்று மூர்க்கமாயும படபடப்பாயும கம்பீரமாயும் சொல்லிவிட்டு எழுந்திருந்து போய்விட்டாள்.

நேயாகளே! இவ்வுத்தமியும் இக்கொடுமைக்காரியும யாரென்று நாம் சொல்லாமலே நீங்களறியக்கூடுமே. படுக்கையில் இருப்பவள் குளித்தலை வக்கீல் கோபாலசாமி அய்யர் தர்மபத்னி ஸாவித்ரீ. அவளோடு பேசியவள் அவளது கடைசித் தங்கை ரத்னவல்லி. ஆனால் இவர்கள் ஈரோடு லக்ஷ்மீ விலாஸ பங்களாவுக்கு வந்த காரணமும், நமது ஸாவித்ரீயின் தற்கால ஸ்திதிக்குக் காரணமும் உங்களுக்கு விளங்க நியாயமில்லை. அதைக் கூறுகிறோம்.

குளித்தலையிலிருந்த ஸாவித்ரியை அவளது குமாரனாகிய நமது தர்மனுடைய அனுமதியின்பேரில் பட்டாபிராமய்யர் அழைத்துப்போனாரென்பது உங்களுக்குத்தெரிந்த விஷயமே. அவன் அவளை இராமாபுரம கொண்டுபோய்ச் சேர்த்தபிறகு 2-3-நாள் வரையில் மதிப்புடனும மரியாதையுடனும் எல்லாரும் நடத்திவந்தார்கள். ஒருநாள் மத்தியானம் வீட்டிலுள்ள எல்லோரும் வேலையினறிப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் பட்டாபிராமய்யரின் மனைவி ஸாவித்ரியிடம் வந்து, கணவனெதிரிலிருக்கிறனென்பதையும் மதிக்காமல் உயர்ந்த ஒரு ஆஸனத்திலமர்ந்து; "அம்மா! நமம கமலம் குட்டியை உங்கள் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதென்று நீங்கள் சொல்லிவிட்டபிறகு நாங்கள் அவளுக்குக் கன்னியாமடம் கட்டிவிடவில்லை. உங்கள்

தயவால் அவளுக்கும் உன் பிள்ளையைக் காட்டிலும் 100-மடங்கு உயர்ததியான பிள்ளைக்குக் கலியாணம் நிச்சயமாயிருக்கிறது" என்றாள்.

இதற்கு ஸாவித்ரி பதிற்சொல்லுமுன்னமே அருகிலிருந்த ரத்னவல்லி. "அடியே மன்னி, நீ யென்ன பேத்தரே? அவளுக்குப்பிள்ளை ஒண்ணுவச்சு வாழுரதோ, அவளுக்குப் பிறந்த பிள்ளை அன்னிக்கே போயிட்டது. மூத்தாபிள்ளையைக் கொஞ்சுகின்றாள். அவன் அழகாயிருப்பானும். அவனேடே எப்போதுபார்த்தாலும் சிரித்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிறாளாம். அது என்ன ஸ்நேகமோ தெரியவில்லை" என்றாள். கூடவிருந்த மீனாக்ஷி "என்ன ஸ்நேகமாவது? அவன்சிறுபிள்ளை, நல்லஅழகுடையவன். வேறென்ன வேண்டும், கிழவனுக்கு அதிலும் அடிக்கடி ஊரூராய்த் திரியும் தொழிலுள்ளவனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீகளுக்கு' என்று சொன்னவுடன், எல்லாரும் குலுங்க நகைத்தார்கள், நமது ஸாவிதரிக்கு இச்சொற்கள் காய்ச்சின நாராச பாணம் போற் காதிற் புகுந்தன. பதிற்சொல்ல புத்திக்கு ஒன்றும் தோன்றவில்லை. சரீரம் படபடத்தது, மார்பு துடித்தது. முகம் வேர்த்தது. கண்கள் சிவந்தன, புருவங்கள் உயர்ந்தன, கண்ணீர் தொண்டையையடைத்தது. அவளுக்கு ஹிதமாய் அவள்பக்ஷத்தில் பேசுகிறவர்கள் அங்குஒருவருமில்லை. அககுடும்பத்தில்அவளும் அவளுடைய இரண்டாவதுதங்கை பாக்கியகலியாணியுமே நற்குணமுடையவர்கள், கலியாணிக்கு அவர்கள் சமாசாரமே அனுபபாதபடியால் அவளந்தச்சபைக்கு வரவில்லை, ஆகையால் நமது ஸாவித்ரீ மாத்திரமே தனியாய்க் கண்ணீர் பெருக்கிக்கொண்டு பட்டாபிராமய்யரைப் பார்த்து, "அண்ணு என்னை யிப்படி யவமானப்படுத்த எண்ணங்கொண்டுதான் சுமங்கிலிப்பிரார்த்தனை யென்று பொய்

சொல்லி இவ்விடம் அழைத்து வந்தாயோ?" என்றாள். அதற்கந்த அயோக்யன், "இம்மட்டுமோ உனக்கவமானம், நீ இன்னம் எவ்வளவோ சிரிப்பாச் சிரிக்கப் போகிறாயே தெரியாதா வுனக்கு?" என்றான்.

ஸாவித்ரி:—எனண்ணா நானென்ன தப்பிதம் செய்தேன் உனக்கு.

பட்டா:—தப்பிதமா, அன்று ராத்திரி நானுன்னைப் பெரிய பிரபுவாக வைத்து எவ்வளவு கெஞ்சினேன். முகங் கொடுத்துப் பேசினையா? எனக்கப்போது எவ்வளவு அவமானமாயிருக்கும், என்ன நான் சொத்திற் குறைந்தாலும் உனக்குத் தமயன்தானே, அதை நீ நினைத்தாயா?

ஸாவித்ரி:—அண்ணா நீ யதைக் குற்றமாக நினைத்து அதற்காக என்னை யவமானப்படுத்துவது நியாயமல்ல, உன் பெண்ணை என் பிள்ளைக்குக் கொடுப்பதானால் நான்மாத்திரம் சம்மதித்தால் காரியம் தீர்மானமாய்விடுமா?

மீனா:—தீர்மானமாகட்டும் அல்லது ஆகவேண்டாம், நீ நமது அண்ணா பெண்தானே என்று சம்மதித்துவிட்டால் மற்றவர்கள் சம்மதியாமல் என்ன செய்வார்கள். அகமுடையானைத்தான் ஆடு என்றால் ஆடும்படிக்கும், பாடு என்றால் பாடும்படிக்கும் செய்து வைத்திருக்கிறாயே.

பட்டா:—அவ்விதம் இவளுக்கு மற்றப்பேர்கள் கட்டுப்பட்டதாகவே வேண்டாம், இவள் சரிதானென்று சொல்லிவிட்டால் மற்றப்பேர்களையும் நானெப்படியாவது சரிப்படுத்திக்கொள்ளுகிறேன், அப்படி முடியாவிட்டால் நான் வந்த வழியாய் திரும்பிவிடுகிறேன். இவளே மறுத்தால் பின் என்ன காரியத்தை யாரைக் கேட்கிறது?

ஸாவித்ரீ:—ஒரு வயிற்றிற் பிறந்தவர்களான நமக்குள் பாதகமில்லை யென்று நான் சொன்னேன், நான் மறுத்த தற்கே உனக்கிவ்வளவு ரோஷம் உண்டாயிருக்கிறதே, காரி யம் முடியாதென்று நிச்சயமாய்த் தெரிந்திருக்கையில் நீ மற் றவர்களைக் கேட்டு அவர்கள் மறுத்து அனுவசியமாய் நீ கிலேசப்படவேண்டாமென்று நினைத்தேன்.

மீனு:—உனக்கு ஜோஸியங்கூடத் தெரியும்போலிருக் கிறது. அதனாற்றான் நீ காரியம்முடியாதென்று தீர்மானித்து விட்டாய்.

ஸாவித்ரி:—எனக்கு ஜோஸியம் தெரியாது, உனது மூத்தாள் பெண்ணைக் கொடுப்பதாய் அவள் அம்மான் முதலி யவர்கள் வந்து கேட்டுப் பேசித் தீர்மானமாயிருந்தது, அத னாற் சொன்னேன்.

மீனு:—எங்களகத்துப் பெண்ணைக்கொடுப்பதற்கு யார் வருவது யார் கேட்பது யார் தீர்மானிப்பது? ரூபாயைக் கல கலவென்று கொட்டிக் கலியாணம் செய்து கொடுப்பவள் நானோ நீயோ? நல்லது, அந்தப்பெண்ணை நீ யுன் பிள் ளைக்குக் கலியாணம் செய்துகொள்ள உன்னால் முடியுமா? சூரியன் தெற்கு வடக்காகப் போனாலும் உன் அகம்பாவத் தையும் குணத்தையும் நானறிந்திருந்தும் அந்தப் பெண்ணை யுன் வீட்டிற் கொடுப்பேனா? அவளுக்குத் தங்கம்போன்ற ஒரு மாப்பிள்ளையைத் திட்டம் செய்திருக்கிறேன்; நாளது மீ-30-ந் தேதி முகூர்த்தம் மதுரையில் என் வீட்டில் நடக் கிறது. அன்றைக்கே நம் கமலத்தையும் என் மூத்தாள் பிள் ளைக்குக் கொடுத்து கலியாணம் நடக்கிறது. வந்திருந்து பார்த்துவிட்டு வயிற்றெரிச்சலுடன் போய்ச்சேரு.

ஸாவித்ரி:—எனக்கென்ன வயிற்றெரிச்ச லிருக்கிறது. என் பிள்ளைக்கும் வேறெந்தப் பெண்ணாவது வந்து கலியாணமாய்விடும். ஏன் வார்த்தையைக் கொட்டுகிறாய்.

பட்டாபி-பத்னீ:—உன் பிள்ளைக்கா கலியாணமாய் விடும்? பிள்ளையாருக்குக் கலியாணமான மறுநாள்தான்.

ஸாவி:—இனி இதற்குமேல் பதிற்சொல்ல எனக்குச் சக்தியில்லை. அண்ணா! என்னை யழைத்துக்கொண்டு வந்தது போல் ஊருக்குக் கொண்டுபோய் விட்டு விட்டாயானால் உனக்குக் கோடி புண்யமுண்டு.

பட்டாபிராமய்யர்:—(பதிலுரைக்கவில்லை)

பட்டா-பத்நீ—நீயென்ன குழந்தையோ, கொண்டுபோய் விடுவதற்கு, நூறுபுருஷர்களை நீ கொண்டுபோய் விடுவாயே. உன்னுடன் கூடவர இங்கொருவருக்கும் ஒழியவில்லை.

ஸாவி:—(கண்ணீர்ததும்ப) அப்படியானால் என்னைக் கோயம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷன் வரையில் யாரை யாவது வரச்சொல்லி டிக்கெட்டு வாங்கிக்கொடுத்து ரெயி லேற்றி விட்டுவிட்டால் நானெப்படியாவது ஊர்போய்ச் சேருகிறேன்.

பட்டாபி-பத்னி:—அதெல்லாம் சரிப்படாது. ஒருவரும் வரமுடியாது. நீயுமிந்தவிடத்தைவிட்டுப்போகலாகாது. அப் படிப் போகவேண்டுமானால் உன் நகைகளையெல்லாம் ஒரு திருகாணிகூடப் பாக்கியில்லாமல் கழற்றிவைத்துவிட்டுப் போ. அவைகளையெல்லாம் என் பெண்ணுக்குப் போட்டுக் கன்னிகாதானம் செய்துகொடுக்கணும்.

ஸாவி:—(கண்ணீர்விட்டாள்.)

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

பட்டா:—ஸாவித்ரி! அவள் சொல்வதற்காக நீ கவலைப் படாதே. நாளைதினம் நானுன்னை ஊரில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்.

பட்டாபி-பத்னி:—என்னசொன்னே, நான்போகக்கூடா தென்கிறேன். நீ கொண்டுபோய் விட்டுவிடுகிறேனென்கி றாய். வேலையில்லையோ? கழுதைபோல் ஊரூராய்த்திரிய ஆசை யிருக்காப்போலிருக்கிறது.

பட்டா:—ஏ காளி உன்வாயைத்திறவாதே; உன்னையார் கேட்டார்கள்.

பட்டாபி-பத்னி:—என்னசொன்னே, நான்காளியா. உன் னைப் பிடுங்கித் தின்கிறேன் பாரு—என்று சொல்லி அலங்கோல மாய் எழுந்திருந்துவந்து கணவன்கன்னத்தில் ஓங்கியொரு அறை அறைந்தாள். அதற்குள் மீனாக்ஷி எழுந்திருந்துவந்து விலக்கிவிட்டாள். உடனே ஸாவித்ரியைத்தவிர மற்ற நால் வரும் தனியே ஓரிடத்திற்குப்போய் என்னவோ குசுகுசு வென்று பேசிக்கொண்டிருந்து சற்றுநேரத்திற்கெல்லாமொரு நவிதத் தீர்மானத்துக்கு வந்து மறுபடியும் ஸாவித்ரியினி டம் வந்துசேர்ந்தார்கள்.

அப்போது மீனாக்ஷி ஸாவித்ரியைப்பார்த்து "அம்மா கோபித்துக் கொள்ளாதே. கூடப்பிறந்த தமயன் பெண் ணுக்கு கலியாணமாகாமல் அவன் தவிக்குங் காலத் தில் உன் அகமுடையானுக்குச் சிபார்சுசெய்து எப்படி யாவது அந்தக்கலியாணத்தை முடித்துவைக்காமல் மறுத்து அவனை ஊருக்குத் திருப்பியனுப்பிவிட்டாயே, என்று ஒரு மனஸ்தாபமிருந்ததை வேடிக்கையாய்ப்பேசித் தீர்த்துக் கொண்டுவிட்டோம். உன்னைப்போல் நானும் முடியா

தென்றுசொல்லிவிட்டால் அந்தப்பெண்கதி நிற்கதியாய் விடுமேயென்று பயந்து என் கணவனிடம் வெகு பிரயாஸப் பட்டுச் சொல்லி, எனது மூத்தாள் பிள்ளைக்கு நம் கமலத் தைக் கொடுத்துவிடுவதாய்த் தீர்மானஞ்செய்து அந்தக்கலியா ணச் செலவுகூட அண்ணாவுக்குச் செய்ய சக்தியில்லாதபடி யால் கலியாணத்தையும் என்வீட்டிலேயேசெய்துவிடுவதாய்த் தீர்மானித்து, அதற்காகத் திருச்சியில் நடக்கிற பெண் கலி யாணத்தைமாற்றி அதை பெண்வீட்டில் நடத்தவேண்டும் என்று என்புருஷனுடன் வெகுநேரம் மன்றாடிக் கடைசியாய் அப்படியே தீர்மானமாகும்படி செய்தேன். மேலும் எங் கள் பெண்ணை யுன்பிள்ளைக்கே கொடுத்து உன்னை சம்பந்தி யாக்கிக்கொள்ள எனக்கு மெத்த சந்தோஷந்தான். ஆனால் என் பர்த்தா தனக்கு அநேகவிஷயங்களில் உதவியாயிருப்ப வரான உயர்ந்தகுலத்திலுதித்த அந்த ஊர் சுந்தரமய்யர்பிள் ளைக்குத்தான் தனதுபெண் தர்மாம்பாளைக்கொடுப்பதாய் அவ ராகவே தீர்மானித்துவிட்டதால் நானதைமாற்றியுன்பிள்ளைக் குககொடுக்கும்படி செய்யமுடியவில்லை. ஒருகாரியத்தில் அவர் என்னிஷ்டப்படி முடித்தாராகையால் மற்றொருகாரி யத்தில் அவரைவிட்டுப் பிடிக்கவேண்டியதாயிற்று. உன்பிள் ளைக்கு லக்ஷம்பேர் பெண்களைவைத்துக்கொண்டு கொடுக் கத் தபஸ்செய்கிறார்கள். இதுநிற்க,

கலியாணம் ஆகிறவரையில் உன்னை ஊருக்கு அனுப்பக் கூடாதென்றும் கலியாணகாலத்தில் உனது நகைகளிற்சிலவற் றைத் தனது பெண்ணுக்கு அலங்கரித்துப்பார்த்துக் கலியா ணமானபிறகு உன்னிடம் அவைகளைக் கொடுத்து ஊருக்கு அனுப்பவேண்டுமென்றும் மன்னி நினைத்திருக்கிறாள். நீ ஊருக்குப்போகவேண்டுமென்று அழுகிறபடியால் உன்னை ஊருக்குக்கொண்டுபோய் விட்டுவிட்டு உனது புருஷனையும்

பிள்ளையையும் கலியாணத்திற்கு நேரிலழைத்துவிட்டு வர வேண்டுமென்பது அண்ணாவின் அபிப்பிராயம். இதைப்பற்றித்தான் உள்ளே தர்க்கம் நடந்தது. கடைசியில் அண்ணாவி னிஷ்டப்படியே தீர்மானமாயிற்று. நீ உனது மூட்டைகளைக் கட்டிக்கொண்டு தயாராகவிரு. நாளையதினம் காலை 8 மணி வண்டியில் புறப்படலாம். நம் ரத்னமும் ஏதோ ஈரோட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லுகிறாள். எல்லாரும் போகலாம்" என்று சாந்தமாயும் மிருதுவாயும் மலர்ந்தமுகத்துடன் சொல்லி முடித்தாள்.

வெளுத்ததெல்லாம் பாலென நினைக்குந் தன்மையுள்ள கபடமற்ற ஸாவித்ரியும அது முழுமையும் உண்மையெனவே நினைத்தாள். தன்னுடன் மூவரும் அவர்கள் பேசிக்கொண்டிருந்தகாலத்தில் அவர்களுடைய நிலைமையையும் இப்போதவர்களிருக்கும் ரீதியையும் நடுவில் அவர்கள் தனக்குக் காதுகேட்காமல் ஏதோ பேசிக்கொண்டிருந்ததையும் யோசித்தால் எப்படிப்பட்ட மூடபுத்திக்கும் கூட ஏதோ விசேஷமிருக்கிறதென்று புலப்படும். எப்போதும ருஜுமார்க்கம தவிர கோணலே தெரியாத நமது ஸாவித்ரிக்கு அச்சந்தேகங்களே உண்டாகவில்லை. பிறகு அந்நால்வரும் ஸாவித்ரியிடம் பழைய மரியாதையுடன் அன்றைய தினம் பாக்கியைத்தள்ளினார்கள். குறிப்பிட்டபடி மறுநாள் காலையில் ஸாவித்ரியும் பட்டாபிராமய்யரும் ரத்னவல்லியுடன் கொஞ்சம் சிற்றுண்டி செய்துகொண்டு கோயம்புத்தூர்வந்து ரெயில்வண்டியிலேறினார்கள். பட்டாபிராமய்யர், தான் அதிகமதிப்புள்ள இரண்டு ஸ்திரீகளை யழைத்துப்போவதால் தனக்குத் தனி கம்பார்ட்மெண்டு வேண்டுமென ஸ்டேஷன்மாஸ்டரைக்கேட்டு அவ்வாறே இருபக்கமும் முற்றிலும் மூடப்பட்ட ஒரு தனியறையில் மூவரும் உட்கார்ந்து

வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டு பிரயாணம்செய்தார்கள். வண்டி ஈரோட்டுக்கு அடுத்த முன் ஸ்டேஷனைவிட்டுப் புறப் பட்டவுடன் ஸாவித்ரி தற்செயலாய்த் தனக்கு வயிற்றில் ஏதோ சொற்பவலியுண்டாயிருக்கிறதென்றும் கொஞ்சம் தாகமாயிருக்கிறதென்றும் சொன்னாள். உடனே பட்டாபி ராமய்யர் தன் சட்டைப்பையிலிருந்த ஒரு சீசாவையெடுத்து 'இதிலுள்ள ஷர்பத்தைப் பாதிசாப்பிடு, வயிற்றுவலியும் நிற் கும தாகமும் அடங்கும்' என்று சொல்லிக் கொடுத்ததும் ஸாவித்ரி "அது என்னமருந்தோ என்னவோ ஈரோடு சமீ பித்துவிட்டது; அங்குபோயாவது வெந்நீர் சாப்பிட்டால் எல்லாம் நின்றுவிடும்" என்றுசொல்ல, அண்ணாவின் ஜாடை யை யறிந்துகொண்ட ரத்னவல்லி அதைவாங்கி அவளைத் தன்மேல் சாற்றிக்கொண்டு பலாத்காரமாய் புகட்ட அந் தப் பாப்பாப்பில் சீசாவிலிருந்தமருந்து முழுமையும் புகட்டி விட்டாள். அதுகுடிக்கஇன்பமாயிருந்தபடியால்ஸாவித்ரிமுழு மையும் சாப்பிட்டுவிட்டாள். உடனே மயங்கிக் கீழேவிழுந் தாள். அந்தக்ஷணமே பட்டாபிராமய்யர் அவளணிந்திருந்த நகைகள் முழுமையும் ஒரு திருகாணியும் விடாமல் ரத்னவல்லியின் சகாயத்தைக்கொண்டு கழற்றி, தன் பெட் டிக்குள்வைத்துப் பூட்டிவிட்டார். ஈரோட்டுக்கு வந்ததும பிரக்ஞையற்றுக்கிடந்த ஸாவித்ரியை இருவரும் தூக்கிக் கொண்டு காரணங்கேட்ட ஸ்டேஷன்மாஸ்டருக்கு அவ ளுக்கு எப்போதும் வழக்கமாய் ஒரு மயக்கவியாதியுண் டென்று சொல்லி வண்டியிலேறி ரத்னவல்லிக்குச்சொந்த மான லக்ஷ்மிவிலாஸ பங்களாவிற்கு வந்துசேர்ந்தார்கள்.

பட்டாபிராமய்யர் ஸாவித்ரியை மயக்கம்தெளிந்தபிறகும் ஒருவரும் பாராமல் இருக்க ஏற்பாடு செய்துவிட்டு, அவள்

தன நகைகளெங்கேயென்று கேட்டால் 'நீ மயக்கமாயிருக்கையில் திருடர்கள் கொண்டுபோய்விட்டார்கள்' எனச் சொல்லியவளை அளவிலேதேற்றி ஊருக்கு அனுப்பும்படி ரத்னவல்லிக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் ஊருக்குப் போய்விட்டார். பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் நங்களுக்குத் தெரிந்தவையே.

---

## பன்னிரண்டாவது ஆச்வாஸம்.

### அஸதீ விஜயம்.

இப்பொழுது ரத்னவல்லி தனது லக்ஷ்மீவிலாஸ பங்களாவில் ஓரறையில் மகமல் மெத்தையால் உரைபோடப்பட்ட ஒரு சாய்மான நாற்காலியிற் படுத்துக்கொண்டு, தனது தற்கால ஸ்திதியையும் அதற்குக்காரணமான தனது சாமர்த்தியத்தையுப்பற்றிக் களிப்புடன் தன்னை மெச்சிக்கொண்டிருந்தாள்.

நேயர்களே! இப்போது இந்த ரத்னவல்லியின் பூர்வசரிதம் நமதுகதையின் மேல்பாகத்திற்குக் கொஞ்சம் அவசியமாய் இருப்பதால் அவளைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை நீங்கள் அன்புடன எதிர்பார்க்கும் போதே தெரிந்து தீரவேண்டுமென நினைத்து, இப்போதே கூறுகின்றோம்.

பட்டாபிராமய்யர் தனது தந்தை யிறந்தபிறகு தனது நான்கு தங்கைகளையும் ஒவ்வொருவருக்கும் இரண்டாந்தாரத்திற்குக் கீழ்ப்படாமல் வரன்களைச் சம்பாதித்து வருஷத்

துக்கு ஒருத்தியாகக் கலியாணஞ்செய்து கொடுத்தாரென் பதை யிதற்குமுன் ஒருதரம சொல்லியிருக்கிறோம். ரத்ன வல்லியைமாத்திரம் அவ்வாறுசெய்யவில்லை இவளொருத்தியே கலியாணத்திற்கு பாக்கியாகவிருக்குங்கால் இவளுடைய தாய் தனதருமைப்பெண்ணை ஒரு சிறு பையனுக்கு கன்னிகாதானம் செய்யவேண்டுமெனக் கருதி பட்டாபிராமய்யர் எந்தவரனைப் பார்த்துவந்தாலும் அது அப்படி இது இப்படியென்று தோஷஞ்சொல்லி எல்லாவரன்களையும் நிராகரித்துவிட்டாள். ஆனிமாதம் தேதி பதினைந்தாய்விட்டது. ரத்னவல்லி வயதுள்ள சிறுமியாயினும் தனது சரீரவளமையால் அப்போது யுவதிபோல் காணப்பட்டாள். பாக்கியிருக்கிற உத்தராயணம் 15 நாளுக்குள் பெண்ணை எவனுக்காவது கட்டிக்கொடுக்காவிட்டால பெண் புஷ்பவதியாய் விடுவாளென்னும் பயம் தாயாருக்கு அப்போதுண்டாய் விட்டது.

இப்போதுள்ள பண்டிதர்களைக் காட்டிலும் விசேஷமான படிப்பும் கூர்மையானபுத்தியும் அக்காலத்திய பண்டிதர்களுக்கிருந்தாலும் பிராமணப்பெண்களை ருதுவான பிறகு விவாகஞ்செய்துக்கொடுக்கலாமென்று ஸ்வபனத்திலும் வாதிப்பவர் ஒருவரும் அப்போது கிடையாது. இந்நாள் பண்டிதர்களும் வாதங்களைச்சொல்லுகிறார்களே தவிர தங்கள் பெண்களை சாஸ்திரப்படி 8-வது வயதிற் கலியாணஞ்செய்துகொடுக்கத் தவறுகிறார்களில்லை. நிற்க.

இதுவிஷயமாய் பயந்து கவலையுற்ற ரத்னவல்லியின் தாயார் தனது பெண்ணுக்கு அவசரமாய் வரனைத் தேடச் சொன்னதில் ஒன்றும் சௌகரியப்படாமல் கடைசியாய் உள்ளூரில் சுமார் 5 அல்லது 6-லக்ஷ ரூபாய்க்குக் குறை

டா தசொத்துக்குடையவரான ஜம்புலிங்கமய்யர் என்னும் 55 வயதுள்ள பிரபுவிற்கு ரூபாய் 5000 கன்யாசுலகம் வாங்கிக் கொண்டு நான்காவது தாரமாக ரத்னவல்லியைக் கலியாணம் செய்துகொடுத்தார்கள். அந்தம்மாள் பயந்ததற்கேற்றபடி கலியாணமான மூன்றுமாதத்திற்கெல்லாம் ரத்னவல்லி புஷ்பவதியாகிக் கணவன் வீடுபோய்ச்சேர்ந்தாள்.

அநேகமாய்ப் பிறந்த ஊரில் வாழ்க்கைப்பட்ட பெண்கள் தனது கணவன்வீட்டு ஜனங்களைத்தவிர ஊரிலுள்ள மற்றவர்களுக்கு மரியாதை காட்டுவதில்லையென்பது நமதுநாட்டின் வழக்கமல்லவா, அவ்வாறே ரதனவல்லியும உள்ளூரில் வாழ்க்கைப்பட்டிருப்பதாலும்—

"வ்ருத்தஸ்ய தருணீ பார்யா ப்ராணேப்யோபி கரீயஸீ"

"யுவதியான தன்னுடைய பத்நி, கிழவனுக்கு, அவன் பிராணனிலும் அதிகமானவள்" என்னும் பழமொழிக்கேற்பத் தனது கணவன் தன்னை எக்காலத்திலும் அருமையாய் கொஞ்சுகின்றபடியாலும் தனது சரீரத்தில் இடந்தெரியாமல் வைரமயமான நகைகளை அளவின்றி அணிந்திருப்பதாலும் இறுமாப்படைந்து பிராசீன ஸ்திரீகளைப்போல் லஜ்ஜை, பயம், மரியாதை, இவைகளைப் பாராட்டாமல் தனதிஷ்டப்படி எப்புருடனுடனும் எக்காலத்திலும் பேசுவதும் தெருத்திண்ணைகளில் தாராளமாக வுட்கார்ந்து போலிப்பெண்களுடன் வம்பு பேசுவதும் தான் நினைத்தவிடங்களுக்குத் தனதிஷ்டம்போல் போவதும் கணவனை யலட்சியமாகப் பேசுவதுமாக இருந்தாள். ஜம்புலிங்கமையரோ தமக்கு ஜரா வந்தகாலத்தில் கிடைத்த மனைவியாதலாலும் அவள் தேவஸ்திரீகளைக்கூடத் தோற்கச்செய்ய வலிமையுள்ள திவ்யசௌந்தரியம் உள்ளவளாக விருப்பதாலும் அவளை எக்காரணத்

ஸ்தையுத்தேசித்தும் கண்டிக்காமலேவிட்டுவிட்டார். அதனு லவள் வரவர அதிக தைரியத்தையடைந்து துஷ்டஸ்திரீக ளின் ஸ்கவாஸத்தால் குலஹானிகரமான செய்கைகளைச் செய்யவாரம்பித்தாள். அவள் தனதிச்சைக்கிசைந்த புரு ஷனைத் தாராளமாய் தனதில்லத்திற்கழைப்பித்து அவனு டன் கேட்போருக்கு விரஸமானவார்த்தைகளைப்பேசுவாள், ஐம்புலிங்கமய்யர் அதைப்பார்த்தாலும் அவளுக்கு இது பிறந்த ஊராகையால் அவள் அப்படித்தான் பாலியம்முதல் பேசிக்கொண்டிருக்கிறுளென்று அலக்ஷியமாய் விட்டு விடுவார்.

அவருக்கு முன் மனைவிகளிடம் பிறந்த பெண்கள் நீலா ம்பாள், கோகிலாம்பாள், விசாலாக்ஷி, கனகவல்லி என நால் வருண்டு. அவர்களில் கடைசிப்பெண்ணுகிய கனகவல்லி யைத்தவிர மற்றமூவரும் அழகிற்போல குணங்களிலும் சிற ந்தவர்கள், அவர்கள் தக்க மதிப்பும் சொத்தும் நிறைந்த விடங்களில் வாழ்க்கைப்பட்டு நல்லவர்களெனப் பெயருடன் சுகமாய் வாழ்கின்றுர்கள். அவர்கள் எப்போதாவது பிறந் தகத்திற்கு வந்தாலும் தாங்கள் வாழ்க்கைப்பட்ட ஊரிலி ருப்பதுபோலவே அடங்கி ஒடுங்கித் தங்களது சிறுகுரல்கூட புருஷர்கள் காதில் விழாமல் காலந்தள்ளுவார்கள். அவர் கள் தங்கள்பிதுர்க்கிரகத்திற்கு எப்போதாவது வருங்கால் அப்போது தங்கள் சிற்றன்னையாகிய ரத்னவல்லியின் தைரி யத்தையும் நடவடிக்கைகளையும் பார்த்துப்பயந்து தங்கள் பிதாவிடம் ஜாடையாகச்சொல்லித் தங்கள் குலத்திற்கு அப கீர்த்திவராமற் காக்கவேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள். ஐம்புலிங்கமய்யருக்குத் தனது பெண்கள் சொல்லுங்காலத் தில் தனது மனைவியின் சேஷ்டைகள் முழுமையும் பிசகெ ன்று தெரிந்தாலும், அவளைக் கண்டிக்கவேண்டிய எண்ண

யிருந்தாலும் உன்னை போனவுடன் தனது மனைவி ஸர்வாங்கத்திலும் 'பளீர் பளீர்' என்று ஆபரணங்கள் ஜ்வலிக்க கோவைக்கனிபோன்ற அதரங்கள் மறுபடி சிவக்க வாய்நிறைய தாம்பூலத்துடனும் எதிரில் வந்தாளானால் அவர் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்.

இவருடைய கடைசிப்பெண்ணாகிய கனகவல்லியோ வென்றால் கனகவல்லியென்றே (பொற்கொடி) சொல்லத்தக்கவள். அவள் ரத்னவல்லியைப்போல் ஒரு கிழவனுக்கே கலியாணம் செய்யப்பட்டு அதிகமான சொத்துமில்லாமலிருந்ததால் அவள் வருஷம் 1-க்கு ஆறுமாதம் தகப்பன் வீட்டிலேயிருந்தாள். ரத்னமானது கனகத்துடன் சேர்ந்தாற்போன் விசேஷ யோக்கியதையையடையுமென நினைத்ததைப்போல் ரமது ரத்னவல்லி கனகவல்லிக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் உபதேசித்து நாளாக நாளாக அவளையும் தன்னைப்போலாக்கிக்கொண்டு தனதிஷ்டத்திற்கு அவளை இணங்கச்செய்துகொண்டு அவளிஷ்டத்திற்கும் தானிணங்கி இருவரும் ஒற்றுவாழ்ந்தார்கள். சனகவல்லிக்கு விசேஷமான நகைகள் இல்லாதபடியால் தனது நகைகளிற் சிலவற்றையவளுக்குப் போட்டும் மினுக்கச்செய்வாள்.

இப்படியிவர்கள் சுகமாகவிருந்து வருகையில் பலநாள் திருடன் ஒருநாளகப்படுவான் என்னும் எண்ணம் இருவருக்கும் ஒரு காலத்திலுதித்தது. அப்போது இவர்கள் நாமெத்தனைநாளிவ்விதம் பயந்து ரகஸியமாய் நமது காலம் கழிப்போம். நமக்குச் சொத்தில் சுதந்தர பாத்தியம் இல்லாமையாலல்லவா இவ்விதம் அடங்கவேண்டியதாயிருக்கிறது. என்று யோசித்து இருவரும் ஐம்புலிங்கமய்யரிடம், குளிர்ந்த சமயம் பார்த்து "தங்களுக்கு வர வர வயதாய்விடுவதால் நமது குடும்பத்துக்கு ஒருவித ஏற்பாடு செய்யாவிட்டால்

பிறகு நாங்கள் கஷ்டப்படுவோம்; நமது குலம் விளங்க ஒரு பிள்ளை நமக்கில்லை. ஆகையால் தாங்கள் சொத்தை எங்களுக் கெழுதிக் கொடுக்காமற் போய்விட்டால் ஒரு சமயம் தெய்வ கதி கெடுதலாய் ஏற்பட்டால் நாங்கள்தான் தபிக்கும்படி நேரிடும்; தங்களுடைய மற்றப் பெண்கள் நல்ல சொத்துள்ள வர்களாகவிருப்பதால் அவர்களுக்குக் கவலையில்லை" என்று இவைமுதலான பல உசிதமான வார்த்தைகளைப் பல நாளா கச் சொல்லிவந்தார்கள்.

ஜம்புலிங்கமய்யரும் தமது கிழத்தனத்தினால் தாமொரு விதமான ஏற்பாடும் செய்யாமல் தற்செயலாய் பரகதியை யடைய நேரிட்டால் தமது இளம் பருவமுடைய மனைவியும் ஏழையும் சிறுமியுமான பெண்ணும் கஷ்டப்படும்படி நேரிடு மென நினைத்துத் தமது சொத்துக்களில் கனகதத்துக்கு மூன்றிலொரு பங்கையும், இரண்டு பங்கைத் தமது மனை விக்குமாக அடியில்கண்டபடி இனும் சாஸனம் செய்துகொ டுத்து அவளிஷ்டமானபடி ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொள்ளும்படியும் தஸ்தாவேஜிகளை முடித்தார். தமது சொந்தச்செலவுக்கென்று ஐம்பதினாயிரம் ரூபாய்களை ரொக்கமாய்த் தம்கையில் வைத்துக்கொண்டார்.

## உயில்.

1916ஹு மேமாதம் 18உக்குச் சரியான அநலஹு வைகாசிமீ 2உ கோயமுபத்தூர் ஜில்லா இராமாபுரத்தில் இருக் கும் சேதுமாதவய்யர்குமாரர் ஜம்புலிங்கமய்யர், பிறர் தூண் டுதலில்லாமலும், சுயேச்சையாயும், சுவபுத்தியோடும், நல்ல நினைவோடும் எழுதிவைத்த உயில்சாசனம் என்னவென்றால்,

எனக்கு விருத்தாப்பியதசை நேர்ந்துவிட்டதால் நான் இனி வெகுகாலம் ஜீவித்திருக்கமுடியாது. எனக்குப் பெண்

களைத்தவிர வேறு ஆண் ஸந்ததியில்லாததால் என்னுடைய ஏராளமான ஸ்தாவர ஜங்கமசொத்துக்களை என் தாயாதிகளான அநந்தரவார்ஸுகள் அபகரித்துப் போகாமலிருக்கவேண்டி அடியிற்கண்டபடி என் ஆஸ்திகளை அனுபவிக்கத்தக்க வார்ஸுகளை யேற்படுத்துகிறேன்.

எனக்குச் சொந்தமான 6 லக்ஷம் ரூபா மதிப்புள்ள ஸ்தாவர ஜங்கமசொத்துகளை மூன்றுபாகமாகப்பிரித்த, ரொக்கம் சுமார் ரூபா ஐம்பதினாயிரத்தை என் ஜீவகாலபரியந்தம் என் செலவுக்குவைத்துக்கொண்டு, பாக்கியுள்ளதில் மூன்றில் ஒருபங்கை என் குமாரத்திகளில் சுவல்ப ஜீவனுள்ள கனகவல்லியடையவேண்டியது. பாக்கி இரண்டு பாகத்தை எனது இளையபாரியாள் ரத்நவல்லியடையவேண்டியதுடன், என் ஜீவன் நற்கதியடைவதற்கு, என் மரணத்துக்குப்பிறகு என்னுடைய உத்தரகிரியைகளைச்செய்வதற்கு யோக்கியமானவனும், என் பாரியாள் ரதனவல்லிக்கு இஷ்டமானவனுமான ஒரு குமாரனை சுவீகாரஞ்செய்துகொள்ள வேண்டும். சொத்தையடைந்த என் பெண்ணும், பத்நியும் ஸ்வேச்சா.விநியோகமாய் அந்தச்சொத்துகளை ஆண்டனுபவிககவேண்டியது. என் பெண்சாதியின் மரணத்துக்குப் பிறகு அவள் எடுத்துக்கொண்ட சுவீகாரபுத்திரன், சொத்தை ஸர்வஸ்வதநதரத்துடன் அடையவேண்டியது. இவ்விதம் என் ஸ்வேச்சாபுத்தியோடு இந்தஉயிலை எழுதிவைத்தேன்.

(ஒப்பம்) ஜம்புலிங்கமய்யர்.

இவ்வாறு தஸ்தாவேஜுகள் முடிந்து ஆறுமாதகாலமாகிறது. தஸ்தாவேஜுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மறுநாள் முதல் இவ்விருவரும் ஜம்புலிங்கமய்யரைப்பற்றி மதிப்பதை நிறுத்திவிட்டார்கள். வரவர அவருக்குச் சரியான

காலங்களில் உணவுகூட துர்லபமாகிவிட்டது. அவர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்ட புருஷர்களை பஹிரங்கமாகவே வீட்டிற்கு வரவழைத்துச் சுகித்தார்கள்.

இவைகளையெல்லாம காலக்ரமமாய் நன்கறிந்த ஜம்புலிங்கமய்யர், தம புத்திக்குறைவால் இந்த துஷ்டைகளுக்குச் சொத்துக்கள முழுமையும் தத்தம் செய்ததைப் பற்றி, மிகவும் துயரமடைந்தார். தமக்கு வயதான காலத்தில் தமது பணிவிடைக்குத் தன் கையிலுள்ள பணத்தைக் கொண்டு யாரையாவது ஏற்படுத்திக்கொண்டால் அவர்களையும் இந்த இரண்டு துஷ்டைகளும் துரத்திவிடுவதைப் பார்த்துத் தவித்துக்கொண்டிருந்தார். இவருடைய மூத்த பெண்கள் மூவரும் ஒரு விசேஷத்தை யுத்தேசித்து இவர் வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் இங்குள்ள சமபவங்களைப்பார்த்து மிகவும் மனவருத்தப்பட்டு ஒரு ஏகாந்தமான சமயம் பார்த்துத் தங்கள் தந்தையிடம் வந்து அவர்களில் மூத்தவள்—

நீலா:—அப்பா தாங்களிப்போதிருக்கும் ஸ்திதியும நம்து வீடிருக்கும் கோலாகலமும் எங்கள் மனதை மிகவும் வருத்துகின்றன.

ஜம்பு:—குழந்தைகாள்! என் புத்திக்குறைவால் நான் கஷ்டப்படும்படி நேரிட்டதைப்பற்றி நான் யாரிடம் சொல்லி முறையிடுவேன்.

கோகி:—அப்பா! இப்படியெல்லாம் நேரிடுமென்று நினைத்தே நாங்கள் தங்களிடம் பலதடவைகளிற் சொல்லியிருந்தும் தாங்கள் அவளைக் கண்டிக்காமல் விட்டதினால் அல்லவா இப்படியாயிற்று.

விசா:—இதெல்லாம் சொல்லிப் பிரயோஜனமென்ன? நம்முடைய சொத்து நம்மிடமிருந்தால் எல்லாரும் நமக்கு பயப்படுவார்கள். சென்ற வருஷத்தில் நாங்கள் வந்திருக்கும்போது தங்களுக்கிவ்வளவு அவமதிப்பு வந்திருந்ததா என்ன?

நீலா:—என்னடி விசாலம்! சொத்து சொத்து என்கிருயே, புருஷனைச் சொத்தில்லாதவனென்று அவமதிக்கும் ஸ்திரீகளை ராக்ஷஸிகளென்று பெரியோர்கள் சொல்ல நாம் கேட்டதில்லையா?

கோகி:—இப்போது இந்தப் பழைய புராணமெல்லாம் நமக்கேன், இன்னும் அரைநாழிகைக்கெல்லாம் வெளியிற் போயிருக்கிற அவ்விருவரும் வந்துவிடுவார்கள்; நாம் சீக்கிரத்தில் இவருக்காக வேண்டிய மேல்யோஜனையை முடிக்க வேண்டும்.

விசா:—கோகிலம்! ஒன்றுக்கும் அவசரப்படாதே; இப்போது இரவு 8 அல்லது 9 மணியிருக்கும்; சாப்பிட்டபின் அவர்கள் வெளியிற்சென்றிருக்கிறார்கள்; இனிமேல் 12-க்கோ ஒரு மணிக்கோ அல்லது பொழுதுவிடிந்தோ வரப்போகிறார்கள். ஆகையால் நாம் அவசரப்படாமல் தீர ஆர யோசித்து ஒருகாரியத்தை முடிக்கவேண்டும்.

நீலா:—தீர ஆர என்ன யோசனை நமக்கிருக்கிறது? நாம் எந்த ராஜ்யத்தைப் பிடிக்கப்போகிறோம்; இனி இந்த வீட்டில் இவரை ஒரு க்ஷணமேனும் வைத்திருக்க எனக்கு மனமில்லை, உங்களபிப்பிராயமென்ன?

கோகி:—இவரிந்த வீட்டில் இருக்கும்போதே அவ்விருவரும் இப்படி நடந்துவருகிறார்கள், இவரையும் அப்புறப்படுத்திவிட்டால்...

நீலா:—என்னடீ கோகிலம்! இப்போதில்லாத துஷ்ட கார்யம் அப்போது என்ன உண்டாய்விடப்போகிறது?

விசா:—இப்போது இவர்கள் பஹிரங்கமாய் காரியங்களை நடத்தினாலும் வருகிறவன் கொஞ்சம் ஸங்கோசப்படுகிறான். பிறகு தாராளமாய் வருவான்.

நீலா:—போகிறது, அவனாவது கஷ்டமில்லாமல் வரட்டுமே, இந்தப் பாவிகள் குலத்திற்குக் கெட்ட பெயரை வாங்கிக்கொடுத்துவிட்டார்கள். அது இனிமேல் ஒருநாளும் மறையப்போகிறதில்லை.

கோகி:—அது போகட்டும், முடிவான காரியத்தைச் சொல்லுங்கள். அப்பா! தங்களுக்கு இவ்வீட்டைவிட்டு எங்களில் யாருடைய வீட்டிலாவது வசிக்க இஷ்டமிருக்கிறதா?

ஜம்பு:—சொத்தை முழுமையும் இந்தச்சண்டாளிகளுக்கெழுதிக் கொடுத்துவிட்டு உங்கள் வீட்டில் நான் வந்திருப்பது அழகாயிருக்குமா?

கோகி:—அதற்காகத் தாங்கள் கவலைப்படவேண்டாம். சொத்தில்லாமல் தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்ததினால் நாங்கள் தங்களை அவமதிப்போமென்று நினைக்கவேண்டாம், எங்களுக்குச்சொத்தி லபேக்ஷையில்லை. ஏதோ பூர்வ புண்ய வசத்தால் தாங்களெங்களை நல்ல இடங்களிற் கலியாணம் செய்து கொடுத்துவிட்டீர்கள், எங்களுக்கு இது வரையில் தங்களாசீர்வாதத்தால் ஒரு குறைவும் பகவான் வைக்கவில்லையென்பது தாங்களறிந்ததே.

விசா:—எனது அன்புள்ள பிதாவே! எங்கள் வீடுகளில் ஒவ்வொருத்தி அகத்திலும் இரண்டு மாதம் மூன்று

மாத விதமாய்த் தங்களுக்கு வசிக்க இஷ்டமா? அல்லது நிரந்தரமாய் ஒருத்தி வீட்டிலேயே இருக்கவேண்டுமென அபிப்பிராயமா ?

நீலா:—என்னடீ விசாலம்! நீ யுக்தி யுக்தியாய்ப் பேசுகிறாய், பத்துலக்ஷ ரூபாய் சொத்துக்குப் பிரபுவாக இருந்தவரை வாரச்சாப்பாட்டுக்குப் போகச்சொல்லுகிறாய், நீங்களொருவரும் அவர் பாரத்தைச் சுமக்கவேண்டாம், அவர் என் வீட்டிலேயே வஸிக்கட்டும்; நானே அவருக்குப் பணிவிடை செய்கிறேன், அவசியமான காலங்களில் நீங்களும் வந்திருந்து அவரைக் காப்பாற்றுங்கள்.

கோகி:—என்னடீ அக்கா! அப்பா உனக்கொருத்திக்கே சொந்தமெனத் தீர்மானித்துவிட்டாய்போலும், நீ குடிக்கிற வேப்பெண்ணெயை நாங்களும் கொஞ்சம் கொஞ்சம் குடிக்கலாகாதா ?

நீலா:—அப்படி அப்பா எனக்கு மாத்திரம் சொந்தமென்று நான் நினைத்துச் சொல்லவில்லை. நீங்கள் சிறு பெண்கள்; அகத்தில் மாமியார் நாத்தனார் இன்னும் சில பெரியோர்கள் இருக்கிறார்கள், நீங்கள் அவர்களுக்கிசைந்து நடப்பீர்களா? ஒருநாட்போல் பிரதிதினமும் இவருக்குக் காலலம்ப ஜலம் முதலானது கொண்டுவந்து கொடுத்துப் பணிவிடை செய்வீர்களா என்று சொன்னேன்.

விசா:—எங்கள் மாமியார் நாத்தனார் முதலியவர்கள் இவரையேன் அழைத்துக்கொண்டுவந்து வைத்திருக்கிறாயென்று கேட்பார்களென்று பயப்படுகிறாயா?

நீலா:—அப்படி யில்லை, இவரைப்போல் இன்னும் பத்துப்பேர் வந்திருந்தாலும் அவர்கள் வருத்தப்படமாட்டார்

கள். அவர்களுடைய பெருந்தன்மை எனக்குத்தெரியும், நீங்கள் தான் அதிக சிரமம் அடையவேண்டியதாய் நேரிடும், கடைசியில் அ...த்துக்கொள்ளும்படியும் நேரிடும்.

கோகி:—உனக்கு மாமியார் நாத்தனார் இல்லாத பெருமையால் நீ இப்படி எங்களைப் பேசுகிறாயோ? நீயும் கடைசியாய் அலுத்துத்தான் போவாய்; நீயும் வீட்டுக்கு ஒண்டிக்காரிதானே.

நீலா:—என்பெருமையை நீதான் அறிந்தாய்; நீ அதிக சமத்தோ யில்லையோ? அதிருக்கட்டும், நான் ஒண்டிக்காரியாயிருந்தாலும் நம் குட்டி நாகம்மாளை இவருக்கென்றே ஏற்படுத்திவிடுவேன்; எனக்கு ஒன்றையும் காட்டிக்கொடாமல் இவருடைய வேலைகள் முழுமையும் முடித்துக்கொடுக்க சமத்துண்டு அவளுக்கு. அவள் புக்ககத்துக்குப்போக இன்னம் 2-வருஷம் செல்லும்; அதுவரையில் எனக்குக் கவலையில்லை; அதற்குள் ஸரஸ்வதிக்கு வயதாய்விடும், பார்த்துக்கொள்கிறேன்.

விசா:—சரியப்படியானால் நாங்களும் அடிக்கடி வந்து பார்த்துவிட்டு ஏதாவது விசேஷகாலங்களிலவரை எங்கள் கிருகத்திற்கு அழைத்துப்போகலாமோ இல்லையோ?

நீலா:—திவ்யமாய் அழைத்துப்போகலாம், அழைத்துக் கொண்டுபோய் ஒருமாதம்இரண்டுமாதம் வைத்துக்கொண்டு உங்களாசைதீர இவருக்கு சிசுரூஷைசெய்து மறுபடிகொண்டு வந்து விட்டுவிடுங்கள். அதிகநாள் வைத்துக்கொண்டிருந்தீர்களானால் உங்களுக்கு எப்போதும் பிரியமாயிருந்தாலும் உங்கள் மாமியார் முதலானவர்களுக்கு ஒருகால் அலுப்புண்டாகும். எனக்கானால் என் அகத்திற்கு நானே யஜமானி,

உங்கள் அத்திம்பேர் இங்குள்ள சமாசாரங்களைக் கேள்விப் பட்டு நம் அப்பாவிடத்தில் இருந்த பச்சாதாபத்துடனிருக் கிறார். ஆகையால் இவர் எத்தனைநாள் எங்களகத்திலிருந் தாலும் அவாள் அதைப் பொருட்படுத்த இடமில்லை. எனக் கும் வயது முற்றிய குழந்தைகள் இருக்கிறார்கள். இவருடைய காரியத்தை அவர்களைக்கொண்டு நான் பார்த்துக்கொள் வேன். நீங்கள் பச்சைப்பிள்ளைத் தாய்கள், இன்னமும் பெற வேண்டும், வளர்க்கவேண்டும். ஆகையால் ஆக்ஷேபமின்றி இவரை என்னிடம் விட்டுவிடுங்கள், நான் நாளையதினம் இவரையழைத்துக்கொண்டுபோகிறேன்.

இவர்கள் மூவரும் இவ்வாறுபேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஐம்புலிங்கமய்யருடைய மனதுக்கு ஒருபுறம் துக்கமும் ஒருபுறம் அடங்காத சந்தோஷமும் உண்டாயின. "சற்றேறக்குறைய ஒரு ஜமீனுக்குச் சமான மான நிலைமையிலிருந்த நமக்கு இந்தப்பெண்கள் இரக்கம் காட்டி ரக்ஷிக்கும்படியான நிலைமையுண்டாய்விட்டதே" என்ற துக்கம் ஒருபக்கமுண்டானாலும், நாம் ஸத்புத்ரிகளைப் பெற் றோமென்ற சந்தோஷம் அவர்மனதிலிருந்துகொண்டு சகல துக்கங்களையும் நீக்கிவிட்டது. கடைசியாய் அவர்கள் ஒருவித மானதீர்மானத்துக்கு வந்ததின்மேல் "குழந்தைகளே! நானி ங்கிருக்க உங்களுக்கும் பிரியமில்லை; எனக்கும் பிரியமில்லை தான்; ஆனாலும் ஏராளமாய் ஆண்டனுபவித்த நான் ஒருவர் வீட்டில் வந்திருப்பதென்றால் மனங்கொஞ்சம் லஜ்ஜையடை கின்றது. ஆகையால் என்னை வேறொரு இடத்தில் வைத்துக் காப்பாற்றினால் உங்களுக்குக் கீர்த்தியில்லையா?

நீலா:—அப்பா! அப்படிச் செய்வதில் எங்களுக்கொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் நாங்கள் மூவருமில்லாத ஓரிடத்

தில் தங்களை வசிக்கச்செய்தோமானால் ஒரு குடும்பத்திற் குள்ளகப்பட்ட நாங்கள் தங்களுக்கு நேரில் பணிவிடை செய்வது ஸாத்தியமாகாது. அப்படிச் செய்வது இப்போது போல் வருஷத்திற்கு ஒருநாளல்லது இரண்டுநாளே யாகும். வேலைக்காரர்களைக்கொண்டு தங்கள் காரியங்களைச் செய் தால் எங்களைப்போல் தங்களுசிதப்படி அவர்கள் நடக்க மாட்டார்கள். அப்போது தாங்கள் சிரமப்படுவதைப் பார்த்து இச்சமயம்போல் நாங்கள் வருத்தப்படவேண்டியதாகத் தான் நேரிடும். ஆகையால் தபவுசெய்து எங்கள் பிரார்த் தனைக்கிணங்கி என்வீட்டில் வந்து வசித்தால் எங்கள் கவலை நீங்கிவிடும்; தாங்கள் என் வீட்டிலிருப்பதைப் பார்த்துத் தங்கள் மாப்பிள்ளை பரமப்ரீதியாயிருப்பார். இனி தாங் களாவது நாஙகளாவது எக்காரணத்தை முன்னிட்டும் இந்த ஊர் வரவேண்டாம், இநத முண்டைகள் எக்கேடு கெட்டுப் போகட்டும்.

இதைக்கேட்ட ஐம்புலிங்கமய்யர் தமக்கு வேறு மார்க் கமில்லாததை யோசித்துச் சரியென்று சொல்லிவிட்டார். வெளியிற்போன கனகமும் ரத்னமும் இவர்கள் நினைத்தபடி சேநம் கழிததுவராமல் அரைமணி நேரத்திற்கெல்லாம் திருப்பி வீடுவந்து சேர்ந்தார்களென்றாலும இவர்கள் தனி யாய் ஓரறையிற் பேசிக்கொண்டிருந்ததை ஒற்றுக்கேட்டு விட்டு இவர்கள் சுலேகிற தருணத்தில் தாங்களும் தங்கள் படுக்கையறைக்குச் சென்றார்கள். இவர்களுக்கு அவ்விரு வர் வந்ததும ஒற்றுக்கேட்டதும் யாதொன்றும் தெரியாது.

மறுநா ளுதயத்தில் இப்பெண்கள் மூவரும் தங்கள் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்ததையும் நீலாம்பாள் தனது மூட்டைகளுடன் தன் தகப்பன்மூட்டை

களையும் கட்டுவதைப் பார்த்த ரத்னவல்லி, மனதில் ஒருவாறு களிப்படைந்திருந்தாலும் வெளிக்குக் கடுங்கோபத்தைக் காட்டி "நீலா! ஒங்கப்பா இங்கே ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டு கஞ்சிக்கு விதியில்லாமல் தவிக்கிறார்; நீயாவது அழைத்துக்கொண்டுபோய் வைத்துக் காப்பாற்று" என்று கடுமையாய்ச் சொல்லிவிட்டு ஜம்புலிங்கமய்யரைப்பார்த்து, "கிழமே! இந்தச் சிறுக்கிகள் வார்த்தைகளை நம்பி இந்த வீட்டைவிட்டுப் போனாயோ நீ சீரழிந்து கஷ்டப்படுவாய், பிறகு இந்தவீட்டில் வரவிடுவேனென்று சொப்பனத்திலும் நினைக்காதே, ஜாக்கிரதை, இப்பவே யோசித்துக்கோ" என்று கம்பீரமாய்ச் சொன்னாள்.

இதைக்கேட்ட ஜம்புலிங்கமய்யர் கண்ணீர்விட்டாரே தவிர வேறு ஒன்றும் பதிலளிக்கவில்லை.

நீலாம்பாள் மிகவும் பொறுமையுள்ளவளாகையால் 'இவள் சொல்வதைச் சொல்லிக்கொண்டிருக்கட்டும், நாம்நம் காரியத்தைப்பார்ப்போம், நம்மூருக்கு வந்து இவள் ஒன்றையும்சொல்லப்போகிறதில்லையே' என்றுமௌனமாயிருந்தாள்.

விசாலாட்சிக்கு மனதில் ஜாஸ்தியான ஆக்ரகமிருந்தாலும் சிறு பெண்ணானதால் விடையளிக்க தைரியமில்லாமற்போய்விட்டது.

கோகிலம் மாத்திரம் ஆத்திரத்துடன் ரத்னவல்லியைப் பார்த்து "அவரை இவ்விடத்தில் நீமாத்திரம் சீரழியவிடபாத்தியமுண்டு, எங்களுக்கு மாத்திரம் இல்லையென்று எப்படிச் சொல்லத் துணிந்தாய்? உன்னைப்போலவே எங்களையும் நினைத்துவிட்டாய் போலும்? உன்னிடம் சீரழிவதைவிட எங்களிடம் சீரழிவது அவருக்கு அதிகமான மானபங்கமில்லை,

ஜாக்கிரதை; எங்களெதிரில் இனி யவரை, ஒரு பேச்சும்பேசாதே; இதுவரையில் அவருன்னிடம்பட்டதுபோதும், அவரிங்கிருப்பது, உனக்கு இடைஞ்சலென்று எண்ணித்தான் நாங்களழைத்துப் போகிறோம்" என்று படபடவென்று சரமாரியாய் வார்த்தைகளைப் பொழிந்தாள்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட ரத்னவல்லி தனது மனதில் "நமதுகணவன் இதைவிட்டுப்போவது நமக்கு நல்லதே தவிர வேறில்லை, நாமினி ஜாஸ்தியாய்ப் பேசினால் நாம் நமது மானத்தை இழக்கவேண்டியதாயிருக்கும்" என்று நினைத்து, கோகிலாம்பாளைப் பார்த்து "என்னடி கோகிலம்! ரொம்ப பதட்டக்காரியாயிருக்கிறாயே, அவாரெண்டுபேருக்குமில்லாத அப்பா உனக்கு மாத்திரம் வந்து விட்டாரோ, எனக்கு அவரைப்பேச சுவாதீனமில்லையோ?" என்றாள்.

நீலாம்பாள்:—அம்மா! நீ யெதைச் சொன்னாலும் நம் காரியத்தில் நாம் கண்ணாகவிருக்கவேண்டுமென்று நான் பொறுமையாயிருக்கிறேன். விசாலத்திற்குத்தைரியம் போதவில்லை கோகிலம்தான் படபடப்பாய்ப் பேசுகிறாள். அதற்காக நீயெங்களைப் பிரித்துவைக்காதே. உனக்கு இதுமாத்திரமல்ல, இன்னம் ஜாஸ்தியாய்க்கூட அவரைப்பேச பாத்தியமுண்டு.

கோகி:—ஏனென்றால், அவளுடைய சாஸ்திரப்படி அவள் தனது அகமுடையானை எதுவேணுமானாலும் பேசலாம்; அதிலும் அவர் பத்துலக்ஷ ரூபாய் சொத்துக்களை இவளுக்குக் கொடுத்துவிட்டாரோ யில்லையோ இப்போது இன்னம் ஜாஸ்தியாய்க்கூடப் பேசலாம்.

நீலா:—வேண்டியமட்டில் பேசட்டும், அவரிவ்விடம் விட்டு நம்முடன் வந்துவிட்டாரானால் எப்படி இம்மாதிரி

வார்த்தைகளைக் கேட்கப்போகிறூர்; நீ உன்காரியத்தைப் பார், நாழிகையாய்விட்டது, புறப்படவேண்டும். விலாசம்! வாசலிற் பார்; கருணாநிதி வண்டி கொண்டுவந்து விட்டாஞ?

இதைக்கேட்ட ரத்னவல்லி "ராத்திரி பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டேன், அழைத்துப் போங்கள், இதற்குத்தக்கவாறு எனக்குநடத்தத்தெரியும். இந்தக்காற்று எவ்வளவுகாலந்தான்வீசும், மறுபடிஎன்காலடியில்தான்வந்து விழணும்" என்றுசொல்லிக்கொண்டேஉள்சென்றுள். கோகிலாம்பாளும் "உன்னுலியன்றதை யஞ்சனையின்றி பார்த்துக் கொள்; இனி எக்காலத்திலும் எக்காரணத்தைக்கொண்டும் நாங்களாவது இவராவது உன்னையணுகமாட்டோம்" என்று சொல்லிக்கொண்டே வண்டிக்கு வந்தாள்.

ஜம்புலிங்கமய்யரும் தமது சொந்தப்பணமாகிய 50000 ரூபாயில் செலவழிநதது போக பாக்கி 40000ரூபாய்க்குள்ள தஸ்தாவேஜிகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார்; நீலாம்பாள் தன தகப்பனுருடன் தமது ஊராகிய ஸ்ரீரங்கம வந்து சேர்ந்தாள். இவளது புருஷனுன பத்மநாப ஐயர், தனது மாமனுர் ஜம்புலிங்கமையரைககண்டதும், முந்தியே இவரிடம் பச்சாத்தாபங்கொண்டுள்ளவராதலால் பரம ஆதரவுடனும் ஸந்தோஷத்துடனும் அவரை வரவேற்று உபசரித்தார். ஜம்புலிங்கமையரும் தனது துக்கங்களைக்கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து ஸுகமாக அங்கு வசித்துவந்தார். கோகிலமும் விசாலமும் தங்கள் தங்கள் வீடு போய்ச்சேர்ந்தார்கள்.

பிறகு ரத்னவல்லியும் கனகவல்லியும் நிஸ்ஸங்கோசமாய்த் தங்கள் காரியங்களை நடத்திவந்தார்கள். கொஞ்ச நாளில் அதாவது ஒரு மாதத்திற்குமுன் இருவருக்கும் அற்ப

மான மனஸ்தாபம்நேரிட்டதால் இனிச்சேர்ந்திருந்தால் அது முற்றிவிடுமென நினைத்துக் கனகவல்லி இராமபுரத்திலும் ரத்னவல்லி ஈரோட்டிலும் வசித்துக்கொண்டு வேலைக்காரர்களைக்கொண்டும் காரியஸ்தர்களைக்கொண்டும் தங்கள் பூமிகளைப் பார்வையிடச்செய்துவந்தார்கள்; வந்த வரும்படிகள் இவர்கள் செலவிற்குக்கட்டவில்லை; அதனால் மேலாகக்கடன்கள் வாங்கியும் செலவு செய்துவந்தார்கள்.

கனகவல்லி இவ்வாறு இராமாபுரத்தில் இருந்து வரும்போது இவள் கணவன் இராமாபுரம் வந்து சிற்சிலநாள் தங்கித் தனது மனைவியிடம் மானத்தை விட்டுக் கேட்டுத்தனது செலவிற்காக ஆயிரம் இரண்டாயிரம் என்று ரூபாய்கள் வாங்கிககொண்டு போவான்.

ஈரோட்டில் வசிக்கும் ரத்னவல்லி தனது மனதிற்கிசைந்தவர் யாரென்று தேடி அவ்வூர் போலீஸ்இன்ஸ்பெக்டர் குப்புஸாமி ராயரை ஆசைநாயகனாகத் திட்டஞ்செய்து கொண்டு அவனுடன் ஸுகித்துவந்தாள் இப்பொழுது இவள் தமையன் ஸாவித்திரியிடம் அவமானப்பட்டு வந்து தன்னிடம் அழுததைப்பார்த்து மனமிரங்கித்தன் இனத்தில் வரன்களில்லாமையால் மீனாக்ஷியிடம் போகும்படி சொல்லிக் கலியாணத்திற்காக 2000 ரூபாய் கொடுப்பதாயும் பெண்ணுக்கு ஏதாவது நகைபோடுவதாயும் வாக்களித்தாள். அந்தப்படி ஸாவித்திரியும் மீனாக்ஷியும் வந்திருந்தபோது தானுமங்கேபோய் ரூபாயும்கொடுத்து கோணமூஞ்சிக்கமலத்திற்கு 2000 ரூபாய் பெறுமானமுள்ள ஒருஜோடி வைரத்தோடும் 1000 ரூபாய் பெறுமான ஒருபுல்லாக்கும் கொடுத்துவிட்டு ஸாவித்ரியுடன் லக்ஷ்மி விலாஸ பங்களாவுக்கு வந்துசேர்ந்தாள். இனிபிரகிருதத்தைப் பார்ப்போம்.

## பதின்மூன்றாவது ஆச்வாஸம்

### ஜிதேந்திரியத்துவம்.

பரம துரோகியான நமது தமையன் பணத்தாசையின் மிகுதியால் நம்மை ஒரு கிழவனுக்குத் தள்ளி யனியாயமாய் நமது வாழ்நாட்கள் முழுமையும் பாழாக்கினனென்றாலும் நம் சுய புத்தியால் நாம இம்மட்டும் முன்னுக்கு வந்து சுகத்தை யடைந்து வருகிறோம். "புத்தி புள்ளவனே பெரியவன்" எனச் சொல்லப்படுகின்ற அபியுக்த வாக்யத்தை வீணுக்காதவள் நாவொருத்தியே யென யேன் நினைக்கலாகாது. நமது செலவுகளுக்கும் உடையூண் முதலிய காரியங்களுக்கும் கவலையில்லாமல் சொத்து முழுமையும் நம்வசத்தில் வந்துவிட்டது. நமது காரியங்களுக்கு விக்னமாய் இருந்துவந்த கணவனையும மகாராஜிகளான அவன் பெண்கள் அழைத்துப் போய்விட்டார்கள்; கனகவல்லிக்கும் நமக்கும் சரிதம் ஒரேவிதமா யிருந்தபோதிலும் ஒரு இடத்தில் சேர்ந்திருப்பது எப்படியும் மனஸ்தாபத்தைக் கொடுக்குமென்று தனியாயும் வந்துவிட்டோம்; நமது இச்சைக்கிசைநத நாயகனுகிய இங்கிருக்கிற குப்புஸாமி ராயரும இவ்விடத்தை விட்டு மாற்றப்பட்டால வேலையை விடுவதேதவிர என்னை விடுவதில்லையென பிரதிக்ஞை செய்து கொடுத்துவிட்டார். ஆ, ஆ, அவருடைய ரூபத்தை நானென்ன வெனப் புகழுவேன். இவரைப் பாராதவர்களல்லவா பதிவிரதா தர்மம் என்பதைப் புகழ்கின்றார்கள்; இவரைக் கண்டு மோகித்து இவரைப் பிரார்த்திக்கின்ற அநேக அப்ஸரஸ்போன்ற பெண்களிருந்தாலும் அவர்களை மதிக்காமல் இவர் நம்மிடமன்புட னிருப்பதைப்பற்றி நமது அதிர்ஷ்டத்தை மெச்சவேண்டியதாயிருக்கிறது. இனி பாக்

கியான நமது வாழ்நாட்களை இப்படியே இவருடன் கூடிக் குலாவியே கழித்தோமானால் நாமே புண்யசாலி யென்று சொல்லலாம்.

ஆனால், நமக்கொரு காரியசேஷமிருக்கிறது; அதாவது, நமது ஸாவித்ரியின் மூத்தாள் பிள்ளையை எல்லாரும் அழகில் நிகரற்றவன் என்று சர்வஜன ஸாதாரணமாய்ச் சொல்லுகிறார்கள்; அதை நான் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நமது தமையன் அவனைப்பற்றி வர்ணிப்பதைக் கேட்டால் மனம் குளிர்ந்துபோகிறது. அப்படி யிருப்பது வாஸ்தவமானால் அவனை யொருதரமாவது கட்டியணைந்தாற்றான் நமது ஜன்மம் வீணாகாமற் போகும்; இதற்காகவேதான் ஸாவித்ரியை இங்கே அழைத்து வைத்திருக்கிறேன்; எப்படியும் அவன் இவளை யழைக்க இவ்விடம் வருவான்; அவனுக்குக் காலமே ஒரு தந்தியும் கொடுக்கச்சொல்லி யிருக்கிறேன்; அவன் வந்ததும் நான் கேள்விப்பட்ட விஷயம் சரியாயிருந்தால் எப்படியும் எனதிஷ்டத்தைப் பூர்த்திசெய்து விடுகிறேன். ஸ்திரீகளின் மந்தஹாஸமுள்ள முகத்தை அதிலும் எனது முகத்தைக்கண்டு மயங்காத புருடனும் உலகத்திலுண்டோ? - என்றிவ்வாறு மனதில் யோசித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தாள் ரத்னவல்லி. எதிரில் காந்தவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதின் வெளிச்சத்தின் பிரதிபலிப்பால் அவள் தேகத்திலுள்ள வைர நகைகள் 'பளீர் பளீர்' என்று மின்னிக்கொண்டிருந்தன; கடிகாரம் டங் டங் என்று எட்டடித்தது.

அச்சமயம் வேலைக்காரன் ஒருவன் அவள் சமீபம் ஓடிவந்து "அம்மா! குளித்தலையிலிருந்து ஒரு அய்யரு வந்திருக்காரு, அவர் தாயார் இங்கிருக்காங்களாம், உள்ளே வரணும்,

இங்காரு" என்றதும், ரத்னவல்லிக்குண்டான அவாவிற்கோரளவில்லை. உடனே 'அவரை உள்ளே வரச்சொல்' என்று அவனுக்கு உத்தரவிட்டாள். தான் தனது இருப்பிடத்தை விட்டெழுந்திருக்காமல் அவன் உள்ளே வருவதைக் கவனத்துடன் நோக்கினாள். அவன் தன் தாயாரைப் பார்க்கப்போவதில இடைஞ்சல் செய்யக்கூடாதென்றும் அவளருகில் அவனுடன் பேசத்தனக்கு சௌகரியப்படாதென்றும கருதி ஒரு வேலைக்காரியைவிட்டு அவனுக்கு ஸமவிதரி படுத்திருக்குமிடத்தைக் காட்டச் சொன்னாள்.

அவ்வாறே தர்மன் அவ்விடத்தைக் குறித்துப் போய்க்கொண்டிருந்தான. அவனைப்பார்த்தாள் ரத்னவல்லி. மலைத்தாள் ஒருக்ஷணம்; நினைத்தாள் மனதில, "மன்மதன் மன்மதனென்று ஒருவனுண்டென்றும் அவனழகிற் சிறந்தவனென்றும் புகழ்கின்றார்களே, இவனைக்காட்டிலும் அவன்மேனோக்கு னென்றும் இவனைக்கண்டவரும்கூறுவார்களோ! இவனைப்பற்றி அண்ணு சொன்னவையெல்லாம் அதிசயோக்தியென்றேநினைத்திருந்தேன்; இப்போது அவன்சொன்னது மெய்யென்று நினைக்கிறேன். இவனைக் கட்டியணைய பாக்கியமுள்ள பெண்ணே பெண். மற்றவர்களெல்லாம் குலத்திற்குப் புண்ணே" என்றிவ்வாறு சிந்தித்து, எழுந்திருந்தாள்; அவனருகிற்செல்ல யத்தனித்தாள்; தானிருந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட வைக்கச சக்தியற்றவளாய்த் துடித்தாள்; தானிருந்த இடத்தைவிட்டுத் தனது சரீரம் போகாமலே தானவனை யணுகியணைந்து முத்தமிட்டதுபோல் நினைத்தாள்; தன்னையவன் திரஸ்கரித்ததுபோல் துக்கித்தாள்; தன்னையவன் மறுபடியழைத்ததுபோல் ஆனந்தித்தாள்; அவன் தன்னைப் பிரார்த்திப்பதுபோல் நகைத்தாள்; அவன் தன்னைவிட்டு ஓடிப்போனதுபோல் பிரமித்தாள்; சகல சொத்தும் பறிகொடுத்

தவள்போல் கலங்கினாள்; அடிபட்டவள்போல் அழுதாள்; வெகுதூரம் வெயிலில நடந்தவள்போல் வாடினாள்; வைத்த வஸ்துவைக் காணாதவள் போல் அவ்வறை முழுமையும் தேடினாள்.

இவ்விதப்படி மூளை சிதறுண்டிருக்க, தர்மனோ கவலை யென்கிற கடலில் மூழ்கினவனாய் வேலைக்காரி காண்பித்த இடம்போய் ஸாவித்ரியைப் பார்த்தான்; அடியற்ற மரம்போல் விழுந்து அம்மா வென்றலறினான்; உன்னை யிந்த ஸ்திதியிற் பார்க்கும்படி நேர்ந்தது எனது ' எவ் வினையின் பயனோ வென்று கூவினான். உடனே ஸாவித்ரி மெல்ல எழுந்துட்கார்ந்து தர்மன்கையை யெடுத்துத்தன்கண் களில் வைத்துக்கொண்டு "அப்பா தர்மா! நான் பூர்வஜன் மத்திற்செய்த பாபத்தின் பலனையனுபவிக்கிறேன்; மஹா தன் யனை உன்னைக் கண்டதனால் இப்பொழுதிருந்த துக்கத்தை யிழந்தேன்; இனி நமக்கு பகவான் அநுக்கிரகம் செய்வார்; பயப்படாதே" என்றாள்;

உடனே தர்மன் ஸாவித்ரியை ஆபாதமஸ்தகம் பார் வையிட்டுவாடினமுகத்துடன் "அம்மா! இதென்ன கோலம் உனக்கு? உனக்கென்ன வியாதி? உன் உடம்பிலிருந்த நகைகளெங்கே? எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்; மேல் நடக்கவேண்டிய விஷயங்களையும் சொல்" என்றான். அதற்கு ஸாவித்ரி "மகாபுத்திமானாகிய உனது வார்த்தை யைத் தட்டி என் தமையனுடன் நான் வந்ததற்கு இத் தப்பலனை நான் அனுபவிக்கிறேன். இனி உன் வார்த் தைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் நீ யெனக்கு குழந்தையானாலும் உன்னைத் தெய்வத்தைப்போல் பெரு மையாய் நடத்தவேண்டியதென்றும், எனக்கு இந்த ஸ்திதி

யே கற்பித்தது. உன்னைக்கண்டவுடனேயே எனக்கிருந்த வியாதியும் துர்பலனும் நீங்கிவிட்டன. இப்போது எனக்குப் பத்துமைல் நடந்துபோகக்கூடத் தைரியமுண்டாயிருக்கிறது, நீ என்னைக்கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க ஒரு பாரதம் இருக்கிறது, சாவகாசமாய்ச் சொல்லுகிறேன், இப்போதே இந்த இடத்தை விட்டுப் புறப்பட ஏற்பாடு செய்'' என்றாள்.

தர்மன்:—சரி யப்படியே செய்கிறேன். உனது தங்கை ரத்னவல்லி யெங்கிருக்கிறாள்? அவளனுப்பிய தந்திசமாசாரத்தினால்தான் நீ இவ்விடமிருப்பதை நானறியலாயிற்று; அவளைப் பார்த்துவிட்டு ஊருக்கு ராத்திரி 2-மணிவண்டியில் புறப்படுவோம்.

ஸாவித்ரி.—(திடுக்கிட்டு) அவளுனக்குத்தந்தி கொடுத்தாளா? எப்படியானாலும் ஆகட்டும், அவளை நீ தனியே பார்க்கலாகாது.

தர்மன்:—ஏனம்மா அப்படிச் சொல்லுகிறாய்? உனக்குத்தங்கையென்ற முறையைக்கொண்டு எனக்கு அவளும் தாயல்லவா? மேலும் ஆபக்காலத்தில் உன்னை இங்கு வைத்துக் காப்பாற்றிக்கொண்டு எனக்குத் தந்தியும் அனுப்பியிருக்கிறாள்; நானிதுவரையிலவளைப் பார்த்ததுமில்லை; ஆகையால், நீ இவ்விஷயத்தில் தடைசெய்யவேண்டாமென நினைக்கிறேன்.

"ஐயோ! இவனுக்கு இவளுடைய குணந்தெரியாததால் இப்படிச்சொல்லுகிறான். இச்சண்டாளி ஒரு பச்சை மோகினியாயிற்றே, இவனைப்பார்த்தால் அவளிவனழகு - மயங்கி இவனை ஹிம்ஸித்தாளானால் நானென்ன

செய்வேன்? இவனிணங்கானென்பது நிச்சயம். அதனு லவள் என்ன கெடுதி செய்வாளோ தெரியவில்லையே என்று ஸாவித்ரி பலவாறுயோசித்து, கடைசியாய்த்தர்மனைப்பார்த்து "அப்பா குழந்தாய்! நீ எனக்குக்குழந்தையானுலும்யௌவன வய்தடைந்தவனுயிருப்பதால் நான் சொல்ல கொஞ்சம் ஸங்கோசப்படுகிறேன். அவள் நடத்தை யெனக்குப் பிடிக்க வில்லை; நீயவளிடத்தில் ரொம்ப ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்" என்றுள்.

அதற்குத் தர்மன் "அம்மா! நானென்ன காமியென நினைத்தாய்? அவளெனக்குத் தாயில்லையா? என் விஷயத்திற்கூட உனக்கேனிப்படி புத்திபேதம் உண்டாயிற்று" என்று முகம் சிவக்கச் சொன்னுன். அதற்கு ஸாவித்ரி "அப்பா! உன்னை நான் அஜிதேந்திரியன் என்று சொல்ல வில்லை. அவளுடைய குணத்தை நான் நன்கறிந்திருப்பதால் சொன்னேன்; போய் ஜாக்கிரதையாய்ப் பேசி ஊருக்குப்போக உத்தரவு வாங்கிவா; அவளே இவ்வீட்டிற் கெஜமானி" என்றனுப்பினுள்.

தர்மனுடனே முன்கூடவந்த வேலைக்காரியைப்பார்த்து 'உன் யஜமானியை நானிப்போது பார்க்க வரலாமாவென்று கேட்டுவந்து பதில்சொல்லு' யென்றதும், உடனே அவள் ரத்ன வல்லியினிடம் போய் இச்செய்தியைச்சொல்ல, அவளுடனே பரமானந்தத்திலாழ்ந்து அவனையழைத்து வரும்படி சொல்லி யனுப்பிவிட்டு, அவ்வறையின் வாயிற்படியில் நின்றுகொண்டு தர்மனை யெதிர்பார்த்தாள். அவன் வந்ததும் "அப்பா வர வேணும், என்று உள்ளேயழைத்துப்போய் ஒரு நாற்காலியில் உட்காரவைத்தாள். தர்மன் அவளழகையும் அலங்காரத்தை யும் நடையையும் உடையையும் அவளுடைய நேத்திரங்கள்

தன்னை நோக்கும் விதத்தையும் பார்த்துத் தனது தாய் சொன்னது சரியாய் இருக்கலாமென நினைத்தான். பிறகு "அம்மா நீங்கள் கொடுத்த தந்தி காலமே கிடைத்தது. என் அன்னையை இவ்விடம் வைத்து ரக்ஷித்து எனக்கும் சரியான காலத்தில சமாசாரம் தெரியப்படுத்தினதற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்; இதற்கு என்னால் செய்யக்கூடிய பிரதி யுபகாரத்தில் உங்களுக் கபேட்சையிருந்தால் செய்யத் தயாராயிருக்கிறேன் என்றான்.

ரத்ன:—இந்த வார்த்தை சத்தியமா ?

தர்மன்:—சந்தேகமில்லை, நானிதுவரையில் லெக்காரணத்தைக்கொண்டும் பொய் மொழிந்ததில்லை.

ரத்ன:—உனது தாயைப் பார்த்தாயா ?

தர்மன்:—பார்த்தேனம்மா.

ரத்ன:—அவளை நீ யிப்போதிருக்கும் ஸ்திதிக்குக் காரணமென்னவென்று கேட்டாயா ?

தர்மன்:—கேட்டேன், ஊருக்குப் போகும்போது சாவகாசமாய்ச சொல்கிறேன்

ரத்ன:—நான் காரணத்தைக் சுருக்கிச் சொன்னால் கேட்பாயா ?

தர்மன்:—தடையில்லை, கேட்கத் தயாராயிருக்கிறேன்.

ரத்ன:—உன் அன்னையைக் குளித்தலைக்குக் கொண்டு போய்விட உத்தேசித்து அவள் தமையன் அவளை யழைத்துக்கொண்டு இராமாபுரம் விட்டுப் புறப்பட்டு ரெயிலேறி வருகையில், உனது தாய்க்கு திடீரென ஒரு மயக்கமுண்டாய் கீழே விழுந்தாள். நானும் எனது வேலைக்காரியாகிய செல்லமும் கூடவே வந்தோம்; அப்படி மயங்கிவிழுந்தவளை

பணைந்த்துக்கொண்டு குளித்தலை போக முடியாதென நினைத்து, அவளைத்தூக்கிக்கொண்டு ஈரோட்டில் இறங்கி, அவளையும் அவள் தமையனையும் ஒரு வண்டியிலேற்றி நானும் எனது வேலைக்காரியுமொரு வண்டியி லேறிக்கொண்டோம். என் வண்டியிற் கட்டியிருந்த குதிரை உயர்ந்ததாகையால் என் வண்டி இந்தப் பங்களாவுக்கு முந்திவந்துவிட்டது.

பிறகு ஒருமணி நேரம்வரையில் அவ்விருவருமிருந்த வண்டி வராததால் சஞ்சலமான மனதுடன் ரெயிலவே ஸ்டேஷன் வரையிற் றேடச்செய்தேன்; ஒன்றும் புலப்படவில்லை. நானுடனே பத்துப்பேர் ஆட்களைத் தருவித்துச் சுற்றுக்கால் 5-மைல் வரையில் எல்லாவழிகளிலும் தேடச் செய்ததில், இரவு 2-மணி சுமாருக்கு இரண்டுபேர் திரும்பிவந்து இவ்விருவரும் ஒரு மரத்தடியில் பிரக்ஞையற்று விழுந்து கிடந்தார்களெனத் தெரிவித்தார்கள். நானுடனே ஒரு வண்டியையனுப்பி நான்குபேர் ஆட்களைக்கொண்டு அவ்விருவரையும் இவ்விடத்திற்கு வரவழைத்தேன்; பிறகு ஒருமணி நேரத்திற்கெல்லாம் எங்கள் தமையனுக்குப் பிரக்ஞைவர, "வண்டிக்காரன் இருட்டினால் வழிதப்பி யோட்டிவிட்டதாயும் நால்வர் திருடர்வந்து வண்டியைநிறுத்தியேதோ ஒருவஸ்துவைத் திறந்து இரண்டுபேர் முகத்திலும் காட்டியதாயும் பிறகு ஒரு சங்கதியும் தெரியாதென்றும்" அவரைக்கொண்டு தெரிந்துகொண்டேன்.

பிறகு இவளைப் பார்த்ததில் தேகத்தில் அணிந்திருந்த ஒரு நகையும் புலப்படவில்லை. ஆனால் உடம்பில் ஒருவிதமான காயமும் இல்லையே யென்று சந்தோஷித்து, போனாற் போகட்டும் திருடர்கள் நகைகளுடன் போனார்களே, இதுவே போதுமென்று நினைத்து அவளுக்குக்

களைப்புத் தீரும்படி காபி கஞ்சி பால் முதலியவற்றைக் கொடுத்துவந்தேன். ஒரு இங்கிலீஷ்வைத்தியரையும் கூப்பிட்டு பார்க்கச்சொன்னேன்; இவளுக்கு மறுநாள் பிரக்ஞை வந்தது.

உடனே நடந்த வற்றை யிவளுக்குச் சொன்னால் இவள் பயப்படுவாள் என நினைத்து, இது வரையிற் சொல்லாமலிருந்தேன். இவள் தனக்குப் பிரக்ஞைவந்த நாழிகை முதல் ஊர் ஊர் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாள். நானவளை நேரிலாவது எனது பிராமண வேலைக்காரர்களைக் கொண்டாவது ஊருக்கனுப்பியிருக்கக்கூடுமானாலும்நானிது வரையிலுன்னைப் பார்க்காதவளாதலால் இந்த வ்யாஜயத்தைக் கொண்டு உன்னையும் பார்த்துவிடலாமென நினைத்து, "உனது தாயார் சௌக்கியமாயிருக்கிறாள் பதரவேண்டாம், இவ்விடம் வந்து அவளை யழைத்துப்போகலாம்" என்று தந்தியனுப்பினேன். நீயும் வந்துவிட்டாய், இதுதான் சுருக்கமான சமாசாரம் - என்றாள்.

இதைக்கேட்ட தர்மன் "எல்லா முண்மையாயிருக்கலாமெனத்தோன்றுகிறது; ஆனால்தந்தியிலிவள் சொல்லுகிறபடி எழுதவில்லை. ஒருகால் இவளொருவிதம் சொல்ல தந்தி யடிக்கப்போனவர்கள் ஒருவிதம் அடித்திருக்கலாம் என யோசித்து மறுபடியும் ரத்னவல்லியைப் பார்த்து (நீ என் தாயார் விஷயத்தில் இவ்வளவு சிரமப்பட்டதைப்பற்றி நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன் இனி உன் பாரத்தைக் கழித்து எனது மாதாவை நாமெடுப்புக் கொள்ளுகிறேன், என்னுடன் அனுப்புங்கள்" என்றான்.

ரத்ன:—சரி நீ யொப்புக்கொள்வதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் நீயெனக்கு வாக்களித்தபடி எனது அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிட்டு நீ யவ்வாறு செய்யவேண்டும்.

இதைக்கேட்ட தர்மனுக்குக் கொஞ்சம் மனங்கலங்கி பீதியுண்டாயிற்று. இவளது மாதிரியையும் சொற்களையும் கேட்டால் நமது அம்மா சொன்னபடி இவள் நம்மை அகாரியத்தில் நிர்ப்பந்திப்பாள்போல் தோன்றுகிறது. இருக்கட்டும், மேலே பேசிப்பார்ப்போம் எனத்தீர்மானித்து! "அம்மா! என்னகாரியம் உனக்கென்னாலாகவேண்டும்?" என்றான்.

ரதன:—நான் யாரென்றும் எனது அந்தஸ்து எப்படிப்பட்டதென்றும், தெரிந்துகொண்டிருக்கிறாயா? அதை நீ யறிந்தபிறகுதான் எனக்காகவேண்டிய காரியத்தைச் சொல்லவேண்டும்.

தர்ம:—அம்மா நீங்கள் என்தாயாருக்குத் தங்கையென நினைக்கிறேன், உங்களந்தஸ்து இன்னதென்று நானறியேன்.

ரத்ன:—என்னை நீ யிதுவரையில் பார்த்திருக்கிறாயா?

தர்ம:—இல்லை.

ரத்ன:—என்னைப் போல் அழகும் ஆபரணங்களுமணிந்த பெண்களையாவது பார்த்திருக்கிறாயா?

தர்ம:—ஆம், நானநேகரைப் பார்த்திருப்பேன்.

ரத்ன:—பார்த்திருப்பது நிஜமானால் அநேகரில் இரண்டொருவரையாவது இப்போது சொல்லமுடியுமா?

தர்ம:—முடியாது.

ரத்ன:—ஏன்?

தர்ம:—ஒரு ஸ்திரீயைப் பார்த்தால் மறுபடி யவளுடைய வனப்பை மனதிற்குக் கொண்டுவரக்கூடிய ஸம்ஸ்காரத்தை யுண்டுபண்ணும்படி உற்று நோக்கும் வழக்கம் எனக்கில்லை.

ரத்ன:—அப்படியானால் அநேகரைப் பார்த்திருப்பதாய் மாத்திரமெப்படிச்சொன்னாய்.

தர்ம:—நான் வெகு ஊர்களில் வெகு பேர்களைப் பார்த்திருக்கிறேனாதலால் இப்படியுமநேகரிருக்கலாமெனெ நினைக்கிறேன்.

ரத்ன:—அநுமான தர்க்கந்தானே.

தர்ம:—ஆம், ஆனால் அது சரியாகவுமிருக்கும்.

ரத்ன:—ஒருகாலுமிருக்காது.

தர்ம:—ஏனிருக்க நியாயமில்லை.

ரத்ன:—மற்ற பேர்களும் நானாகவே யிருந்தால் நீ என்னைப்போலுள்ள ஸ்திரீகளைப் பார்த்திருக்கக் கூடும்.

தர்ம:—ஆனால் தனக்குத்தானே நிசமென்று அனன்வயம் சொல்லப்படுகிறதுபோல் தோன்றுகிறது.

ரத்ன:—ஆம் அதற்கென்ன தடை ?

தர்ம.—தடையொன்றுமில்லையா ? ஒருவருக்குத் தன் னழகைத் தானே யறியமுடியாதென்பதுதான் தடை.

ரத்ன:—அப்படியானால் தன்னழகை யெப்படித்தான் அறிவது ?

தர்ம:—எதிரிலிருப்பவர் பார்த்துச்சொல்லித் தான் அறியவேண்டும், அல்லது நிலைக்கண்ணாடியிற் கொஞ்சம் அறியலாம்.

ரத்ன:—எனக்குக் கொஞ்சமாக அறிந்துகொள்வதிற் பிரியமில்லை.

தர்ம:—அப்படியானால் எதிரிலிருந்து பார்த்தவர் சொல்லத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

ரத்ன:—எனக்கிப்போது யார் எதிரிலிருக்கிறார்கள்.

தர்ம.—(சுற்றிப்பார்த்துவிட்டு) நான்தான் இருக்கிறேனென நினைக்கிறேன்.

ரத்ன:—நீ சொல்லத்தான் தெரிந்துகொண்டேன்.

தர்ம:—நானொன்றும் சொன்னதாய்த் தெரியவில்லையே, நானென்னசொன்னேன், அதைச் சற்றுத் தயவுசெய்துசொல்லவேண்டும்.

ரத்ன:—என்னைப்போல் அழகும் அதற்கேற்ப ஆபரணங்களுமமைந்த ஸ்திரீ வேறொருத்தி இல்லையென்று தான் சொன்னாய்.

தர்ம:—அனக்கப்படிச்சொன்னதாக ஞாபகம் இல்லையே.

ரத்ன:—உனது வாய்ச்சொன்னாலல்லவா உனக்குத் தெரியும்.

தர்ம:—சொல்லும் சக்தி வாய்க்கேதவிர வேறொரு இந்திரியத்துக்குமுண்டோ ?

ரத்ன:—உண்டு.

தர்ம:—எனக்குத் தெரியவில்லையே.

ரத்ன:—தெரியச்சொல்லுகிறேன் கேட்கிறாயா.

தர்ம:—புதுவிஷயத்தைச் சொல்வதைக்கேட்டு ஆனந்திக்கத் தயாராயிருப்பதில் தடையென்ன ?

ரத்ன:—ஸ்தூலஞானம் உள்ளவர்களுக்கு வாயினாற் சொல்லவேண்டும், ஸூக்ஷ்மஞானமுள்ளவர்களுக்கு மற்ற இந்திரியங்கள் ஸூசனம் செய்யும், நான் ஸூக்ஷ்மஞானமுள்ளவள்.

தர்ம:—அப்படியானல் எனது புலன்களுக்குள் எது உனக்கு ஸந்தோஷம் செய்தது.

ரத்ன:—எந்த இந்திரியம் ரூபத்தையும் லாவண்யத்தையும் அறிய வல்லமையுள்ளது ?

தர்ம:—நேத்திரேந்திரியம்.

ரத்ன:—அதுதான் எனக்கு ஸந்தோஷம் செய்தது.

தர்ம:—ஆனல் எனது கண் உனது அழகையும் அதைப் பெருகச்செய்யும் ஆபரணங்களையும் நோக்கி யானந்திக்கின்றதென்று உங்களபிப்பிராயமா ?

ரத்ன:—ஆம், அப்படித்தானென நினைக்கின்றேன், (என்று சொல்லி உதட்டிற்குள் சிரித்துப் பவளக்கொடியிற் சந்திரிகைவிழுந்த சோபையை ஜயித்தாள்).

தர்ம:—அதற்கென்ன காரணமென நீங்கள் நினைக்கிறீர்கள்.

ரத்ன:—அக்காரணம் உனக்கே தெரியும்.

தர்ம:—எனக்குத் தெரியவில்லையே ஒருகால் அனுராகமென்கிறாயோ ?

ரத்ன:—அப்படித்தானிருக்கலாமென நினைக்கிறேன்.

தர்ம:—அது எவ்வாறு புலப்பட்டது

ரத்ன:—என் மனம் சொல்லிற்று.

தர்ம.—எப்படி யதனைச் சொல்லமுடியும்.

ரத்ன:—நான் உன்னைப் போலுள்ளவர்களையும் உன்னைக்காட்டிலும் அதிகமான அழகுவாய்ந்த யுவாக்களையும் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறேன், அவர்களிடத்தில் என் மனதுக்கு அபிருசி உண்டாகவில்லை. அதற்

குக் காரணம் அவர்கள் என்னைக்கண்டு மோகிக்காமைதான்; உன்னைக்கண்டதும் என் மனம் ராகாமிருத பயோநிதியில் மூழ்கிவிட்டது. அதனால் உனது கண்கள் என்னை யநுராகத்துடன் பார்க்கின்றன வென்றறிந்துகொண்டேன்.

தா்ம:—சிவ-சிவ-(என்று காதைமூடிக்கொண்டு) நீ உன் மனது மயங்கினதைக்கொண்டு என் கண்களும் மயங்கியிருக்குமென்று தவறாக நினைத்துவிட்டாய், இனி அந்த எண்ணத்தை விட்டுவிடு.

ரத்ன:—நானெவ்விதம் விடுவேன், நான் வெகுநாளாய்ப் பார்க்கவிரும்பிய புருஷ ரத்தினத்தை இன்று பார்க்க நேர்ந்தும் நான் ஆசையுடன் உன்னை யொருதரமாவது அணைந்து ஆனந்திக்காவிடில் என்னிலும் அதமமான பெண்களுண்டோ?

தா்ம:—அம்மா, நான் ஸ்வபாவத்திலேயே பரஸ்திரீகளைத் தாயாக மதிப்பவன். அதிலும் எனது தாய்க்கு நீ தங்கையாதலால் தர்மப்படி நீ எனக்குத் தாயாகிறாய்; ஆகையால் உனது மனோரதம் என்னால் பூர்த்திசெய்யப்படுமென்று கனவிலும் நினையாதே.

ரத்ன:—என் அழகுவாய்ந்த துரையே தர்மா! இதெல்லாம் தப்புப்புகல். ஸாவித்ரியோ உனக்குச் சொந்தத் தாயல்ல, அப்படியிருக்க அவளுக்குத் தங்கை யென்கிற முறைமையைக் கொண்டு என்னைத் தாயென்பதெல்லாம் வேண்டாததற்குரிய வார்த்தையேதவிர வேறல்ல.

தா்ம:—அம்மா நீ யெவ்வளவு சொன்னாலும் என் சித்தம் தர்மம் பிசகி நடக்க இடந்தராது.

ரத்ன:—என் துரையே கண்ணாளா! ஒரு ஸ்திரீ மன்மததாபம் பொறுக்காமல் தன்னை நிர்ப்பந்திக்கும்போது அவளை மறுத்துவிட்டால் அது அதர்மமல்லவா? இப்போது என்னை நீ கைவிட்டாயானால் உன் விரஹதாபம் பொறுக்கமுடியாமல் கட்டாயம் மாண்டுபோவேன். அந்த ஸ்திரீஹத்திதோஷம் யாரையடிக்கும்?

தர்ம:—அந்த தோஷம் என்னை ஒருகாலுமணுகாது. நீ சொல்லும் சாஸ்திரமெல்லாம் ஸ்வஸ்திரீ விஷயமே தவிர, பரஸ்திரீ விஷயமல்ல.

ரத்ன:—அது தர்மமானாலும் சரி, அதர்மமானாலும் சரி, நான் உன்னை யணையாமல் விடமாட்டேன்.

தர்ம:—அப்படி அதர்மத்தை கவனிக்காமலாவது நீ செய்யுங் காரியத்தால் நீ யடையும் லாபமென்ன? துச்சமான காமபுருஷார்த்தத்தை யடைவதுதானே, அதை உனது கணவனிடத்திற்றானே அடைவாய். என் வியாஜமாகவாவது நீ யினி யிப்பாவத்தொழிலை யகற்றிவிடு.

ரத்ன:—என் பிராணகாந்தா! கண்மணியே கேள், என் கணவன் ஒரு கிழவன், அவனுக்குத் தற்காலம் வயது 65, அவனால் எனது ஜன்மத்துக்கு வேண்டிய ஐஹிக சுகத்தை யடைய முடியாமைபாற்றான் நானிவ்விதம் உன்னைக் கெஞ்சுகிறேன்; மேலும், தனதுகணவனுக்கு எக்காரணத்தாலாவது உபயோக ஸாமர்த்தியம் இல்லாமற்போனபோது மதயந்தீ முதலான ஸ்திரீகள் இதர புருஷசம்பர்க்கத்தால் குமாரர்களைப்பெற்றார்களென்பது உனக்குத் தெரியாதா? அப்படிப் போல் என்னையும் நினைத்து அதர்மம் என்னும் வார்த்தையைவிட்டுவிடு.

தர்ம:—நீ சொல்லும் சமாசாரம் பெண்கள் பெரியவளா வதற்கு முன் விதவைகளாய் விட்டால் அவர்களை மறுபடி கலியாணம் பண்ணிக்கொடுப்பதுபோல் பூர்வயுக தர்மம்; அதெல்லாம் இக்கலியுகத்தில் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது; இக்கலியில் ஒரு ஸ்திரீக்கு ஒரே புருஷன் தான். அவன் இருந்தாலும் இறந்தாலும் சகனுைலும் அசக்தனுைலும் அவனைத்தவிர வேறு புருஷனை மனதினுற்கூட அவள் விரும்பலாகாது.

ரத்ன:—ஆனுல் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் சுகமில்லாமல் சாகவேண்டியது தானே?

தர்ம:—ஆம், அவர்களுடைய ஜன்மாந்தர பாக்யம் அவ்வளவு தான்.

ரத்ன:—பாக்யமென்பதை நானொப்புக்கொள்ள மாட்டேன், அது கண்ணுக்குத்தெரியாத பதார்த்தம்.

தர்ம:—ஆம் கண்ணுக்குப்புலப்படாதது தான், ஆனுல் அனுமானப்பிரமாணத்தால் ஒப்புக்கொள்ளவேண்டும்.

ரத்ன.—அனுமானத்தாலவது ஒப்புகொள்ளும்படி என்ன நிர்ப்பந்தம்.

தர்ம:—நிர்ப்பந்தமா, கேள், நீ ஈசுவரனெருவருண்டென்று ஒப்புக்கொள்ளுகிறுயா இல்லை யென்கிறுயா?

ரத்ன:—இல்லை யென்று எப்படிச்சொல்லலாம். தானுகப் பொழுதுவிடிகிறது அஸ்தமிக்கிறதே.

தர்ம:—இவ்விதம் இராப்பகல்களைத் தவருமல் பிரவர்த்திக்கச்செய்பவன் ஒருவன் இருக்கவேண்டும், அவன் மனுஷியனுகவிருக்கமுடியாதென்ற அனுமானத்தால் ஈசுவரனை ஒப்

புக்கொள்வதுபோல், அதிர்ஷ்டம் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். அதெப்படியெனில், ஒரே தாய்தகப்பனுக்குப் பிறந்த இருவரில் ஒருவர் மஹோன்னத ஸ்திதியிலிருக்கிறதும் மற்றொருவர் இரந்து குடிப்பதும் நாம் பார்க்கிறோமல்லவா? அதற்குக் காரணம் ஜன்மாந்தர பாக்கியத்தைத் தவிர வேறொன்றைக் கூறலாம். அப்படி நீயும் நமது பாக்கியமவ்வளவுதானென்று இச்சன்மத்தில் அகாரியத்திற்பிரவேசியாமலிருந்தாயானால் மறு ஜனனத்தில் ஏராளமான சுகத்தையடையலாம். நளாயனி என்கிற மாது தனது பர்த்தா ரோகியாய் இருந்தபடியால தன் சுகத்திற்குதவாதவராயிருந்தாலும் தனது கற்பைக் காப்பாற்றிக்கொண்டதனால் சந்தோஷித்த பரமசிவனுடைய அனுக்கிரகத்தினால் அவள் மறுஜன்மத்தில் துர்க்கையின் அம்சத்துடன் பிறந்து ஐந்து மகாபுருஷர்களுடன் ரமித்து சுகத்தையடையவில்லையா? அவளைப்போல் நீயுமிரு. மேலும் பால்பாக்கிய மில்லாதவன் விலைக்குப் பால் வாங்கிவந்து வைத்திருந்தாலும் அதைப் பூனை குடித்துப்போவதுபோல் இந்தப்பரபுருஷசங்கமும் உனக்கு ஸ்திரமாயும் சுகமாயும் கிடைக்கா. உனக்குப் பாபத்தை விளைவிக்க கிஞ்சித்காலமே கிடைக்கும்.

ரத்னா:—இந்த தர்மோபதேசமெல்லாம் என் காதில் நுழையாது. எனக்கிப்போதிருக்கும் காமத்தீயானது உன்னை யொருதரமாவது முகந்தமிட்டாலொழிய அணையாது. மேலும் இப்போது நீ யென்னைப்பிடிவாதத்தினால் மறுததாலும் இதற்காக மறுபடி பச்சாத்தாபத்தைக் கட்டாயமடைவாய்.

தர்ம:—(நகைத்து) அம்மா ரத்னவல்லி! இதென்ன புதிர் போடுகிறாய், இம்மட்டிலாவது இந்த அதர்மத்தினின்றும் நீங்கினோம் என்று களிக்கவேண்டியதாயிருக்கப் பச்சாதாபப்படுபவருமுண்டோ?

ரத்னா:—உண்டு, அதற்குக காரணமிருகிறது.

தர்ம:—அதென்ன காரணம்?

ரத்னா:—நீ யறிய எனது அங்கங்களில் ஜ்வலிக்கின்ற நகைகள் சுமார் லக்ஷரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ளவை. இதைப்போல் இரண்டு பங்குள்ள நகைகள் எனது பெட்டிக்குள்ளிருக்கின்றன. மேலும் எனது புருஷனுக்குச்சொந்தமான சுமார் 5-லக்ஷரூபாய் பெறுமானமுள்ள ஸ்தாவர சொத்துக்களை நான் அவரிடம் ஸ்வேச்சா விநியோகார்த்தமாக உயில் சாஸனம் வாங்கிஅனுபவித்து வருகிறேன், எனக்கு வார்சுகள் ஒருவருமில்லை. எல்லாவற்றையு முனக்கே கொடுத்து உன்னோடு சுகமாயிருப்பதே எனது உத்தேசம்.

தர்ம:—இவ்வளவு தானு? வேறென்னவோ காரணமென்றிருந்தேன், பணத்திற்காகப் பாவதொழிலைச்செய்பவன் நானல்லவென்பதை உறுதியாய் நினை. அல்லது இந்த வார்த்தைகளெல்லாம் ஏன், நாழிகையாய் விட்டது, நான் உனக்கு இவ்விதக்காரியத்திற்கு எவ்விதத்திலும் உடன்படேன், எனக்கு உத்தரவு கொடு, ரெயிலுக்குப் புறப்படவேண்டும், (என்று எழுந்திருந்தான்.)

ரதனவல்லியும் உடனே தானுமெழுந்து அருகிற்சென்று தர்மன் கையைப்பிடித்துக்கொண்டு 'என் துரையே,என் துரையே' என்று சொல்வதற்குள் தர்மன் கையைத் திமிரிக்கொண்டு ஸாவித்ரியிருக்குமிடம் சென்றான். அப்போது ரத்நவல்லி வாயிற்படியின் பக்கத்தில் நின்றுகொண்டு 'தர்மா இது சரியா' என்று கேட்டாள். 'ஆம் இதுவே ஸத்யம்' என்று விடையளித்தான் தர்மன். உடனே ரத்னவல்லி தடியாலடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல் கோபங்கொண்டு, அடே பிரஷ்டா

அடே பதரே, நீ இதற்குத் தக்கபலனை யனுபவிப்பாய் என்றுசொல்லி மறுபடி உட்சென்று உட்கார்ந்து யோசித்தாள்.

"நம்மைக் கட்டிய கணவன் சரியாயில்லாமையால் அல்லவா இந்த நாயையும் பேயையும் நல்லவார்த்தை சொல்லும்படியாயிற்று" என்று ஒருக்ஷணம் தனது விதியை நொந்துகொண்டாள். தன்னையிவ்வாறு கிழவனுக்குப் பணத்திற்காகத் தள்ளி இது முதலான அநேக அவமானங்களுக்கு ஆளாக்கின தமையனை ஒருதரம் வைதாள். நம் தனுக்குக்கு மயங்காதவனே புவியில் இல்லையென்று நான் நினைத்திருந்ததற்கு விரோதமாய் நிற்கும் இந்தப்பயல் தைரியம் என்ன தைரியம் என்று ஒரு நிமிஷம் தர்மனைப் புகழ்ந்தாள். இத்தகைய சுந்தரபுருஷனைக் கட்டியணையாத இக்காயம் நமது ஆத்மாவிறகு காயமேதவிர வேறில்லையெனக் கொஞ்சநேரம் தன்னை யிகழ்ந்தாள்; கடைசியாக இபபடிப்பட்ட நமது ஸந்தாபத்தைத் தணிக்காமற்போகும் இந்தப் பாவிப்பயலுக்கு ஏதாவது தகுந்த கெடுதல் செய்யவேண்டுமெனத் தீர்மானித்து, தனது வேலைக்காரி செல்லத்தைக்கூபபிட்டாள்.

இதறகுள் ஒருமணி நேரமாயிற்று; அதற்குள் தர்மன் அவ்வேலைக்காரி செல்லத்தைக் கூப்பிட்டு அவள் கையில் ஒருரூபாய் பணம் கொடுதது, ஸாவிதரியின் தற்கால ஸ்திதியின் உண்மையான காரணத்தைக் கேட்க, அவள் இராமாபுரத்தில் ஸாவித்ரிக்கும் அவள் தமையன் முதலான நால்வருக்கும் நடந்த சம்பாஷனையையும் அவர்கள் ரெயிலேறி வந்ததும் ரத்னவல்லி மயக்கமருந்து புகட்டினதும் நகைகள் களவாடப்பட்டதும் லக்ஷ்மீவிலாஸ பங்களாவில் ஸாவித்ரியை நடத்திவந்ததும் அருகிலுள்ள ரத்னமென்கிற மாது இவளைப் பார்க்கவரக்கூடாமல் தடுக்கப்பட்டதும்

அவன் அப்படிச்செய்ததாய் ஒப்புக்கொண்டு போனதும் ஆகிய இவ்விஷயங்களை யொன்றும் ஒளியாமல் விஸ்தாரமாய்ச் சொல்லிவிட்டாள்.

இதைக்கேட்ட தர்மன் தனக்குக்கிடைத்த தந்தி, இங்கு வரக்கூடாதெனத் தடுக்கப்பட்ட ரதனவல்லி யம்மாளால் அனுப்பப்பட்டதென்று தீர்மானித்துக்கொண்டு, ஸாவித்ரியைப் பார்த்து "அம்மா! நீ துயரப்படாதே, நகைகளைக் களவாடியவன் அவைகளைக் கழற்றமுடியாமல் கைகால்களைத் துண்டிக்காமல் விட்டதே நமக்குப் பெரும நன்மை செய்ததாகும்; இந்நகைகளைப்போல இரண்டு பங்கு நகைகளை நானுனக்குச் செய்துபோடுகிறேன், கவலைப்படாதே, மெல்ல எழுந்திரு, ஊருக்குப் புறப்படுவோம்", எனவும் ஸாவித்ரீ பரமசந்தோஷத்துடன் "வத்ஸா தர்மா! நான் நகைகளைக் குறித்து விசனப்படவில்லை. இனி எனக்கு நகைகளேன். ஈசுவர கிருபையால் நீ நல்ல உத்தியோகத்திலமர்ந்து நான் கோரின பெண் கிடைக்காமற்போனாலும் உனக்கனுகுணமான அகமுடையாள் வாய்த்து அவளுக்கு நீ வேண்டிய நகைகளைச் செய்துபோட்டாயானல், அதையே நான் பத்து லக்ஷரூபாய் நகைகளைப் போட்டுக்கொண்டதுபோல் நினைப்பேன். ஆனால் நான் நினைத்தபெண் உனக்குக் கிடைக்காமற் போனதுபற்றி என் மனம் ஆறாது" என்று சொல்ல, அதற்குத்தர்மன் "அம்மா நீ உத்தம ஸ்திரீயானதால் உனது கொள்கையை பகவான் மாற்றமாட்டார், பயப்படாதே, காரணத்தைப் பின்னுரைக்கிறேன், ஊருக்குப்புறப்படு" என்று சொன்னான். உடனே இருவரும் வெளியில் வந்து ஒரு குதிரை வண்டியைப் பிடித்துக்கொண்டு சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்திற்கப்பாலுள்ள ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு வந்து ரயிலேறி குளித்தலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ரத்னவல்லிக்குப் பிரமை தெளிந்தபின் செல்லத்தைக் கூப்பிட அவள் எதிரில் வந்து நின்றாள்.

ரத்ன:—எங்கேடீ அந்த ரெண்டுபாவிகளும்.

செல்ல:—மௌனமாய் நின்றாள்.

ரத்ன:—என்னடீ பேசாமல் நிக்கரே அவர்கள் உனக் கேதாவது வாக்கட்டை போட்டுவிட்டார்களோ ?

செல்ல:—எவுங்க ரெண்டுபேருங்க, எனக்குப் புரிய வில்லெங்க.

ரத்ன:—என்னடீ மோசக்காரி! புரியவில்லையா, அங்கே படுத்துக்கிடந்தாளே அந்தச் சிறுக்கியும் அவளைப் பார்க்க வந்தானே அந்தப்பயலுமடீ,

செல்ல:—அவுங்களா அவுங்க போய்ட்டாங்க.

ரத்ன:—எங்கேயடீ போய்விட்டார்கள் ?

செல்ல:—எங்கேயோ, லெலுக்குப்போகனுமெனு சொல் லிக்கிட்டிருந்தாங்க.

ரத்ன:—ரயிலுக்கா, பார்க்கிறேன் போவதை, ஏண்டீ அவர்களை என் உத்தரவன்றி வெளியில் விட்டாய். சரி இருக்கட்டும்,வாசலிலிருக்கும் சட்டையனையும் கருப்பனையும் அழைத்துவா என்றாள்.

அவ்வாறே அவள் உடனே போயழைத்ததும் அவ் விருவரும் வந்தார்கள். பிறகு ரத்னவல்லி அவர்களிடத் தில் ஐந்துபவுன் எடுத்துக்கொடுத்து "இப்போதுதான் நம் வீட்டிலிருந்த சுமார் 30-வயதுள்ள ஒரு அம்மாளை இவ்வி டமிருந்த அவள் மகனாகிய இருபது வயதுள்ள ஒரு பயல் ரெயிலுக்கு அழைத்துக்கொண்டுபோகிறானாம். நீங்கள் ஒரே ஓட்டமாய் ஓடி அவர்கள் வண்டியைக் கண்டுபிடித்து வண் டிக்காரனிடம் ஒரு பவுனைக்கொடுத்து வண்டியைக் காட்டு மார்க்கமாய் ஓட்டச்சொல்லி, நீங்கள் அங்கேபோய் அவ்விரு

வண்டியும் உடையப்புடைத்து அதே வண்டியில் வாரிப்போட்டுக் கொண்டு அம்மாமணி நேரத்திற்குள் இங்கே வந்துசேர வேண்டியது" எனக் கட்டளையிட்டாள்.

அதற்கு இருவரும் 'உயிரைவச்சுத்தானேங்க', என்று கேட்க, 'அடே யவர்களைக் கொல்லாதேயுங்கள்' என்றாள். உடனே அவர்கள் புறப்பட்டு ஓடோடியும் வந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கால்மைலுக்கப்பால் ஒரு வண்டியும் அதனுள் மேற்கண்ட குறிப்புப்படி வயதுள்ள ஒரு பெண்ணும் பையனுமிருக்கக்கண்டு, வண்டிக்காரனைச் சரிப்படுத்தினார்கள். இரவு காலமாகையால் வண்டியிலிருந்தவர்கள் தூக்கக் கலக்கத்தினால் ஒன்றையும் கவனிக்கவில்லை. வண்டி குறிப்பிடப்பட்டவிடத்துக்கு வந்தவுடன், கட்டையனும் கருப்பனும் ஒரு புதரிலிருந்து வருவதுபோல்வந்து வண்டிக்காரனையடிப்பதுபோல் பாவனை செய்தவுடன், அவன் 'ஐயோ! செத்தேன்' என்று சொல்லிக் கீழே விழுந்தான். உடனே வண்டிக்குள்ளிருந்த மனிதன் வண்டியிலவைத்திருந்த தடியைக் கையிலெடுத்துக்கொண்டு கீழிறங்கி அவ்விருவரையும் நொறுக்கிக் கீழேதள்ளிவிட்டு நீங்கள் யாரென விசாரித்தான். இவர்கள் அடிதாங்கமாட்டாமல் தவிக்கிறபடியால் மறுபடி அடி விழுமென்று பயந்து நடந்த விஷயங்களை வெளியாமற்சொல்லித் தாங்கள் வண்டி மாறுபாடாய் வந்துவிட்டதால மன்னிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்.

அதற்கு அந்த மனிதன "மகன் தாயை யழைத்துப் போனால் அந்தக்குச்சுக்காரிக்கு இவ்வளவு ஆத்திரம் ஏன்? அவளுக்கு அந்தப்பையன் இணங்கவில்லையெனத் தெரிய வருகிறது, அது தான் ஆத்திரத்திற்குக் காரணம், அவர்களை தெய்வம் தப்புவித்தது, அவர்கள் அகப்பட்டிருந்தால நீங்கள்

அவர்களைச் சட்டினியாய்ச் செய்திருப்பீர்கள். நல்லது, எங்களை ரெயிலுக்குப்போகவொட்டாமல் கெடுத்ததற்காக அவ்விருவருக்கும் செய்யச்சொன்ன சிக்ஷையை அவனுக்கே செய்கிறேன் என்று அந்தக் குச்சுக்காரிக்குச் சொல்லுங்கள், அவள் போலீஸ் இன்ஸ்பெக்டரை ஆசைநாயகனாக வைத்திருப்பதால் கோர்ட்டில் நியாயம் கிடைக்காது. அவள் தேகத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு, வண்டிக்காரனைப்பார்த்து, அடே பினி நீ யிவ்விதமான வேலைகளுக்கு உடந்தையாயிருந்தாயானால் உன் தலை இரவல் என நினைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு அடிபட்ட இருவரையும் வண்டிக்காரனைக்கொண்டு அதேவண்டியில் தூக்கிப்போடச்சொல்லி லக்ஷ்மீவிலாஸ பங்களாவிற் கனுப்பிவிட்டு, தன்னுடன் வந்த ஸ்திரீயுடன் கால்நடையாய்க் கொஞ்சதூரம் சென்று வேறுவண்டி பிடித்துக்கொண்டு ரயிலுக்குச் சென்றான்.

பங்களாவின் வாசலில் வண்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரத்னவல்லி, வண்டிவந்து நின்றதும் சந்தோஷமாய் வண்டியினருகிற்சென்று உடைந்த மண்டைகளும் முறிந்த கைகால்களுமாயிருந்த தானனுப்பிய ஆட்களை வெளிச்சத்திற்பார்த்துத் திடுக்கிட்டு சங்கதியை விசாரிக்கையில் அவர்கள் நடந்தவை யெல்லாவற்றையும் சொன்னதுடன் வண்டியிலிருந்த மனிதன் சொன்ன சொற்களை மாற்றமலும் சொல்லிமுடித்தார்கள். உடனே ரத்னவல்லி மகா பயத்தையடைந்து வண்டிக்காரனைக் கொண்டு அடித்த மனிதன் ராமாபுரம் ஜமீன்தார் ஏஜெண்டு கண்ணுசாமி தேவரின் மகனென்றும், அவன் வசம் கொலை கொள்ளைகளுக்கஞ்சாத ஆயிரக்கணக்கான ஆட்கள் இருக்கிறார்களென்றும் தெரிந்து கொண்டு, அடிபட்டவர்களுக்கு வேண்டிய திரவியம் கொடு

த்து அவர்களை வீட்டிற்கனுப்பிவிட்டுத் தனதறையிற்சென்று படுக்கையிற் படுத்தாள். தனக்கு ஆபத்து நிச்சயமாய் வந்து விடுமென்று நடுங்கினாள்.

பிறகு அவள் பயத்தால் நெடுநேரம்வரை தூக்கமில்லாமல் புரண்டுகொண்டே "நான் எனக்கென்றேற்பட்ட கணவனுடன் ஊரிலுள்ளவர்களைப்போல் வாழ்ந்துவந்தேனால் எனக்கிவ்வித ஆபத்துகள் வருமா, அவர் கிழவராக விருந்தாலும் என்னைப் பிறர் தொடவிடம் கொடுப்பாரா, அவருக்கவ்வளவு சொத்துத் தானில்லையா? நான் அற்பமான சுகத்தைப் பெரிதாய் நினைத்துச் செய்யவொண்ணாக் காரியங்களைச் செய்துவருவதால் எனக்கிப்படி நேர்ந்திருக்கிறது. சொந்தமான ஒருகணவனைவிட்டு அவனைக்காட்டிலும் அழகிலும் பலத்திலும் சிலாக்கியமான எத்தனை புருஷர்களைப் பி த்தாலும் அவர்கள் தங்களுடைய ஸுகத்தை யனுபவித்து மாத்திரம் போகிறார்களே தவிர, நமது கஷ்டங்களுக்குப் பாத்தியப்படுபவன் பலஹீனனா யிருந்தாலும் சொந்தக்கணவன் ஒருவனே. மகா உத்தமியான ஸாவித்ரீக்கு நான்செய்த துரோகத்திற்கும், தர்மாத்மாவான அவளது பிள்ளையை நான் காமித்ததற்கும் பலனிதுதான். 'தர்மமே ஜயிக்கும்' என்கிற லோகவசனப்படி தர்மத்தைக் கடவாத அவ்விருவரும் ஒருவிதமான கஷ்டமுமில்லாமற்போய்ச் சேர்ந்தார்கள். அதர்மத்திற்கிடமாகிய நான் துன்பத்திலகப்பட்டுக்கொண்டேன்; நாளையதினம் நானிங்கிருந்தால் சர்வ சொத்துக்களையு மிழந்து எலும்பு நொறுங்க அடியும்படவேண்டி வரும்"—என்றிவ்வாறு யோசித்துக்கொண்டு இரவைக் கழித்து மறுநாளுதயத்தில் பதினாயிரம் ரூபாய் தாகு கொடுத்துக் கச்சிக்குளம் ஜமீன்தாரரிடம் லக்ஷரூபாய் செலவுக்குக்கடன் வாங்கிக்கொண்டு சாயங்காலம் புறப்பட்டு இராமாபுரம் போய்ச் சேர்ந்தாள்.

இவள் தன் கணவனுடைய சொத்துக்களில் 3 பங்கு சொத்துக்களை உயில் சாஸனம் வாங்கும்போது அவைகளின்மீது லக்ஷரூபாய்வரையில் கடன்களிருந்தன. பிறகு இந்த ஆறுமாதத்திற்குள் 3-லக்ஷரூபாய் கடன்வாங்கியிருக்கிறாள் இதில் லக்ஷரூபாய்க்கு நகைகளை வாங்கியிருக்கிறாள், மற்றபணமெல்லாம் துர்மார்க்கச் செலவிற்குத்தான். இவள் வீதம் சொத்துக்கள் முழுமையும் 5-லக்ஷரூபாக்குமேல் பொறுகது.

இங்கே ரத்னவல்லியின் நிலைமை இப்படியிருக்க கனகவல்லியின் நிலைமையைப் பற்றிச் சற்று கவனிப்போம். இவளுக்குப் பணத்தில் கொஞ்சம் கார்ப்பண்யஸ்வபாவம் உண்டு. அதனால் அவள் கணவன் அடிக்கடி வந்து தன்னைப் பணம் கேட்பதைப் பார்த்து பணம் கொடுக்க மனம் பொறுமல் அவனைத் தனது சர்வசொத்துக்களையும் விற்றுவரச்சொல்லிக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்துத் தீர்த்துத் தனது தகப்பனிடமிருந்து கிடைத்த தனது வீதம் சொத்துக்களைத் தனது கணவனைக்கொண்டு பார்த்து வரும்படி செய்து அவனை இராமபுரத்தில் தனது வீட்டோடுவைத்துக் கொண்டாள். அப்படியிருப்பதால் அவளுக்குப் பரநாயக சங்கமத்திற் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டதாலும் அதற்கு ஏராளமானபொருள் போய்விடுவதாலும் அவ்விஷயத்தில் கொஞ்சங்கொஞ்சமாய் வெறுப்படைந்து கடைசியாய் 'நமது பாக்கியம் அவ்வளவுதான்' என நினைத்து துர்மார்க்கத்தை விட்டுக் கணவனுடன் வாழ்ந்துவந்தாள்.

# பதினொன்காவது ஆச்வாஸம்.

## அதர்க்கித துக்கானுபவம்.

தர்மராஜனும் ஸாவித்ரியும் டிரெயினில் வரும்போதே, ஸாவித்ரீ வீட்டைவிட்டுப் புறப்பட்டது முதல் தனக்கு நேர்ந்த சுகதுக்கங்களைச்சொன்னாள். தர்மனும் அவள் ஊருக்குப்போனபிறகு தான் திருச்சிறுப்பள்ளிக்குப்போய் வந்த சங்கதிகளையும் ஹைகோர்ட்டில் கேஸ் அபஜயமடைந்ததையும் அதன்மேல் அப்பீல் விஷயமாய் தன் தகப்பனார் சென்னையில் தங்கியிருக்கும் காரியத்தையும் கடன்களுக்குச் சீக்கிரம் ஏதாவதுஏற்பாடு செய்யாவிட்டால் சகலசொத்துக்களும் போய்விடுமென்பதையும் இன்றைபதினமாகிய தைமீ 30-உ ராத்திரி 8-மணிக்குத் தானவசியம் மதுரை ஸ்டேஷனிலிருக்க வேண்டுமென்பதையும் சொல்லி, அம்மாளை வீட்டில் விட்டுவிட்டு அடுத்த டிரெயினில் மதுரைக்குப்போகவேண்டுமென்றும் கூறினான் அவ்வாறே செய்வதென்று தீர்மானித்துக்கொண்டு, இருவரும் குளித்தலையி லிறங்கினார்கள்.

இறங்கினவுடன் ஒருவண்டியைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குப்போனதும் வீடு பூட்டப்பட்டிருந்தது. பூட்டில் ஸர்க்கார்ஸீல் வைக்கப்பட்டிருந்தது. காவற்காரன் வேலைக்காரன் ஒருவனையுங் காணவில்லை ஸாவித்ரிக்கு இது இன்ன காரணமென்று தெரியாதபடியால் மயங்கினாள். தர்மன் இதைப்பார்த்துவிட்டு 'அம்மா கடன்காரர்கள் வீட்டைஜப்தி செய்திருக்கிறார்கள் நாமிந்தப் பூட்டைத்தொட்டோமானால் தண்டிக்கப்படுவோம். ஆகையால் இதற்கிப்போது செய்யக்கூடிய பரிகாரம் ஒன்றும் இல்லை. நமக்குப் பரம ஆப்தராகிய கிருஷ்ணஸாமியய்யர் வீட்டிற்குப்போவோம். அவர்நேற்று

உன்னையழைக்கத்தானும் வருவதாகவே இருந்தார். ஆனால் புறப்படும் சமயத்தில் ஏதோ அவசரகாரியமாய் வரமுடியவில்லையென்று சொல்லியனுப்பிப் பணத்தைமாத்திரம் எனக்குச்செலவிற்கனுப்பினார் அவரைக்கொண்டுதான இவ்வாபத்துக்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொல்லி, அந்த வீட்டிற்கு வண்டியை ஓட்டச்சொன்னான். அங்கே போனதும் அந்த வீடும் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அடுத்த வீட்டில் விசாரித்ததில் தஞ்சாவூரில் கொடுத்திருக்கும் அவர் பெண் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதாய் தந்தி வந்ததின்பேரில் அவர் சம்சார சகிதமாய்த் தஞ்சாவூருக்குப் போயிருப்பதாய்த் தெரியவந்தது.

இதைக் கேட்ட ஸாவித்ரிக்கு வந்ததுயரத்திற்களவில்லை. அவள் தர்மனைப்பார்த்து "அப்பா தர்மா! நான் மிகுந்த துரதிர்ஷ்டக்காரியென்பதற்கு வேறு ஸாக்ஷிவேண்டுமோ? பரமதுரோகியான தமையனால் என்னுடைய லக்ஷரூபாய்நகைகளும் அபகரிக்கப்பட்டதும், நானுயிருக்கு பயந்தோடியதும் மெதுவாக வீட்டில்வந்து நமது துக்கத்தையாற்றிக்கொள்வோமென்றால் வீடுமுதலான சகல சொத்துக்களும் ஜப்தி செய்யப்பட்டிருப்பதும், அப்பீல் நம்பர் தோற்றதும், இப்போது குந்தக் குச்சில்லாமல் தவிப்பதும், ஆகிய இக்கஷ்டமெல்லாம் என்னால் நேர்ந்ததே தவிர வேறில்லை. எனது துர்பாக்கியத்தால் நீயும் உன் தகப்பனாரும் மிகுந்த கஷ்டமனுபவிக்கவேணுமபோல் தோன்றுகிறது. ஆகையால் நீ என்னை ஒரு காட்டிற்கொண்டுபோய் விட்டுவிட்டு திரும்பிப்பாராமல் வந்துவிட்டாயானால் நீங்களாவது சுகப்படுவீர்கள்" என்றாள்.

உடனே தர்மன் "அம்மா கஷ்டம்வந்த வேளையில் வருந்தாமல் அதை நிவர்த்திக்க வழி தேடுவதே நமக்கு அழகு.

நீ கவலைப்படாதே, நாமிந்தக் கஷ்டத்தைப் பிரார்த்தி... வந்தது அப்படிப்போல் நல்லகாலம் வருகையில் அப்படியே வருமென்பதிற் சந்தேகமில்லை"—என்றான்.

இவ்வாறு தர்மன் அவளைத்தேற்றிவிட்டு வேறு சில சிநேகிதர் வீட்டை நோக்கிச்சென்றான். அவர்களெல்லாரு, நேற்றுவந்த கோர்ட்டுச் சேவகர்கள், ஸாவித்ரியம்மாள் விரா ளமான நகைகளும் பணங்களு முள்ளவளாதலால் அவளிருக் கும் வீட்டை ஜப்திசெய்யவேண்டுமென்று தேடினபடியால் "எங்கள் வீட்டில் நீங்களிருந்தால் அதனால் எங்கள் வீடும் ஜப்திசெய்யப்படுமே" என்றுசொல்லி இடங்கொடுக்கச் சம்ம திக்கவில்லை.

தர்மன் பாலியமுதல் வேறு ஊர்களிலிருந்துகொண்டு படித்துவந்தவனானதால் குளித்தலையில் அநேகமாய் அவனு க்கு ஒருவரையும் தெரியாது ஸாவித்ரீ சில ஸ்திரீகளைப்போல் வீடுவீடாய்ப்புகுந்து வம்புபேசாமல் தன் வீட்டில் தன்காரிய முண்டு தானுண்டென்று இருந்தவளாதலால் அவளுக்கு அங்கே கிழக்கு மேற்குத் தெரியாது. இப்படியிவர்கள் தங்க இடமில்லாமல் தவித்துக்கொண்டேயிருந்தபடியால் மணி 10-க்கு மேலாய் விட்டது. வெயிலாலும் பசியாலும் களைத்து நிற்கையில் அங்கு ஒரு பிராமணன் வந்தான். இவன் உயர்ந்த ஒற்றை நாடியான கருத்தமேனியுடனும் பார்வைக்கு பயங் கரமான முகத்துடனும் கூடிய சுமார் முப்பது வயதுள்ளவ னாகவும் காணப்பட்டான். அவன் தர்மனைப்பார்த்து'ஐயா நீங் கள் வக்கீல் கோபாலசாமி ஐய்யர் புத்திரனோ, பார்த்தால் அப்படித் தோன்றுகிறது' என்றான். அதற்கு தர்மன் ஆமெ ன்றொப்புக்கொண்டு தற்கால விருத்தாந்தங்களைச் சொல்ல, அதற்கந்தப் பிராமணன்'அடடா! இதற்காகவா இந்த வெயி

சில் இப்படியலைந்து களைத்தீர்கள்; என் வீட்டிற்கு வரக் கூடாசா, எனக்கு உங்கள் பிதா ரொம்ப வேண்டியவர், கிடக் கட்டும், இனியாவது தாமதிக்காமல் நம்வீட்டிற்குப் போ வோம்' எனக் கூறி ஒரு வண்டிபிடித்து இவர்களை ஏற்றிக் கொண்டு தானும் அதிலேறிக்கொண்டு ஒரு முடுக்கில் ஒரு சிறிய வீட்டிற்குக்கொண்டுபோய் இறக்கி, அவர்களுக்குவேண் டிய சாமான் வாங்கிக்கொடுத்துச் சமையல்செய்து சாப்பிடும் படி சொன்னான். இன்றைபதினம் இமாதிரி நேர்ந்ததற்கு ஸாவித்ரியும் தர்மனும் அடைந்த மனவருத்தத்திற்கு அள வேயில்லை. பிறகுசமையல்செய்து சாப்பிட்டார்கள்.

பிறகு ஸாவித்ரீ அச்சிறுவீட்டைச் சுற்றிப் பார்த்ததில் அதில் இவர்களைத்தவிர வேறொருவருமில்லை. இதிற் சொற்ப சந்தேகமடைந்த ஸாவித்ரீ "அப்பா தர்மா! இவ்வீட்டிலிருக்க எனக்குப் பிடிக்கவில்லை ஏனென்றால், இவ்வீடு ஏதோ ஒரு முடுக்கிலிருக்கின்றது; இவ்விடத்தில் ஜனஸஞ்சாரமுமில்லை; இவ்வீட்டிற்குடையவனான அந்தப் பிராமணன் நம்மை இங்கு கொண்டுவந்துவிட்டுப்போன பிறகு அவரைக்காணக் கிடைக்கவில்லை. இவ்வீட்டிலோ நம்மைத்தவிர வேறொரு வருமில்லை. அந்தப் பிராமணன்முகத்திலோ பயங்கரமான ஒரு தேஜஸ் காணப்படுகிறது; ஆகையால் நாமினி இராத்திரி கூட இங்கிருப்பதென்றால் ஏதாவது இன்னம் விபத்துண் டாகுமோ என்று சந்தேகிக்கிறேன்; ஆகையால் நீ எவ்விதமாவது நம்முடைய குமாஸ்தா கிருஷ்ணய்யரையாவது சாமாவய்யரையாவது கண்டுபிடித்து அவர்கள் வீட்டிற்கு நாம்போய்த் தங்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டும் நீ ஜாக்கிர தையாய்ப்போய் 5 - மணிக்குள் திரும்பிவந்துவிடு" என்று சொன்னாள். இதைக்கேட்ட தர்மன் இவள் சொல்வது உசி தமானகாரியந்தான், நமக்கு எவ்விதத்திலும் பரிச்சயமில்லா

தவன்வீட்டில் இவளைவைத்துக் காப்பாற்றுவதுகஷ்டந்தா னெனத் தீர்மானித்து "அம்மா நீ சொல்வதுசரியே எனக்கு மப்படித்தான் தோன்றுகிறது. நான் கோர்ட்டுக் கலைவதற்குள் கோர்ட்டுவாசலுக்குப் போய் நமது குமாஸ்தாக்களைக் கண்டுபிடித்து அவர்கள்வீட்டைத் தெரிந்துகொண்டுவருகிறேன்" என்று சொல்லித்தனது உடுப்புகளைமாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

அவனிருந்தவிடம் வண்டி கிடைக்கக்கூடியவிடமாக இல்லாததால் கொஞ்சதூர நடந்துவந்து ஒரு வண்டி பிடித்துக்கொண்டு கோர்ட்டுவாசலுக்குப்போய் குமாஸ்தாக்களில் ஒருவரையாவது பார்க்கக்கிடைக்காமல் வெகுநேரம் வரையில் விசாரித்துக்கொண்டு கோர்ட்டைச் சுற்றிச்சுற்றி வந்தான். மணி 4 அடித்தது. அச்சமயம் குமாஸ்தா கிருஷ்ண ஐயர் எங்கேயோவிருந்து வந்ததைப்பார்த்து தர்மன் அவரையணுகி, தான் தனது தாயுடன் காலமே வந்ததும் தங்க இடமில்லாமற்தவித்ததும் பிறகு ஓரிடமகப்பட்டதும் தற்காலமிருக்கும் அவ்விடத்தில் வசிக்க இஷ்டமில்லாததும் சொல்லி வருத்தப்பட்டான்.

**கிருஷ்ணய்யர்:**—(மிகவும் மனவருத்தப்பட்டு) அப்படியானால் வைகைநல்லூரிலிருக்கிற நமது ஜாகைக்கு வரக்கூடாதா, அம்மாளுக்குத்தெரியுமே நான் அங்கேயிருப்பது; சரி போனது போகட்டும், இன்று இராத்திரி நம் ஜாகைக்குப் போய்விடுவோம்.

**தர்மன்:**—ஐயா! இதென்ன திடீரென நமது வீடுமுதலானவைகள் ஜப்திசெய்யப்பட்டிருக்கிறதே காரணமென்ன?

**கிருஷ்ணய்யர்:**—நமது வழக்கு ஹைகோர்ட்டில் நமக்கு விரோதமாய்முடிந்ததும், கடன்காரர்களிற் சிலர் உடனே

கோர்ட்டில் தாவாசெய்து அறிக்கை ஜப்தி வாரண்டுடன் நேற்று சாயங்காலம் இவ்விடம்வந்தார்கள். வீட்டிலுள்ள வேலைக்காரனை வெளிப்படுத்தி வீட்டையும் சகலமான பூஸ்திதிகளையும் ஜப்தி செய்துவிட்டார்கள். நேற்று உங்கள் தகப்பனார் இல்லாமலிருந்தது ரொம்ப நல்லகாலம், இருந்தால் அவரும் வாரண்டில் பிடிபட்டிருப்பார்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு பையன் கையிலொரு தந்திக்கவரை எடுத்துக்கொண்டு தர்மனிடம் வந்து 'ஐயா நீங்கள்தான் வக்கீல் கோபாலசாமி ஐயர் குமாரர் தர்மராஜ ஐயரோ?' என்று கேட்டான் அதற்கு தர்மன் 'ஏன் அவரைத்தேடுகிறாய்? என்று கேட்க அவன், அவருக்கொரு தந்திவந்திருக்கிறது' என்றான். தர்மன் மிகுந்த பரபரப்புடனே அதைவாங்கிப் பிரித்துப்பார்த்தான்.

### தந்தி.

நான் திருநெல்வேலியில் ஜயிலுக்கு அனுப்பப்படும் தருவாயிலிருக்கிறேன், நீ உடனே வந்து நெல்லியப்பன்கோவில் வடக்குவீதியில் என்னைப்பார்க்கவேண்டும்.

கோபாலசாமி ஐயர்.

இதைவாசித்த தர்மனுக்குப் பிரக்ஞையில்லை முகத்திற்களைகுறைந்தது. தனக்கு ஒன்றன்மேல் ஒன்றாக வந்துகொண்டிருந்த விபத்தைப்பற்றி ஒருவாறு கண்ணீர்விட்டான். இத்தருணத்தில் கிருஷ்ணய்யர் இவனைப்பார்த்து "ஏன் தாங்கள் வருத்தப்படவேண்டும், தர்மத்தைவிட்டு விலகாத ஸ்வபாவமுள்ள தங்களுக்கும் தங்கள் பிதாவுக்கும் எவ்விதமானவிபத்தும் சம்பவிக்காது. பூர்வகர்மவசத்தால் ஒருகால் வந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோல் தானாகவே நசித்துப்போகும், புத்தியை ஒருவிதமாய் ஸமாதானம்

செய்துகொண்டு சீக்கிரம் ரெயிலுக்குப்புறப்படுங்கள்; திருநெல்வேலிக்குப்போக வேண்டிய வண்டி வர இன்னம் அரைமணி நேரந்தானிருக்கிறது, அது தப்பினால் நாளைய தினம் 8 மணிக்குதான் வண்டி'' என்றார்.

தர்மன்:—(மனங் கலங்கி) ஐயா திருநெல்வேலிக்குப் போகவேண்டிய வண்டியோ வர இன்னம் அரைமணியிருக்கிறது; பேர் ஊர் தெரியாதவனுடைய வீட்டில் அம்மாளிருக்கிறாள்; அந்த முடுக்கு இவ்விடமிருந்து ஒருமைல் இருக்கிறது. அவ்விடம்போய் அவளைத் தங்கள் வீட்டிற்கனுப்பிவிட்டு நான் றெயிலடி போகவேண்டுமே என்ன செய்வேன்

கிருஷ்ணய்யர்:—நீங்கள் பயப்பட வேண்டாம்; ரயில் தவறாமல் போங்கள்; நான் தங்கள் தாயாரை என் அகத்திற்கு அழைத்துப்போய் என் தாயாரிடம் ஒப்புவித்துவிடுகிறேன், அவர்களிருவரும் அடிக்கடி உங்கள் வீட்டில் கண்டு பேசியிருக்கிறார்கள். தாங்கள் கவலைப்பட வேண்டாம்.

தர்மன்:—ஐயா தாங்களப்படிச்செய்தால் அது எனக்குப் பரமோபகாரமாகும். ஆனால் 5 மணிக்குள் என்னை வரும்படிகேட்டுக்கொண்டதால் அதிக தாமதமாய்ப்போனால் அவள் அழுதுகொண்டிருப்பாள், சீக்கிரம் தாங்கள் போய் அழைத்துப்போகவேண்டும்.

கிருஷ்ணய்யர்:—அதெல்லாம் எனக்குச் சொல்லவேண்டியதில்லை, கோர்ட்டில் ஒருகேஸ் ஆர்குமெண்டிருக்கிறது, அது நடந்தால் வக்கிலுக்கு நான் சிலநோட் கொடுக்கவேண்டியதாயிருக்கும், அப்படி நேர்ந்து எனக்கு ஒருகால் தாமதமாகி நான்போகாவிட்டாலும் என் குமாஸ்தாப்பையனையாவது அனுப்பி அழைத்துப் போகச் சொல்லுகிறேன்; நீங்கள் கவலையின்றிச் செல்லுங்கள்; செலவிற்குப் பணமிருக்கிறதா?

தர்மன்:—என் தற்காலஸ்திதி தெரிந்தும் இப்படிக் கேட்டால் நானென்ன சொல்வேன்?

இதைக்கேட்ட கிருஷ்ணய்யர் உடனே தனதுசட்டைப் பையிலிருந்து 25 ரூபாய் பணத்தை யெடுத்துக்கொடுத்து "சீக்கிரம்போய் காரியத்தைத் தெரிந்துகொண்டு நாளையுதினம் விவரமாய் எனக்குக தந்திகொடுக்கவேண்டும்; இன்னம் ஏதாவது பணம வேண்டுமானாலும் அனுபபுகிறேன்" என்று சொல்ல, தர்மன் அவருடைய நற்சமய உபகாரத்திற்குமகிழ்ந்து அவருக்கு நன்றிகூறிவிட்டு றெயிலடிக்குவந்து டிக்கட்டு வாங்கிக்கொண்டு வண்டியிலேறினான்.

---

## பதினைந்தாவது ஆச்வாஸம்.

### பதிஸமாகமம்

"ஐந்து மணிக்குள் கட்டாயம் வந்துசேரவேண்டுமென நான் சொன்னதற்குச்சரியென்று சொல்லிப்போனவன் மணி 8-க்குமேலாகியும இன்னும வர வில்லையே. இந்த முனிசிபல் டவுனில் எங்கும் விளககுகள் போடும் வழக்கமில்லையோ? அல்லது இந்த முடுக்கில்மாத்திரம் வெளிச்சம் வேண்டாமென்று தவிர்க்கபபட்டிருக்கிறதோ? இருட்டின் மிகுதியால் வாசலிற்போய் குழந்தை வருகிறானோவென்று பார்க்கக்கூட பயமாயிருக்கிறதே, மையிருட்டில் எதிரில் மனிதன்வந்தாற்கூட தெரியவில்லையே, போனவனுக்கு ஏதாவது எதிர்பாராத இக்கட்டுவராத பக்ஷத்தில் இதுவரையில் வராமலிருக்கமாட்டானே, ஐயோ! என் அருமைத் தர்மமூர்த்திக்கு என்ன

விபத்து நேர்ந்ததோ; இக்குடிசையில் இவ்விராப்பொழுதை நானெப்படித் தள்ளுவேன், பொழுது விடிந்தாலல்லவோ மானத்தைவிட்டாவது வெளியிற்போய் அவனைப்பற்றி விசாரிக்கலாம்; ஐயா ஈசா! என்னை இப்படிவிடவா நினைத்திருந்தாய், எந்த ஊரில் நான் ராஜபத்னிபோல் மதிப்புடனும் அலங்காரத்துடனும் வீதிகளைக் கண்ணாற்கூடக்காணாமல் காலம்தள்ளினேனோ அதே ஊரில் தெருத்தெருவாய் வெயிலில் அலைந்து தங்க இடமில்லாமல் இராத்திரி இக்குடிசையில் என்னைக் கதறும்படிசெய்தாயே? நான் நன்றாயிருந்தகாலத்தில் கூடியமட்டில பிறருக்கு உதவிபுரிந்துகொண்டிருந்தேனே தவிர, மரமாம்பழமாயிருக்கவில்லையே; எனக்கேன் இப்படி ஒன்றுமேலொன்றாக அநர்த்தங்களையுண்டாக்கித் தருகின்றாய்?" என்றிவ்வாறு ஸாவித்ரி கதறிக்கொண்டு அவ்வீட்டின் ரேழிக்கும் முற்றத்திற்குமாக அலைந்துநின்றாள்.

இப்பொழுது யாரோ கதவைத்தட்டுவதுபோல் தொனி கேட்டவுடனே இவள் நமது தர்மன்தான் வந்திருப்பானென்று நினைத்துக் கதவைத்திறந்தாள். உடனே இருட்டோடிருட்டாக ஒருருவம் தோன்றிற்று. ஸாவித்ரீ பயந்து கைவிளக்கைக்கொண்டுவந்து பார்ப்பதற்குமுன் அவ்வுருவம் உள்ளே வந்துவிட்டது. அதை யுற்றுநோக்குங்கால் காலமே அழைத்துவந்த பிராமணனென்று ஸாவித்ரீ யறிந்துகொண்டாள்.

பிராம:—அம்மா! நான்சற்றுக் காரியமாய்ப்போனவன் அஸ்தமனத்துக்குமுன் வந்து உங்களைப்பார்க்க நேரவில்லை. மத்தியானம் சாப்பிட்டீர்களா? ஏதாவதுகுறையுண்டா?

ஸாவி:—ஐயா! நல்லசமயத்தில் உதவிபுரிந்த உங்களுக்குப் பகவான் கிருபைசெய்வாராக. ஏதோ மத்தியானம் சாப்பிட்டோம்; எங்களுக்கென்ன குறை சொல்லவிருக்கிறது.

பிராம:-அம்மா! ஏன் மிகவும் துக்கங்கொண்டாடுகிறாய்.

ஸாவி:-வெளியிற்போன பையன் இன்னும் வரவில்லை, அதுதான் கவலையாயிருக்கின்றது.

பிராம:—இவ்வளவுதானே, இதென்ன காடாமலையா? ஏனிப்படியழவேண்டும். எனக்கிது பிடிக்கவில்லை.

ஸாவி:—எங்களுக்கு இப்போது நல்லகாலமில்லை; ஆகையால், 5-மணிக்குவருவதாய்ச் சொல்லிப்போனபையன் இதுவரையில் வராததைதகொண்டு எனக்குததாங்கமுடியாததுக்கமாகத் தானிருக்கின்றது, அதனுலுங்களுக்கென்ன?

பிராம:— எனக்கென்னவா, இருக்கட்டும் அவனை நீயென்னகாரியார்த்தமாய் வெளியிற்போகச்சொன்னாய்?

ஸாவி:—எங்கள் குமாஸ்தாக்களில்யாரையாவது கண்டுபிடித்து அவர்கள் வீட்டையாவது தெரிந்துகொண்டு வரச்சொன்னேன்.

பிராம: —அம்மா நீ வெளுத்ததெல்லாம்பாலென நினைத்துவிடுகிறாய், அவர்கள் துரோகசிந்தையை நீ யறியாய்.

ஸாவி.—(திடுக்கிட்டு)அவர்களைப்பற்றி நானிதுவரையில் விகற்பமாய் நினைக்க இடமில்லை, உமக்கேதாவது தெரிந்தால் சொல்லும், எவருக்கும் ஒருசமயம புத்தி கெடுகிறதுண்டு.

பிராம:—உங்கள் குமாஸ்தாவாகிய அந்த கிருஷ்ணய்யனுக்கு உன கணவன் ஏதோ பணம்கொடுக்கவேண்டுமாம்; அதை வசூலிக்கவிடமில்லை ஆனால் உன் பிள்ளைக்கு "உன் தகப்பனார் திருநெல்வேலியில் ஜயிலில் இருக்கிறார், உன்னையுமழைத்தனுப்பும்படி தந்திவந்திருக்கிறது உடனே போ" என்று சொல்லிச் செலவுக்கும் பணம் கொடுத்து அனுப்பிவிட்டான்.

ஸாவி:—சரி யிருக்கட்டும், அதனுல் பணமெப்படி வரு லாகும்.

பிராம:—அது தெரியாதா உனக்கு? நீ யி போது சம த்தாய் உன் நகைகளையெல்லாம் பத்திரப்படுத்தியிருப்பது அவன் றியான். இராத்திரி உன்னை வீட்டிற்கழைத்துப்போய் உன் மேரிலுள்ள நகைகளைக் களைந்துகொண்டு உன்னைத் துர த்திவிடுவதாய்த்தான் உத்தேசம்.

ஸாவி:—ஐயோ! அப்படியா அந்தப்பாவி நினைத்துவிட் டான், அவனுக்காக என்னையழைக்கத்தான் நீர் வந்தீரா?

பிராம:—அம்மா என்னை நீ யப்படி நினைக்கவேண்டாம், அவனுல் அனுப்பப்பட்ட பையனுக்கு 'அப்படிப்பட்ட ஸ்திரீ இங்கொருவருமில்லை' என்று சொல்லி இப்போதுதான் விர ட்டிவிட்டு வந்தேன்.

ஸாவி:—ரொம்ப சந்தோஷம், என் குழந்தையை நீர் பார்த்தீரா? அவனிப்போது எங்கிருககிறுன்?

பிராம:— நானவரை ரெயில்ஸ்டேஷனிற் கண்டேன். அவர், சகதியைச்சொல்லி திருநெல்வேலிக்கு போவதாய்ச் சொன்னுர். நான் அதையெல்லாம் பொய்யென்று சொல்லி யும் நம்பாமல் "அப்படிக்கு அங்கொன்றுமில்லாமலிருந்தால நாளையதினம் சாயங்காலம் வந்துவிடுகிறேனென்று என் தாயாருக்குச் சொல்லவேண்டும்" என்று சொல்லிவிட்டு ரெயிலேறிப்போய்விட்டார். எனக்கு வெளியில் வேறுவேலை யிருந்தும் உன்னை ஒண்டியாய் இங்கிருக்கவிடக்கூடாதென்று இங்குவந்தேன்; ஆகையால் கவலைப்படாதே. இந்தா, இந்தப் பாலையருந்து; வெற்றிலைவாங்கிவந்திருக்கிறேன் தாம்பூலதார ணம் செய்துகொள்; நாளையதினம் உன்பிள்ளை வந்துவிடு வான்; பிறகு தகுந்த இடத்தில் உன்னைக் கொண்டுபோய்ச்

சேர்த்து விடுகிறேன்—என்று சொல்லிப் பாலையும் வெற்றிலைப்பாக்கு வகையறுவையும் கையிற்கொடுக்கப்போனான்.

இதைக் கேட்ட ஸாவித்திரிக்கு உடம்பு நடுநடுங்கிப் போயிற்று. 'இந்தப்பாவி நம்மிடம் ஏதோ கெட்ட எண்ணம் கொண்டவன்போல் தோன்றுகிறது; காலமே' எங்களைக் கண்டவுடன் அப்படிப்பட்ட எண்ணங்கொண்டுதான் இத்தனிக்காவற்போன்ற சிறுகுடிசைக்கு எங்களை அழைத்தான் என்று நினைக்கிறேன். இவனென்னிடமகொண்ட துர்எண்ணத்திற்காகவே நமது குழந்தை தர்மனை இராத்திரி இவ்விடம்வராமல் பொய்யாக வேதாவது ஏற்பாடுசெய்திருக்க வேண்டும், ஐயோ நானிப்பொழுது நிர்க்கதியாய்விட்டேனே, இவ்விரவை நானெப்படிக்கடப்பேன்;இந்த துராத்மா பலாத்காரம் செய்யாமலிருக்க வேண்டுமே, ஹே பகவன்! வாஸுதேவ! நிர்க்கதியாய் மானமிழக்கும் தருணத்தில் திரௌபதியைக்காப்பாற்றிய உமக்கு என்னை இத்தருணம் காக்கவேண்டியகடமையிருக்கிறதென்று நான் சொலலாமலே, எனது அந்தர்யாமியாகிய உமககுத்தெரியும்', என்று மனதிற் சிந்தனைசெய்துவிட்டு "ஐயா பாலும் தாம்பூலமும் கணவனைவிட்டுப் பிரிவடைந்த ஸ்திரீகள் அருந்கலாகாதென்று நான் கேட்டிருக்கிறேன், ஆகையால் நீங்களெனக்கு அவ்விதமான உபசாரங்களெல்லாம் செய்யவேண்டாம் என்றாள் ஸாவித்திரி.

பிராம:—நீசொன்ன சாஸ்திரத்தைக் கணவனையிழந்த ஸ்திரீகள்கூட அனுஷ்டிககவில்லையே; நீதானா அதற்குப்பாத்தியம். யோசிக்காதே. எததனையோ விதவைகள் எட்டுச்சேர் பாலை 2 சேராகக்காய்ச்சிக் குடித்துவிட்டு ஒருமணிசொம்பழுத்து ஏலக்காய் ஜாதிபத்திரி முதலான வாசனைத் திரவியங்களுடன அரைக்காலுவிசை வெற்றிலையைப் போட்டுக்கொண்டு

மெத்தைகயிற்படுக்கிறார்கள். அப்படியிருக்கப் புருஷனுள்ள பெண்கள் தெய்வ சங்கற்பத்தால் அவனைவிட்டுப் பிரிந்திருக்க நேரிடுங்கால் இவைகளை யுபயோகிப்பது விசகில்லை.

ஸாவி:—ஏன் வார்த்தையை வளர்க்கவேண்டும். எனக்கிஷ்டமில்லையென்றால் விட்டுவிடவேண்டியதுதான் நியாயம்.

பிரா:—சரிவிட்டுவிடுகிறேன். உன்னிஷ்டத்திற்கு மாறு சொல்லவில்லை. இன்றொன்று கேட்கவேணுமென நினைக்கிறேன். கேட்கலாமா உன்னை?

ஸாவித்ரி:—தர்மத்துக்கும் நியாயத்திற்கும் விரோதமில்லாமல் கேட்கவேண்டியதிருந்தால் கேட்கலாம்.

பிரா:—நான் தர்மத்துக்கும் நியாயத்திற்கும் விரோதமாய் ஒன்றும் கேட்கவில்லை; நானின்று உங்களுக்குச்செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரத்தை யபேக்ஷிக்கிறேன்.

ஸாவித்ரி:—நானிப்போது உமக்குப் பிரதியுபகாரம் செய்யச் சக்தியுள்ளவளாக இல்லை. நான் மறுபடியும் நல்ல ஸ்திதியிலிருக்கும்படி பகவான் கிருபைசெய்தால் அப்போது உமது சௌகரியத்தைச் செய்வேன்.

பிரா:—ஆமாம். அக்காலத்தை யார்கண்டாரோ? இப்போது உன்னிடம் உள்ளதைக் கேட்டால் கொடுக்கக்கூடாதோ?

ஸாவித்ரி:—என்னிடம் இப்போதொன்றுமேயில்லை.

பிரா:—ஏதொன்றுமில்லையென ஒளிக்கிறாய். உனது அங்கத்தை ஒருதரம் அணையக்கொடுத்தால் நான் அதனாலே தன்யனாவேன். ஆகையால் கண்மணி! உன்னிடம் இலலாத வஸ்துவா இது?

இதைக்கேட்ட ஸாவித்ரி "அடேபாபி! இதற்காகவா காலமே எங்களை இந்தத் தனிக்காவலுக்கு நிகரான குடிசையிற்கொண்டடைத்து இராத்திரி என் பிள்ளை இங்கே வராமல் என்னவோ தந்திரம்செய்து பகலெல்லாம் எங்கேயோ போனவன்போற் பாசாங்குசெய்து இரவு இங்கு வந்தாய்; அடே துரோகி! ஸ்வப்பனத்திலும் நானுனக்கு இணங்குவே னென்று நினையாதே. என்மானத்தையும் காப்பாற்றி உன் மானத்தையும் ரக்ஷித்துக்கொள, ஜாக்கிரதை"—என்றாள்

பிரா:—என்னடீ மாயக்காரி! சிணுப்புகிறாய். நானுன்னைப்போல் பரிசுத்தம் பேசுகிற பெண்களை யெத்தனையோ பேர்களை நாணங்கெடப் பார்த்திருக்கிறேன். ஏன் அதிகப் பேச்சுப்பேசுகிறாய். நீ உனது மானத்திற்கு பங்கமுண்டாய் விடுமென்று பயப்படவேண்டாம். இந்த வீட்டில் நம்மிருவரைத்தவிர வேறில்லை. நீயும் நானும் சுகமாயிருந்து ஆனவுத்தரக்ஷணமே நான் வெளியிற்போய்விடுகிறேன். ஆகையால் நடந்த சங்கதியை யறிவார் ஒருவருமில்லை. வீணில் என்னை மறுக்காதே.

ஸாவித்ரி:—ரகஸியமாய் வியபிசாரம் செய்துகொண்டு, பார்ப்பவருக்குப் பதிவிரதையாய்த் தோன்றும்படி புருஷர்களைக்கண்டால் வீதியில் அரைமைல்தூரம் ஒதுங்கிப் போகும் பெண்டீர்களில் ஒருவளாக என்னை மதியாதே. நான் ஈசுவரனுக்குப் பயந்துநடப்பவள்.

பிரா:—ஈசுவரனுக்குப் பயப்படுகிறாயென்று நன்றாய்த் தெரியவருகிறது. எவனோ ஒரு தடியனிடம் போய்ச்சேர்ந்து எல்லாநகைகளையுமிழந்துவிட்டு வந்திருக்கிறாய்; நான் அப்படிப்பட்ட அயோக்யனல்ல. என்னை நீ யொருதரம் முத்தமிட்டமாத்திரத்தில் முன்போல் உனதங்கத்தை நகைகளால்

திரப்பிவிடுவேன். சந்தேகமில்லை. வேணுமானல்பார்—என்று ஒரு சிறுபெட்டியைத்திறந்து அதுநிறையப்பளபளவென்று மின்னும்படியான நகைகளைக் காட்டினன்.

ஸாவி:—பத்துப்பணத்திற்கு வசபடாத பதிவிரதை யுண்டோ, என்றபடி பணத்திற்கும் நகைகளுக்கும் ஆசைப் பட்டு அகாரியம் செய்பவள் நானல்ல. ஆகையால் நீ இதைக்காட்டினும். பத்துப்பங்கு ஜாஸ்தி நகைகளைப்போட் டாலும் நான் உனக்கு இணங்குவேனென்று நினையாதே. இப்படிப்பட்ட அகாரியத்தைச் செய்யாமற் பிச்சையெடுத் துண்டாலும் அது எனக்கு மேன்மையே. ஆகையால் இவ் வெண்ணத்தை யடியோடு அகற்றிவிடு—என்று சொல்லி அந்த இடத்தைவிட்டு அப்புறம் சென்றாள்.

அந்தக் காதகனும் கூடச்சென்று முன்னாலே நின்று 'ஹே சுந்தரி! எனது ஆசைக்கிசைந்த கிளியே! பஞ்சபாணன் பாவையிலுதித்த பொற்கொடியே, என் கண்மணி! மெருகிட்ட தங்கம்போல் பளபளவென்று பிரகாசிக்கும் உனது அங்கத் தை இத்தனி வீட்டில் இவ்வேளையில் பார்த்தபிறகும் நான் தர்மத்தையும் நியாயத்தையும் கவனிக்கலாமோ; ஹே! சவுந் தரியத்திற்குஅதிதேவதைபோன்ற மயிலே! காரிருளைப்பழிக் கும் உனது கூந்தல். இவ்வாறு அலங்கோலமாய் அலைய என் மனம் சகிக்குமோ; கருணைகூர்ந்த கடவுள், கைபிற்கொடுத்த அமுதத்தை வாய்க்கெடாமற்செய்து கொள்வேனோ? தர்ம மானாலும் அதர்மமானாலும் உன்னையொருதரமாவது காடா லிங்கனம் செய்யாமல் மன்மதபாணங்களால் இவ்வுயிரை மாய்த்துகொள்வேனோ?' என்று பிதற்றிக்கொண்டு ஜாலக் காய் அவள் கையைப் பிடிக்கப் போனான்.

அவளுடனே சற்று விலகிக் கொண்டு "ஐயோ பாவி! என்னைத் தொடாதேடா" என்று கூச்சலிட்டாள்.

இச்சமயம் தெருவில் யாரோ பேசிக்கொண்டு போவ தாய் காதில் சத்தம் கேட்டது. இப்பொழுது ஓடிப்போனால் தப்பலாமென நினைத்த ஸாவித்ரீ, தனது துணிமணிகளைக் கூட எடுக்காமல் வாசலில் ஓடினாள். அந்த அயோக்கிய னும் விரைவாய்ப் பின்தொடர்ந்தான், எனினும் வாசலில் வந்தவர்கள் மீட்டுக்குவந்த போலீஸ்காரர் ஆகையால் பய ந்து தனது வீட்டு வாயிற்படியில் நின்றான். ஸாவித்ரீ இந்தச் சூழ்ச்சியறிந்துகொண்டு அவர்கள் பின்னேயே மெதுவாய் சத் தம் செய்யாமல் சற்று நடந்து சந்து திரும்பினவுடன் காவே ரிக்குப் போகும் ஒத்தையடிப் பாதையின் வழியே சென்று படுகைக்காட்டில் நுழைந்துவிட்டாள். அந்த துரோகிப் பிரா மணனும்,போலீஸ்காரர் போனபின் அவ்வழியேவந்து மலை போலிருக்கிற காவேரிக்கரையின்மீதேரிக் கையிற்கொண்டு வந்த லாந்தல் வெளிச்சத்தைக்கொண்டு, என்ன பார்த்தும் நல்ல இருட்டில், அடர்ந்த அந்தக் காட்டில் ஒளிந்துகொண் டிருக்கிற ஸாவித்ரியை அவன் கண்டுபிடிக்கக் கூடவில்லை. அவள் மாத்திரம் இவன் கையில் வெளிச்சமிருந்ததால் இவன் வந்ததும் தேடினதும் மறுபடி திரும்பிப்போனதும் கண்டு கொண்டாள். இச்சண்டாளன் மறுபடி யங்கு வருவானென நினைத்துக் கொஞ்சநேரம் அங்கேயேயிருந்தாள். அவள் நினை த்தபடியே அந்தக் கிராதன் மறுபடி ஒரு வெளிச்சத்தைக் கைக்கொண்டு காவேரிக் கரைக்குவந்து சுற்றுமுற்றும பார் த்து அரைமைல்தூரம் கிழக்கேயும் அரைமைல் மேற்கேயும் போய்ப் பார்த்துவிட்டு "மெலிந்த சரீரமும் பயந்த ஸ்வபா வமும் உடைய அவள் இப்படிப்பட்ட இடங்களுக்கு வந் திருக்கமாட்டாள், அந்தப் போலீஸ்காரர்கள் உதவியைக் கொண்டு டவுனுக்குள் எங்காவது போயிருப்பாள்" என்று புலம்பிக்கொண்டே திரும்பினான்.

இவன் வந்துபோனதையும் புலம்பினதையும் கவனித்த சாவித்ரீ 'இன்றைக்கு பகவான் நம்மை தப்பிக்கச் செய்தார்' என்று அக்காட்டைவிட்டு வெளிக்கிளம்பி கை கால்களிலும் மற்ற அங்கங்களிலும் அநந்தமானமுட்கள் தைத்து, கொம்புகளில் மாட்டின புடவை கிழிந்து,உடம்பெல்லாம் இரத்த காயத்துடன் கரைக்கு வந்தாள். கிழக்கும் மேற்கும் பார்த்தாள், "இப்படிப்பட்ட அந்தகாரத்தில் என் ஜன்மத்திலும் நான் வெளிவந்ததில்லையே, இன்றைக்கு என்னவித தைரியத்தைக்கொண்டுநான் போவேன். ஐயோ பகவானே ! என் அருமைப் புத்திரனை தர்மனை அந்தப்பாவி என்ன செய்துவிட்டானோ, அல்லது குமாஸ்தா கிருஷ்ணய்யர் தான் திருநெல்வேலிக்கு அனுப்பிவிட்டானென்பது மெய்யோ ? என் அருமைக் கண்மணியான தர்மா ! உன்னுடைய கதி இன்னதெனத்தெரியாமல் நானிவ்விடம் விட்டு எப்படிப் போவேன். அந்தப்பாவி என்னையே சுற்றிக்கொண்டிருப்பதால் நான் இன்றை இராத்திரி இவ்வூரிலிருந்தால் எப்படியும் என்னைக் கண்டுபிடித்து ஹிம்ஸிப்பான். அதோ மறுபடியும் வெளிச்சம் தெரிகிறதே. அந்தப்பாவி இங்கே திரும்பவும் வந்தாலும் வருவான். நான் இனி இவ்விடமிருந்தால் மானத்தை யிழக்க நேரிடும். ஆகையால் இந்தக் கரையோடு கிழக்கே போய்க் கொண்டிருக்கிறேன்; எவ்விடத்தில் பொழுதுவிடிகிறதோ அவ்விடத்தில் வேறுயோசனைசெய்து கொள்கிறேன்" என்று கிழக்கே நடந்தாள்.

சாவித்ரீ, தனக்கு நேரக்கூடிய விபத்தை நினைத்துப் போகிறபடியால் கால்வலிதோன்றாமலும் இருட்டென்ற பயமில்லாமலும் நடந்தாள். நடந்தே வழக்கமில்லாதவள் இன்றைக்கு வெகுதூரம் நடந்துபோனதால் கால்களிரண்டும் இரத்தம் குழம்பி கோவைக்கனிபோற் சிவந்துவிட்டன.

மூட்களை மைத்துக்கொண்டாள். இருட்டில் வழிதெரியாமல் அநேக இடங்களில் இடறிக்கொண்டு கால்களில் இரத்தக்காயங்களை உண்டாக்கிக் கொண்டாள். கடைசியாய் உடம்பெல்லாம் வியர்த்துக் கால்கள் நொந்து ஒரு அடிகூட நடக்க முடியாமல் கரையில் விஸ்தாரமான இடத்தில் ஒரு மரத்தடியில விழுந்தாள்; தனது கதியைப்பற்றி தெய்வத்தை நொந்துகொண்டாள். களைப்பின் மிகுதியால் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

மணி ஐந்தாயிற்று. இருட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. அதைக்கண்டு, சூரிய கிரணங்கள் நம்மையும் இருட்டென்றே நினைத்து அழித்துவிடுமோ வென்று பயந்து தங்களை இன்னொன்று சொல்லிக்கொள்வதுபோல் காக்கைகள் "கா, கா" வென்று கூச்சலிட்டன. அத்தருணத்தில் நித்திரையில் மூழ்கிக் கிடந்த ஸாவித்ரியின் அருகில் ஒரு சன்யாசி நின்றுகொண்டு கவனத்துடன் பார்த்து, அவளை எழுப்ப நினைத்து 'யாரங்கே மரத்தடியில் படுத்து நித்திரைசெய்வது? எழுந்திரு' என்று சொன்னார். அதற்கவள் விழித்துக்கொள்ளவில்லை. மறுபடியந்தத் துறவி கையைத் தட்டினார், அதிலுமெழுந்திருக்கவில்லை. ஒரு சிறு மண்கட்டியை எடுத்து மேலே எறிந்தார் அப்போதும் தூக்கம் கலையவில்லை. அவர் உடனே 'இதென்ன உயிரோடிருக்கிறாளோ இறந்துவிட்டாளோ' என்று சந்தேகித்தார். அடிக்கடி கண்ணைக் காஷாய வஸ்திரத்தால் துடைத்துக்கொண்டார். பிறகு அதி சமீபத்திற் போய் நாற்புறமும் பார்த்துவிட்டு நாசி துவாரத்தில் விரலை வைத்துப் பிராண ஸஞ்சாரமிருக்கிறதோ வெனப்பார்த்தார். சுவாசம் இருக்கிறதுகண்டு அவளது தோளில் தட்டியெழுப்பினார்.

உடனே யவள் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்தாள். "நல்ல தூக்கத்திலிருந்த நம்மை யாரோ தட்டியெழுப்பினாற் போலிருந்ததே" என்று சுற்றிலும் பார்க்கையில், அம்மரத் தடியில் ஒரு யதீசுவரர் நிற்கக்கண்டாள். காலமே விழித்த தும் துறவியைக் கண்டால் அந்த தினத்தின் பலன் நல்லதல்ல வெனச் சொல்லுகிறார்களே; ஐயோ! நமக் கென்னென்ன துக்கம் இன்று சம்பவிக்க விருக்கிறதோவெனப் புலம்பிக் கொண்டு அவரிடம் வைத்த கண்ணையெடுத்து பூமியில் வைத்துக்கொண்டு நிற்கமுடியாமலே நின்றாள்.

யதீசுவரர்:—பெண்ணே! நீயார்? உன் தேசமெது? நீ மணந்த புருஷன் எவன்? அந்தப்பாவி இப்போது எங்கிருக் கிறான்? உன் உடம்பெல்லாம் காயங்களாகவும் உன் புடவை யெல்லாம் இரத்தக்கறைகளுமாயிருக்கக் காரணமென்ன? உனக்கேன் உடம்பில் இவ்வளவு சோர்வு? நீ இம்மரத்தடி யில் வந்து தனியாய்ப் படுக்கக் காரணமென்ன? ஸ்திரீகள் அதிலும் உன்னைப்போன்ற அழகுள்ள தருணிகள் இப்படித் தனியாய்வந்து படுக்க நியாயமில்லையென நீ யறியாயோ?

ஸாவித்ரீ:—(அவர் பாதங்களிற்பணிந்து) ஸ்வாமி! என் விருத்தாந்தம் ஒரு பெரிய புராணத்திற்கொப்பாயிருக்கும் என்னாலிந்த சமயம் சொல்லமுடியாது. உடம்பு வலி தாங்க வில்லை, கால்கள் நிற்கமுடியவில்லை தாங்களும் யதிகளான தால் இப்பெண்பாவின் கதையைக் கேட்டால் யாராவது ஏதாவது நினைப்பார்கள். என் துக்கத்தைக் கருணாகரனான பகவானொருவனே தீர்க்கவல்லவன்; நானிருந்த ஸ்திதிக்கும் இப்போது நானிருக்கும், விதத்திற்கும் இனி நான் உயிரோ டிருக்க நியாயமில்லை. ஆகையால் வெளிச்சம் அதிகமாகும் முன் காவேரியிலிறங்கி சரீரத்யாகம் செய்து கொள்கிறேன். தயவுசெய்து எனக்கனுமதி கொடுத்து அனுப்பவேணும்.

யதிராஜன்:—ஹே ஸ்திரியே! ஆத்மஹத்திசெய்துகொண்டால் பிசாசாய்ப் பிறந்து அலையவேண்டும், நான் யதியானாலும் உனது துக்கத்தைத் தீர்க்கவல்லவன் என்னிடம் பொய்மொழியாமல் நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடையளிப்பாயானால் நானுன்னை யெப்படியும் சுகிக்கச்செய்ய முடியும் உன்னால் நிற்கமுடியாவிட்டால் உட்கார்ந்து சொல்.

இதைக் கேட்டாள் ஸாவித்ரீ. அந்த யதியினுடைய முகம் தன்னையே உற்று நோக்குவதையும், அவர் கண்களில் நீர் ததும்புவதையும் கவனித்தாள். "நான் இவரைப் பூர்வாசிரமத்தில் அடிக்கடி பார்த்திருப்பேன் போல் நினைக்கிறேன். ஏனென்றால் இவர் முகம் எனக்குப் புதிதாய்க் காணப்படவில்லை. இவரிருக்கும் மாதிரியைப் பார்த்தால் இவரெக்காரணத்தாலோ நம்மிடம் அனுதாபமுள்ளவர்போல் தோன்றுகிறது. ஆனால் கெட்டதான அபிப்பிராயமிருப்பதாய்த் தோன்றவில்லை. நமது கதையை இவரிடம் தப்பாமற் சொன்னால் ஒருகால் இவர் நமக்கு உதவிபுரிந்தாலும் புரிவார்; இவருடைய உதவியால் நமது பர்த்தாவையாவது தர்மனையாவது காண நேர்ந்தால் என் கஷ்டம் தீருமே" என நினைத்து ஸன்யாசியைப்பார்த்து 'ஸ்வாமி! என்னிடம் தங்களுக்கு அவ்வளவு கருணையிருந்தால் தங்களுக்கிரவிருக்கு நான் மாறுசொல்லவில்லை தாங்களும் உட்காரவேண்டும்; என்று சொன்னாள். அப்படியே அவருமுட்கார ஸாவித்ரீ, தன் பெயர் இன்னதென்றும், தனது புருஷன் பெயரைச் சொல்லாமலே மாமனார் பெயரைச்சொல்லி அவருக்குத்தான் மாட்டுப்பெண்ணென்றும், தனது பர்த்தா குளித்தலையில் வக்கீலாயிருக்கையில் தான் சுகமாய் வாழ்ந்ததும் சொல்லித் தன்னைத் தனது தமையன் ஸுமங்கலிப் பிரார்த்தனை செய்யவேண்டுமென அழைத்துப் போனதுமுதல் தான் இப்போது மரத்தடியில் படுத்திருந்தவளையில் ஒழுந்துகூட விடாமல்

மத்திமத்தியில் சற்று கண்ணீர்விட்டும் சற்று ஸ்தம்பித்து இருந்தும், சற்று யோசிப்பதுபோல் யோசித்தும், சற்று கேட்பவருடைய கண்ணீரையும் முகவாட்டத்தையும் கவனித்தும், தனது கதையைச்சொல்லி முடித்தாள்.

இதைக்கேட்ட சன்யாஸி மெய்மறந்து உடம்பு நடுங்கிக் கண்ணீர் சொரிந்து, 'ஸாவித்ரீ உன்னை நான் இக்கோலத்திற் பார்க்க என்னபாவம் செய்தேனோ' என்று அவளைக் கட்டிக்கொண்டு அழுதார். உடனே ஸாவித்ரி அதிகமாக நடுக்க முற்று அவரை யுற்று நோக்கியதும் தனது பர்த்தாவென அறிந்துகொண்டு தானும் கோவென் றலறினாள். இப்படி அற்பகாலம் இருவரும் அழுதானபிறகு ஸாவித்ரீ 'பிரபோ! தாங்களிக்கோலமான காரணமென்ன? இவ்வாசிரமத்திலிருக்கிற காலத்தில் என்னை யணுகுவதும் என்னுடன் பேசுவதும் தர்மவிருத்தமென்பார்களே?" என்று கேட்டாள்.

அதற்கவர் "பிரியே! நான் வாஸ்தவத்தில் ஸன்யாஸம் கொள்ளவில்லை, அனுகூல தர்மபத்னியாகிய உன்னுடன் சேர்ந்து இல்லற தர்மத்தை நடத்துவதைவிட நான் ஸன்யாஸத்தைப் பெரிதாக நினைக்கவில்லை. நான் எப்போதும்போல் இருந்தால் எப்படியும் கடன்காரர்களின் வாரண்டுக்குத்தப்ப முடியாதென நினைத்து, எனது சிகை, எக்ஞோபவீதம் இவைகளைப்பரிஹரிக்காமல் வடதேசத்துஸன்யாஸியென்று பெயர் வைத்துக்கொண்டு சட்டையையும், முக்காடையும் எடுக்காமல் தமிழைக்கொச்சை கொச்சையாய்ப் பேசிக்கொண்டும், ஸம்ஸ்கிருதத்தையே பெரும்பாலும் உபயோகப் படுத்திக்கொண்டு, உன்னையும் தர்மனையும் தேடித்திரிகிறேன். உன்னைக் கண்டவுடன் என் கவலை முக்காலே அரைக்காலும் நீங்கிவிட்டது. குழந்தை விஷயமாய்க் கொஞ்சம் கவலையிருந்தாலும் அவன் கூடியசீக்கிரத்தில் எப்படியாவது ஸப்

மாஜிஸ்டிரேட்டாக வந்து விடுவான், பிறகு கவலையேயில்லை; அவனைப்பற்றி நமது ஜில்லா கலெக்டர் மதுரை திருநெல் வேலிக் கலெக்டர்களுக்கு ரொம்ப பலமாய் எழுதியிருக்கி றார். இனி நான் ஒரு நாள் கூட இந்த பிரிடிஷ் எல்லையில் இருக்கலாகாது; இருந்தால் கடனுக்கு வகை சொல்ல முடி யாமல் ஜெயிலுக்குப் போகும்படி நேரிடும்; நானில்லாவிட் டால் சொத்தைத் தலைக்குக் கொஞ்சமாய் எடுத்துப்போவார் கள். நாமாகவே நியாயமான விலைக்கு நமது சொத்துக்களை விற்றுக் கடன் கொடுத்தால் கால் பாகம் சொத்து மீருமா னாலும் நமக்கு இது ஸமயமில்லை. நமக்கு அதிர்ஷ்டம் உண் டானால் இதைப்போல் பத்துப்பங்கு சொத்துகளை நாம் சம் பாதித்துக் கொள்ளலாம்" என்று சொல்லி யவளை யழைத்துக் கொண்டு எலமனூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்.

உடனே இருவரும் ரயிலேறி ராத்திரி புதுச்சேரி வந்து சேர்ந்து, தங்கள் கைவசமிருந்த சிறு தொகையை வைத்துக் கொண்டு இரண்டொருநாள காலக்ஷேபம் செய்தார்கள்.

பிறகு கோபாலசாமி ஐயர், தனக்கு ஏதாவது உத்யோ கம் கிடைக்குமாவென்று விசாரித்துக் கடைசியில், அந் நகரத்தில் பட்டர் அண்டு கோ என்ற கூட்டத்தாரால் ஏற்ப டுத்தப்பட்டிருக்கிற சீமைச்சாமான் கிடங்கில் மாதம் ரூ 30 சம்பளத்திற்கு அமர்ந்து, அதைக்கொண்டு ஸாவித்ரியுடன் செட்டாகவும்; தர்மமாகவும், கௌரவமாகவும், காலக்ஷேபம் செய்து வந்தார்.

# பதினொருவது ஆச்வாஸம்

## நியாய ஸ்தலம்

"சுப்பு! திருச்சியில் சொன்னபடி நீ மதுரையிலிருந்து கொண்டு என்னுடன் வேறொரு ஸ்திரீயை அனுப்பியிருந்தாயானால் என்கதி என்ன ஆகும்?"

சுப்பு:—குழந்தாய் தர்மாம்பா! நமக்கு இப்படியெல்லாம் இக்கட்டு வருமென்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லையே.

தர்மா:—சுப்பு! ஆபத்தும் ஸம்பத்தும் நாம் நினைத்துத்தான் வருமென்று இதுவரையில நீ நினைத்திருந்தாயோ?

சுப்பு:—இல்லை. நாம செய்த குற்றமென்ன? நமக்கு வந்திருக்கிற ஆபத்தும் அவமானமும் என்னவென்று நினைத்தால் மனமுருகிப் போகிறதெனக்கு.

தர்மா:—நாமிந்த ஜன்மத்தில் யாதொரு குற்றமும் செய்யவில்லையென்று நம் மனதுக்குத் தெரிந்திருந்தாலும் பூர்வ ஜன்மத்திற் செய்த பாபத்தின் பலனை யனுபவிக்க நாம் ஆக்ஷேபிக்க முடியுமோ?

சுப்பு:—நீ படித்தவளாயிருப்பதால் சொல், கேட்கிறேன். பாவத்தைச் செய்தால், நரகம் நரகமென்று ஒரிடமிருப்பதாயும் அவ்விடத்திற்கு பாபிகளைக் கொண்டுபோய் ஹிம்ஸிப்பதாகவும் சொல்லுகின்றார்களே, அப்படியிருக்க மறு ஜன்மத்திலும் அந்தப்பாபம் தொடர நியாயமுண்டோ! ஒரு குற்றத்திற்கு இரண்டு தரம் சிக்ஷை செய்வது நியாயமாகுமா!

தர்மா:—அம்மா சுப்பு! ஒரு பாபத்திற்கு இருகரம் சிக்ஷை கிடையாது. ஆனால் இருவகை யுண்டு. இப்போதைய ராஜாங்கத்திலும் சில குற்றங்களுக்குச் சரீர தண்டனையும் அபராதமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில குற்றங்களுக்கு இரண்டிலொன்று மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. அதுபோல் சிலபாபங்களுக்கு நரகானுபவம் மாத்திரம் ஏற்பட்டிருக்கிறது; சில பாபங்களுக்கு நரகத்திலும் கஷ்டப்பட்டு மறுபிறப்பிலும் கஷ்டப்படும்படி நேர்ந்துவிடும்; சிலவற்றிற்கு மறு ஜன்மத்தில் மாத்திரம் கஷ்டமுண்டாகும். நாமிப்போது பாபத்தின் பலனை யனுபவிப்பது மாத்திரம் நிச்சயம். அது எப்படிப்பட்ட பாபமோ நமக்கு அறியச் சக்தியில்லை.

சுப்பு:—இது இருக்கட்டும், நமது நிலைமையைப்பற்றி யோசிப்போம். இந்த ஜெயிலரையில் இன்னம் எத்தனைநாள் வசிக்கவேண்டியதோ தெரியவில்லையே?

தர்மா:—புதிதாய் ஒரு சப்மாஜிஸ்டிரேட்டு வந்திருக்கிறாராம். பழய கேஸ்கள் அதிக பாக்கி யிருக்கின்றனவாம், அவையெல்லாம் ஒழிந்தபின் நம் கேஸ் விசாரிக்கப்படும். அதற்குள் அவசரப்பட்டால் அந்த இன்ஸ்பெக்டர் சொன்னபடி நடந்தால் இப்போதே வெளிப்பட்டுவிடலாம். அதற்கு நீ சம்மதப்படுவாயா?

சுப்பு:—சிவ-சிவ, அவனுக்கு நீயும் வாழ்க்கைப்பட்டு நானும் பெண்டாகவிருந்தாலல்லவா நம்மை விடுவிப்பான். அதற்கு நீ ஒருகால உடனபட்டாலும படலாம். நீ கன்னிகை. எப்படி சம்மதிக்கச்சொல்ல எப்படித் துணிந்தாய்.

தர்மா:—சுப்பு! நானு உடன்படுவேன். அப்படியானால் நேற்றே அவ்வரையைவிட்டு நீங்கியிருக்கலாமே. நானும்

சம்மதிக்கமாட்டேன். நீயும் சம்மதிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, இப்போதிருக்கிற ஸ்திதியை உனக்குச் சொன்னேனே தவிர வேறில்லை.

சுப்பு:—தர்மாம்பா! நானொரு யோசனை சொல்லுகிறேன், அதாவது அவன் இப்போது ஒருதரம் இந்த அறைக்கு வருவான், எப்படியும் நம்மையவன் கைவசப்படுத்திக்கொண்டு விடலாமென்று நினைத்துத்தான் நமக்கு ஆசாரமாயும் அதிசிலாக்கியமாயும் ஆகாரம் கொடுத்துவருகிறான், இன்னம் எத்தனைநாட்செல்லுமோ நம் கேஸ் விசாரணைக்கு வர; ஆகையால் இன்று அவன் வந்து நம்மைக்கெஞ்சி வரன் கேட்கையில் 'இந்த கேஸ் முடிந்தானபிறகு பார்த்துக்கொள்வோ' மென்று அரைவார்த்தையாகச் சொன்னோமானால் கேஸைம் சுருக்கா முடியும்; நமக்கும் அதுவரையில் கஷ்டமிராது, பிறகு தப்பிக்கொள்ள எத்தனை யோவழியிருக்கிறது.

தர்மா:—ஒருதரம் வரித்தவரனைத்தவிர மற்றொருவனை வரிப்பதாக வேடிக்கையின் பொருட்டுக்கூட வாக்கினால் கூற நான் துணியேன்.

சுப்பு.—அம்மா குழந்தாய், நீ ஒன்றும் சொல்லவேண்டியதவசியமில்லை, நானொப்புக்கொள்கிறேன், நீ கன்னிகை லக்ஷணப்படி வெட்கத்துடனிரு போதும், இல்லாவிட்டால் நமக்கொருசமயம் மானபங்கம் நேர்ந்தாம் நேரும், நீ அணிந்திருக்கிற நகைகளும் பறிமுதலாய்விடும்,

தர்மா:—என்னவோ, பின்னுக்குக் கெடுதி யில்லாமல் ஜாக்கிரதையாயிரு.

என்றிவ்வாறு நமது தர்மாம்பாளும், சுப்புவும் தூத்துக்குடி ஸப்ஜெயிலில் ஓரறையில் அடைக்கப்பட்டுப் பேசி

கொண்டிருந்தார்கள். அப்பொழுது அறைக்கு வெளியில் பூட்ஸ் போட்ட கால்களுடன் யாரோ ஒருவன் நடந்து வரும் சத்தம் கேட்டது. உடனே இவர்கள் பேச்சை நிறுத்தி விட்டார்கள். கதவு திறக்கப்பட்டது. உடனே உடம்பு முழு மையும் உடுப்பணிந்த ஓர் உத்தியோகஸ்தன் அவ்விரு வருக்குமெதிரிற் றோன்றினான். அவன் சிவந்தும் மெலிந்து முள்ள தேகத்தையுடையவன், வயது இருபத்தைந்துக்கு மேலிராது. ஜாதியில் பிராமணன். அவன் இவர்களைக்கண்டு 'என்ன இராத்திரி முழுமையும் யோசித்தீர்களா? காலமே 6-மணிக்குத் தீர்மானம் சொல்வதாய்ச் சொன்னீர்களே' என்று கேட்டான். இதைச் செவியுற்ற தர்மாம்பாள் அவ் வறையின் மூலையில் தலைகுனிந்து ஒடுங்கித் தனது கதியை நொந்துகொண்டு கண்ணீர்ததும்ப நின்றாள்.

சுப்பு:—யோசித்தோம், தீர்மானித்தோம்.

இன்ஸ்:—எப்படித் தீர்மானித்தீர்கள்?

சுப்பு:—தங்களுசிதப்படி.

இன்ஸ்:—(புன்முறுவலுடன்)'சரி இருக்கட்டும், இன்று மாசியீ 10-தேதி. இம்மாதக் கடைசியில் ஒரு முகூர்த்தம் பார்த்துக் கலியாணம் செய்து முடித்துவிடுவோம். ஹே காந்தாமணி! நீ இன்றுமுதல் என்னுடைய முழு பாக்கியத் தையும் அனுபவிக்கவேண்டியது' என்று சொல்லி, சுப்புவின் கையைப் பிடிக்கப் போனான். அப்போதவள் ஒதுங்கிக் கொண்டு 'எல்லாம் இந்தக் கேஸ் முடிந்தான பிறகு யோசி த்துக்கொள்ளலாம். இப்போது என்னைத் தொடக்கூடாது' என்று சொன்னாள்.

இன்ஸ்:—உன்னைச்சேர நாள்கூட பார்க்கவேண்டுமோ?

சுப்பு:—என்னுடைய மனதுக்குச் சந்தோஷம் உண் டாக வேண்டாமா?

இன்ஸ்:—உன் மனச்சந்தோஷத்தைத நான் ஏன் பார்க்க வேண்டும் ?

சுப்பு:—ஸ்திரீ புமான்கள் இருவரும் ஆநந்தத்துடன் கவலையின்றி யிருந்தாலல்லவோ சுகம்?

இன்ஸ்:—உனக்கென்ன கவலையிருக்கிறது? உன் கவலையெல்லாம் இன்றோடு ஒழிந்துவிட்டதென்று நினை. இனி என்னிஷ்டத்திற்குத் தடை சொல்லாதே—என்று மறுபடியும் கையைப் பிடிக்கப்போனான். சுப்பு ஒதுங்கிப்போனாள்.

அவனுடனே "என்னடீ லாயக்காய்ப் டாய்கின்றாய் ; குச்சுக்காரச் சிறுக்கிகளுக்குக் காலநியமம் என்னடி" என்று அவள்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டான். சுப்பு உடனே கூவென்று கதறினாள். அதற்கு அச்சண்டாளன் "உங்களிருவரையும் இன்று படுத்துகிறபாட்டைப் பாருங்கள்; கத்தலுக்காக நான் பயப்படமாட்டேன்; எனக்கு மேலதிகாரி இவ்விடத்தில் ஒருவருமில்லை" என்றுசொல்லி; ஒருகையில் சுப்புவைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் தர்மாம்பாளைப் பிடிக்கப் போனான். உடனே தர்மாம்பாள் "அடேகாதகா! எங்களையனியாயமாய் கெடுக்காதே, அபாண்டமாய்த் திருட்டுக்குற்றம்சாட்டி இந்த ஜெயிலில் எங்களையிப்படி அடைத்து ஹிம்சிப்பது போராதென்று எங்களை மானமிழக்கவும் செய்யாதே. ஐயோ இவ்விடத்தில் இந்தப் பாவியினிடமிருந்து எங்களை ரக்ஷிக்க ஒருவருமில்லையா" என்று கதறினாள். வாசகர்களே! அங்கிருந்து அவர்களை ஹிம்சித்தவன் ஒரு போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரென்று நீங்கள் அறிந்திருக்கலாம்.

அச்சமயம் "விசாரிக்கவேண்டிய பெண் கைதிகளை ஒரு வாரத்திற்கு மேல் அனுவசியமாய் ஜெயிலில் அடைத்து வைக்கக் கூடாது" என்று அப்போது வந்த உத்திரவினால்,

இவர்களை இன்றே விசாரணை செய்துவிட்டுக்கேலை முடிக்க வேண்டுமென்றும், அதை யவர்களுக்குச் சொல்லி அவர்களின் ஸாக்ஷிகளைக் கேட்டு டீப்மாஜிஸ்டிரேட்டுக்குச்சொல்லி சம்மன் போட்டு வரவழைக்க வேண்டுமென்றும், பெரிய இனிஸ்பெக்டர் ஜெயிலுக்குள் வந்தார்.

அவர் வரும்போதே இங்கு நடந்த கூச்சலைக் கேட்டு, "யாரங்கே? பயப்படாதேயுங்கள்" என்றுசொல்லிக்கொண்டு ஒரு கான்ஸ்டேபிள் வழி காட்ட, அவ்விடம் வந்தார்; இவர் பரம யோக்கியர்; கவர்ன்மெண்டில் அநேக பரிசுகளைப் பெற்றவர்; சகலமான கனதனவான்களும் தன்னை மதிக்கும்படி நடந்துகொள்ள இஷ்டமுடையவர்; சாந்தர், ஸுசீலர், ஈசுவர பக்தியுள்ளவர், தனது புத்திரனாயினும், பத்னியாயினும் இன்னும் யாராகவிருந்தாலும் தனது உத்தியோக முறையில் நியாயந் தவறாதவர். இவர் வேலையில் சமர்த்தராக இருந்ததோடு சுத்தராயு மிருப்பதால், கீழுத்தியோகஸ்தர்களுக்கு இவரைக்கண்டால் திகில்தான். இவர் இந்த ஜெயிலுக்குள் வர நியாயமே யில்லையெனத் தீர்மானித்து, அந்த அயோக்ய ஸப்இனிஸ்பெக்டர் அவ்வளவு தைரியமாய் அக்ரமம் செய்தான். இப்பொழுது இவரைக் கண்டவுடன் கருடனைக் கண்ட பாம்புபோல் வீர்யமெல்லாமொடுங்கி, பிரமித்து நின்றான்.

அவனைப்பார்த்து பெரிய இனிஸ்பெக்டர் "நீர் படிப்பில் ஓங்கினவரும், வயதில் சிறியவரும், வேலையில் கெட்டிக்காரருமாக இருப்பதால், நடத்தையிலும் நல்லவராயிருப்பீரென்று நினைத்து நான் உம்மை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டு வந்து விடலாமென நினைத்திருந்தேன். நீர் இப்படி அநாதையாய் ஜெயிலி லடைபட்டிருக்கிற அபலைகளை பலாத்காரம் செய்பவரென்று தெரிந்திருந்தால் உம்மை இவ்வளவு நாள்

முன்னமேயே வீட்டிற்கனுப்ப ஏற்பாடு செய்திருப்பேன். இருக்கட்டும், உம்மோடுபேச இதுசமயமல்ல'' என்று சொல்லிவிட்டு, ஸ்திரீகளைப்பார்த்து, "நமா! நீங்கள் யார்? எந்த ஊர்! உங்களபேரில் ஏற்படுத்தப்பட்ட திருட்டுக்குற்றத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? விசாரிக்கவேண்டிய ஸ்திரீகைதிகளை ஒருவாரத்திற்குமேல் அனாவசியமாய் ஜெயிலில் அடைத்துவைக்கக் கூடாதென்று நேற்றுக் கிடைத்த கலெக்டர் துரையவர்களின் உத்திரவின்படி இன்று உங்கள் கேஸை விசாரிக்க மாஜிஸ்டிரேட்டிடம் ஏற்பாடு செய்திருக்கிறேன். புது மாஜிஸ்டிரேட்டு மகாசமர்த்தர்; உங்களுக்குள்ள ஸாக்ஷிகளைக் குறிப்பிட்டுச் சொன்னீர்களானல் அவர்களுக்குடனே சம்மனனுப்பி, இன்று மத்தியானம் 3-மணிக்கு விசாரிக்க ஏற்பாடு செய்யலாம்; இதற்காகவே தான் நானிவ்விடத்திற்கு வந்தேன்'' என்றார்.

சுப்பு:— ஸ்வாமி! தாங்கள் நல்ல ஸமயத்தில் வந்தீர்கள்; எங்களுடைய மானம தங்களால் தக்கினைசப்பாற்றிமிகுந்த நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்; எங்கள் பேரில் சாட்டப்பட்டிருக்கிற குற்றத்தை நாங்கள் செய்யவில்லையென மறுக்கிறோம்; ஆனல் இந்த ஊரில் எங்களுக்கு ஒருவரையும் தெரியாது. ஆகையால் யாரை நாங்கள் சாக்ஷியாகக் கோர முடியும்?

பெரிய இனிஸ்:—அவையெல்லாம் இருக்கட்டும், உங்களுடைய பூர்வசரிதம் என்ன? இங்கு வந்த காரணம் என்ன? உங்கள்பேரில் இத்திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டதற்குக் காரணம் என்ன? அதைக் சொல்லுங்கள்.

சுப்பு:—ஐயா! தங்கள் முகவிலாஸத்தைப் பார்த்தால் தாங்கள் தர்மம் தவராத பிரவுவென விளங்குகிறது, ஆகையால் எங்கள் சமாசாரத்தை நான் சொல்லிவருகிறேன்.

அதற்குமேல் தங்களுடைய உசிதம்போலச் செய்யுங்கள்; எங்களுடைய ஊர் மதுரை. மதுரையில் புருஷோத்தம ஐயர் என்று ஒரு பிரபு இருக்கிறார். அவருடைய முதலாவது பத்னியின் பெண் இவள்; இவளுடைய தாய், தனது பிறந்தகமாகிய திருச்சி வல்லப சாஸ்திரியார் வீட்டில் இவளை பெற்ற ஏழாம் நாள் சிவலோகத்தையடைந்தாள்; இவளை, கணவனை யிழந்து தனது தமயன் வீட்டுடன் இருக்கும், இவளுடைய சிறியதாயார் ஜானகியம்மாள் வளர்த்தாள்; இவள் எக்காலத்திலும் எவ்வித முகாந்தரத்திலும் மதுரையிலிருக்கும் தகப்பன் வீட்டைப் பார்த்தவளல்ல. இவளுடைய தமையன் பெயர் சுந்தரேசன்; இவர்களிருவரையும் இவர்களுடைய மாமா வல்லப சாஸ்திரிகள் படிக்கவைத்துக் காப்பாற்றி வந்தார்; இவளுக்கு இப்போது ஸம்ஸ்கிருதத்தில் நல்ல ஞானமுண்டு; இவளைக் குளித்தலை கோபாலஸாமி ஐயர் குமாரன் தர்மராஜனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாய் வல்லப சாஸ்திரிகள் பேசி முடித்து, இவள் பிதாவிற்கும் சொல்லியனுப்பி அவருடைய அனுமதியின்பேரில் திருச்சியில் கலியாணம் நடத்த ஏற்பாடாயிற்று.

புருஷோத்தம ஐயருடைய இளைய ஸம்சாரத்தின்பெயர் மீனாக்ஷி; அவ்வீட்டில் எனது அத்தைபிள்ளை சுந்தரம் என்பவன் காரியஸ்தன்; அவன் ரூபவான்; தாரமிழந்தவன், மீனாக்ஷியும், ரூபத்தில் ஈடற்றவள், இருவருக்கும் நேசம உண்டாயிற்று. பிறகு அந்த சுந்தரத்தின் தூண்டுதலினால் மீனாக்ஷி தனது பர்த்தாவை எப்படியோ திருப்திசெய்வித்து அழகு, குணம், படிப்பு, இவைகள் ஒன்றுமில்லாத சுந்தரத்தின் பிள்ளை கரிக்கிட்டுவுக்கு இந்தப் பெண்ணைக் கொடுக்கிறதென்றும்; தனது தமையன் இராமாபுரம், பட்டாபிராம ஐயர் குமாரத்தியான காளிகாதேவிபோன்ற கமலத்தை

இந்தப் பெண்ணினுடைய தமயன் சுந்தரனென்று சரியான பேரமைந்த சுந்தரத்திற்குக் கல்யாணம் செய்துகொடுக்கிறதென்றும் தீர்மானித்து அதற்குப் புருஷோத்தம ஐயரைச் சம்மதிக்கச்செய்து, இரண்டு முகூர்த்தங்களையும் மதுரையில் தன் கிரஹத்தில் நடத்துவதாய் ஏற்பாடு செய்தாள். அக்கலியாணத்திற்காகவே இப்பெண்ணும் இவள் தமையன் சுந்தரமும் மதுரைக்குப் போகும்படி நேரிட்டது.

இளையாள் வார்த்தையைக்கேட்டு மூத்தாள் பெண்ணையும் பிள்ளையையும் கெடுக்க உத்தேசித்த புருஷோத்தமஐயர் ஏற்பாட்டிற்கு, இவர்களிருவரும் இணங்காமல், கலியாணத்திற்கு முதல்நாள் இரவு 8-மணிக்கு ரெயிலேறித்திருச்சிக்குப் போய்விடுவதாகப் புறப்பட்டார்கள்; இந்தப் பெண்ணுக்கும் எனக்கும் கொஞ்சம் பந்துத்துவம் உண்டு. அதாவது இவளை வளர்த்த சிறியதாய் ஜானகியம்மாள் எனக்கு அம்மான் ஸமஸாரம்; எனக்கும் என் அத்தான் சுந்தரத்திற்கும், மேற்கண்ட மீனாக்ஷி சம்மந்தத்தை நானறிந்து கண்டித்த விஷயமாய் மனஸ்தாபம் ஏற்பட்டது. அதனால் நானும் மதுரையை விட்டு திருச்சிக்குப் போகவேண்டியிருந்தது. ஆகையால் நானிவளுக்குத் துணையாகவந்தேன். இவள் தமயனுக்குக் காமேசுவரனென்ற ஒரு சிநேகிதனுண்டு. அவர்களிருவரும் நாங்களிருவருமாய் ரெயிலேற ஸ்டேஷனுக்கு வந்தோம். தெரியாமல் நாங்கள் தூத்துக்குடிபோகும் வண்டியில் ஏறிவிட்டோம்; அவர்கள் திருச்சிக்குப் போகும்வண்டியில் ஏறியிருக்கலாமென்று நினைக்கிறோம். திருச்சி ஜங்க்ஷன் கட்டடத்தை, வண்டி நிற்குமிடமெல்லாம் கவனித்து வந்த நாங்கள், கடைசியில் தூத்துக்குடிவந்து எங்கள் தவறுதலைத் தெரிந்துகொண்டு இன்று இவ்விடம் யாராவது ஒருவர் வீட்டில் சமையல்செய்து சாப்பிட்டுவிட்டு நாளை வண்டி

யில் திருச்சிக்குப் போவோமென நினைத்து ஒரு வீட்டைத் தேடிப்போனோம்; அது வக்கீல் பசுபதி ஐயர் வீடு. மத்தியானம் சாப்பிட்டு ராத்திரியும் ஆகாரஞ்செய்து சிரமத்தினால் படுத்துத் தூங்கிவிட்டோம். இராத்திரி திருடர்கள் வந்து சொத்துக்களைக் கொண்டுபோன சமாசாரம் எங்களுக்குப் பொழுதுவிடிந்த பிறகுதான் தெரியும்.

திருட்டுப்போன சமாசாரம் போலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே இந்த ஸப்இன்ஸ்பெக்டரும், வேறு சில போலீஸ்காரர்களும் அவ்விடம் வந்து விசாரித்து, நாங்கள் இவ்வூருக்குப் புதிதாய் வந்திருக்கிறோமெனத் தெரிந்துகொண்டு, எங்கள் பேரில் அத்திருட்டுக் குற்றத்தைச் சாற்றி, எங்களை ஜெயிலுக்கு இழுத்தார். இதைக் கண்ட அவ்வீட்டுக்காரரான பசுபதிஐயர் இவரைப் பார்த்து 'ஐயா! இவர்கள் பேரில் எள்ளளவும் சந்தேகமில்லை; ஆகையால் இவர்களை விட்டுவிடுங்கள்' என்று எவ்வளவு சொல்லியும் கேளாமல், இவ்விடத்தில் கொண்டுவந்து அடைத்திருக்கிறார். ஆனால் ஆகாரம் முதலானவைகளைப் பிராமணனைக்கொண்டு போடும்படி செய்திருக்கிறார். ஏதோ எங்கள் காலவித்யாஸத்தினால், அனாதைகளான எங்களை வசப்படுத்திக்கொள்ளலாமென்று துர் எண்ணத்தால் அகார்யம் செய்ய எத்தனித்தார். அச்சமயம் தெய்வம்போல் தாங்களே வந்துவிட்டீர்கள். இதுதான் எங்கள் விருத்தாந்தம். இனிமேல் தாங்கள் செய்யும் ஆக்கினைக்கு உட்படத் தயாராயிருக்கிறோம்'—என்றாள்.

பெரிய இன்ஸ்:—ஓய்! தியாகராஜ ஐயரே! இவர்கள் கேஸுக்கு ஏதாவது சாக்ஷி அகப்பட்டதா?

தியாக:—இதுவரையிலில்லை.

பெரிய இன்ஸ்:—அம்மா! நீங்கள் பயப்பட வேண்டிய இல்லை. உங்கள் பேரில் குற்றம் ஏற்படாது. இப்போதே வக்கீல் பசுபதி ஐயருக்குச் சம்மன் அனுப்பி 'உங்கள் மேல் சந்தேகமில்லை' என்று அவரைக்கொண்டு சொல்லும்படி ஏற்பாடு செய்கிறேன். உங்களைக் கேட்டால் எங்களுக்கு அவர் தான் சாக்ஷியென்று சொல்லுங்கள். ஸப்மாஜிஸ்டிரேட் மிகவும் நல்லவர், தர்மசிந்தனை யுள்ளவர், உங்களை விடுதலை செய்துவிடுவார்—என்று சொல்லிவிட்டு, தியாகராஜ ஐயரைப் பார்த்து 'நீர் இவ்வித துர்க்குணத்தை இன்றுடன் விட்டு விடுவீரானால் கூடிய சீக்கிரத்தில் உயர்ந்த பதவிக்கு வரலாம்; போம்; இன்று உம்மை மன்னித்து விட்டேன். இவர்களுக்கு வழக்கம் போல் ஆகாராதிகளைச் செய்வித்து 3 மணிக்குக் கோர்ட்டுக்கு அழைத்து வாரும்' என்று கட்டளையிட்டு விட்டுப் போய்விட்டார்.

பெரிய இன்ஸ்பெக்டர் சென்றவுடனே தியாகராஜ ஐயர் சுப்புவைப் பார்த்து 'அம்மா! புத்திப் பிசகினால் உங்களுக்கு நான் குற்றஞ் செய்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்குச் சகோதரி; இந்தப் பெண் என்னுடைய பெண்; வழக்கம்போல் உங்களுக்கு ஆகாரம் வரும், சாப்பிட்டு இருங்கள், நான் 3 மணிக்கு வந்து உங்களைக் கோர்ட்டுக்கு அழைத்துப் போகிறேன்' என்றார்.

தர்மா:—கோர்ட்டில் பலபேர் முன்னிலையில் நாங்கள் நிற்க அவமானமாக இருக்குமே, அப்படி அங்கு போகாமல் எங்களைத் தப்பிவைக்க வேறு வழியில்லையோ?

தியாக:—குழந்தாய்! குற்றவாளிப் பட்டியில் சேர்த்த பிறகு உங்களைக் கோர்ட்டில் விசாரிக்காமல் அனுப்ப முடி

யாது; ஆனால் நானொரு ஸௌகரியம் செய்விக்கிறேன். (அதாவது) கோர்ட்டில் ஒருவருமில்லாத சமயத்தில் உங்களை விசாரித்து சீக்கிரம் வெளிப்படுத்துகிறேன்.

இவ்வாறு சொல்லிவிட்டு இவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார் போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டர் தியாகராஜய்யர்:

மணி மூன்றடித்தது. ஸப்மாஜிஸ்ட்ரேட் டிபன்செய்து விட்டு மறுபடி கச்சேரிக்குவந்தார். கச்சேரி வாசலில் ஏராளமான ஜனங்கள் தங்கள் தங்கள் கேஸ் விஷயமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; "புதிதாய் வந்த ஸப்மாஜிஸ்டிரேட் தர்மராஜ ஐயர், தர்மமே மூர்த்திகரித்து வந்திருக்கிறதெனச் சொல்லத்தக்க குணமுடையவர். கேஸில் அபஜயமடைந்தவர்கள் கூட வாழ்த்துகிறார்களென்றால் இவருடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்லலாப. இவருக்கு முந்தினவர் வியாதியால் மூன்றுமாசகாலம் விசாரிக்கமுடியாமல் போட்டு வைத்திருந்த கேஸ்களைப்பத்துநாளில் ஒழித்துவிட்டார். இன்னும் 2-நாள் போனால் இவருக்குக் கச்சேரியில் வேலையே இருக்காதெனத் தோன்றுகிறது; இவருடைய புத்திக்கும் வேலைத் திறமைக்கும் ஏன் இவரை ஒரு ஜில்லா கலெக்டராக நியமித்திருக்கக்கூடாது" என்று ஜனங்கள்பேசிக்கொண்டிருந்தார்கள். இச்சமயம் தியாகராஜ ஐயர், சுப்பு தர்மாம்பாள் இவர்கள் சகிதம் ஒருவண்டியில் வந்திறங்கி, தனியாய் சப்மாஜிஸ்டிரேட்டாருடன் ஏதோ இங்கிலீஷில் ரகஸியமாய்ப் பேசிவிட்டு இவ்விரு ஸ்திரீகளையும் ஒரு ரூமில் இருக்கச்சொல்லி, அதற்கு ஒரு சேவகனைக் காவல் வைத்தார்.

மணி $4\frac{1}{2}$ ஆயிற்று சப்மாஜிஸ்ட்டிரேட்டு கச்சேரியில் அன்றைதினம் குறிக்கப்பட்ட கேஸ்களெல்லாம் விசாரித்து முடிந்தன. கூட்டங்களெல்லாம் கலைந்தன. கச்சேரிவாசலில்

வக்கீல் பசுபதி ஐயரும், பெரிய இனிஸ்பெக்டர் வெங்கட ராமய்யரும் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிறார்கள்; தியாக ராஜய்யர் உள்ளே நின்றுகொண்டிருக்கிறார். நமது சுப்பு தர்மாம்பாள் கேஸ் விசாரணை துடங்கிற்று. இவ்விரு குற்றவாளிகளையும் விசாரணைக்கூண்டில் நிருத்தினார்கள். மாஜிஸ்டிரேட்டார் இரண்டாவது குற்றவாளியாகிய தர்மாம்பாளைப் பார்த்தார். சற்று ஸ்தம்பம்போல் உட்கார்ந்திருந்தார், சற்று தலைகுனிந்தார், கொஞ்சம் கண்ணீருதிர்த்தார், 'நாமன்று மதுரைக்குக் குறிப்பிட்ட காலத்திற் போயிருந்தால் இவளை இப்படிப்பட்ட தசையில் நாம் பார்க்க நேரிடாது' என்று நினைத்தார்; கண்களைத் துடைத்துக்கொண்டார். கடைசியாக 'இது கச்சேரியானதால் இங்கு நடக்கவேண்டிய காரியங்களை நடத்திவிட வேண்டியதுதான்;பிறகு பகவத்கிருபை போல் நடக்கட்டும்.' என்று துணிந்தார். தர்மாம்பாளும் மாஜிஸ்ட்டிரேட்டாரைப் பார்த்தாள்; கொஞ்சம் ஸந்தேகிததாள்; மறுபடி பார்த்தாள்;மனங்கலங்கினாள், தலைகுனிந்தாள், கண்ணீர்சொரிந்தாள். சுப்பு இந்த மாஜிஸ்ட்டிரேட்டை முன் பார்த்தவளல்ல;இவளிவ்விருவரின் முகங்களையும் கவனித்து சற்றி யோசித்து ஒருவாறு நிச்சயித்தாள். பெரிய இனிஸ்பெக்டர், கோர்ட்டாருடைய தற்கால தசையை நிதானமாய் கவனித்தார்; தானும் கொஞ்சம் வருத்தத்தைக் காட்டிக் கண்ணைத்துடைத்துக்கொண்டு, கோர்ட்டாரைப் பார்த்ததும் கோர்ட்டார் 'கேஸ் நடக்கலாம், என்றார். உடனே பெரிய இனிஸ்பெக்டர், சுப்புவைப் பெயர் ஊர் முதலியவைகளை தர்மாம்பாளுக்கும் சேர்த்துக்கேட்டு, கோர்ட்டு குமஸ்தாவைக் கொண்டு பதியவைத்துவிட்டு 'அம்மா இந்த ஊர் வக்கீல் பசுபதிஐயர் வீட்டில் நடந்த களவில் நீங்களிருவரும் சம்மந்தப்பட்டிருப்பதாய் அனுமானிக்கப்படுகிறது. நீங்கள் குற்

றத்தை யொப்புக்கொள்கிறீர்களா? மறுக்கிறீர்களா? மறுப்ப தானல் காரணம் கூறவேண்டும்' என்று கேட்டார். சுப்பு நாங்கள் குற்றத்தைச் செய்தவர்களல்ல, அதை மறுக்கிறோம், என்று சொல்லி சப்ஜெயிலில் சொன்ன தங்கள், விர்த்தாந் தங்களைச் சொல்லி காரணமும் காட்டி முடித்தாள், தர்மாம் பாளோ கண்ணீர் சொரிந்துகொண்டே நின்றாள்.

பேரியஇன்ஸ்:—(தர்மாம்பாளைப் பார்த்து) அம்மா! உனக்கு இதைத்தவிர வேறு யாதாவது சொல்லவேண்டிய துண்டா?

தர்மா:—இந்த அம்மாள் சொன்னதே எனக்கும் சரி, என்று மெதுவாகவும் தழதழத்த குரலாகவும் சொன்னாள்.

இனிஸ்:—அப்படியானல் நீங்கள் குற்றவாளிகளல்ல வென்பதற்கு ஸாக்ஷியாராவதுண்டா?

சுப்பு:—இவ்விஷயத்தில் எங்களுக்குச் சாக்ஷி வக்கில் பசுபதி ஐயர் ஒருவரேதான்.

உடனே பசுபதிய்யர் கூப்பிட்டு விசாரிக்கப்பட்டார். அவர் "என் வீட்டில் களவுபோனது வாஸ்தவம், ஆனல் அக்களவில் எள்ளளவேனும் இவ்விருவரும் சம்பந்தப்பட் டிருப்பார்களென நான் நினைக்கவில்லை; ஆகையால் இவர்கள் குற்றவாளிகளல்லவென்று டிக்ளேர்செய்ய நான் துணிகின் றேன்" என்று வாக்கு மூலம் எழுதிவைத்தார்.

உடனே சப்மாஜிஸ்ட்ரேட்டார் "உங்களிருவர்பேரிலும் குற்றமில்லையெனத் தெரியவருவதால் உங்களை விடுதலைசெய் துவிட்டோம்" என்று தீர்ப்புச்சொன்னார். இதைக் கேட்ட இரண்டு ஸ்திரீகளும் வாசலில் வந்து, இரவு தங்கவேண்டிய இடம் தெரியாமல் விழித்தார்கள். சுப்பு "அந்த வக்கீல் பசு பதிய்யர் வீட்டிற்கே போவோம்' என்றாள். தர்மாம்பாள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இப்படி யிவர்கள் கலங்கி நிற்கும்போது, இனிஸ்பெக்டர் வெங்கடராமய்யர் மாஜிஸ்ட்ரேட்டாருடன் கொஞ்சம் இங்கிலீஷில் பேசிவிட்டு, உடனே வெளியேவந்து "அம்மா நீங்கள் கவலைப்படவேண்டாம்; என் பங்களாவில் ஒருவருமில்லை. இராத்திரி வேண்டிய சேவகர்களைக் காவலிருக்கச் சொல்லுகிறேன்; சாப்பாட்டுக்கு வேண்டிய சகல சாமான்களும் அங்கிருக்கின்றன, இரவுபொழுது அங்கிருந்துவிடுங்கள், பொழுதுவிடிந்ததும் உங்களைத்தக்க துணையுடன் நீங்கள் போகவேண்டிய ஊருக்கனுப்புகிறேன்" என்று சொல்லி, ஒரு குதிரைவண்டியில் இவ்விருவரையும் ஏற்றி ஒரு சேவகனையும் கூட அனுப்பி, நான் அரைமணிக்குள் அவ்விடம்வருகிறேன்' என்றும் சொல்லி யனுப்பினார்.

இவர்கள் அந்த பங்களாவுக்குப் போனதும், அங்கிருந்த வேலைக்காரனுடன் இவர்களுடன் கூடவந்த சேவகன் ஏதோ சொன்னான். உடனே அவர்கள் இவர்களுக்குவேண்டிய உபசாரங்களைச் செய்தார்கள். நிற்க;

ஸப்மாஜிஸ்டிரேட்டார் இந்தக் கடைசி கேஸ் முடிந்தவுடன், பைத்தியம் பிடித்தவர்போல் முன்பின் தெரியாமல் சற்றுநேரம் நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தார்; மணி $5\frac{1}{2}$ ஆயிற்று; ஏதோ சிந்தித்து எப்படியோ ஒருவிதம் முடிவு செய்துகொண்டு நாற்காலியிலிருந்து எழுந்திருந்தார். அத்தருணத்தில் ஒரு போலீஸ் சேவகன் ஓடிவந்து, சலாம் செய்து, ஒரு சிறிய நியூஸன்ஸ் கேஸ் விசாரிக்கவேண்டுமென்றான்; அதற்கு மாஜிஸ்டிரேட்டார், மணி $5\frac{1}{2}$ ஆய்விட்டது இனி சாத்தியப்படாது, என்றார். உடனே சேவகன் நயந்து வணங்கி, குற்றம் செய்தவர்கள், தாங்கள் வேறு ஜில்லாவாசிகளென்றும் இராத்திரியே அவர்கள் அவசரமாய் ஊருக்குப்

போகவேண்டுமென்றும் சொல்வதால் தயவுசெய்து இதை விசாரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான், மாஜிஸ்ட்ரேட்டார் தாக்ஷிண்யமும் தயவுமுள்ளவராகையால் இதற்கிணங்க, சேவகன் சார்ஜ் செய்யப்பட்ட இருவரையும் கொண்டுவந்து நிறுத்தினான்.

அவ்விருவரையும் மாஜிஸ்டிரேட் பார்த்தார். உடனே முன்போலவே ஸ்தப்தராகிக் கண்ணீருதிர்த்தார். இன்ஸ்பெக்டர் வெங்கடராமய்யரும் இவர்களில் ஒருவரைக் கண்கொட்டாமல் பார்த்தார். வந்த இருவரும், 'இவ்வின்ஸ்பெக்டரையும், மாஜிஸ்டிரேட்டையும் நாம் அநேகந்தடவைகளில் பார்த்திருப்பது போல் தோன்றுகிறதே' என்று கவனத்துடன் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

உடனே விசாரணை நடந்தது. ஒவ்வொருவருக்கும் மாஜிஸ்டிரேட்டால் அரைரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அவ்விருவரும் உடனே அத்தொகையைச் செலுத்திவிட்டு, கோர்ட்டுக்கு வெளியே வந்தார்கள். இதற்குள் இன்ஸ்பெக்டர் வெங்கடராமஐயரும் முன்போலவே மாஜிஸ்டிரேட்டுடன் சற்று நேரம் ஏதோ பேசிவிட்டு, கோர்ட்டுக்கு வெளியே வந்தார்.

அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த இருவரில் ஒருவரைப் பார்த்து இன்ஸ்பெக்டர், 'நான் உங்களை வெகுவாய்ப் பார்த்திருப்பேன் போல் தோன்றுகிறது. உங்களுக்குப் பிரியமானால் இன்றிரவு என்னுடைய ஜாகையில் இருவரும் தங்கியிருந்துவிட்டு, நாளைகாலையில் நீங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போகலாம்' என்றார்.

அதற்கிருவரும் சம்மதித்து, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, 'ஐயா! எங்களுக்கொரு சந்தேகமிருக்கிறது. அதைத்

தாங்கள் தயவு செய்து நிவர்த்தி செய்தால் தங்களிஷ்டப் படி நடக்கக் காத்திருக்கிறோம்' என்றார்கள்.

வெங்கடராம ஐயர்:—'எனக்கும் உங்களுடன் பேச வேண்டிய விஷயங்கள் அதிகமா யிருக்கின்றன. ஆகையால் எல்லாச் சந்தேகங்களையும் எனது ஜாகைக்குப் போய்த் தீர்த்துக்கொள்வோம்; நீங்களிருவரும் இப்போதே செல் லுங்கள்; நான் இன்னும் அரைமணி நேரத்தில் உங்க ளிருவரையும் சந்திக்கிறேன்;'

இருவரும்:—சரி, அவ்வாறே செய்கிறோம்.

வெங்கட்டராம ஐய்யர்:—யாரங்கே ?

உடனே ஒரு சேவகன் ஓடிவந்து வணங்கினான். 'அடே ஒரு வண்டி கொண்டுவா' என்றார் போலீஸ் இன்ஸ் பெக்டர். அவனும் அவ்வாறே ஒரு வண்டி கொண்டுவர இவர் அதில் இவர்களை ஏற்றி, சேவகனைப் பார்த்து, 'இவர் களை நமது பங்களாவிற்குக்கொண்டுபோய் விட்டுவிட்டு வா' என்று அனுப்பிவிட்டார்.

பிறகு மாஜிஸ்டிரேட்டு வெளியே வர, இன்ஸ்பெக் டர் அவரைப் பார்த்து, 'ஸார்! அவ்விருவரையும் நமது பங்களாவிற்கு அனுப்பிவிட்டேன். நாமும் போவோமே' என்றார்.

மாஜிஸ்டிரேட்:-'நாம் இப்பொழுதே போகவேண்டாம்; பீச்சுக்குப் போய் சற்று நேரம் உலாவிவிட்டுப் பிறகு செல் வோம்'

போலீஸ் இனிஸ்பெக்டர்:—சரி அப்படியே யாகட்டும்.

உடனே இருவரும் ஒரு வண்டி கொண்டுவரச் சொல்லி அதில் ஏறிக்கொண்டு கடற்கரை சென்றார்கள்.

## பதினேழாம் ஆச்வாஸம்.

### இஷ்டஜன ஸமாகமம்:

தூத்துக்குடி ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் நாற்புறங்களிலும் புஷ்பச்செடிகள் நிறைந்த தோட்டத்தின் மத்தியில் தெற்குமுகமாய் ஓரழகிய பங்களா நிர்மாணிக்கப்பட்டிருந்தது அந்திவேளையில் மலரும், மலர்களின் வாசனையானது அக்கட்டடம் முழுமையும் வியாபித்திருந்தது. அக்கட்டடத்தின் முதலாவது அறையில் நமது தர்மாம்பாளும் சுப்புவும், ஓரழகிய பெஞ்சியிலுட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

தர்மா:—சுப்பு! சப் இனிஸ்பெக்டரைப்போல் பெரிய இனிஸ்பெகடரும் சபலபுத்தியுள்ளவராகவே இருப்பாரென்று நீ நினைக்க இடமில்லை. அவர் முகம் நம்மை பிரேமையுடனும் அநுதாபத்துடனும் அடிக்கடி அவலோகனம் செய்ததை நீ கவனிக்கவில்லைபோலிருக்கிறது. அப்படிப்பட்ட முகவிலாஸமுள்ளவர்கள் ஒருகாலும் அகாரியத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்; மேலும் நமக்கின்று நல்லகாலம் வந்திருக்கின்றதுபோல் தோற்றமுண்டாகிறது. ஆகையால் இனி நமக்கு விபத்தில்லையென நினைக்கிறேன்.

சுப்பு:—தர்மி! நீ சொல்வதெல்லாம் உசிதமாகவே இருக்கிறது. ஆனாலும் நாமிப்போது செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதாவது, அந்தப் பெரிய இனிஸ்பெக்டரை நானும் பார்த்திருப்பேன்போல் தோன்றுகிறது. அவரும் நம்மைக்கண்டு கண்ணீர்விட்டதைக்கொண்டு அவர் நமக்குச் சமீப பாத்தியமுள்ளவராக யிருக்கவேண்டுமென்று நினைக்கி

றேன். ஆகையால் அவரை நாமின்னாரென்றறியவேண்டியது அவசியம். மேலும், கச்சேரி செய்துகொண்டிருந்த சப் மாஜிஸ்டிரேட்டும் நம்மைக்கண்டு மிகவும் வருத்தமடைந்தார்; நீயும் அவரைக்கண்டு துக்கத்தையும் வெட்கத்தையும் பாராட்டினாய்; ஆகையால் நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் வெகுநாளாய் சிநேகமுடையவர்கள்போல் நான் நினைத்தேன்; யாரவர்? உனக்கு அவர் எவ்விதமான சிநேகமுள்ளவர்; இதை நீ சொல்லியே தீரவேண்டும்.

தர்மா:—சுப்பு! இதிலென்ன உனக்கவ்வளவு விர்ப்பந்தம். அநாதையாய் ஒரு சிறு பெண் இம்மாயிரி ஜெயிலிலிருந்து இப்போது கோர்ட்டில் நிற்கிறாளேயென்று தயாளகுண சிரேஷ்டராகிய அந்த மகா புருஷன் என்னைப்பார்த்து அனுதாபப்பட்டிருக்கலாம். பெரிய உத்தியோகத்தி ள்ள சம்மந்தமில்லாத ஒருவர்கூட நம்மிடம் இவ்வளவு அனுதாபம் காட்டுகிறாரே என்று நானும் அனுதாபப்பட்டிருக்லாம். இதிலென்ன, ஒரு விசேஷமுமில்லையே.

சுப்பு:—அச்சமயம் உனக்கு ஒரு அன்யாதிருசமான லஜ்ஜா விசேஷம் உண்டாயிற்றே அதேன்?

தர்மா:—இதென்ன நீ யிப்படி கேட்கிறாய்? நீயுமொரு பெண்பாலல்லவோ? ஸ்திரீகளுக்கு லஜ்ஜையே ஆபரணமென்றல்லவோ சொல்லப்படுகிறது. ஒரு பெரிய உத்யோகஸ்தருக்கெதிரில்-அதிலும் கச்சேரியில்—ஒரு சிறுபெண்ணாகிய நான் வெட்கப்படுவது உனக்கு ஒரு ஆச்சரியமாய்த் தோன்றக் காரணமில்லை.

சுப்பு:—அம்மா! நீ நன்றாகப்படித்தவள், பேச்சில் கெட்டிக்காரி, நீ எதையும் மாற்றிப்பேசும் சமத்துள்ளவள்,

உன்னோடு பேச என்னால் முடியாது, நீ என்ன சொன்னு லும் என் மனது தெளியவில்லை. நீ சொல்லுகிற மகா புரு ஷனை நான் பார்த்ததில்லை. அச்சமயம் உங்களிருவரின் கண் களும் பரஸ்பரம் போக்கு வரவுசெய்து கொண்டதில் என க்கு ஒருவிதமான தோற்றம் உண்டாயிருக்கிறது. அது நீ சொல்லும் வார்த்தைகளால் நீங்கவில்லை. நீ கனுவன்றைக்குக் காவேரியில் சென்று காலையலம்பப் போகையில் பார்த்த புரு ஷமணி இவர்தானென நினைக்கிறேன்.

தர்மா:—(சற்று புன் முறுவலுடன்) இதென்ன ? புதி தாய் புதிர்போடுகிறாய், உனக்கிதெல்லாம் சொன்னது யார் ?

சுப்பு:—எனது அம்மாமி சொன்னாள்.

தர்மா:—அம்மாவா சொன்னாள் ! அவள் வாய் ஓட்டை வாயாச்சுதே, (என்று சொல்லிப் புன்சிரிப்புடன் தலைகுனிந் தாள்)

இதைக்கண்ட சுப்பு அவளை இருகத்தழுவி "குழந் தாய் என்னிடம்கூட நீ இதைச் சொல்ல வெட்கப்படுவா யென்று நான் நினைக்கவில்லை. உனக்கு உடம்புடன்கூடப் பிறந்ததான இந்த லஜ்ஜையே, உன்னை உத்தம ஸ்திரீயாக்கி உன் மனோபீஷ்டங்களை நிறைவேற்றுமென நினைக்கிறேன். இப்படிப்பட்ட பெண்ணைப்பெற்ற தகப்பன் புண்யசாலி யென்றாலும், ஏதோ முன்செய்த பாவத்தால் அவர் ஒரு அயோக்ய ஸ்திரீயினிடமகப்பட்டுக்கொண்டு உனதருமை யை அறியவில்லை. அதுபோனாலும் உனக்குக் கூடப்பிறந்த தமையனாகிலும் நீ நினைத்தபடி உசிதமான வரனுக்கு உன்னை யெப்படியாவது கொடுத்தே தீரவேண்டுமென்று தீவ்ரமா யிருப்பது என்மனதுக்கு ஆஹ்லாதத்தை கொடுக்கின்றது" என்று சொன்னாள்.

இவர்களிப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது; அதிலிருந்து இருவர் கீழிறங்கினார்கள். இவ்விருஸ்திரீகளும் அவர்களை ஜன்னல் வழியாய் கவனித்தார்கள். தர்மாம்பாளுக்கு உடம்பு பதறிற்று. உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு, கால்கள் தானாக எழுந்திருந்தது. கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகவாரம்பித்தது. உடனே வாசலுக்குவரப் புறப்பட்டாள். எதிரில் வந்த வாலிபனைக் கண்டு கட்டிக்கொண்டு, அண்ணாவென்று கதறினாள். அவனும் இவளைக்கட்டிக்கொண்டு கதறினான். உடனே கூடவிருந்த மற்றொருவர், இவர்களைப் பிரித்துவிட்டு, "என்னடா சுந்தரம், புருஷனாகப் பிறந்த நீ கூட இப்படி அழுகிறாய்? அவள்தான் அபலை, எந்தெந்தயிடத்தில் எவ்வெவ் விதகஷ்டங்களை யனுபவித்தாளோ அழுகிறாள்; துக்கத்தை யடக்கிக்கொள்" என்று சொல்லி; தர்மாம்பாளைப் பார்த்து, "வத்ஸே! தர்மாம்பா! நீகூட இப்படிக் கேவலம் அவிவேகினியாய் கதறுகிறாய், கண்ணைத்துடைத்துக்கொள்" என்று சொன்னார். பிறகு எல்லாருமுன் இருந்த அறைக்குச் சென்றார்கள்.

தர்மாம்பாள்:—அண்ணா, எங்களை யிப்படி அநாதைகளாய், நினைக்கக்கூடாத கஷ்டங்களுக்கு ஆளாக்கிவிட்டு நீங்களிருவரும் எங்கேயோ போய்விட்டீர்களே, ஐயோ! நாங்கள்பட்ட பாட்டிற்கும் அடைந்த அவமானத்திற்கும் அளவேயில்லை. அதவா, நீங்களதான் என்னசெய்ய முடியும், பிராரப்தபலனை அனுபவிக்காமல் தள்ளினால் விடுமா? அஃதிருக்கட்டும்; நீங்களிருவரும் அன்றைதினம் இராத்திரி எந்த வண்டியிலேறினீர்கள்? எங்கே போனீர்கள்? இங்கு இன்றைக்கெப்படி வந்தீர்கள்? உங்கள் சமாச்சாரத்தைச் சொல்லுங்கள்? பிறகு எங்கள் சங்கதியைச் சொல்கிறேன்.

சுந்தரம்:—வத்ஸே, தர்மீ! எங்கள் கதை அவ்வளவு அவசியமாய் கேட்கத்தக்கதில்லை; அநாதைகளாயும் அபலைகளாயும் உள்ள நீங்கள்பட்ட கஷ்டங்களைத் தெரிந்து கொள்ள நிரம்ப இச்சையுள்ளவனாயிருக்கிறேன்.

இப்படியிவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அவ்வறையிலிருந்த கடியாரம் 'டங், டங்' என்று ஏழடித்தது. அத்தருணத்தில் வாசலில், வண்டியிலிருந்து இருவர் இறங்கினார்கள்; அவர்களைப் பார்த்ததும், இவ்வறையிலுள்ள நால்வரும் பிரமித்தார்கள். அவ்விருவரில் ஒருவருக்குச் சுமார் 40 - வயதிருக்கலாம். தடித்த சரீரமும் மலர்ந்த முகமும் களங்கமற்ற பார்வையுமுடையவர் அவர். மற்றொருவருக்கு வயது 20, அல்லது 22 இருக்கலாம்; அவருடைய மெலிந்த சரீரம் மெருகிட்ட தங்கத்தைத்தோர்க்கச்செய்தது. உருண்ட முகமும் கொஞ்சம் ஸங்கோசத்தால் அடங்கிய பார்வையும் கனவிலும் காணமுடியாத ஒர்லித முகதேஜஸ்ஸும் அவரை மகா உத்தம புருஷனெனச்சொல்லிற்று. இவ்வறையில் உள்ள நால்வரும் பிரமம் தெளிந்து எழுந்திருப்பதற்கு முன்னமே வாசலிலிருந்து அவ்விருவரும் அவ்வறையிற் புகுந்தனர்.

அவர்களைக்கண்டவுடன், நமது தர்மாம்பாள் பரபரப்புடன் எழுந்திருந்து, தனது கடாக்ஷங்களாகிற நீலோத்பல புஷ்பங்களால் அவ்விருவரில் இளைஞரின் சரீரத்தை யலங்கரித்துக்கொண்டு அவ்வறையின் ஓர்புறத்தில் தலைகுனிந்து நின்றாள். அவளுக்குச் சகாயமாக சுப்புவுமபோய் நின்றாள். உள்ளே வந்த இருவரில் இளைஞராகிய உத்தமன், அங்கு நிற்கின்ற எல்லாரையும் ஒருதரம கடாக்ஷித்து "ஆ! என் பிரியஸக, காமேச" என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக்கொண்டு மேல்சொல்ல முடியாமல் நின்றான்.

காமேசுவரனும் சற்று நிதானித்து, "என் அன்புள்ள தர்ம! உன்னை நான் பார்ப்பேனோவென்று ஏங்கிப்போன என் கண்களுக்கு நீ இன்றைக்கு அமிருதாஞ்சன மளித்தாய்; இந்த தினமே ஸுதினம், இப்பொழுதுதான் இந்த ஜன்மத்தை ஸபலமென நினைக்கிறேன். வா, எல்லாருமுட்காருவோம்; இவ்விஷ்டஜன ஸமாகம சுகத்தை ஸம்பூர்ணமாய் அனுபவிப்போம்" என்று சொல்லவும், தர்மன் சுந்தரத்தைப் பார்த்து, "மித்ர! நான் செய்த குற்றத்தைப்பற்றி மன்னிக்க வேண்டும். தைவஸங்கற்பம் அநேகவிதமாய் மாறி என்னை வெகுவாகக் கஷ்டப்படுத்திவிட்டதனால் அப்படி நான் செய்யும்படி நேர்ந்தது" என்று சொன்னான், சுந்தரம் "வயஸ்ய! உன் குடும்பத்திற்குண்டான ஒருவித கிலேசத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டதும் என் மனம் பட்டபாட்டிற்களவேயில்லை. எல்லாம ஈசன் செயல; நாமென்ன செய்யலாம்! என் அருமைத் தங்கையாகிய தர்மாம்பாளை உன்னைத்தவிர மற்றொருவன் தொடாமலிருக்க நாங்கள்செய்த ஏற்பாட்டை ஒருவாறாய் பகவான் நிறைவேற்றினரென்றாலும் அதனால் ஒவ்வொருவருக்கும் பிந்தி உண்டாகிய கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. வா எல்லாரும் உட்கார்ந்து அவரவர்கள் சரித்திரத்தைச் சொல்லிக்கொள்வோம்" என உடனே எல்லாரும் ஜமக்காளத்திலுட்கார்ந்தார்கள்.

உடனே காமேசுவரனும், சுந்தரமும், தர்மனுடன் கூட வந்த பெரியவரைப் பார்த்து, அஞ்சலிபந்தத்துடன் "ஐயா தாங்கள் இன்று எங்களுக்குச் செய்த உபகாரத்தால் நாங்களெல்லாரும் ஒன்று சேர்ந்து ஆனந்திக்கிறோம்; தங்களைப் பலதடவை பார்த்திருப்போமென்று மாத்திரம் அறிகிறோம்; ஆனால் தங்களை இன்னாரென்று தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களா யிருக்கிறோம்; இக்குற்றத்தை மன்னித்து தாங்கள்

தங்களை யெங்களுக்குத் தெரியப்படுத்தி, அவ்வானந்தத்தை யும் நாங்கள் அனுபவிக்கச் செய்யவேண்டும்" எனப் பிரார்த் தித்தான். அதற்கவர் "நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமாசாரங்களைச் சொல்லி முடித்தபின், என சமா சாரத்தையும் நான் சொல்லுகிறேன்" என்றார். பிறகு காமேசுவரன் சுப்புவைப பார்த்து "உங்கள் சமாச்சாரத் தைச் சொல்லெ௲ன அதற்கவள், சரியென்று ஒப்புக்கொ ண்டு, தர்மாம்பாளும் தானும், மதுரை பிளாட்பாரத்தில் சுற் றிச்சுற்றியும் ஒருவரையும் காணாமல் கடைசியாய் அவர்கள் தானாகவே வந்துவிடுவார்களென்று நினைத்து வண்டியேறி னதும், அது தூத்துக்குடியிற் கொண்டுவந்து விட்டதையும் தூத்துக்குடி ஸ்டேஷன்மாஸ்டர் நீங்கள் தவறி வந்துவிட்ட படியால் நாளையதினம் ரயிலில் திரும்பிப் போகலாமென்று சொன்னதின்பேரில் சமயல்செய்து சாப்பிடவேண்டியதற் காக வக்கீல் பசுபதி ஐயர் வீடு சென்றதும், இராத்திரி திரு ட்டுப்போனதும, போலீஸ் ஸப் இனிஸ்பெகடர் தங்களை ஸப்ஜெயிலில் அடைத்து வைத்ததும், அவருடைய கெட்ட எணணமும், கடைசியாய் பெரிய இனிஸ்பெக்டரால் சுக மடைந்ததும், கோர்ட்டில் விசாரணையானதும், இந்த பங்க ளாவுக்குப் பெரிய இனிஸ்பெகடரால் அனுப்பப்பட்டுவந்த தும் ஆகிய விருத்தாந்தங்களை ஒன்றுகூட விடாமற் சொன் னாள். இதைக்கேட்டு எல்லோரும் வருததப்பட்டார்களென் றாலும தர்மனும சுந்தரமும் ஒரு முகூர்த்தகாலம பிரக்ஞை யற்றவரானார்கள். இதைப பார்த்த தர்மாமபாளும் கண்ணீ ருதிர்த்தாள். அப்பொழுது அந்தப் பெரியவர் எல்லாருக் கும் சமாதானம செய்து தர்மாம்பாளையும் சுப்புவையும் உட்காரச் சொல்லி வற்புறுத்தினார். அதற்கு சுப்பு, தர்மாம் பாள் முகத்தைப் பார்த்துவிட்டு, நீங்களெல்லாம் இருக்குமி

டத்தில் நாங்க ளுட்காருவது அழகல்ல; அதிலும் இங்கிருக் கிறவர்களில் ஒருவரை யுத்தேசித்து எவ்வகையிலும் தர்மா ம்பாள் உட்காரமாட்டாள். நானிவ்விடமில்லாத பக்ஷத்தில் இந்த இடத்திற்கூட நிற்கமாட்டாள். ஆகையால் எங்களை நிர்ப்பந்திக்க வேண்டாம்; நாங்கள் நிற்பதுதான் எங்களுக் கழகு" என்று சொல்லிவிட்டுக் காமேசுவரனைப் பார்த்து, நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தபிறகு என்ன செய்தீர்கள்? இவ்விடம் எப்படி வந்தீர்கள்? என்றும் கேட்டாள்.

காமேசுவ:—நாங்கள் அன்று இரவில் மதுரை ரெயில் வேஸ்டேஷன் பிளாட்பாரத்தில் தர்மன் வந்திருப்பானென நினைத்துத்தெற்கும் வடக்குமாக 4,5, தரம் போய் வந்தோம். பிறகு ஸ்டேஷனுக்கு வெளிவிராண்டாவி லிருப்பானோ வென்று வெளியிற்போய்ப்பார்த்தோம்; பிறகு வெய்ட்டிங் ரூமிலிருப்பானோவென்று நினைத்து அங்குபோய்ப் பார்த் தோம்; ஓரிடத்திலும் காணப்படவில்லை. பிறகு மறுபடி பிளாட்பாரம் வந்து உங்களைத் தேடினதில் காணாமல் சற்று, சலங்கினோம். அதற்குள் சுந்தரம், நாம் சொன்னபடி அவர் கள் ஸ்திரீகளின் வண்டியில் ஏறியிருப்பார்களென்றுசொல்ல, நாங்கள் உடனே அந்த வண்டியினருகேபோய் பார்த்தோம்; உங்களைப்போல் இருவர் அங்கே சேர்ந்து உட்கார்ந்திருப் பதைக் கண்டு, கூப்பிடுவதற்குமுன் வண்டி நகர ஆரம்பித்து விட்டது; உடனே நாங்கள் ஒரு வண்டியிலேறிக்கொண் டோம்; திருச்சி ஜங்ஷனில் இரவு 3-மணிக்கு இறங்கிப் பெண்கள் வண்டியில் பார்த்ததில் அங்கே ஒருவரையும் காண வில்லை, நீங்கள் இறங்கி எங்களைத் தேடிக்கொண்டு போயிருப் பீர்களென நினைத்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்து பார்த் தும் காணாமல், நீங்கள் இடந்தெரிந்தவர்களாகையால் தாங்க ளாகவே வண்டியமர்த்திக்கொண்டு போயிருப்பீர்களென

நிர்ணயித்து நாங்களும் வீட்டிற்குவர, அங்கு உங்களைக் காணுததோடு இந்த விஷயத்தைஎங்களால் கேள்விப்பட்ட ஜானகிக்கு பதில் சொல்லமுடியவில்லை. உடனே அடுத்த டிரெயினில், சுந்தரம் மதுரைக்குவந்து பிளாட்பாரத்தில் விசாரித்ததில், ஒரு கைம்பெண்ணும் ஒரு சிறு பெண்ணும் பிளாட்பாரத்தில் 'அண்ணு அண்ணு' வென்று கூவிக்கொண்டிருந்ததாயும் கடைசியில் அவர்கள் வண்டியேறிவிட்டதாயும் சமாசாரம் அறிந்து வந்தான். இதைக்கேட்ட ஜானகிக்கு, அழுது முகமெல்லாம் வீங்கிப்போய்விட்டது. உடனே மாமாவும, அம்மாமியும் வந்தால், நாங்கள் தர்மாம்பாளைத் தேடிப்போயிருப்பதாய்ச்சொல்லி கவலைப்படாமலிருக்கும்படி ஜானகிக்குச் சொல்லிவிட்டு, நாங்களிருவரும் தர்மனைப் பார்த்துவிட்டுப்போகக்கருதி ரயிலேறிக் குளித்தலை போனேம். அங்கே அவனுடைய வீடு பூட்டி ஸீல் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து, விசாரித்தோம்; ஒன்றும் புலப்படவில்லை, பிறகு அவர்களுடைய குமாஸ்தா கிருஷ்ண ஐயரைக் கண்டு கேட்டதில் அவர், கோபாலசாமி ஐயருடைய சகல சொத்துக்களும் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், அவருடைய ஸம்ஸாரம் ஸாவித்ரியம்மாளும் தர்மனும் நேற்றுத்தான் கோயம்புத்தூரிலிருந்து இவ்விடம் வந்தார்களென்றும், தங்க இடமில்லாமல், என்னையும் பாராமல், யாரோ கொத்துக்காரன் ஜாகையில் வசிக்கையில், மாலை என்னைக் கண்டு தர்மன் பேசிக்கொண்டிருக்கையில், அவன் தகப்பஞர் திருநெல்வேலியில் ஜெயிலுக்குப் போகும் தருவாயிலிருப்பதால் உடனே வரவேண்டுமென்று கிடைத்த தந்தியிஞல் தர்மன் திருநெல்வேலிக்குப் போயிருக்கிறனென்றும், அவன் போகையில் அவனல் ஒப்புவிக்கப்பட்ட அவன் தாயாரை யழைத்துவர நான் அனுப்பின மனிதன் அவளங்

கில்லையென்று வந்துவிட்டதாயும், மறுபடி நானே நேரில் காலையிலவ்விடம்போய்ப் பார்த்ததில் அவளைக் காணவில்லை, பிறகு எவ்வளவு தேடியும் ஒரு ஸமாசாரமும் தெரியவில்லையென்றும், பரமயோக்கியரும், ஸத்யசந் தவராகவருமான கோபாலசாமி ஐயருக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வரக்கூடாதென்றும், அவர்களின் குடும்பத்திற்காக மிகவும் துக்கிக்கிறேனென்றும், சொன்னார்:—

இதைக்கேட்டதும் தர்மன் ஹா! வென்று கீழேவிழுந்து 'ஐயோ என் தாயாரையும் நானிழக்க நேரிட்டதே; அன்றிரவு அவளை யார் என்ன செய்தார்களோ தெரியவில்லையே' என்று கதற, அதற்குக் காமேசுவரன் 'ஸகே, தர்ம! அசைரப்படாதே, மேலே நான் சொல்வதையும் கவனமாய்க்கேட்டுவா, என ஆற்றி மறுபடி சொல்லத் தொடங்கினான்.

பிறகு நாங்கள் திருநெல்வேலி போய் தர்மனைப் பார்த்துவரவேண்டியது என்று தீர்மானம் செய்துகொண்டோம். தர்மாம்பாள் சுப்புவுடன் ஒருகால் மதுரையிலேயே தங்கிவிட்டாளோவென்று நினைத்து மறுபடி மதுரைபோனோம். அங்கே புருஷோத்தம ஐயர் வீட்டின் சங்கதிகளை விசாரித்ததில் கலியாணங்கள் இரண்டும் நடந்தேறிவிட்டனவென்றும், வீட்டில் சண்டையும் குழப்பமுமாயிருக்கிறதென்றும், தர்மாம்பாளையும் சுந்தரத்தையும் எப்படியும் கண்டுபிடித்துக் கொண்டுவரத் திருச்சிக்கு மனுஷியாளை யனுப்பியிருக்கிறார்களென்றுட தெரிந்துகொண்டு, இவர்கள் அங்கில்லையெனத் தீர்மானித்து, திருநெல்வேலிக்கு வந்தோம். அங்கே யெங்களுக்கு யாதொரு தகவலும் தெரியவில்லை. நாங்கள் அங்கிருந்த சுதேசமித்திரன் ரிபோர்டர், சாமிநாதய்யரிடம் எங்களுடைய சகல சங்கதிகளுஞ் சொல்லி, தர்மாம்பாளைப்பற்றி

யாவது, தர்மனைப்பற்றியாவது சமாசாரம் தெரிந்தால் உடனே தந்தி கொடுக்கும்படி சொல்லிவிட்டு மறுபடி திருச்சிக்கு வந்தோம். அதற்குள் மாசிமீ 5-தேதியாய்விட்டது. வல்லப சாஸ்திரிகளும் அவர் தர்மபத்னியும் மறுநாள் ஊருக்குவந்து ஜானகியால் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிந்து கொண்டு இருவருமாய் தர்மாம்பாளைத்தேடப்போயிருக்கிறார்களெனத் தெரிந்தது. உடனே நான் எனது கிருகத்திற்குப் போனேன்; என்பேருக்கு வந்திருந்த அநேக லெட்டர்களை என் பிதா என் கையில் கொடுத்து இத்தனைநாள் அலைந்தும் ஒருவரையும் கண்டுபிடிக்காமல் வந்ததற்கு என்னைக் கோபித்துக்கொண்டார்; நானெப்படியும் அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்காமல் விடுகிறதில்லையென அவருக்குப் பிரதிக்ஞை செய்துவிட்டு லெட்டர்களை யெல்லாம பார்த்தேன; அப்போது அவைகளிலொன்று கோபாலசாமியய்யர் எழுதிய லெட்டராகவிருந்தது. என்பேருக்கு வந்திருந்த மற்ற லெட்டர்களை யெல்லாம் அப்படியே எறிந்துவிட்டு முற்கூறிய கோபாலசாமி ஐயருடைய லெட்டரைப் பிரித்துப்படித்தேன. அதைப் படித்தவுடன் என் மனம் பட்டதாபத்தை இந்த ஒரு நாவால் சொல்ல முடியாது:—

இதைக்கேட்ட தர்மன் அழுதுகொண்டே காமேசா! 'அந்த லெட்டர் இப்போது உன்கையிலிருக்கிறதா' என்று கேட்க, அதற்கு காமேசுவரன், "அதை நகொண்டுவராமலே அதைப்பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பேனு? அவ்வளவு அசடா நான்?" என்று சொல்லித் தன பெட்டியிலிருந்து அந்த லெட்டரை யெடுத்து தர்மன் கையிற்கொடுத்தான். அங்குள்ளவர்க ளெல்லாரும், ஒரேமனதாய் அதைக்கேட்பதில் ஆவலுள்ளவர்களா யிருந்தார்கள், தர்மன் அதைப் பின்வருமாறு படித்தான்.

## கடிதம்

சி. காமேசனுக்கு, காமேசன் கிருபையால் ஸகலாபீஷ்டமுண்டாகத்தக்க அநேக ஆசீர்வாதம். க்ஷேமம். எனது ஸர்வ சொத்துக்களும் கடன்காரர்களால் ஜப்திசெய்யப்பட்டிருப்பதும், நான் சற்காலம் அவ்விடம் வந்தால் அவமானம் ஏற்படுமென்பதும் உனக்குத் தெரிந்திருக்கலாம்; என் ஸம்ஸாரம் ஸாவித்ரி மிருந்த, அதாவது சொல்லிமுடியாத கஷ்டதசையிலிருந்த காலத்தில், நான் தற்செயலாய் அவள் காவேரியில் விழும் தருணத்தில் சந்தித்தேன். இப்போது இருவரும் புதுச்சேரியில் சுகமாய் வஸிக்கிறோம். நான இவ்விடத்தில் பட்டர் அண்டு கோ. வில் மீ 1-க்கு ரூ 30-க்கு ஒருவேலை பார்த்து தற்காலம் ஜீவனம்செய்து வருகிறேன: இச்செய்தியைக் குழந்தை தர்மனுக்குச் சொல்லி அவன் வருத்தப்படாமலிருக்கும்படி நீ சமாதானம் செய்யவேண்டியது. அவனை, நம் ஜில்லா கலெக்டரைப் பார்த்து சீக்கிரத்தில் ஒரு வேலை ஒப்புக்கொள்ளும்படி சொல்லவேண்டியது. மற்றப்படி விசேஷங்களுக்கெழுதவும்.

| | |
|---|---|
| மாசி மீ 4-உ. புதுச்சேரி. | உன்னிடத்தில் நம்பிக்கையுள்ள கோபாலசாமி ஐயர். |

இதைப் படித்த தர்மனுக்குக் கண்களிலிருந்து அருவி போல் ஜலம் பெருகிற்று. "குமாஸ்தா கிருஷ்ணஐயர் என் தாயாரைக் காணவில்லை யென்று சொன்னதற்கும், அவள் சொல்லமுடியாத கஷ்டத்தால் காவேரியில் விழும் தருணத்தில் அவளைக் கண்டதாக என் பிதா எழுதுவதற்கும் சரியான பொருத்த மிருக்கிறது. அவள் எவ்வித கஷ்டத்தை எவ்விடத்தில் எப்படி அனுபவித்தாளோ தெரியவில்லையே," என்று சொல்லித்தர்மன் அழுகையில்; காமேசுவரன் 'தர்மா!

ஏன் வருந்துகிறாய்? இப்பொழுது அவர்களிருவரும் சௌக்கியமாயிருப்பதாய்த் தெரிகையில் சந்தோஷப்படாமல், நடந்துபோன சங்கதியைக்குறித்து ஏன் வியசனிக்கிறாய்; பாக்கிக் கதையைக் கேள்" என்று அவனது துக்கத்தை ஆற்றி மறுபடியும் சொல்லுகிறான்.

பிறகு நான் புத்திக்கலக்கத்துடன் சாயங்கிரம் உட்கார்ந்திருக்கையில் திருநெல்வேலியிலிருந்து, முன் சொன்னபிரபோர்ட்டர் சாமிநாதையரிடமிருந்து தந்தி வந்தது அதில் உடனே வரும்படி மாத்திரம் எழுதியிருந்தது. இதைச் சுந்தரத்திற்குக்காட்டி, இருவருமாய் இராத்திரி வண்டியிலேறி மறுநாள் திருநெல்வேலிக்கு வந்து சாமிநாதய்யரைப் பார்த்தோம். அவர் அகப்படவில்லை. சமீபத்திலிருந்த வேறொரு ஊருக்குப் போயிருந்ததாய்த் தெரிய வந்தது. நாங்களிருவரும் அவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டு இரண்டு நாள் அங்கேயே தாமதித்தோம். பிறகு அவரும் வந்தார். சங்கதி விசாரிக்க, அவர் "திருநெல்வேலியில் கோபாலசாமி அய்யர் என்று ஒருவரும் ஜெயிலுக்குப் போகவில்லையென்றும், அவருடைய பிள்ளை அவரை மீட்பதற்காக வந்தவர், தனது தகப்பனார் அகப்படாத படியால் வேறுவேலையாய்ப் போய்விட்டாரென்றும் சொல்லி, தூத்துக்குடியில் வக்கீல் பசுபதி அய்யர் வீட்டில் நடந்த களவில் வாஸ்தவத்தில் கொஞ்சமும் சம்மந்தப்படாத சுமார் 30 வயதுள்ள ஒரு கைம்பெண்ணும், 12 வயதுள்ள ஒரு கன்னியாப் பெண்ணும் ஜெயிலில் அடைபட்டிருக்கிறார்கள், இச்சமாசாரம் எனக்கு 4—5 நாளைமுந்தியே தெரியவந்தது. அவர்கள் அநேகமாய் உங்களால் தேடப்படுகிற ஸ்திரிகளாக இருக்கலாமென்று நான் நினைத்தேன். ஆனாலும் உடனே உங்களுக்குத் தெரிவிக்க என்னுடைய வேலைத்தொந்தரவால் முடியவில்லை. நீங்கள் தூத்

துக்குடி போய் விசாரியுங்கள். அங்கே புதிதாய் தர்மராஜ ஐயரென்று ஒரு ஸப் மாஜிஸ்டிரேட் வந்து 10 நாட்களா கின்றதாம்; அதற்குள் அவருடைய குணங்களையும், நுட்பமான புத்தி சாதுர்யத்தையும் அவ்வூர் ஜனங்கள் புகழுகின்றனர். மேலும் இவ்வூரில் ஒரு மாதம் ஸ்பெஷல் டியூடியிலிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடராமஐயர் என்னும் பிரபு இப்பொழுது அந்த ஊரில் சீப் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கின்றார்: ஆகையால் அவ்விருவரையும் போய்ப் பாருங்கள், உங்கள் காரியம் அனுகூலமாகும்" என்று சொன்னார். நாங்களுடனே அவருக்கு வந்தனமளித்துவிட்டு, இவ்விடம் வருவதற்காக நேற்றிரவு ரயிலடிக்கு வந்தோம். வண்டி தவறிவிட்டது. இன்று காலை பத்து மணிக்கு வண்டியேறி நாலு மணிக்கு இவ்விடம் வந்து சேர்ந்து ரயில்வே ஸ்டேஷனுக்குக் கீழ் புரம் ஒரு புளிய மரத்தடியில் நாங்கள் உட்கார்ந்தோம். உடனே ஒரு சேவகன் நியூஸென்ஸ் கேஸில் சார்ஜ் செய்தான். பிறகு எங்களுடைய வேண்டுகோளின் பேரில் உடனே ஸப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தான். பிறகெங்களிருவருக்கும் அரை ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட, அதைச் செலுத்திவிட்டு,இநத மகானுபாவனுடைய கிருபையால், இங்கு வந்து சேர்ந்து, இஷ்டஜன ஸமாகமத்தால் ஆனந்த பரிதர்களாகின்றோம். திருநெல்வேலியில் ரிபோர்ட்டர் சாமிநாதய்யர் சொன்ன ஸப்மாஜிஸ்டிரேட்டும், போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களும் நீங்களிருவரும் தானென நான் ஊகிக்கிறேன்"—என்று சொல்லி முடித்தான்.

அதற்கு அந்த மகாபிரபுவும் 'ஆம்! நான்தான் அந்த வெங்கடராம ஐயன், என்று விடையளித்தார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தர்மாம்பாள் "ஐயோ! என் பொருட்டு இவர்கள் இவ்வளவு கஷ்டப்பட்டார்களே, இவர்

களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்" என்று சுப்புவிடம் ரகஸியமாய்ச் சொல்லி அழுதாள்.

பிறகு தர்மன் "என்னுடைய கதை மிகுந்த ஆயாஸமான படியால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லி, அவன் தை மீ 29 தேதி குளிதலையில் வீட்டில் உட்கார்ந்திருக்கையில் பட்டணத்திலிருந்து, கேஸ் தோற்றுப்போன சமாசாரமுள்ள லெட்டர் கிடைத்ததும், ஈரோட்டிலிருந்து தந்தி வந்ததும், கிருஷ்ணஸ்வாமி அய்பருக்குக் கூடவர முடியாமல் ஆபத்து நேர்ந்ததும், தான் ஈரோட்டுக்குப் போனதும் அவ்விடத்தில் ஸாவித்ரி இருந்த ஸ்திதியும், ரத்னவல்லி தன்னை நிர்ப்பந்தித்ததும், தந்திரமாய் அதைவிட்டுப் புறப்பட்டு ஸாவித்ரியுடன் குளித்தலைக்கு வந்ததும், அங்கே தங்க இடமில்லாமல் தவித்ததுவும், கடைசியில் ஒரு குடிசையிற் றங்கினதுவும், சாயந்திரம் கிடைத்த தந்தியால் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்ததும் ஆகிய சரிதத்தைச் சுருக்கிச் சொல்லிவிட்டு, மறுபடியும் சொல்லுகிறான.

"எனக்குக் கிடைத்த தந்தியிற் குறிப்பிட்டபடி, நெல்லியப்பன்கோவில் வடக்கு வீதி முழுமையும் விசாரித்து ஒரு தகவலும் தெரியவில்லை. கடைசியில் எனக்கு வந்த தந்தி என் தாயாரை விட்டு என்னைப் பிரிக்கவேண்டியதினிமித்தம் யாரோ அனுப்பிய கற்பனைத் தந்தியென இப்பொழுது தெரிகிறது. பிறகு ராத்திரி ஒரு கிளப்பில் சாப்பிடப்போனேன். அப்பொழுது அந்த வேளைக்கு நான் மதுரை ரெயில் ஸ்டேஷனி லிருக்கவேண்டியிருக்க, இப்படி நான் இவ்விடத்தில் அல்லாடும்படி நேரிட்டதே; என் வாக்குப் பொய்யாகவல்லவா ஆய்விட்டது, என்ற துக்கத்துடன் சாப்பிட உட்கார்ந்தேன். அங்கே, நான் F. A. கிளாஸில் படிக்கும்போது அதே காலே

ஜில் B. A. கிளாஸில் படித்துக் கொண்டிருந்த ஆத்மநாதராவ் என்பவன் என்னுடன் கூடச்சாப்பிட்டான். அவன் அங்கே கலெக்டராபீஸில் ஹெட் கிளர்க்கு. அவனோடு பேசிக்கொண்டிருக்கையில், அவன் என்னைப்பார்த்து "தர்மா! திருச்சி கலெக்டர் உன் விஷயமாய் எழுதியிருந்ததைப் பார்த்து, இந்த ஜில்லா கலெக்டர், உன்னை பரீக்ஷார்த்தமாய் ஸப் மாஜிஸ்டிரேட்டாக நியமித்து, தற்காலம் தூத்துக்குடியில் போட்டிருக்கிறார். உனக்கு ஆர்டர் எழுதித் தயாராக இருக்கிறது. நாளையதினம் தபாலிற் போடுவார்கள். நீ நாளைதினம் காலை கலெக்டரை நேரில் பார்த்தால் ஆர்டரைக் கையில் கொடுப்பார். வேலையை உடனே ஒப்புக்கொள்ளலாம். இரண்டு மாதம் சீக்காயிருந்த தூத்துக்குடி சப்மாஜிஸ்டிரேட் இறந்து போய் ஒரு மாதமாயும் இதுவரை ஒருவரையும் நியமிக்காமல் வேலை வெகுவாக பாக்கி யிருக்கின்றது. நீ சீக்கிரம் போய் வேலையை ஒப்புக்கொள்' என்று சொன்னான்,

அதைக்கேட்ட நான், எனது தற்கால குடும்ப ஸ்திதிக்கு நான் வேலையை ஒப்புக்கொண்டால்தான் ஜீவிக்கலாமென்று நினைத்து, காலமே கலெக்டரைப்பார்த்து சன்னத்து வாங்கிக் கொண்டு, அதற்கு மறுநாள் முதல் இவ்விடத்தில் வேலைபார்த்து வருகிறேன். பிறகு இந்த பங்களாவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஒரு பரிசாரகனையும், ஒரு வேலைக்காரனையும் வைத்துக்கொண்டு காலங்கழிக்கிறேன். இத்தனை நாளாக மாதாபிதாக்களின் வாஸஸ்தானம், க்ஷேம சமாசாரம் இவைகளொன்றும் தெரியாமல் தபித்துக்கொண்டிருக்கையில், ஹே மித்ர! உன்னால் அவர்களுடைய க்ஷேம சமாசாரத்தையும் அறிந்தேன். உங்கள் எல்லோரையும் கண்டேன். ஆனந்தங்கொண்டேன்" என்று முடித்தான்.

உடனே இனிஸ்பெக்டர் வெங்கடராமஐயர் சொல்லுகிறார். "என் கதையையும் கேளுங்கள், நானிருப்பது வடபாதிமங்கலம்; உங்களம்மாமி கௌரியம்மாள் என் தங்கைதான். நான் 19-வது வயதில் பீ, ஏ, பரீக்ஷைக்குப் போனேன்; அது தவறிவிட்டது. அதனால் என் தாயார் அதிகமாய் கோபித்துக்கொண்டாள் அப்போது என் பிதா இறந்துபோய் 8-மாசமாயிருந்தது. தாயாருடைய கோபத்தை சகிக்கமாட்டாமல் ஓடிப்போய்விட்டேன்.

அப்போது என் தம்பி சிவராமனுக்கு வயது 16. என் தங்கை கௌரிக்கு வயது 13. அவள் அப்போது புஷ்பவதியாகவில்லை; நான் ஓடிப்போய் ஹைதராபாத்தில் படித்து மறுபடி பீ, ஏ, பாஸ்பண்ணி அவ்விடத்திலேயே போலீஸ் டிபார்ட்டுமெண்டில் சுமார் 18 வருஷகாலம் வேலையாயிருந்தேன்; அங்கேயே எனக்குக் கலியாணமாயிற்றென்றாலும் இதுவரையில் எனக்கு சந்ததியுமுண்டாகவில்லை. இரண்டு வருஷங்களுக்குமுன் நமது ஜன்மதேசத்தில் கொஞ்சநாள் வசிக்கவேண்டுமென நினைத்து ஐதராபாத் ஸம்ஸ்தானத்தின் சர்வீஸை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மாற்றிக்கொண்டு கஞ்சம் ஜில்லாவில் ரஸ்ஸல்கொண்டாவில் போலீஸ் இனிஸ்பெக்டராக 6-மாசகாலமிருந்தேன். பிறகு கிருஷ்ணா ஜில்லாவுக்கு வந்தேன்; பிறகு வட ஆற்காடு ஜில்லாவிற்கு-வந்து இப்போது சேலத்தில் மாற்றப்பட்டு, திருநெல்வேலியில ஸ்பெஷல் டியுடியில் ஒருமாதமிருந்து இப்போதுதான் ஒரு வாரமாய் இந்த ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறேன்; இன்னமும் என் ஸம்ஸாரம் சேலத்திற்றானிருக்கிறாள்; இந்த தர்மராஜஐயர் என்னை நிஷ்காரணமாகவே நேசித்து என்னைத் தன்னுடனிந்த கட்டத்தில் இருக்க வேண்டிக்கொண்டார். அவருடைய குணங்களுக்கு ஆசைப்பட்டு அவருடனிருக்கச்

சம்மதித்தேன், இந்தக்ஷணம் வரையில் நானுயிருடனிருப்பது எனது மாதாவுக்காவது தம்பி தங்கைகளுக்காவது தெரியாது. இப்போது உங்களைக்கொண்டு நான் என்னை வெளிப்படுத்திக் கொண்டேன்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட சுப்பு அண்ணா திருவையாற்றில் உங்கள் சிறியதாயார் மங்களம் என்று ஒருத்தி யிருந்தாளே உங்களுக்குத் தெரியுமா ?

வெங்க:—தெரியும் அவளுக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையுமிருந்ததே.

சுப்பு:—இருந்தது வாஸ்தவம்தான்; சின்னப் பெண்ணாகிய நானொருவளே இப்பொழுது மிச்சம், மற்றபேர்கள் இல்லை.

வெங்க.—அப்படியா! உனக்கேதாவது சந்ததிகளுண்டா ? நீ எவ்விடத்தில் வாழ்க்கைப்பட்டவள், நான் உன்னை 7-அல்லது 8-வயதில் பார்த்திருப்பேன், இப்போது நீ வேறுவிதமாய் இருக்கிறாய்.

சுப்பு:—எனக்கொரு பையனிருக்கிறான், அவன் மதுரையில் ஐந்தாவது பாரத்தில் படிக்கிறான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வாசலில், வண்டியிலிருந்து இறங்கி இரண்டுபேர் தம்பதிகளாக உள்ளே வந்தார்கள். அவர்கள் உள்ளே வந்ததும் அந்த அம்மாள் தர்மாம்பாளைக் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி யழுதுவிட்டு, மற்றவர்களைப் பார்த்ததில் பரமானந்தத்தை யடைந்தாள். சுந்தரமும் தர்மாம்பாளும் புதிதாய்வந்த புருஷ சிரேஷ்டருக்கு நமஸ்கரித்தார்கள். தர்மன் எழுந்திருந்து அவ்விருவருக்கும் நல்வரவுகூறி உட்காரவைத்து வெங்கடராமையரைப் பார்த்து "ஸார், இந்த அம்மாள் தங்கள் தங்கை கௌரி. இந்த மகா

த்மா அந்த அம்மாளுக்கு பர்த்தா இவ்விருவரின் குணங்களும் வாக்குக்கெட்டாதவை" என்று சொல்ல, கௌரியம்மாள் முன்பின் அறியமாட்டாரால் விழித்தாள். உடனே தர்மன் விவரம் சொல்ல, கௌரி கண்ணீருடன் தமையனுக்கு நமஸ்கரித்தாள், வல்லப சாஸ்திரிகளுக்கு எல்லாரும் தங்கள் தங்கள் விருத்தாந்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி, அவரிங்குவந்த காரணத்தை கேட்டார்கள்.

வல்லப சாஸ்திரிகள்:—நான் உங்களைப் பலவிடங்களில் தேடிவிட்டு நேற்று ஊருக்கு வந்து விசாரித்ததில் திருநெல்வேலி பேபார் ரிபோர்டரிடமிருந்து சமாசாரம்வந்தது, காமேசுவரன் அவ்விடம் போயிருக்கிறானென்று அவன தகப்பனார் சொல்லக்கேட்டு நேற்று ராத்திரி திருநெல்வேலி போனேன்; அவ்விடத்தில் பேபர் ரிபோர்டர் சாமிநாதய்யர் தூத்துக்குடி டெபுடி-மேஜிஸ்டிரேட வீட்டுக்குப்போய் விசாரித்தால் தெரியுமென்று சொல்ல, இன்றைக்கு பத்தியானம் புரப்பட்டு தூத்துக்குடிக்கு 1-மணிக்கு வந்து இந்த பங்களாவை விசாரித்துக்கொண்டு இங்கு வந்தேன்; பார்க்கவேண்டியவர்களெல்லாரையும் பார்த்தேன். 20 வருஷமாய் தேசாந்திரம் ஓடிப்போன மைத்துனனையும் பார்த்தேன், என்றார்.

இப்படி யெல்லாரும், பரஸ்பரம் இஷ்டஸமாகமத்தால் பேரானந்தத்தை யடைந்து வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்து, எழுந்திருந்து ஸ்நானம் முதலானது செய்து எல்லாரும் சாப்பிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் அன்றிரவு அடைந்த ஆனந்தத்திற்கு பிரம்மானந்தம்கூட நிகராகாதெனச் சொல்லலாம்.

# பதினெட்டாம் ஆச்வாஸம்.

## துர்ஜன சிக்ஷணம் I.

மதுரையில் புருஷோத்தம ஐயர் ஒரரையில் நாற்காலியில் சார்ந்துகொண்டிருக்கிறார். அவர் முகம், வெய்யலில் போடப்பட்ட செந்தாமரைபோல் வாட்டமுற்றிருந்தது. காலமே மணி 7 - அடித்தது. வேலைக்காரன் இவருடைய காலண்டையில் நின்று காலைக் காரியங்களுக்கு எழுந்திருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தான். புருஷோத்தம ஐயர் அவனுக்கு. இன்னம் ஒரு மணி கழிந்தபின் கூப்பிடு, என்று கட்டளையிட்டனுப்பிவிட்டு ஆராத்துயரத்தைக் காட்டும் முகத்துடன் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

"ஐயோ! களங்கமற்ற நமது வம்சத்தை இந்தப்பாவியின் சம்மந்தத்தால் அழியாத அபகீர்த்தியில் மூழ்கச்செய்தேன், அந்த பாவிப்பயல் இப்படி யஜமான துரோகியென்று அறிய, எனக்குச் சாமர்த்தியமில்லாமற் போயிற்றே. இவளுடைய பவுன் மாலையை அந்தப் பாவிப்பயல்தான் கொண்டுபோய் விற்றுச் சாப்பிட்டிருக்கவேண்டும்; இனி நாம் எவ்விதபரிகாரம் செய்து நமது குலத்தை நரகத்திலிருந்து உத்தாரணம் செய்யலாம், செய், இந்தப் பாவியை இவ்வீட்டைவிட்டுத்துரத்தி, இந்தப் பயலுக்கும் தக்க சிக்ஷை ஏற்படுத்தாமலிருக்கலாகாது; அல்லது நாமிந்த வீட்டைவிட்டுப் போய்விடவேண்டும். ஹா! இதென்ன யோசனை? நமது சொத்தை ஆள திவ்யஸற்குணம் நிறைந்த புத்திரனும், நமது வாத்ஸல்யத்தைக் காட்ட ஒரு அபூர்வமான பெண்ணுமிருக்கையில் நாமிந்த வீட்டைவிட்டுப் போவது மிகவும் உசிதப்பிசகு.

தைவாதீனமாய் நமது குழந்தைகளிரண்டும் இவளுடைய வழியாகிய சாக்கடைக் கும்பியில் விழாமல் தப்பினார்கள். ஏதோ நான் செய்த மகா பாபத்தின் பலனாக இவளுடைய லாவண்யம் என்னைக் கொஞ்சநாள் மயக்கினதென்றாலும் கொஞ்சம் புண்ணியத்தின் பலன், அந்தக் கஷ்டத்திலிருந்து என்னையும் என் குழந்தைகளையும் தப்புவித்தது. இப்போது நம் குழந்தைகள் எங்கிருக்கிறார்களோ தெரியவில்லை. அவர்களொருகால் நான் செய்த அகாரியங்களுக்காக என்பேரில் மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கலாம்; அவர்களைச் சமாதானஞ்செய்யவேண்டியது எனது கடமை. இப்போதே அவர்களை அழைத்துவரத்தக்க மனுஷியர்களை யனுப்பவேண்டும்'' என்று புருஷோத்தம ஐயர் யோசித்துக்கொண்டிருந்தார். இப்பொழுது வேலைக்காரி சின்னாத்தாள் கையில் ஒரு கடுதாசியைக் கொண்டுவந்து, “இது யசமாங்க கச்சேரி அறையைப் பெருக்கச்சே பீரோவிங்கீழ கிடந்ததுங்க, எந்தக் காகிதமானாலும் என்னிடம் கொடுக்கணுமின்னு யஜமாங்க உத்தரவுபடி குடுத்தேனுங்க” என்று சொல்லிக் கொடுத்தாள். அதையவர் அலக்ஷியமாய் வாங்கிக்கொண்டு அவளைப் போகச் சொல்லிவிட்டு, அதை வாசித்துப் பார்த்தார். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

“புருஷோத்தம பிரபுவுக்கு வந்தனம்,” ஒங்க பத்தினி மீனாக்ஷியும் அவள் ஆசை நாயகனான உங்கள் காரியஸ்தன் சுந்தரமும், அவாள ரகசியத்தை நானறிஞ்ச குத்தத்துக்காக நாளை ராத்திரி என்னை கொலைசெய்யப் போறாள், நான் புதுத்தெருவில் இருக்கிறேன், நீங்கள்தான் எனக்கு சரணம்.

இப்படிக்கு,
சுந்தரத்தின் மாமா பெண் சுப்பு.
தைமீ 13உ.

இதை வாசித்த புருஷோத்தம ஐயருக்குக்கால் கைகள் வெலவெலத்துப் போயின. மறுபடியும் யோசித்தார் "இந்தப் பாவிகளுக்கு வெகுநாளாய் நேசமிருப்பதை அவள் எவ்விதமோ கண்டுபிடித்துவிட்டாள். இவள் எழுதியிருப்பது சரிதான், புதுத்தெருவில் தைமீ 13வ ராத்திரி இரண்டுபேர்கள் கொலைசெய்யப்பட்டார்களெனக் கேள்விப்பட்டேன். அது இந்தப் பாபிகளால் உண்டானதுபோல் தோன்றுகின்றது. சரி இந்தப் பாவிகளைத்தொலைக்க இது நல்ல வழி கண்டுபிடிக்கப்பட்டது. வெகுநாளாய் அக்கொலைஞரைப் போலீஸார்கள் தேடுகிறூர்கள்" என்று யோசித்துவிட்டு ஒரு ஆளையனுப்பிச் சுந்தரத்தை கூப்பிட்டுவரச்சொன்னூர்.

அன்றுநடந்த விசேஷமென்னவென்றால் புருஷோத்தம ஐயர், ஏதோ ஒரு கோர்ட்டுக் காரியமாய் திருநெல்வேலி போக உத்தேசித்து, இராத்திரி 3-மணி வண்டிக்குப் போனூர் மீனாக்ஷியும் சுந்தரனும் எப்பொழுதும் இரவு 10-மணி முதல் 2-மணி வரையிலதான் நேசமாடுவது வழக்கம். அனறையதினம் சுந்தரன் புருஷோத்தம ஐயருடன்கூடவே இராத்திரி முழுவதும் சில தஸ்தாவேஜிகளைப் பார்த்தலும் குறித்தலுமான வேலையில் இருந்தான். அவர் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனபிறகுதான் இவர்கள் கவலையற்று ஆனந்தத்திலிருந்தார்கள். அவர்கள் அரைக்கு, சூத்கரச்சி சின்னுத்தாளை த்தவிர வேறொருவரும் போகக்கூடாது, அந்த தைரியத்தால் அதிகாலையில் எழுந்திருக்காமல் தூங்கிவிட்டார்கள். புருஷோத்தம ஐயருக்கு டிரெயின் தவறிப்போய்விட்டது. ஸ்டேஷனிலேயே வெயிடிங் ரூமில் 5½-மணி வரையில் படுத்துத் தூங்கிவிட்டு அதிகாலையில் வீட்டிற்கு வந்தார்; தான் போய் வந்த சங்கதியை மீனாக்ஷியுடன் சொல்லி மறுபடியும் அடுத்த டிரெயினுக்குப் போகச் சீக்கிரத்தில் ஏற்பாடு செய்ய

வேண்டுமெனக் கருதி, மீனாக்ஷி அக்காலத்தி லிருக்கக்கூடிய அறைக்குட் சென்று பார்த்தார்; நாயிகா நாயகர்களிருவரும ஒரே சயனத்தில் காடாந்தகாரமாய் நித்திரை செய்வதைக் கண்ணாரக்கண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு வந்து தனதறையில் நாற்காலியிற் படுத்துக்கொண்டார். அந்த மீனாக்ஷியினறையில் சின்னத்தாளுக்கு கவனம்ஜாஸ்தி. யாராலும் உள்ளே போகவிடாள், புருஷோத்தம ஐயரை என்ன செய்ய முடியும்? அவர் திரும்பி வந்தவுடன் அவள் அவ்வறையினுட் சென்று சங்கதியைத் தெரியப்படுத்தி முன் ஜாக்கிரதை செய்துவிட்டாள். உடனே மீனாக்ஷி திடுக்கிட்டு, சுந்தரன் கையிலோர் நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து "கொஞ்சகாலம் எங்காவது ஒரு காணாத தேசத்திற்குப் போ" என்று உத்திரவு கொடுத்தனுப்பினாள்.

அவனோவென்றால், "வியபிசாரத்தில் பயப்படவேண்டியவர்கள் ஸ்திரீகளே தவிர புருஷனுக்கு என்ன பயம்? வேணுமானால் அந்த வீட்டில் இனிநமக்கு வேலை கொடுக்க வேண்டாம் "என் பெண் பொல்லாதது உன் பிள்ளையை அடக்கு" என்பது போல் நம்மை என்ன செய்யலாம; நமக்குச்சாப்பாட்டுககு வேண்டியதைநாம் சம்பாதித்துக்கொண்டோம், நமது பிள்ளையைவிட்டு நாமேன் தேசாந்தரம் போக வேண்டும்" என்று யோசித்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்விட்டான். அவனுக்குச்சமையல் செய்துபோட மீனாட்க்ஷியின் சொந்தச்செலவில் ஒரு பரிசாரகன் நியமிக்கப்பட்டிருந்தான். அதனால் அவன் சுகமாயிருக்கலாமென நினைத்திருந்தான்.

சுந்தரத்தை யழைத்துவர அனுப்பப்பட்ட வேலைக்காரன் திரும்பிவந்து, அவனில்லை வெளியிற் போய்விட்டா

னென்று சொன்னான். உடனே புருஷோத்தம ஐயர் 'அவனை அவன் வீட்டிற்பார்த்து அழைத்துவா' என்று சொல்லி, மறு படியும் அனுப்ப, அவன் சென்று திரும்பிவந்து "வீட்டில் இருக்கிறதாயும், இப்போது வரமுடியாதென்று சொன்னதா யும் சொன்னான். உடனே புருஷோத்தம ஐயருக்குக் கண்கள் கோபத்தாற் சிவந்தன. அவருத்தம புருஷராகையால் கோப த்தை மனதில் அடக்கிக்கொண்டு தான் காலையாகாரத்தை முடித்துக்கொண்டு வெளியிற் போகவேண்டிய ஏற்பாடாகப் புறப்பட்டார். அப்போது உள்ளேவரும் போலீஸ் இனிஸ் பெக்டரைக் கண்டார். எதிரில் வந்தவரை அவருடைய உடுப்பைக்கொண்டும பின்வரும் போலீஸ் சேவகனைகொண் டும் போலீஸ் இன்ஸ்பெக்டரென்று தெரிந்துகொண்டு, அவ ருக்குத் தக்கபடி மரியாதைசெய்து தனனுடைய அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு இருவரும உட்கார்ந்தார்கள்.

புருஷோ:—வந்த விசேஷம் தெரியவில்லையே?

வெங்கட:—தங்களைப் பார்க்கவே வந்தேன்.

புருஷோ:—என்னை ஏதாவது காரியார்த்தமாய்ப் பார் க்கவந்தீரா, அல்லது ஸாதாரணமாகவா?

இன்ஸ்:—போலீஸ் உத்யோகத்திலிருக்கும் எனக்கு அனுவசியமாய் தங்களைப் பார்க்க எங்கே ஒழியப்போகிறது. காரியார்த்தமாகத்தான் வந்தேன்; அந்தக் காரியத்தை நாமி ருவரும் தனியாய்ப் பேசிக்கொள்ள வேண்டும்.

புருஷோ:—இப்போது நாமிருக்கும் அறை தனியான அறைதான், இங்கே என்னுத்தரவன்றியில் காற்றுக்கூட நுழையாது. தாராளமாய் தாங்கள் வந்த காரியத்தைச் சொல்லலாம்.

இனிஸ்:—எனக்கு, போலீஸ் டிபார்ட்மெண்டில் இனிஸ்பெக்டர் உத்தியோகம். என் பேர் வெங்கடராமய்யர். நானிப்போது தூத்துக்குடியில் வேலைபார்த்து வருகிறேன். இந்த டவுன் புதுத்தெருவில் சென்ற தை மீ 13-உ ராத்திரி நடந்த இரட்டைக் கொலை விஷயமாய் குற்றவாளியைப் பிடிக்க என்னை ஸ்பெஷல் ட்யூட்டியாக அனுப்பியிருக்கிறார்கள். அதுவிஷயமாய் தங்களிடம் கொஞ்சம் பேசவேண்டியதாயிருக்கிறது.

இதைக்கேட்ட புருஷோத்தம ஐயருக்கு அச்சமயத்தில் உண்டான ஆனந்தத்திற் களவேயில்லை. தானாகவே இச்செய்தியைப் போலீஸாருக்கு வெளியிட்டு, சுந்தரனை சிக்ஷிக்கச் செய்யக்கருதிய இவருக்கு இவ்விதம் நேர்ந்தது கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் தோன்றிற்று. உடனே அவரைப்பார்த்துத் தன்மனதை யடக்கிக்கொண்டு 'அக்கொலை விஷயமாய் என்னிடத்தில் என்ன பேசவேண்டும்' என்றார்.

வெங்க:—நான் சொல்லப்போகும் சமாசாரம் எப்படிப்பட்டதாயினும் தங்களுக்கு அது ஆயாஸத்தை, அல்லது, அவமானத்தைக் கொடுக்கக்கூடியதாயினும், பொருட்படுத்தாமல் எனக்கு ஸகாயம் செய்யவேண்டும். தாங்களவ்விதம் செய்வதாய் எனக்கு வாக்களித்தபிறகே நான் சொல்லத் துணிவேன்.

புருஷோத்தமய்யர் இதைக்கேட்டு, "இவருக்கு நடந்த சங்கதியெல்லாம் தெரிந்தே யிருக்கிறதுபோல் தோன்றுகிறது. நாமே இவருக்கு எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் நமக்கு ஒரு தீங்குமன்றியில் அவ்விரண்டு நாய்களையும் இவரே தீர்த்துவிடுவார், என்றாலோசித்து.—

புரு:—ஐயா தாங்கள் கேட்கிறபடியே தங்களுக்குவாக் களித்தேன், என்ன நேர்ந்தாலும் எனக்குத் தெரிந்தமட்டிலும், என்னால் முடிந்தமட்டிலும் நான் தங்களுக்குதவிசெய்கிறேன், என்னைமட்டில் தாங்களாவது வேறு எந்த உத்தியோகஸ்தராவது இவ்வீட்டைவிட்டு வெளியிற் கூப்பிடாமல் தாங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

வெங்க:—சந்தோஷம்; தங்கள் இஷ்டப்படியே செய்கிறேன். கொலை செய்யப்பட்டது யாரென்றறிவீர்களா?

புருஷோ:—சுப்பு வென்ற ஒரு பெண்பாலும் அவள் பிள்ளையுமா யிருக்கவேண்டுமென நினைக்கிறேன்.

வெங்க:—சிவசிவ! அவ்விருவரும் உயிரோடிருக்கிறார்கள்; வேறொரு கைம்பெண்ணும் வேறொரு பையனும் கொல்லப்பட்டவர்கள்.

புருஷோ:—நானப்படி நினைக்கவில்லையே, இதோ பாருங்கள் (என்று சொல்லி சுப்பு எழுதின கடிதத்துண்டையெடுத்துக் கொடுத்தார்.)

வெங்க:—(வாங்கி வாசித்துப் பார்த்து) இது நல்ல தஸ்தாவேஜி; என்னிடமிருக்கவேண்டும் (என்று மடியில் சொருகிக்கொண்டு) ஐயா, அவனுத்தேசம் அப்படித்தான், நடந்தது வேறுவிதம், தன்னைக் கொல்லப்போவதாய் தெரிந்த பிறகும் தானந்தவிடத்தில் இருப்பாளோ?

புருஷோ:—எப்படித் தப்பினாள்?

வெங்க:—அப்படியிருக்கட்டும்; இக்கடிதம் தங்களுக்குக் கிடைத்தபிறகும்கூட அவ்விரு மகா பாதகர்களையும் எவ்விதம் வீட்டில் வைத்துக்கொள்ளத் தாங்கள் துணிந்தீர்கள்.

புருஷோ:—இன்று காலமேதான் அவர்களை ஒரு படுக்கையில் பார்த்தேன்; இக்கடிதமும் கிடைத்தது; நானாகவே

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரம் பிள்ளையைப்பார்க்கப் புறப் பட்டேன்; தாங்கள் எதிற்பட்டீர்கள்; இனி நடந்ததைச்சொல்லுங்கள்.

வெங்கட்டராமய்யர் சொல்லுகிறேன் கேளுங்கள் என்றுசொல்லி, மீனாக்ஷியின் லெட்டர் சுப்புவுக்குக்கிடைத்ததும், சுப்பு ரகஸ்யம் கண்டுபிடித்ததும், சுப்புவுக்கும் சுந்தரனுக்குமுண்டான கலகமும், அன்று ராத்திரி சுப்பு சுந்தரத்திற்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து அவர்களிருவருக்குள் நடந்த தீர்மானத்தை யறிந்துகொண்டு இத்துண்டை எழுதிக் கச்சேரி உள்ளில் போட்டதும், கனகசபை பிள்ளையால்சங்கதி தெரிந்துகொண்டு ராத்திரியே சுப்பு, தன் பிள்ளையை அப்புறப்படுத்திவிட்டு, தான் திருச்சிக்குப்போனதும், அன்றிரவு சுப்பு குடியிருந்த அரைவாசலிற் படுத்திருந்த அவ்வீட்டு ஸ்திரீயையும் பையனையும் சுந்தரனும் வேறொருவனுமாய்ச் சேர்ந்து கொலைசெய்ததுமான விஷயத்தைச் சொன்னார்.

புருஷோ:—சுந்தரனே நேரிற்போய் கொலை செய்தானென்பதற்கு என்ன ருஜு?

வெங்க:—இவர்களிருவரும் கொலைசெய்துவிட்டுத் திருப்பிவருகையில், ஒரு போலீஸ் சேவகன் சுந்தரன் ஓடுவதைக்கண்டு அவன் வேஷ்டியைப் பிடித்தான். வேஷ்டியை விட்டுவிட்டு அவன் ஓடிப்போய்விட்டான். அவ்வேஷ்டியில் "சுந்தரன்" என்று மசியால் எழுதப்பட்டிருக்கிறது. அதில் ஏராளமான இரத்தக் கரைகளிருக்கின்றன. மேலும் வாயில் துணியை யடைத்துக் கொலைசெய்தபோது பார்த்திருந்த அவ்வீட்டிலுள்ள இரண்டு ஸ்திரீகளும் சுந்தரனுடைய அங்க அடையாளங்களைச் சொல்லுகிறார்கள்.

புருஷோ:—அப்படியானால் இத்தனைநாளாய் ஏன் இந்த கேஸ் வெளியாகவில்லை?

வெங்க:—சுப்பு இவ்விடமில்லாததால், தங்கள் வீட்டி லுள்ள சுந்தரன் தான் கொலைசெய்த சுந்தரனென்று சொல்ல முடியவில்லை. அவனைக்கண்டு எல்லாவற்றையுந் தெரிந்து கொண்டு பிறகு D, I. G. உத்திரவையடைந்து இவ்விடம் வந்தேன்.

புருஷோ:—தாங்கள் சுப்புவை எங்கு கண்டீர்கள்.

வெங்க:—தூத்துக்குடியில் எனது ஜாகையில்

புருஷோ:—அவ்விடம் அவள் வரக் காரணம் யாது?

இதற்கு வெங்கட்டராம ஐயர், சுப்புவும் தர்மாம்பா ளும் இவ்விடம் விட்டுப் புறப்பட்ட காரணமும், இவ்விடம் விட்டுப் புறப்பட்டது முதல் அவர்களுக்கு நேர்ந்த விபத்தும் தானதை நிவர்த்திசெய்ததும், இப்போதவர்கள் சுகமாய் திருச்சியில் வல்லபசாஸ்திரிகள் வீட்டிலிருப்பதும் ஆகிய இச் செய்திகளைச் சொல்லித் தனக்கு ஒரு முறையில் சுப்பு தங் கையென்றும் சொன்னார்.

இதைக்கேட்ட புருஷோத்தம ஐயர், கண்ணீர்சொரிந்து என் குழந்தை தர்மாம்பாள் இமட்டிலாவது தங்களால் விபத்தாகிற கடலைத்தாண்டி சுகமாயிருப்பது கேட்டு ஆநந் திக்கிறேன். தாங்கள் என் குழந்தையைக் காப்பாற்றினதற்கு தங்களுக்கு நான் அடிமையாக வேண்டுமென்றாலும் தடை யில்லை. அப்படிப்பட்ட, அழகிலும் கல்வியிலும் நிகரற்ற என் குழந்தையைப் படுகுழியில் தள்ள யத்தினம்செய்த என் னைத் தாங்கள் என்ன சிட்சை செய்தாலும் சம்மதம்; என் குழந்தை சுந்தரேசனும் இருக்குமிடம் தெரிந்துவிட்டால் இன்னமும் ஆநந்திப்பேன்'' என்றார்.

உடனே வெங்கட்டராமையர், சுந்தரம் காமேசன் இவர்களின் சங்கதியைச் சொல்லி "தாங்கள் மாப்பிள்ளையையாய் கோரிய, தர்மராஜ ஐயர் சப்மாஜிஸ்திரேட் வேலையாயிருக்கிறாரென்றும், அவர் வீட்டில்தான் எல்லாரும் ஒன்றுசேர நேர்ந்ததென்றும்" சொல்லி முடித்தார்.

புருஷோ:—(வெங்கடராம ஐயரை கட்டிக்கொண்டு) தாங்கள் எனக்குச் செய்திருக்கும் உபகாரத்திற்கு, நான் பிரதி செய்யச் சதியற்றவனாயிருக்கிறேன். நானும் எனது சொத்துக்களும் தங்களுடையதே, அந்த மகாத்மா தர்மராஜ ஐயருக்கு என் குழந்தை தர்மாம்பாளை எப்படியாவது அடுத்த மாசம் கலியாணம் செய்து கொடுத்து விடுகிறேன்.

வெங்க:—நான் சம்பாதித்திருக்கிற சுமார் லக்ஷரூபாய் சொத்தை தங்கள் பெண்ணின் வயிற்றிற்பிறக்கும் குழந்தைகளில் ஒன்றை என்னுடையதாகச் செய்துகொண்டு அதற்கே கொடுக்கப்போகிறேன்; இது நிற்க, தாங்களிப்பொழுது என்னை என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்?

புருஷோ:—நானென்ன சொல்ல வேண்டியிருக்கிறது? இரண்டு குற்றவாளிகளையும் பிடித்துக் கொள்ளுங்கள்; உங்கள் இஷ்டம்போல் கேஸை நடத்துங்கள், நான் துணிந்துவிட்டேன், ஒன்றுக்கும் ஆக்ஷேபிக்கவில்லை; சுந்தரன் அயன் வீட்டிலிருக்கிறான், நான் கூப்பிட்டதற்கு நிராகரித்து விட்டான். தாங்கள் தங்கள் சேவகனைக்கொண்டு பிடித்துக்கொண்டு வரச் சொல்லவேண்டும்.

உடனே வெங்கடராம ஐயர் தன்னுடன்கூட வந்த சேவகனுக்குச் சில சமாசாரங்கள் சொல்லி, சுந்தரனைப்பிடித்துக் கொண்டுவரும்படி அனுப்பினார். பிறகு மீனாக்ஷியை யழை

த்துக்கொண்டுவரும்படி ஒரு மனுஷ்யனை, புருஷோத்தம ஐயர் அனுப்ப, அவன் போய்த்திரும்பி வந்து மீனாக்ஷியின் அறை உட்புறம் தாப்பாளிட்டிருப்பதாயும் ஜன்னற் கதவுகள் சாற்றப்பட்டிருப்பதாயும், கூப்பிட்டதற்கு பதிலில்லை யென்றும் சொன்னான். உடனே இவர்கள் போய் கதவைப்பெயர்த்து உள்ளே போய்ப் பார்க்கையில், மீனாக்ஷி கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளை யிவர்கள் பார்த்து "நமக்கு முந்தியே இவளை தெய்வம் சிக்ஷித்துவிட்டது" என்று சொல்லி அவ்வறையை வெங்கட்டராம ஐயர் சோதித்தார். அவ்விடத்தில் ஊஞ்சற் பலகையில் ஒரு காகிதம் அகப்பட்டது; அதை யெடுத்து வாசித்தார், அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"பலநாட் திருடன் ஒருநாளகப்படுவான்" என்றபடி இன்றையதினம் நான் செய்துவரும் அகாரியத்தை என்பர்த்தா நேரில் கண்டார்; நான் நேசித்த சுந்தரனைத் திருப்தி செய்விப்பதன்பொருட்டு, சுப்புவையும் அவள் பிள்ளையையும் கொலைசெய்யச் சொன்னேன்; அது வேறுவிதமாய் முடிந்தது. தர்மாம்பாளைக் கெடுக்கப்பார்த்தேன், அவளும் தப்பினாள். இன்றையதினம் நான் போலீஸில் அகப்பட்டு மானமிழந்து பிறகு உயிரை இழக்கவேண்டியதாய் நேர்ந்துவிட்டது. இனி யவர்கள் செய்யும் சிட்சையை நானே செய்துகொள்ளலாமென நினைத்துத் தற்கொலை செய்துகொண்டேன், இத்துடன் என் குற்றங்கள் நீங்கியதாக நினைத்துச் சுந்தரனை மன்னிக்கலாமென்று நினைக்கிறேன்" பாவி மீனாக்ஷி.

இந்த லெட்டரையெடுத்துக்கொண்டு வாசலில் வருவதற்குள் கைவிலங்குடன் சுந்தரன் எதிரில் நின்றான். புருஷோத்தம ஐயரைக் கண்டவுடன் அந்த துஷ்டன் "நான் தங்களுடைய அன்னத்தைச் சாப்பிட்டு அன்னமிட்ட பிதாவின்

ஸம்சாரமாகிய மாதாவை யிச்சித்த பாவத்திற்கு எனக்குத் தக்க சிக்ஷைகிடைக்கும்; நான் பிறருக்கு நினைத்த துரோகத்தால் என் பிள்ளைக்கு ஒருவிதவை தர்மபத்னியாயிருக்கிருள். அவளைத் தாங்கள் ரக்ஷிக்கவேண்டும். நான் போகிறேன்" என்று சொன்னதும், காருண்யமே உருக்கொண்ட புருஷோத்தம ஐயருக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. உடனே அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

தர்மசாஸ்திரங்களில் வியபிசாரிக்கு உத்தரகிரியை உடனே கிடையாதென்றிருப்பதால், மீனாக்ஷியை மூட்டைப் பூச்சியைப்போல் பொசுக்கினார்கள். சுந்தரனுடைய வாக்குமூலத்தால் பாஸ்கரனையும் சின்னத்தாளையும் கேஸில் பிடித்தார்கள். கனகசபைப் பிள்ளை சாக்ஷிசொன்னான், சுப்பு மதுரைக்கு வந்து சாக்ஷி சொன்னாள். சுப்பு குடியிருந்த வீட்டிலிருந்த ஸ்திரீகளும் சாக்ஷி சொன்னார்கள். செஷன் ஜட்ஜு சுந்தரனுக்குக் கொலை தீர்ப்பும் பாஸ்கரனுக்கு 10-வருஷம் த்வீபாந்தர சிக்ஷையும், சின்னத்தாளுக்கு 5-வருஷம் கடுங்காவலும் ஏற்படுத்தினார். புருஷோத்தம ஐயர் நேரில் திருச்சிக்கு வந்து தான் செய்த குற்றத்திற்கு எல்லாரையும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தர்மாம்பாளையும் சுந்தரேசனையும் தானே அழைத்துவந்து மதுரையில் கொஞ்சநாள் வைத்துக்கொண்டு, சுந்தரத்தை மாத்திரம் எம். ஏ. படிப்பதற்காக திருச்சிக்கனுப்பிவிட்டார். தர்மாம்பாளும் சுப்புவும் கொஞ்சநாள் மதுரையில் புருஷோத்தம ஐயரால் ஊக்கத்துடன் போஷிக்கப்பட்டு வஸித்தார்கள்.

# பத்தொன்பதாம் ஆச்வாசம்.

## துர்ஜன சிக்ஷணம் II.

"உன் ஏற்றச்சால் போன்ற வயிற்றிற்கும், அதிலிருந்து வந்த பெண்கட்டைக்குமாகவே" நான் செய்த அக்கிரமங்களுக்களவேயில்லை. எவ்வளவு செய்தும் பத்திரகாளிபோல் சீறுகிறாயே தவிர எனக்குச் சுகமில்லை. எது செய்தால்தான் உனக்குத் திருப்தி? சொல்லடா! ரத்னம்? நான் ஏதாவது இவளுக்கு குறைவாய்ச் செய்கிறேனா என்று, பட்டாபிராம ஐயர் சொன்னார்.

ரத்னவல்லி:—மன்னி! நீ அண்ணாவை யடிக்கடி வருந்தச் செய்யாதே, அவன் எவ்வளவோ பாடு படுகிறான்.

காமா:—ஆமாண்டா ரத்தினம், ரொம்ப பாடுபட்டுத்தான் ரொம்ப அருமையும் பெருமையுமாகப்பெற்று வளர்த்த ஒரு பெண்ணைக் குலகோத்திரம் தெரியாமலும் காலணாவுக்குகூட ஐவேஜி யில்லாமலும் மழையிடிக்குகூடப் பள்ளிக்கூடத்திலொதுங்காமலும் உள்ள ஒரு 40-வயசுத் தடியனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். நீயுங்கூடச் சொல்லமாட்டையா? உன்னாலே வந்ததுதானே, இந்த குடும்பத்துக்கு தீங்கு.

பட்டாபிராமய்யர்.—அவளிடத்திலேன் உன் ஆத்திரத்தை காட்டுகிறாய், அவள் உனக்கு எத்தனையோ செய்தாள் காளி துரதிர்ஷ்டம் கல்லும் காற்றிற் பறக்கிறது.

காமா:—நானா துரதிர்ஷ்டக்காரி, நானிருக்குமிடமெல்லாம் பாலாகப் பெருக்குமே.

பட்டாபி:—ஆமாம், பெருகிறது பார், ஏராளமாய் லக்ஷக்கணக்கான சொத்துக்கள் நீ வந்ததுமுதல் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து, இப்போது சுத்தமண்டலமாய் விட்டது. உன் அதிர்ஷ்டத்தைப்பார் ஆறுகப் பெருகிறது.

காமா:—என்னைக்கலியாணம்பண்ணிக் கொடுக்கும்போதும் நான் வந்தபோதும் எல்லாம நன்ருகத்தானிருந்தது. அப்புறம் நீ துர் வியாஜ்யங்கள் செய்தாய். குச்சுக்காரிகளுக்கு அழிச்சாய். எல்லாம் ஒழிந்தது. அது தொலைபட்டும். அந்தப்பயல் நேத்திமுதல் இங்கே வந்துகடக்கானே என்னத்திற்கு.

பட்டாபி:—நீதான் கேளேன். அருமையான மாமியாரையும், அற்புதமான பெண்டாட்டியையும் பார்த்துப்போக வந்திருப்பான்.

காமா:—ஆமா - இந்த அழகனுக்கு மாமியார் ஒண்ணு ஆமபட்டாள் ஒண்ணு, கெட்ட கேட்டுக்கு.

ரத்ன:—அண்ணு அதிருக்கட்டும், மதுரையில் நடந்த இரண்டு கலியாணங்களும் இரண்டு விதமாக ஆய்விட்டனவே. அதென்ன காரணம் யார் அப்படிச் செய்தார்கள்?

பட்டாபி:—நிஜத்தைச் சொல்லுகிறேன், நம்ம மீனுக்ஷி சுந்தரனென்கிற ஒரு ஆசை நாயகனை வைத்துக்கொண்டிருக்கிருள். அவன் பிள்ளைக்குக் கலியாணமாகவேண்டியதற்காக தன் பர்த்தாவை எப்படியோ சரிப்படுத்தி அவன் மூத்தாள் பெண்ணை அந்தப்பயலுக்குக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டாள். இதன் மத்தியில் நான் போய் அவளுடைய மூத்தாள் பிள்ளைக்கு நம் கமலத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டதில் அதையும் முடித்தாள். அந்தச்சுந்தரனுக்கு

அம்மங்காள் சுப்புவென்று ஒரு முண்டை யிருக்கிறாள். அவளுக்கும் சுந்தரனுக்கும் விரோதம், அந்த மூலமாய் அவளுக்கு மீனாக்ஷியிடத்திலும் வைரமுண்டு. ஆகையால் மீனாக்ஷி செய்த காரியத்தை யெப்படியாவது கெடுக்கவேண்டுமென்று அந்தச் சுப்புவென்கிற முண்டை செய்த காரியம் இது.

ரத்னா:—நல்ல கெட்டிக்காரி, அவள் இவ்வளவு தூரம் வேலை செய்துவிட்டாளே.

பட்டாபி:—உம; இருக்கட்டும், நான் விட்டேனா அந்த முண்டையை! ரூபாய் பதினாயிரமானாலும் அநத முண்டையைக் கொன்றுவிடவேண்டுமென்று மீனாக்ஷி சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

இப்போது வாசல் திண்ணையிலிருந்து ஒருவன் பதிற் சொல்லுகிறான் "இன்னம் மீனாக்ஷியின் பேச்சு என்? அவள் தூக்குப்போட்டுக்கொண்டு பிராணனைவிட்டாள். அவளாசை நாயகனும நேற்று சர்க்காரால் கொலை தூக்கப்பட்டான்."

இதைக் கேட்டவுடன் எல்லாருமு திடுக்கிட்டெழுந்திருந்து: "என்னடா 'பலராமா உளருகிறாயோ? நிஜந்தானோ?" என்று கேட்டார்கள்.

பலராமன்:—எனக்கென்ன பைத்தியமா உளர; உள்ளதைச் சொன்னேன், சந்தேகமுண்டானால் மதுரைக்குப் போய்ப் பார்த்து வாருங்கள்.

பட்டாபி:—உனக்கெப்படித் தெரியும்?

பலராம:—நான் நேற்றுததான் மதுரையிலிருந்து இவ்விடததை யுத்தேசித்துப் புறப்பட்டேன்.

பட்டாபி:—என்ன காரணம்?

பலரா.—சுப்புவையும் அவள் பிள்ளையையும் கொலை செய்ய, மீனாக்ஷியால் அனுப்பப்பட்ட சுந்தரன், அவளுக்கு பதில் வேறு யாரோ இருவரைக் கொன்றுவிட்டான்; கேஸ் கிளம்பிற்று, மீனாக்ஷி தானாக மாண்டாள். சுந்தரன் தூக்கு மரத்தில் தொங்கினான். (இதைக் கேட்டவுடன் எல்லாரும் வருத்தப்பட்டார்கள்.)

காமா:—ஏண்டா; தடியா! இந்த எழவைச் சொல்லத் தான் இங்கு வந்தாயோ?

பலரா:—எவளுடைய பலத்தினால் குதிக்கிறீர்களோ அவள்கதியைச் சொல்லி உங்கள் கொட்டம் அடங்கிற்றென்று சொல்லிப்போக வந்தேன்.

காமா:—என்னடா, பாவி பழிகாரா! நாங்கள் என்னடா கொட்டமட்டிருக்கிறோம்?

பலரா:—ஒரு நாழிகைக்கு முன் என்னைப்பற்றி என்னென்ன பேச்சுப் பேசினீர்கள்?

காமா:—என்னடா பேசினோம், உனக்குப் படிப்புமில்லை, பணமுமில்லையென்று சொன்னேன்.

பலரா:—உன் பெண் எம்மட்டில் படித்திருக்கிறது. உனக்கு எத்தனைகோடி ரூபாய்க்குச் சொத்திருக்கிறது? எனக்குத்தெரியாதோ ஒன்றும; மரியாதையாய் என் அகமுடையாளை என்னிடமனுப்பி விடு.

காமா:—என்ன சொன்னே, ஆம்படயாளா, அவளை உன்னிடத்தில் வாழவா நான் விடுவேன்.

பட்டாபி:—பின்னே யாருக்குக் கூட்டி கொடுக்கப் போகிறாய்?

காமா:—அடே சண்டாளா! அதெல்லாம் ஒங்க கூட்டத்துக்கு வழக்கம்; ஆம்படயானை விரட்டிவிட்டு தனக்கிஷ்டமான புருஷனை வச்சுக்கிண்டு, என் தங்கை ஊர் சிரிக்கிறாளோ உன் தங்கை சிரிக்கிறாளோ? கெடுத்தாயே பாவி அநியாயமாய் என் குழந்தையை, இந்த தரித்திரனிடத்திலா என் குழந்தையை விடுவேன்.

பலரா:—அதிகபபேச்சு பேசினால் பல்லு முப்பத்திரண்டையும் உதிர்த்துவிடுவேன்; பவுனும் மோகராவுமாகக்கொட்டித்தானே கிடக்கிறது உன் வீட்டில்.

உடனே காமாட்சி "என்னடா தடியா சொன்னே?" என்று சொல்லி, ஹாவென்று கத்திக்கொண்டு பலராமனை வாசலில் பிடித்துத் தள்ளினாள். அவனுடனே அவளைக்கீழே தள்ளிக்காலாலும் கையாலும் அடித்து வீழ்த்தும்போது, பட்டாபிராமய்யர் விலக்கிவிடவந்து தானும் பத்தடி வாங்கிக்கொண்டு 'என்னடா நாயே தரித்திரப்பயலே! இங்கே என்னிடம்கூடவாலாட்டுகிறாய், ஓடிப்போ மரியாதையுடன், தரித்திரப்பொணமே" என்று வாசலில்தள்ளினார், அதற்குப்பலராமன் "அடே அற்பப்பதரே, நீதரித்திரனே, நான்தரித்திரனோ பார்ப்போம் வா" என்று மாமனாரை வாசலிழுத்துவந்து அங்குநின்றுகொண்டிருந்தசேவகனிடம், "இவர்தான்பட்டாபிராமய்யர், பிடித்துக்கொள்" என்று காட்டினான். உடனே சேவகன் 'ஐயா! உங்களுக்கு ரூ. 1500-க்குஒருவாரண்டுவந்திருக்கிறது; வாதி ஆனச்சூர்சொக்குவாண்டையான்; வாருங்கள் கோர்ட்டுக்கு' என்று கூப்பிடவே, பட்டாபிராமய்யர் மனங்கலங்கினான்; அவன்பேரில் இதுவரையில் வாரண்டு வந்ததேயில்லை. இவ்விதம் பட்டாபிராமய்யர் வாரண்டில் அகப்பட்டவுடன் காமாக்ஷியும் ரத்தினவல்லியும் அழுதார்கள்.

அப்போது பலராமன் காமாக்ஷியைப் பார்த்து, 'ஏ! லண்டி, என்னை, தரித்திரனென்று சொன்னாயே, உங்கள் வீட்டில் கொட்டிகிடக்கிற மோகராக்குப்பலிலிருந்து இந்தக் கடன்காரனுக்குக்கடன் கொடு பார்பபோம், என்க.

இதைக்கேட்டகாமாக்ஷி, ரத்னவல்லியைப்பார்த்து 'என்னடீ செய்கிறதிப்போது? உங்கண்ணுஜெபிலுக்குப்போகச்சம்மதமா உனக்கு?' என்று கேட்க, அதற்கு ரத்தினவல்லி, "அம்மணீ நானென்ன செய்வேன்; என்னிடத்தில் ஒன்றுமில்லையே" என்றாள்.

வாசகர்களே! இந்த ரத்னவல்லியிடம் ஏராளமான நகைகளும் பணங்களுமிருந்தனவென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதால் இவளிப்போது தன்னிடத்தில் ஒன்றுமில்லையென்று சொல்வது உங்களுக்குப் பொய்யெனத் தோன்றும். அது அப்படியல்ல; இரத்தினவல்லி சொன்னது உண்மையே. ஏனென்றால் ஈரோட்டில் ஸாவிதரியையும், தர்மனையும் அடிக்கும்படி ரத்தினவல்லியால் அனுப்பப்பட்ட ஆட்கள் தவறுதலாய் மாடாபுரம ஜமீன்தாருடைய ஏஜண்டின் வண்டியைத் தாக்கி மண்டையுடைந்து வந்தது உங்களுக்குத்தெரியுமல்லவா? அந்த ஏஜண்டு சொலலியனுப்பிய வார்த்தையை நினைத்து பயந்து மறுநாள் ரத்தினவல்லி ஈரோட்டுக்கு வந்து, அவ்விடத்தில் கனகத்தின் வீட்டில் இருக்க முடியாமல் தனதுதமையன் வீட்டிலிருந்தாள். பிறகு இரண்டு நாளைக்கெல்லாம் பட்டாபிராமய்யர் தன் குடும்பத்துடன் கலியாணத்திற்குப் போயிருந்த காலத்தில் ஒருநாள் இராத்திரி பல கள்வர் வீட்டிற்குள் புகுந்து, பட்டாபிராமய்யரால் அபகரிக்கப்பட்ட ஸாவித்திரியின் நகைகளையும் ரத்தினவல்லி கடைசியாய் கடன் வாங்கி வைத்திருந்த ரூபாய்

களையும், அவள் மேலே போட்டுக்கொண்டிருந்ததும் பெட்டியில் வைத்திருந்ததுமான சகல நகைகளையும் எடுத்துக்கொண்டு, அவளை நையப்புடைத்துச் சென்றனர். அன்று வாங்கின அடிகளால ரதனவல்லி மூன்றுநாளைக்கு எழுந்திருக்கவில்லை. கனகம் சாபபாடு கொண்டுவநது போடடாள். ரதனவல்லிக்குத் தற்காலம் சரீரத்தில் திருகாணிகூடக் கிடையாது. பட்டாபிராமய்யருக்கும் இரத்தினவல்லிக்கும் கடன் கொடுப்பார் கிடையாது. ஏனென்றால் அவர்கள் ஏறகனவே வாங்கியிருக்கிற கடன்கள் வட்டியும் முதலுமாக அவர்களுக்குள்ள சொத்துகளுக்கு மேலாய்விட்டன. அப்படியிருந்ததினால் காமாக்ஷி கணவனைப்பார்தது 'இப்போதென்ன வழி' யெனக்கேட்டாள். அதற்கு அவர், இனி என்னவழி? உன் நகைகளையாவது, குழந்தை கமலத்தின் நகைகளையாவது அடகுவைத்துப் பணம் வாங்கி கொடுத்துத்தான் சேவகரையனுப்பவேண்டும், என்று சொன்னார்.

காமாக்ஷி:—எனக்கு வெகு ரொம்ப நகைகளா லக்ஷக்கணக்கான ரூபாய்க்குப் போட்டிருக்றயோ இல்லையோ அதை யடகுவைகக? என்னமோ போனதுபோக திருமங்கலிய ஜோடியும் கம்மலும் காறையும் தான் பாக்கியிருக்கிறது; அதையும் துலைக்கவழிதேடாதே; குழந்தை கழுத்தில் இருப்பதை வாங்கிவிட்டால், பிறகு அவளுக்குச்செய்து பூட்டயாரை வச்சிருகே? வேணுமானால் உண தங்கை மீனாக்ஷியிடம் வாங்கி வைத்திருக்கிற பவன் மாலையை விற்றுப்பணத்தைக் கொடுத்து மீண்டுவா, இல்லாவிட்டால ஜெயிலுக்குப்போ.

இதற்குள் கோர்ட்டுசேவகன் "வா, ஐயா! இனி மௌனமுடியாது" என்று இழுத்தான். இதைக்கேட்ட பட்டாபிராமஐய்யர், "சரி அந்தப்பவன் மாலையைக்கொண்டுவா,

என்று சொல்லக் காமாக்ஷி அதைக் கொண்டுவந்து கொடுத்தது, 'நானும் கோயம்புத்தூருக்குவருகிறேன். இதைவித்துக் கடனை கொடுத்து விட்டு பாக்கியை நான் கொண்டு வருகிறேன்; இல்லாவிட்டால் எல்லாவற்றையும், நீயேதாவது செய்து விடுவாய்' என்று சொல்லி வீட்டில் பலராமனையும் ரத்தினவல்லியையும் கமலத்தையும் வைத்துவிட்டுத் தனது கணவனுடன் கோயம்புத்தூர் போனாள். அங்கே ஒரு காசுக்கடை தேடி அங்கிருந்த வியாபாரியினிடம் இந்தப் பவன்மாலையை யெடுத்துக்கொண்டு சரியான கிரயம் கொடுங்களென்று நகையைக் கொடுத்தார்கள். அப்போது அவ்விடத்தில் நின்று கொண்டிருந்த போலீஸ் சேவகன் அந்த நகையைப் பார்த்தவுடன் நெருங்கவந்து "நமது ஸ்டேஷனுக்கு வந்திருக்கிற அடையாள ஜாப்தாப்படி இந்த நகை சரியாய் இருக்கும் போலிருக்கிறது" என்று சொல்லி, ஓ செட்டியாரே! இது சந்தேகப்பட்ட நகை போலிருக்கிறது. அதைச் சோதித்துப் பாரும், அதில் M. P. என்ற இரண்டு எழுத்து எங்காவது செதுக்கப் பட்டிருக்கிறதா பாரும் என்றான்.

உடனே செட்டியார் நகையைப் பிரட்டிப்பிரட்டிப்பார்த்துவிட்டு முகப்புக்குப் பின்புறத்தில் M. P. என்ற எழுத்துகள் இருக்கக்கண்டு "இதோ இருக்கின்றன அந்த எழுத்துகள்" என்றார். உடனே போலீஸ் சேவகன், 'ஓய், ஐயரே! இந்த நகை மதுரை புருஷோத்தம ஐயருடையது, உமக்கெப்படிக்கிடைத்தது' என்றுகேட்டான். அதற்குப் பட்டாபிராம ஐயர் "அவர் ஸம்ஸாரம் என்னுடைய தங்கை, அவள் எனக்கு இதைக்கொடுத்தாள்" என்று சொன்னார். அதற்குச்சேவகன் "உமக்குத் தங்கையா கொடுத்தாள், அவன் போயிருக்கிறான் யமலோகத்திற்கு, நீயும் அங்கேபோய் கேட்டு சரம், புருஷோத்தம ஐய்யர் இந்த நகை களவு போயிருட

தாய் போலீஸில் பதியவைத்திருக்கிறார், வா ஸ்டேஷனுக்கு" என்று சொல்லி இழுத்தான். பட்டாபிராம ஐயர், ,,மீனாக்ஷி செத்துப் போய்விட்டாள். இனி யெனக்கு மதுரையில் ஆதாரம் இல்லை நீ இரும்ப ஊருக்குப்போ. மாப்பிள்ளையை தூஷிக்காமல் பெண்ணை யவனிடம் விட்டு விடு, என் கதியைப்பற்றி நீ கவலைப்படாதே, நான் எப்படியாவது ஆகிறேன்'' என்று காமாக்ஷியை ஊருக்குத்திரும்பி யனுப்பிவிட்டு, தான் சேவகர்களுடன் ஸ்டேஷனுக்குப் போனான். காமாக்ஷி தர்ம்பத்னீயொடு துக்கத்துடன் திரும்பி ராமாபுரத்திற்கு வந்து நடந்த சமாசாரத்தை மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் உரைத்தாள். பிறகு 10 நாளுக்குள் ரத்னவல்லி பட்டாபிராமய்யர் இவர்களுடைய நிலங்களையும் பட்டாபிராம ஐயர் வீட்டையும் கடன்காரர்கள் ஜப்திசெய்து இவர்களை வெளியேற்றி விட்டார்கள்.

உடனே பலராமன் மாமியாரைப்பார்த்து "ஹேப்ரபுவின் பத்னீயே! தரித்திரப்பயலுக்கு பெண்ணை கொடுத்தோமென்றுஎன்னையிகழ்ந்தீர்களே, நான் தரித்திரனல்ல, நானொரு பிரபுவினிடத்தில் கிராமக்காரியம் பார்க்கிறேன். மீ 1-க்கு ஐந்து கலம் நெல்லும் 5-ரூபாய் பணமும் சம்பளமாகக் கிடைக்கின்றது. என் ஸம்ஸாரமும் நானும் வயிராரசாப்பிடுவோம், நீ விதியில்லாமலிருப்பதால் உனக்கும் அங்கே வந்திருந்தால் சாதம் போடுவோம். அதிக கர்வம கொண்டவர்களையும் அதிகமான அநியாயம் செய்பவர்களையும் கடவுள் தண்டிக்காமல்விட்டார், என்பதற்கு நீயும் இந்த ரத்னவல்லியும் திருஷ்டாந்தம். நீங்களிருவரும் செல்வச்செருக்கினால் பரமஸாதுவான ஸாவித்ரியை என்னபாடு படுத்தினீர்கள். அவள் நகைகளையெல்லாம் அபகரித்துகொண்டு இந்த துஷ்டை, அவளையும் அவள் பிள்ளை தர்மனையும் அடிக்கவும் ஏற்

பாடு செய்தாள். 'தர்மம் தலைகாக்குமென்றபடி' அவர்கள் தப்பினார்கள். நீங்கள் கஷ்டத்துக்கு ஆளானீர்கள், தர்மபுத்திரனுக்கொப்பான அந்த தர்மன் ஒரு குறைவுமின்றியில் இப்போது தூத்துக்குடியில் சப்மேஜிஸ்டிரேட்டாக இருக்கிறான். தர்மாம்பாளும் அவனுக்கே வாழ்க்கைப்பட்டுச் சார்ந்திருக்கிறாள். நீங்கள் ஸாவித்ரியின் நகைகளை அக்கிரமமாய் அபகரித்ததினால் அவைகள் உங்களுக்குத் தங்காமற் போனதோடு, இருக்கிற நகைகளையும் பணங்களையும் ஒழித்துக்கொண்டு போயின, உதையும் கிடைக்கது உங்களுக்குக் கஷ்டகாலம் தயாராகவிருப்பதால் மீனாக்ஷியின் பவன்மாலையைக் கலியாணத்திற்குப் போகும்போது கையிலெடுத்துப் போனீர்கள்; அதையும் இவ்விடத்திலே வைத்துவிட்டுப்போயிருந்தால் எல்லா நகைகளோடு அதையும் கள்வர் கொண்டு போயிருப்பார்கள். இப்போது ஜெயிலுக்குப் போகவேண்டியதில்லை. இப்படியெல்லாம் உங்களுக்குத் தாழ்மை வந்திருக்கப்பிறரை இகழ்வது மூடத்தனத்திலும் மூடத்தனமே. இப்போது என்ன செய்வாய், கட்டின புருஷனும் ஜெயிலுக்குப் போய்விட்டான். சோற்றுக்கு விதியில்லாமல் சகல சொத்துக்களும் போய்விட்டன. நிற்கவும் நிழலில்லை. இப்படிப்பட்ட ஸ்திதியிலுள்ள உனது பெண்ணை என்னிலும் பணக்காரன் மணக்க நியாயமுண்டோ? பெண்ணுக்காவது நல்ல அழகிருந்தால் ரத்னவல்லியைக் கட்டினதுபோல் யாராவது ஒரு பணக்காரக் கிழவன் தாலிகட்டுவான்.

ஆகையால் இனியாவது தஞ்சாவூர் சாவடைபோலுள்ள உனது வாயைத்திறந்து காட்டாமலும் உன்தாளித்தன்மையை களிப்புடன் வெளியிடாமலும் மௌனமாய் காலம் தள்ளு; அப்படி மௌனமாய் காலக்ஷேபம் செய்ய விதியில்லாமற்போனால் நாயைப்போல் சொன்னதை கேட்டுக்கொண்டு என் வீட்டோடி

ருந்தாயானல் கௌரவமாய்த் தின்றுகொண்டு காலம் தள்ளலாம்" என்று சரமாரியாய்ப் பொழிந்துவிட்டு "கிளம்புடீ உன்புடவையை யெடுத்துக்கொண்டு ஊருக்கு," என்று தனது மனைவிக்குக் கட்டளையிட்டான். கமலம் அழகில் குறைந்தவளாயினும் புத்தியில் குறைந்தவளல்ல, ஆகையால் அவனுடனே ஆக்ஷேபமின்றி, தனது துணி முதலிய சாமான்களை யெடுத்துக்கொண்டு சீக்கிரத்தில் வெளிப்புறப்பட்டாள். இவ்வளவு வார்த்தைகளையும் மகா துக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்த காமாக்ஷிக்கு, பதில் சொல்லவாயில்லாமல் கண்ணீர் சொரிய கலங்கி நின்றாள். ரத்னவல்லி திக்பிரமை கொண்டவள்போல் தூணோடு தூணாய்ச் சாய்ந்துவிட்டாள். பலராமன் கமலத்தை யழைத்துக்கொண்டு பத்தடி நடந்தவுடன், காமாக்ஷி கண்ணீர் விட்டு "நானினி என்ன செய்வேன்" என்று கதறினாள். இதைக் கண்ட பலராமன் மனமிரங்கி கமலத்தைப்பார்த்து உன் தாயாரையும் அழைத்துக்கொண்டுவா, அவள் கொஞ்சநாள் உன்னோடு இருக்கட்டும், பிறகு யோசித்துக்கொள்வோம்" என்று சொல்ல, அந்தப்படி கமலமும் மிருதுவான குரலுடன் "அம்மா நீ அழாதே என்னுடன் வந்திரு, அப்பாவுக்கு கஷ்டம் தெளிந்து அவர் வந்த பிறகு பார்த்துக்கொள்வோம், எனக்கும் மாமியார் நாத்தனர் ஒருவரும் துணைக்கில்லை, உன் மாப்பிள்ளை வெளியிற்போனல் நானொண்டியாய் தானிருக்கவேண்டியதாயிருக்கும்" என்று சொல்ல, காமாக்ஷி கொஞ்சம் ஆறுதலடைந்து தானும் தன்னுடைய துணிமணிகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

பலராமன் அவர்களை யழைத்துக்கொண்டு, கல்லூர் போய், தனது பிரபுவிடம் தனக்குண்டாயிருக்கிற பாரத்தைச் சொல்லி, அவரால் சொற்ப பிரயோஜனமுமடைந்து சுகமாக ஜீவித்து வந்தான். கொஞ்சநாளைக்கெல்லாம் கமலம் புஷ்பவதி

யானாள். பலராமன் லௌகிகத்தைக் கலக்காமல் சுத்தவைதிகமாய் ருதுசாந்தி கலியாணம் செய்துகொண்டு, சமயோசிதப்படி என்னென்பதற்கு முன் எண்ணெயைக் கொடுத்துகொண்டு கணவன் மனதுக்குத் திருப்தியை யுண்டாக்கும் தனது மனைவியுடன் வாழ்ந்துவந்தான். காமாக்ஷியும் தனது மாப்பிள்ளைக்குப் பயந்து தனது குணங்களை வெளியிடாமல் அடங்கியிருந்து கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தாள். அவளிருந்து வரும் தன்மையும் குடும்பத்தில் சாமான்களை ஜாக்கிரதையாய் அதிக வ்யயமில்லாமல் காலக்ஷேபம் செய்து வருவதும் பலராமனுக்கே வியப்பையுண்டாக்கிற்று. கொஞ்சநாள் கழித்து பட்டாபிராமய்யருக்கு 5 வருஷம் தண்டனை ஆயிற்றென்று கேட்டு எல்லாரும் விசனப்பட்டார்கள்.

ரத்னவல்லியோ வென்றால் கையிற் காசுமில்லாமல் 'பயப்படாதே' யென்று சொல்ல மனுஷியாரு மில்லாமற்போன பின்பு தானாகவே சிந்திக்கிறாள்.

பலராமன் சொன்னது ரொம்ப சரி; ஸாவித்ரியால் எனக்கென்ன கெடுதி, நானேன் அவளுடைய நகைகளை யபகரிக்கவுடந்தையாயிருந்தேன்? என்னுடைய துர்ப்பார்க்கச் செயலுக்கு, தர்மன் கட்டுப்படாவிட்டால் அதற்காக அவளை அடிக்க சொல்லலாமா? அப்படிச் செய்ததால் அல்லவா எனது ஸர்வசொத்தையும் கள்வர்கொண்டு போனார்கள். இதெல்லாமிருக்கட்டும், தாலிகட்டின அகமுடையான் தரித்திரனானாலும் தெய்வமென்றே சொல்லுகிறார்கள். அதிலும நான்கு லக்ஷ ரூபாய் பொருமான சொத்துக்களையும் கொடுத்த மஹாத்மாவை, சோறுபோடாமல் விரட்டினேன். அவருக்கு உத்தமமான பெண்களிருந்ததால் அவர் சுகமாயிருக்கிறார். கனகவல்லியை நானெவ்வளவு கெடுத்தும் அவள் அவருடைய பெண்

ஞானதால் வழிக்கு வந்து சுகமாயிருக்கிறாள்; என்கதி யிப்போது நிற்கதியாயிற்று; இச்சிறு வயதில் உயிருடன் கணவனையிழந்தேன்; என் பொல்லாத்தனத்தால் சகல சொத்துக்களையுமிழந்தேன், இனி பிச்சைவாங்கிப் பிழைக்கவேண்டியது தான்" என்றிவ்வாறு ரத்தினவல்லி யோசித்து, கொஞ்ச நாள் கனகத்தின் வீட்டில் இருந்தாள். பிறகு கடன்காரர்களின் காலில் விழுந்து "எல்லாச் சொத்துக்களையும் நீங்கள் பங்குபோட்டு எடுத்துகொண்டு, என் காலக்ஷேபத்திற்கு ஏதாவது கொடுங்கள்" என்று கெஞ்சிக்கேட்டு, அவர்கள் இரகத்தினால் கொடுத்த 1000-ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு ஒரு சிறு குடிசையிற் குடியிருந்து கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வந்தாள். அதன் பிறகு அவள் பதிவிரதை தானெனச் சொல்லலாம்.

---

## இருபதாம் ஆச்வாசம்.

---

### உபஸம்ஹாரம்.

ஜானகி! அவள் தான் குழந்தை, ஒரே பிடியாய் நிற்கிறாள், நீகூடக் குழந்தையா? நீ கொஞ்சமுங்கூட யோசிக்க மாட்டேனென்கிறாயே. அவள் நினைத்திருக்கிறவாறன் எனக்கும் பிடித்துத்தானிருந்தது. இப்போது கொஞ்சம் அதிர்ப்தியாயிருக்கிறது. ஸர்வ சொத்துக்களும் போய்விட்டன. மானத்தைவிட்டு, தாய் தகப்பன்கள் பிச்சையெடுத்து இலாக்காவில் வசிக்கிறார்கள். இவனுக்கோ உத்தியோகம் கிடைத்து மூணு நாட்களுள் அது போய்விட்டது; இந்தனையும் போராமல் பையனிருக்குமிடமே தெரியவில்லை; அவனைத் தேடிப் பெ

ண்ணையெப்படிக் கொடுக்கலாம்; அவள் தகப்பனே 'நீ எங்கே கொடுத்தாலும் சரி, நான் 10000மோ, 20000மோ செலவு செய்து கலியாணம்செய்து கொடுக்கிறேன்' என்கிறார். நானொருவன் இவ்விஷயத்தில் இரவும் பகலுமாகத் தூக்கமின்றித் தவிக்கிறேன்; பெண்ணுக்கு வயதாகிவிட்டதே; ஆனிமாதம் பிறந்துவிட்டதே - என்று உன் மனதில் உதிக்கவில்லை. ஏதாவது ஒரு வரனை நான் குறிப்பிட்டால் குழந்தை சம்மதிக்கவில்லையே என்கிறாய்; இதொரு பெரிய புதுமை, உன்னைக் கலியாணம் செய்து கொடுக்கையில் உன் சம்மதத்தைக் கேட்டுத்தான் கலியாணம் நடந்ததோ; எல்லாம் நீ கொடுக்கிற இடத்தினால் அந்தக் குட்டிக்கு இவ்வளவு தைரியம்; இன்றைக்கு அஸ்தமனத்திற்குள் நீ இதற்கொரு ஸம்விதானம் செய்யாதபக்ஷத்தில் நான் வேறொருவரனைக் கண்டுபிடித்து, நாளைய தினமே கலியாணத்தை நிச்சயம் செய்துவிடுவேன்'' என்று, ஜானகியைப் பார்த்து வல்லப சாஸ்திரியார் சொன்னார்.

ஜானகி:—அண்ணா! தாங்கள் என்பேரில் கோபித்துக் கொள்ளக்கூடாது. குழந்தைதானென்னசெய்வாள்; அவளுக்கு அதே வரனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று எண்ணம்தான். ஆனால் தெய்வ ஸங்கல்பம் அப்படியில்லை போலிருக்கிறது. அப்படியிருந்தால் சொத்துத்தான் ஏதோ போய்விட்டது; ஆனா உத்யோகம்கூடப் போகவேண்டுமோ? நமக்குப் பிராப்தமில்லையென்றே நானும் நினைக்கிறேன்; படிப்பைநம்பிப் பெண்ணை கொடுப்போமென்று முன் நான் யோசித்தது தப்பிதமெனத் தோன்றுகின்றது. இன்றைக்கல்லது நாளைக்குள் நமது பமாஞ்சி காமேசுவரன் வந்துவிடுவான். உடனே ஒரு ஏற்பாடு செய்துவிடுவோம்.

வல்லப:—அவனெங்கே போயிருக்கிறான்!

ஜானகி:—எனக்குத் தெரியாது அவன் போயிருக்கிற இடம்.

வல்லப:—அது தெரியாமல் எப்படிச் சொல்லத் துணிந்தாய் இன்றைக்கு நாளைக்கு வந்துவிடுவானென்று?

ஜானகி:—அவனை ஒரு வாரத்திற்குமுன் கண்டேன். அவன் தனது மித்ரன் தர்மனைத் தேடிப்போவதாயும், அடுத்த சனிக்கிழமை அவன் வீட்டில் ஏதோ விசேஷமானதையால் வெள்ளிக்கிழமை இராத்திரி, கட்டாயம் வந்துவிடுவதாயும் சொன்னான். இன்று வியாழக்கிழமை யானதால் அப்படிச் சொல்லத் துணிந்தேன்.

சாஸ்திரிகள்:—எப்படியாறு லாகட்டும்; இன்னுமொரு நாள்தானே பார்ப்போம்; சுந்தரத்தைக் கூப்பிடு; இவ் விஷயத்தில் அவன் அபிப்பிராயத்தையும் கேட்போம்.

ஜானகியம்மாள், சரியென்று எழுந்திருப்பதற்கு முன் அந்த ஸ்தானத்திற்கு சுந்தரம் வந்து நின்றான்.

ஜானகி:—அப்பா சுந்தரம்! காபி சாப்பிடப் போனவனுக்கு எனித்தனை காமதம்; என்ன செய்தாய், மாமா உன்னைப் பார்க்கவேண்டுமென்கிறார்.

சுந்த:—ஆகாரமானதும் அம்மாமியுடன் சற்று பேசிக்கொண்டிருந்தேன்.

வல்லப:—அவளுடன் என்ன பேசிக்கொண்டிருந்தாய்?

சுந்த:—என்ன பேச்சு நம்மகத்தில்? எப்போதும் தர்மாம்பாள் கலியாணப்பேச்சுதான்.

வல்லப:—அதுதானே கேட்க நானும் விரும்புகிறேன்; நான் ஏதாவது சொன்னால் அச்சமயம் 'சரி சரி' யென்று சொல்லிவிடுகிறாள் அவள். பிறகு பக்கத்தில் தனதபிப்பிராயத்தை

மாறுதலாய்ச்சொல்லுகிருள்: ஆகையால், அதையும் தெரிந்து கொள்ள வேணுமென்று நினைத்திருந்தேன்; அவளுடன் என்ன பேசிக்கொண்டிருந்தாய்; உண்மையைச் சொல்.

சுந்த:—என்ன மாமா! நானென்றைக்காவது பரிஹாஸமாகவாயினும் பொய் சொன்னதுண்டா?

சாஸ்திரிகள்:—அடே உன் யோக்கியதையைப் பிரகடனம் செய்ய இது காலமல்ல; கேட்டதற்கு பதில் சொல்.

சுந்த:—நான் ஆகாரம் செய்து எழுந்திருந்தவுடன் "எல்லாரும் சேர்ந்து குழந்தையை எவ்விடத்தில் கொடுப்பதாய் தீர்மானித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

வல்லப:—ஜானகி பார்த்தாயா உன் மன்னியின் தைரியத்தை? நாமெல்லாரும் சேர்ந்து குழந்தையை எங்கேயோ ஒரு கிணற்றில் தள்ள நினைத்திருப்பதாயும் அவளவளைக் காப்பாற்ற உத்தேசித்திருப்பதாயும் அவள் நினைவு.

ஜானகி:—அப்படி நினைக்கக்கூடாது; மன்னிக்குக் கபடமே தெரியாது, குழந்தையை எப்படியாவது தான் நினைத்தபடி நல்ல இடத்தில் கொடுக்க வேணுமென்று தாத்பர்யம்; அதை நாகரீகமாய் கேட்கத் தெரியாதவளுக்கு.—

வல்லப:—சரி, சரி, ரேவதிக்கு ஒண்ணு சாக்ஷி, மேலே சொல் சுந்தரம். நீ யவளுக்கு என்ன உத்தரமளித்தாய்?

சுந்த:—உன்னைக் கேட்காமலும், உனக்குத் தெரியாமலும் நாங்கள் எங்கே அவளைக் கொடுத்துவிடப் போகிறோம் என்றேன், அதற்கு, "ஏற்கெனவே நிச்சயித்தவரை என் தோஷத்தைக்கொண்டு தள்ளினீர்கள்" என்று கேட்டாள்.

வல்லப:—பார்த்தாயா ஜானகி! அவளுக்கு அவ்வரன் பேரிலேயே குறிநிற்கிறது. இந்தக்குட்டி அவளிடம் போய்

அழுதிருப்பாள், என்று நினைக்கிறேன்; அப்படியுண்டோ தர்மாம்பா ?

இதைக் கேட்ட தர்மாம்பாள் மந்தஹாஸத்துடன் தலை குனிந்து நின்றாள்.

வல்லப:—சுந்தரம்! இவள் சொல்லிவிடுவாள்; நான்மாத்திரமில்லாம லிருக்கவேண்டும்; சரியிருக்கட்டும் என்ன நீ பதிலுரைத்தாய் ?

சுந்த:—"அவனுக்குச் சர்வ சொத்துக்களும் போய்விட்டனவென்றும், கிடைத்த உத்தியோகமும் தவறிவிட்டதென்றும், மாமா அஸம்மதப்படுகிறார்" என்றேன்.

வல்லப:—போட்டாயா பழியை என்மேல்; போடு போடு, நான் சுமக்கிறேன்; உங்களுக்கெல்லாம் அவளை நிர்த்தனனுக்குக் கொடுத்து, அவள் காது மூக்கில் ஒன்றுமில்லாமல் ரூ. $2\frac{1}{2}$-க்கு மதுரைப் புடவை கட்டிக்கொண்டு வந்தால் பார்க்க சம்மதம்தான் போலிருக்கிறது. பிறகு அவளென்ன சொன்னாள், ஒளியாமற் சொல்லு.

சுந்த:—"அந்தப் பையனுக்குச் சொத்தில்லை யென்றுதானே மாமாவுக்கு அதிருப்தி; எங்கண்ணா நம்ப தர்மாம்பாளுக்கு லக்ஷரூபாய் சொத்து கொடுக்கத தயாராயிருக்கிறார்; அது போராதோ? நன்றாக ஸம்ஸ்கிருதம் வாசித்த நமது குழந்தையை, ஸம்ஸ்கிருதமே தெரியாத ஒரு மூடனுக்கு, சொத்திருக்கிறதென்று கொடுத்துவிட்டு இவளுடைய அருமையறியாமல் அவன் இவளை வருந்தச்செய்தால் அதை நான் பார்த்து ஸஹியேன் என்றாள்.

வல்லப:—ஸம்ஸ்கிருதம் வாசிக்காதவனெல்லாம் மூடனென்றே அவளுடைய ஸித்தாந்தம்போலிருக்கிறது.

ஜானகி:—ஆம் அவளுத்தேசம் அப்படிதான்; கொஞ்சம் அவளையும் அனுசரித்தால் நமக்கென்ன தோஷம்?

வல்லப:—ஸ்வயம சொத்தில்லாதவனுக்கு, என்னசொத்துக்கொடுத்தாலும் மதிப்பு வருமா? அவளபிப்பிராயப்படியே ஸம்ஸ்கிருதம் படித்தவனும், சொத்துள்ளவனும் ஜகதிலேயே மாப்பிள்ளை கிடைக்காதா? சரி, அவளைக்கூப்பிடு, இவ்விடத்தில், உன் உத்தேசப்படி நடத்த முடியாதென்று முடிவு சொல்லி விடுகிறேன்'

ஜானகி:—அண்ணா! தங்களுக்கிஷ்டமில்லாதபோனால் அவளுக்கு அதைச் சொல்லவேண்டிய தவசியமில்லை. தங்களிஷ்டப்படி நடத்தினால் தானாகவே தெரிந்து கொள்வாள்.

வல்லப:—சரி என்னிஷ்டத்திற்கு அனுகுணமாக நடத்தலாமோ இல்லையோ சொல்லுடா சுந்தரம்! உன்னுடைய அபிப்பிராயத்தைப்.

சுந்த:—தங்களுடைய இஷ்டம்போல் நடத்தும் விஷயத்தில் என் அபிப்பிராயம் என் அபேக்ஷிக்க வேண்டும்?

வல்லப:—என் பிரவிருத்தியில் உனக்கும் சம்மதமில்லையென்கிறாயா? நீங்களெல்லாம ஸ்வபக்ஷத்திலுள்ள துர்ப்பலத்தையறியாமல், பரபக்ஷத்தை தூஷிப்பவர்கள். வருங்காலத்தை நோக்க உங்களுக்குச் சாமர்த்தியமில்லை; உங்களையனுசரிப்பதற்காக குழந்தையை தரித்திரனுக்குக்கொடுத்துப் பிறகு அவளையும் துக்கிக்கவிட்டு நானும் துக்கிக்கேன். இவ்வாறு சொல்லி விட்டு வல்லபசாஸ்திரியார் அவ்விடத்தைவிட்டு எழுந்து போனார். அவருடைய அவ்வித சித்தாந்தத்தைப் பார்த்த தர்மாம்பாளுக்கு, புத்திகலங்கி கண்களில் நீர் ததும்பிற்று. சுந்தரமும் கண்கலங்கி நின்றான். இவர்களைக்

கண்டு ஜானகியம்மாள் தானும் கொஞ்சம் கலங்கி, இவர்களை
ப்பார்த்துக் "குழந்தைகாள், ஏன் வருந்துகிறீர்கள்; நமக்கு
அந்த வான் பிராப்தியிருந்தால் அவனுக்குக் கிடைத்த உத்
தியோகம் ஏன் போகவேண்டும்; அப்படிப்பட்ட குணநிதி
யான பர்த்தா உனக்குக் கிடைக்காமற் போன விஷயத்தில்
என்னைக்காட்டிலும் உனக்கென்ன வருத்தம்? உங்கள் மாமா
சொல்வதும் யுக்தமாகத்தா னிருக்கிறது. அவனுக்குப்
போன உத்தியோகம் மறுபடி கிடைத்தாலும் என்ன சுகம்?
நாளைக்கு உனக்கு நாலு பெண்ணும் பிள்ளையும் பிறந்து நீ
ஸம்ஸாரியாக ஆய்விட்டபிறகு இந்தமாதிரி உத்தியோகம்
போனால் நீ என்ன செய்வாய்; அப்போது நீ நல்லதங்கா
ளைப்போலக் குழந்தைகளை யழைத்துக்கொண்டு இங்கு
தானே வரவேண்டும்; இதற்குக் கீழ்ப்பட்டவரை உன்மாமா
பார்க்கமாட்டார். கவலைப்படாதே" என்று ஸமாதானம்
சொல்லி எல்லாரும் கலைந்தார்கள். வல்லபசாஸ்திரிகள் மறு
நாளே மனுஷியாளை யனுப்பி, திருவையாற்றில் 40-வேலி
குடித்தனமுள்ளவனும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல வ்யுத்பத்தியு
ள்ளவனுமான ஒரு பையனுக்கு தர்மாம்பாளைக் கொடுப்பதா
ய்ப் பேசி 5000 - ரூபாய் வாசுலக்கமும், ரெண்டாயிர ரூபாய்
சீரும், செய்வதாய் நிச்சயித்து ஆனிமீ 20உ சோமவாரம்
கூடிய சுபதினத்தில விவாஹமுகூர்த்தம வைத்து, புருஷோத்
தம ஐயருக்கும் சொல்லி அவரிஷ்டப்படி மதுரையில் விவா
ஹம் நடத்துவதாய் காரியங்கள நடந்துவந்தன.

ஆனி 12-உ யாய்விட்டது. 13உ காலமே ராமேசுவரத்
திலிருந்து வரும் ஒரு பிராமணனும் அவர் ஸம்ஸாரமும
வல்லபசாஸ்திரிகள வீட்டில அன்றையதினம் சமைத்துச்
சாப்பிட இறங்கினார்கள். அவர்கள் சாப்பிட்டுவிட்டு மத்தியா
னம் உட்கார்ந்திருக்கையில் வல்லப சாஸ்திரிகள் அவர்களை

யாரென்று விசாரித்தார். அந்தபிராமணர், ஒரு கடிதத்தை சாஸ்திரிகளிடம் கொடுத்து, "நாங்கள் ராமேசுவரமிருந்து திரும்பி வருகையில் ராமநாதபுரத்தில் 4-நாள் தங்கினேம்; அங்கோர், மகா தேஜோநிதியாகிய ஸன்யாசி வஸிக்கிறார், அவரை நாங்கள் பிரதிதினமும் சேவித்து வந்தோம்; "நாங்கள் கோயம்புத்தூர் வாசிகளென்றும், என்பேர் நடராஜனென்றும், எனது சம்சாரமாகிய இந்த ஸ்திரீ குளித்தலை வக்கீல் கோபாலசாமி ஐயர் பெண்ணென்றும், அவள் பேர் ஸரஸ்வதியென்றும், மதுரையில் ஒரு நாளும், திருச்சியில் இரண்டு நாளும் தங்கி, நாங்கள் ஊருக்குப் போகிறோமென்றும். அவர் கேட்டதின்பேரில் என் விருத்தாந்தங்களைச் சொன்னேன்; கடைசிநாள் இந்தக்கடிதத்தை திருச்சியில் ஆண்டார் வீதியில் வசிக்கும் வல்லப சாஸ்திரிகளிடம் கொடுத்து அந்த வீட்டிலேயே வசித்துவிட்டுப்போகவேணுமென்று சொல்லிக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். நாங்களிங்கே வந்தபிறகு உங்கள் கிருகத்திலுள்ள சீலமும், ஆசாரமும் எங்கள் மனதை யின்னும் 10 நாளிருக்கும்படி தூண்டுகின்றது; அதிலும் உங்கள் மருமாளான இந்தப்பெண் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களைப் படித்தலும், அர்த்தம் சொல்லுதலும் எங்களை ஆனந்த ஸமுத்திரத்தில் முழுகச் செய்கின்றது, என்று சொன்னார்.

சாஸ்திரிகளும், கோபாலசாமி ஐயர் மாப்பிள்ளை யென்றதும், ஒருவிதமானபிரேமாவேசமுள்ள கடாக்ஷத்தால் அவரையும், அதிசீலவதியான அவர் சம்சாரத்தையும் பார்த்துவிட்டு, "யாரந்த ஸன்யாசி! நமக்கு ஏன் லெட்டர் எழுதவேணடும்" என்று சொல்லிக்கொண்டே கடிதத்தைப் படித்தார்; அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"பூர்வாசிரமத்தில் நமது அத்யந்த பிரிய சிஷ்யனான ஸ்ரீ வல்லபனுக்கு ஸர்வாபீஷ்டமுமுண்டாக நாராயணஸ்மரணம், உனது ஸஹோதரியின் புத்ரியான தர்மாம்பாளுக்கு நீ நிச்சயித்த மாப்பிள்ளையான தர்மன் என்னிடம் வந்தான்; நான் ஆசீர்வதித்தேன்; அவனுக்கு, கொஞ்சம் நவக்ரக வைகுண்யமிருந்தது. ஒரு வாரத்திற்குள் அவனுக்குப் போன உத்தியோகம் திரும்பிவரும்; அவனுடைய நஷ்டமான சொந்த சொத்துக்களும், அதைப்போல் பத்துமடங்கு சொத்துக்களும் கிடைக்கும்; அவன் ராமேசுவர ஸ்நானம் செய்து ஊர் வருகையில் நீ உபசரிக்கவேண்டும். அவனே குழந்தை தர்மாம்பாளுக்கு உசிதமான பர்த்தா" இப்படிக்கு; யோகானந்த ஸரஸ்வதி, (பூர்வாசிரமத்தில்):—திருத்திவாஸ சாஸ்திரிகள்.

இதைப்படித்த வல்லப சாஸ்திரிகளுக்கு, புத்தி கலங்கி உடம்பு ஸ்தம்பித்தது. இதைப்பார்த்த நடராஜ சாஸ்திரிகளும், ஸரஸ்வதியம்மாளும் "ஐயோ! நாமே தா துக்க ஸமாச்சாரம் கொண்டுவந்தோமோ" என்று வருத்தப்பட்டார்கள்; ஜானகி. கௌரி முதலானவரும் "என்ன! என்னவென்று" கேட்கவந்தார்கள்; வல்லப சாஸ்திரிகள் அக்கடிதத்தை எல்லாருக்கும் படித்துக்காட்டி, நடராஜசாஸ்திரிகளைப் பார்த்து, தர்மாம்பாளை தர்மனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததையும், இப்போது வேறு மாப்பிள்ளையை நிச்சயித்திருப்பதும், தனது ஆசாரியரால் தனக்கிப்போது கிடைத்திருக்கும் ஆக்ஞையும் சுருக்கமாய்ச் சொல்லி, 'ஐயோ நான் அவசரப்பட்டு வேறொரு மாப்பிள்ளையை நிச்சயம் செய்துவிட்டேனே, ரூபாயும் ஆயிரம் அவர்களுக்கு கைமாட்டி விட்டேனே' யென்று கலங்கினார்.

நடராஜ சாஸ்திரி:—எனக்கிப்போது தாங்கள் சமீப பந்துவாக ஆய்விட்டபடியால் தைரியமாய்ப் பேசுகிறேன்; மன்னிக்கவேண்டும். என் மைத்துனனுக்கு இந்தப் பெண்ணைக் கொடுப்பதாக உத்தேசித்தது மாத்திரம தைவசிந்திதம் என்றே சொல்லத்தக்கது. இவளுக்கும் வேறு மாப்பிள்ளை அர்கனல்ல; அவனுக்கும் வேறு பெண் அனர்ஹைறு, இந்த ஆயிரரூபாய்ப் பணத்துக்காக தாங்கள் யோசிக்கவேண்டாம்; தங்கள் பிரபுத்துவத்துக்கு இது ஒரு பெரிதல்ல: தர்மன் சிறு பிள்ளை பென்றாலும, கோபாலசாமி ஐயராவது, தனக்கு வந்த இவ்வாபத்தை எனக்குக் கொஞ்சம தெரிவித்திருந்தாராளுல் நானே சகலமான கடன்களையும் கொடுத்து அவரை யிப்படிக்கு கஷ்டப்படாமற் செய்வேன்; மகா மானியானதால் அவரப்படிச் செய்யவில்லை; தாங்கள் யோசிக்காமல் முதலினுத்தேசித்த காரியத்தை மாற்றமல் முடியுங்கள்; அப்படித் தாங்கள் மனங்கலங்கிளுல் நானே ஒரு லக்ஷரூபாய் என் மைத்துனனுக்குக் கொடுக்கிறேன்.

வல்லப:—நான் பணத்தைப் பெரிதாக நினைக்கவில்லை; 1000-ரூ. போனாலும போகட்டும்; அவர்கள் துஷ்டர்கள், வியாஜ்யம் வம்புகளை இழுத்துவிடுவார்கள், இதுதான் கலக்கத்தின் காரணம்; இனி யெப்படியாளுலும் துணிந்துவிட்டேன், என் மருமானைத்தங்கள் மைத்துனன் பத்தினியென்றே நினைத்துக்கொள்ளுங்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் தர்மாம்பாள், சுந்தரம், கௌரி, ஜானகி, ஸரஸ்வதி ஆகிய இவர்களின் மனதில் உண்டான ஆனந்தத்தை நாம் சொல்லாமலே எல்லாரும் அறிந்துகொள்வார்கள். அப்போது கௌரியம்மாள்

தர்மாம்பாளைக் கட்டி முத்தமிட்டு, 'வத்ஸே! இன்றுதான் உன்னைக் களிப்புடன் பார்க்கிறேன்' என்றாள். பிறகு எல்லாரும் சிரித்த முகமாய் ஸரஸ்வதியம்மாளை வெகுவாக உபசரித்து, எல்லோரும் சந்தோஷத்துடன் குதூஹலத்தை யடைந்தார்கள்.

இந்த சமயத்தில் காமேசுவரன் திடீரென்று தோன்றி விஸ்வ சாஸ்திரிகளிடம் வந்து, அவர் வாவென்று உபசரிப்பதற்கு முன்னேயே, "நான் என் ஸ்னேகிதன் தர்மனை அழைத்துவந்திருக்கிறேன், அவன் வேலையை யிழந்தவனென்று நீங்கள் அவனை யவமதிக்காமல் உபசரிக்கவேண்டும்; அவனுக்குப் போன வேலையை மறுபடியும் நீங்கினநாள் சம்பளத்துடன் கொடுக்க வேண்டியதென்று கலெக்டரிடமிருந்து நேற்றுதான் உத்திரவு வந்தது. அவனிங்குவர லஜ்ஜையை யடைகிறான்; நான் நிர்ப்பந்தப்படுத்தி யழைத்து வந்தேன்" என்று சொல்லவே, எல்லாரும் சந்தோஷித்து, "தயாராயிருக்கிறோம் அவரை யுபசரிக்க" என்று சொன்னார்கள். காமேசுவரனும் தர்மனும் வந்தார்கள். தர்மாம்பாளைத்தவிர மற்றவர்களெல்லாரும் அவரவர்களுசிதப்படி தர்மனை வரவேற்று உபசரித்தார்கள். தர்மன் தனது தமக்கையைப் பார்த்தவுடன் பரம ஆதரவுடன் அவளிடம் போய் நமஸ்கரித்து குசலத்தை விசாரித்து "நீங்களிருவரும் இங்கிருப்பதாய் முந்தாநாள் ராமநாதபுரத்தில் ஸ்ரீ யோகாநந்த ஸ்வாமிகள் சொன்னார்கள்; நேற்று திருநெல்வேலி போய் கலெக்டரிடம் வேலையை மறுபடியும் உத்திரவு வாங்கிக்கொண்டு இன்று மத்தியானம் இவ்விடம் வந்தேன்" என்றான்.

ஸரஸ்வ:—அப்பா தர்மா! இவ்வளவு கஷ்டங்களையும் எங்களுக்குச் சொல்லாமல், நீங்களே யனுபவித்ததில் எனக்கு

மிகவும் துக்கம்; நம்ம அப்பா இந்தப் பிரமாத கடனுக்காக புதுச்சேரி போகவேண்டுமா? நாங்கள் கொடுக்கவே முடியாத கடனு இது? இவ்வாபத்துக்குக்கூட உதவாத எங்கள்பணம் எதற்கிருக்கிறது? நமது கஷ்டகாலம் உங்களுக்கப்படித் தோன்றவில்லை; நல்லது உனக்கு மறுபடி வேலை கிடைத்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம்.

உடனே நடராஜ சாஸ்திரிகளும் தர்மனைப்பலவாறு உபசரித்துப் பேசினர்.

வல்லப:—காமேசுவரா! இத்தனை நாளாய் எங்கே போயிருந்தாய்?

காமே:—நான் தர்மனைத் தேடிக்கொண்டு, தூத்துக்குடி திருநெல்வேலி முதலிய அனேக இடங்களில் தேடிவிட்டு பலனில்லாமல் நேற்றுதான் ஊருக்கு வந்தேன்; இன்று அவன தற்செயலாய் வந்து சேர்ந்தான்.

வல்லப:—அனுவசியமான கேள்வி கேட்கிறேனென்று கோபிக்கக்கூடாது. இவ்வளவு குணசீலரா யிருக்கிற இவருடைய கீர்த்தி வேலை ஒப்புக்கொண்டு, 10-நாட்களுக்குள்ளே யே தூத்துக்குடி நிறைந்திருந்தது. அப்படிப்பட்டவருக்கு வேலைபோகக்காரணம் என்ன?

காமே:—காரணமா! நாம்தான் காரணம், அவர் வேலையையிழக்க.

வல்லப:—(திகைக்கிட்டு) அதென்ன அப்படிச்சொல்லுகிறாய்?

காமே:—கேளுங்கள் சொல்லுகிறேன்; நமது தர்மாம்பாளும், சுப்புவும் ஒரு திருட்டுக் கேஸில் அகப்பட்டு, இவர்

கோர்ட்டில் விசாரணைக்கு வந்து விடுதலையடைந்த சங்கதி யுங்களுக்குத் தெரியுமல்லவா; அவ்விஷயத்தில் அவ்விடத்திய ஸப் இனிஸ்பெக்டர், அதாவது, இவர்களிருவரையும் தொந்தரவு செய்தவர்; "நல்ல திருட்டுக் குற்றவாளிகளை தனதிஷ்ட ஜனங்களென்று இவர் விடுதலை செய்துவிட்டார்" என்று, காரணங்களையும் கற்பனை செய்து சப் கலெக்டருக்கு ஒரு பெட்டிஷன் எழுதியிருந்தார். துரை புதிதான படியால், "உத்தியோகம் கிடைத்த கொஞ்ச தினங்களுக்குள் இவ்வளவு பெரிய புகாரை சம்பாதித்துக் கொண்டவன் வேலைக்கனர்கன்" என்று இவரை மறு உத்திரவு வரையில் ஸஸ்பெண்டு செய்துவிட்டார். இந்த பேபர் பெரிய கலெக்டருக்குப் போனவுடன் அவர் நமபர் கட்டை வரவழைத்துப் பார்த்து இவரை வேலையிலிருந்து நீக்கினது தப்பென்று எழுதி, வீட்டிலிருந்த நாளுக்குக்கூட சம்பளத்துடன் வேலை கொடுக்கத் தயாரா யிருக்கையில், இவர் தற்செயலாய் நாமே சுவாமிருந்து திருநெல்வேலி போய் கலெக்டரைப் பார்க்க அவர் உத்திரவைக் கையிற் கொடுத்தார், புதன்கிழமை இரவு தூத்துக்குடி போகவேண்டுமாம்.

இதைக்கேட்டவுடன் எல்லாரும் ஆனந்தித்தார்கள். இந்த சமயத்தில் யாரோ சப்பாத்துக்காலுடன் வருவதாய் ச்சத்தம் கேட்டது. யாவரும் மலைத்துப்பார்த்தார்கள். உடனே இனிஸ்பெக்டர் வெங்கட்டராம ஐய்யர் ஒரு ஆள் தலையில் ஒரு பெட்டியைத் தூக்கிவரச்செய்து முன்னே இவரும் பின்னே அந்த ஆளுமாக வந்தார். எல்லாரும் வெகு விமர்சையாய் அவரை வரவேற்று உபசரித்தார்கள். அவர்ப்பெட்டியைக் கீழே வைக்கச்சொல்லிவிட்டு தர்மனைப்பார்த்து "மிஸ்டர் தர்மராஜ ஐயர்! தங்களுடைய தாயார் நகைகளைக் கண்டு பிடிக்க முயன்று கொண்டிருந்தேன். கோயம்புத்தூ

ரில் ஒரு கேஸுக்காகப் போயிருக்கையில் உமது தாயாரின் தங்கை ரத்தினவல்லி பைத்தியம் பிடித்து, தெருத் தெரு வாய்த்திரிவதைக் கண்டேன்; அவளைப்பற்றி விசாரித்ததில் உன் தாயார் நகைகளை அவளும் அவளுடைய தமையனும் திருடினார்களென்றும், அந்த நகைகளை ரத்தினவல்லியின், 2-3-லெக்ஷ ரூபாய் நகைகளுடன் கள்வர் கொண்டுபோய் விட்டார்களென்றும், அதனால் இவளுக்கு சர்வசொத்துக்களும் போய் பைத்தியம் பிடித்ததென்றும் கேள்விப் பட்டேன். பிறகு அக்கள்வர்களின் உளவை விசாரித்ததில் மாடாபுரம் ஜமீன்தாரின் ஏஜெண்டு கண்ணுசாமி தேவருடைய ஆட்களாக விருக்கவேணுமென நிச்சயித்து அவரைத் தேடிச்சென்றேன். அவரிடம் டிபார்டுமெண்டு ரூல்களை விட்டுவிட்டுநயமாகக் கேட்டதில், அதற்கவர், "ரத்தினவல்லி செய்த கெட்ட காரியத்திற்காக இது பதிலாகச் செய்யப் பட்டதென்றும், ரூலுக்கடங்க முடியாதென்றும், தர்மத்துக் குக்கட்டுப்பட்டுக் கொடுப்பதாகவும், அவ்வளவு நகைகளும் அன்றைய ராத்திரி அபஹரிக்கப்பட்டிருந்த ரத்னவல்லியின் தமக்கை யும் அவள் புத்திரனுமே அடையவேண்டுமென்றும் அந்தப் படி சம்மதமானால் அவருடைய, அதாவது ரத்தினவல்லி யின் தமக்கை புத்திரனுடைய கையெழுத்துள்ள முழு நகைகளுக்கும் ரசீது வரவேண்டுமென்றும் நகைப்பெட்டி யைத் தங்கள் ஆட்கள் வசமே அனுப்பப்படுமென்றும் சொ ல்ல. அதற்கு நான் சம்மதித்து இப்பெட்டியுடன் இங்குவந் தேன். காமேசுவர சாஸ்திரிகள் வீட்டில் விசாரித்து, பிறகு இங்கு வந்தேன். பெட்டியைத் திறந்து பார்த்து உமது நகை களையொப்புக்கொண்டு ஜாப்தாபோட்டுரசீது கொடுக்கவேண் டும்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட தர்மன் வெங்கட்டராம ஐய்யரைப்பார்த்து "ஸார், என் விஷயத்தைப்பற்றி தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக நான் மிகவும் கிருதக்ஞனாயிருக்கிறேன்; ஆயினும் ஒரு சங்கதி தங்களுக்கு நான் விக்ஞாபனம் செய்யவேண்டியதாயிருக்கிறது.—அதாவது, தங்களுத் திரவுப்படி என் தாயாருடைய நகைகளை நானெடுத்துக் கொள்ளவும் ரசீது கொடுக்கவும் தடையில்லை. ரத்னவல்லியின் நகைகளையும் நானெடுத்து கொண்டால் ஸ்வர்ண ஸ்தேயம் என்கிற மகாபாதகத்திற்கு நான் ஆளாக ஆய்விடுவேனோ என்று பயப்படுகிறேன்" என்றான். இதை கேட்ட அங்குள்ளவர்களனைவரும் தர்மனுடைய உதாரமான குணத்திற்கு மெச்சினார்கள். இப்படிப்பட்ட புத்திரனை படைய நான் எத்தனை கோடி ஜன்மாந்தரங்களில் எவ்வளவு புண்யம் செய்திருக்க வேண்டுமோ தெரியவில்லை, யென்று தர்மாம்பாள் மனப்பூரித்தாளே தவிர ஸ்திரீகளின் இயற்கைப்படி 2-லக்ஷரூபாய் நகைகள் வீணாகப்போகின்றனவே யென்று துக்கிக்கவில்லை.

வெங்க:-இப்பெட்டியிலுள்ள பூராநகைகளையும் தமக்கே கொடுக்கவேண்டுமென்று இப்பெட்டியை கொடுத்தவர் சொல்லியிருக்கிறார்; அந்தப்படி செய்வதாய் நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். இதிலுள்ள முழுநகைகளுக்கும் தாமே ரசீது கொடுப்பதாய் சம்மதித்தாலொழிய இப்பெட்டியைத்திருப்பி யனுப்ப வேண்டியது தான்,

தர்மன்:—அதற்காக என்னைப்பிறருடைய சொத்தைக் கொள்ளையடிக்கச் சொல்லலாமா தாங்கள் ?

காமே:—ஸகே தர்ம, நீ இதிலுள்ள முழுநகைகளுக்கு ரசீது கொடுத்து எல்லாவற்றையு மொப்புகொண்டு உன் தாயார் நகைகளை மாத்திரம் நீ ஸ்வீகரித்துக்கொள்; பாக்கியை

என்னிடம் கொடுத்துவிடு; நான்பெற்றுக் கொள்ளுகிறேன். அவளுடைய புருஷன் என் மாமியார் வீட்டில் அதாவது அவருடைய மூத்தபெண்ணின் வீட்டில் வசிக்கிறார்.

தர்ம:—உனக் கென்னபாத்தியம், அந்நகைகளிலிருப்ப தாய் நான் நினைத்து, அவைகளை உன்னிடம் ஒப்புவிப்பேன்?

காமே:—என்ன பாத்தியமா? அந்த ரத்தினவல்லி எனது மாமியாருக்கு ஸபத்னீமாதா அவளுக்குத் தான் பாத்தியம் பிடித்திருக்கிறது. பிறகு என் மாமியாரும் என் ஸம்ஸாரமும் தான், அந்நகைகளுக்குபாத்திய ஸ்தர்கள். இவ்வளவு சொன்னால் போதுமோ வார்சு சர்ட்டிபிகேட்டுகூட வேணுமோ? நீ நியாயாதிபதியான சால அதைக்கேட்டாலும் கொடுக்க வேண்டியதுதான்.

தர்ம:—அப்படியானால் எனக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை. உனக்காக நானே ரசீது கொடுக்கிறேன்—என்று சொல்லிப்பெட்டியைத்திறந்தான். கோடி சூரியோதயம் ஆனது போல் வைரநகைகள் பளீர் என்று மின்னின. இப்படிப் பட்ட நகைகளைப் போட்டிருந்தாளா இவனுடைய தாயார்? என்று சிலர் ஆச்சரியப்பட்டார்கள். 'இப்படிப்பட்ட நகை கள் கிடைக்கும் விஷயத்திற்கூட இவன் தர்மத்தைப்பார்க்கிறானே' என்று சிலர் தர்மனைக் கொண்டாடினார்கள்.

உடனே தர்மன் தன் தாயாரின் நகைகளைத் தனியாய் எடுத்துச்சோதித்துப்பார்த்ததில், ஒரு திருகாணிகூட, குறை யாமலிருந்ததைப்பார்த்து, மாடபுரம் ஜமீன் ஏஜண்டை யொருவாறு புகழ்ந்து, வெங்கட்டராம ஐய்யர் சொல்ப்படி முழுநகைகளுக்கும் ஜாப்தாபோட்டு ரசீது கொடுத்தான். ரசீதைப்பெற்றுக்கொண்டு வெங்கட்டராம ஐய்யரையனுமதி கேட்டுகொண்டு வந்த ஆட்கள் போய் விட்டார்கள். உடனே

காமேச்வரன், எல்லா நகைகளையும் பெட்டியிலடக்கம் செய்து வல்லபசாஸ்திரிகளிடம் ஒப்புவித்து விட்டு "ஸகே தர்ம! நீ தர்மத்தை கைவிடாமல் பகவானை நம்பியிருப்பதால் உனக்கபகாரம் செய்தவர்களொவ்வொருவரும் சிக்ஷையடைந்தார்கள். அதாவது, பார் உனக்கு, தர்மம்பாளைக் கொடுக்கக்கூடாதென்றும் அவளைத் தன் பிள்ளைக்குக்கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும் நினைத்த சுந்தரன், தூக்கப்பட்டான். அதற்கு உடந்தையாயிருந்த மீனாக்ஷி மானமிழந்து, தற்கொலை செய்து கொண்டாள். உன் தாயாரின் நகைகளைத் திருடின பட்டாபிராமன் 5-வருஷம் கடுங்காவலுக்குப்போனான். உன்னையும் உன் தாயாரையும் அடிக்க யத்தினம் செய்த ரத்தினவல்லி பயித்தியமானாள். இவைகளெல்லாம் "தர்மமே ஜயிக்கும்" என்பதற்குக் குறிகளென்று சொல்லலாம், இப்போதுனக்கு மேன்மேல் உண்டாகும் நன்மைகளைப்பார்த்தால் உனது மாதா பிதாக்களையும் கூடிய சீக்கிரத்தில் நான் நல்ல ஸ்திதியில் பார்க்கமுடியுமென நினைக்கிறேன்." என்றான். இவர்களிவ்வாறு பேசிகொண்டிருக்கையில் ஒரு பையன் வெகு வேகமாய் ஓடி வந்தான்.

காமேசுவரன் அவனைப்பார்த்து "என்னடா கலியாணராமா! இவ்வளவு வேகம்" என்று கேட்க, அதற்கந்தபையன் "உங்கள் பேருக்கொரு தந்தி வந்திருக்கிறது. உங்கள் அப்பா அதை வெகு சீக்கிரத்தில் உங்களிடம் கொடுத்து அதிலென்ன விஷயமென்று கேட்டுவரச்சொன்னார்" என்று சொல்லி ஒரு லக்கோட்டாவைக் காமேசனிடம் கொடுத்தான். எல்லாரும் பரபரப்படைந்தார்கள். காமேசுவரன் அதைக்கவலையுடன் பிரித்து மனதோடு படித்துப்பார்த்து விட்டு மலர்ந்த முகத்துடன் 'தர்மா! உனததிர்ஷ்டமே அதிர்ஷ்டம், இதைப்பார், என்று சொல்லி அவன் கையிற் கொடுத்துவிட்டு வல்லபசாஸ்

திரிகளைப்பார்த்து" சாஸ்திரிகளே தந்தி சமாசாரம் உங்களைப் பொறுத்தது தான்; தற்காலம் புதுச்சேரியிருக்கும் தங்கள் சம்மந்தி குளித்தலை கோபாலசாமிஐயர் அனுப்பிய தந்தி. இது அவருடைய அநந்த வார்சுகேஸ் பிரிவிகௌன்ஸிலில் அவருக்கு ஸாதகமாய்த் தீர்ப்பாய் விட்டதாய் நேற்று அவருக்குத்தந்தி வந்திருக்கிறதாம், நாளைதினம் ஸம்ஸார ஸமேதமாய் இவ்விடம் வருகிறாராம்; அவருக்கிப்போது பதினைந்து லக்ஷ ரூபாய்க்கு மேற்பட்ட பெருமானமுள்ள சொத்துக்களும் கிடைத்துவிட்டன. தைவாதீனமாய் அவருடைய பழய சொத்துகளும், இது வரையில் ஏலம் போடப்படவில்லை. நாளைக்கே கடன் தொகைகளைக் கோர்ட்டில் கட்டிவிட்டால் எல்லா சொத்துக்களும் மறுபடி கிடைத்துவிடும், என்றான். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் எல்லாரும் சந்தோஷித்தார்கள். ஸரஸ்வதி தர்மாம்பாளைக்கட்டிகொண்டு, அம்மா உனது அதிர்ஷ்டம் தான் இவ்வளவு பேருக்கும், என்று சொன்னாள். இவ்வாறு ஒன்றின் பின்னொன்றாகக்கிடைத்த சந்தோஷ சமாசாரங்களைப்பார்த்து ஆனந்தித்து வல்லபசாஸ்திரிகள் 'எனது புத்தி மோசத்தால் இப்படிப்பட்டவனை விட்டு யாருக்கோ நம்குழந்தையைக் கொடுப்பதாய் யோசித்தேன், எனது ஆசாரியரே முதல் முதலில் நிவர்த்தித்தவராகையால் அவருக்கு முதலில் நமஸ்கரிக்கிறேன்' என்று சொல்லி, எல்லாருக்கும் கற்கண்டு சர்க்கரை தாம்பூலம் முதலானவைகளை வழங்கி, சபையைக் கலைத்தார். ஸரஸ்வதி தர்மாம்பாளுக்கும் தர்மனுக்கும் நடக்கவேண்டிய கலியாணத்தை யனுப்வித்துவிட்டுப் பிறகு ஊருக்குப்போகிறதென்று தனது பர்த்தாவின் அனுமதிபெற்று அவருடன் தனது பிதாமாதாக்களின் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

காமேச்வரன் தனக்குப் புதிதாய்க் கிடைத்த நகைகளில் சுமார் 20 ஆயிரம் ரூபாய் பெறுமான இரண்டொரு பெரிய நகைகளை, தர்மபாளுக்கு இனாமாகக்கொடுத்தான். பாக்கியை, ஸ்ரீரங்கத்திலிருக்கும் தனது மாமியாராகிய நீலாம்பாளிடம் சேர்த்து, அவைகளை 4 பங்குகளாகப்போட்டு அவளுக்கொருபங்கும், அவளுடைய 3 பெண்களுக்கு மூன்று பங்குமாகப் பிரித்து, அவர்களில் மூத்தபெண்ணாகிய தனது சம்சாரத்தின் பாகத்தைத்தானே வீட்டிற்கு கொண்டுவந்து சேர்த்தான். அவன் ஸம்சாரம் ஸ்ரீரங்கத்தில் புருஷப்பிரஜையைப்பெற்று சௌக்கியமானுளென்பதை இதுவரையில் நமக்கு விவரிக்கச்சாவகாசமில்லாமற் போனதைப்பற்றி வாசகர்கள மன்னிக்கவேண்டும். வல்லபசாஸ்திரிகள் திரும்ப மன்றாடியும் அது அவ்வளவு நாகரீகமாகாதென்று சொல்லி தர்மன் ராத்திரி காமேசுவரன் வீட்டிற்குப்போய்விட்டான்.

வல்லபசாஸ்திரிகள் திருவையாற்றில் நிச்சயித்தவரை எப்படி நிராகரிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் மறுநாள் திருவையாற்றிலிருந்து ஒரு ஆள் வந்து ஒரு கடிதத்தைக்கொடுத்தான். இதில் தங்களுக்கொரு ஆசௌசம் வந்துவிட்டதால் 20உ முகூர்த்தம் நடத்த முடியாதென்றும் வேறு முகூர்த்தத்திற்றான் கலியாணத்தை நடத்த வேண்டுமென்றும், அப்படிக்கு சம்மதமில்லாவிட்டால் வாங்கின பணத்தைத்திருப்பி கொடுத்து விடுகிறோமென்றும் தாங்கள் வேறொரு பெண் பார்த்து கலியாணம் செய்து கொள்கிறோமென்று எழுதியிருந்தது.

அந்த லெட்டரைப்படித்ததும், வல்லபசாஸ்திரிகளுக்கு, அதிலுள்ள எழுத்துகள் அனைவற்றும் அமிருதபிந்துக்களாகத் தோன்றின. இவர் "பெண்ணுக்கு இந்தவருஷமே கலியாணம்

நடத்தவேண்டியதவசியமா யிருப்பதால் 20-க்கு மேற்பட்டு எங்களுக்குக் கலியாணம் நடத்த சௌகரியமில்லையென்றும், ஆகையால் வேறு பிள்ளையைப் பார்த்துக் கலியாணம்செய்து விடுவதாயும், லெட்டரில் கண்டபடி பணத்தை யனுப்பிவிடும் படியும் லெட்டர் எழுதிக்கொடுத்து சங்கர சாஸ்திரியென் பவரைத் திருவையாற்றிற்கனுப்பி பணத்தை வசூல் செய்துவிட்டார்.

குறிப்பிட்ட தினத்தில் கோபாலசாமி ஐயர் திருச்சிக்கு வந்தார். அவருடைய கேஸ் ஜெயித்துவிட்ட ஸங்கதியை யறிந்த கடன்காரர்களெல்லா மவரிடம் வந்து "நாங்கள் செய்த ஜப்தியை ரத்துசெய்துகொள்ளுகிறோமென்றும், தங்களுக்குச்சௌகரியமான காலத்தில், கடன்தொகைகளைத்தங்களிஷ்டம்போல் பெற்றுக்கொள்ளுகிறோமென்றும் சொன்னார்கள். ஆயினும் கடனை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்ய இஷ்டமில்லாத கோபாலசாமி ஐயர், தனக்குப் புதிதாகக் கிடைத்த பூமிகளில் தூரத்திலிருந்த சில பாகங்களை விற்பதாய்ப் பேசி 2-லக்ஷ ரூபாய் வாங்கி கடன்களைக் கொடுத்துத் தீர்த்தார். பிறகு ஸரஸ்வதி, நடராஜ சாஸ்திரிகள் தர்மன் இவர்களுடன் குளித்தலைக்கு வந்து, முன்னைவிட அதிகப் பெருமையாயும் சுகமாயும் வசித்துவந்தார். ஸாவித்திரி திருச்சியிலிருக்கும்பொழுதே தர்மனால் கொடுக்கப்பட்ட தனது நகைகளை யணிந்து அவனுடைய சமாசாரங்களைக் கேட்டு, அவனை மெச்சி வல்லப சாஸ்திரிகள் வீட்டிற்கு ஒரு நாள் வந்து தர்மாம்பாளைப்பார்த்து சந்தோஷித்து அவளைக் கட்டி முத்தமிட்டாள்.

பிறகு தர்மன், தனது தாயார் அடைந்த கஷ்டங்களைக் கேட்டு மிகவும் வருந்தினானென்றாலும் அவளுக்கும் தனக்கும் அநாதத்தன்மையுண்டுபண்ணின அந்தக் குச்சுவீட்டுப்

பிராமணனை வரவழைத்து, அவனுக்குப் புத்திமதிகளைச் சொல்லி, எங்கள் சஷ்டகாலம் உன் மனதில் அப்படியெல்லாம் தோன்றச்செய்ததெனச் சமாதானப்படுத்தி அவன் பயத்தை நீக்கியனுப்பினான். மதுரையில் ஆனிமீ 20வ கலியாண முகூர்த்தத்திற்காக வேண்டிய காரியங்களை யெல்லாம் புருஷோத்தம ஐயர் நடத்திவந்தார். இதனிடையில் தாராபுரமிருந்து கலியாணியும் சுப்பராம ஐயரும் வல்லப சாஸ்திரிகளிடம் வந்து, அவர்கள் பெண்ணை, சுந்தரனுக்குக் கொடுப்பதென்றும் முகூர்த்தம் ஆனிமீ 30வ நடக்கிறதென்றும் தீர்மானித்துக்கொண்டு மதுரைக்குப் போய் புருஷோத்தம ஐயருக்கும் அவ்விஷயங்களைச் சொல்லி அவருடைய அனுமதியையும் பெற்றுத் தாராபுரத்தில் கலியாணத்திற்காக காரியங்களை நடத்திவந்தார்கள். இவ்விரு கலியாணங்களிலும் வரசுல்க்கம் வாங்குகிறதில்லை யென்றும், இஷ்டமிருந்தால் அப்பணத்திற்குப் பெண்ணுக்காவது பிள்ளைக்காவது நகைகள் போட்டுவிடுவதென்றும் இத்தக்ஷிண தேசத்தில் இப்போது வழக்கத்திலிருக்கிற, இந்த துர் வழக்கத்தை நாமனுசரிக்கவேண்டாமென்றும் தீர்மானமாயிற்று. அதனால் தர்மாம்பாளுக்கு ஜானகியின் நகைகளும், காமேசுவரனால் கொடுக்கப்பட்ட நகைகளும், தவிர புருஷோத்தம ஐயரால் போடப்பட்ட மீனாக்ஷியின் நகைகளில் ஒரு பாதியும் கிடைத்தது. மற்றொரு பாதியை சுந்தரத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் கல்யாணியின் பெண்ணுக்கு புருஷோத்தம ஐயர் போட்டார். சுப்பராமய்யரும் புருஷன் தரிக்கக்கூடிய நகைகளெல்லாம் சுந்தரத்திற்கு ஏற்கனவே இருந்தபடியால் தனது பெண்ணுக்கு ரூ. 5000-க்கு நகை செய்து கொடுத்தார். மகா வைபவத்துடன் தர்மனுக்கும் விவாகம் சாஸ்திரப்படி நடந்தது. வதூவரர்கள் இருவரும் ஸம்ஸ்கிருதத்

தில் விசேஷ பாண்டித்யமுள்ளவர்களானகயால் சகலமான மந்திரங்களின் தாத்பர்யங்களேயும அறிந்து, நமது வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் எவ்வளவு மகிமையென்று களிப்புற்ருர்கள். தர்மாம்பாள் அழகிலும் ஆபரணங்களிலும விதலையிலும் வல்லபனது பிரேமையிலும் ஈடற்றவளாயினும், சர்வஸ்திரீஜன ஸாதாரணமான கர்வத்தையடையாமல் விநயத்துடனும, வெட்கத்துடனும், கலியாண கோலங்களே யனுபவித்தாள். புருஷோத்தம ஐயர், தான் பிறந்தது முதல் இதைத்தவிர வேறு கலியாணம் செய்ய, நேராதபடியால சிலவை யபார்பாய்ச்செய்து வெகு விமர்சையாய் கல்யாணத்தை நடத்தி, சம்பந்திகளுக்கு வஸ்திரங்களினுலும் ஆபரணங்களினுலும் பணங்களினுலும் ஏராளமான மரியாதைசெய்து ஊருக்கனுப்பினர். அநிரூபமான அழகும், ஆடையாபரணங்களு மடைந்த வதூவரர்களே சகல ஜனங்களும் பார்த்து ஆநந்தித்து ஆசீர்வதித்தார்கள். குளித்தலேயில் கிருகப்பிரவேசக் கலியாணமும் வெகு சிறப்பாய் நடந்தேறிற்று. சுந்தரத்தின் கலியாணம் தாராபுரத்தில் பிரபலமான ஆனந்தத்துடன் நடந்தது.

புருஷோத்தம ஐயர், வல்லபசாஸ்திரிகள், கோபாலசாமி ஐயர், காமேசுவரன் வெங்கடராம ஐயர் ஆகிய இவர்கள் சுப்புவின் சாமர்த்தியத்திற்கு மெச்சி அவள் குமாரனுக்கு லக்ஷரூபாய் சொத்துக்கொடுத்து காமேசுவரன மச்சினி ஸரஸ்வதியென்கிற பெண்ணேயடுத்த வருஷம் கலியாணம் செய்வித்து, அவனுக்கு மேன்மேலும படிக்க உதவிசெய்தார்கள். தர்மனுக்கு ஒருவருஷம் கழித்து தாசில்வேலேக்கு உத்தரவு கிடைத்தது. பிறகு மூன்றுவருஷம் கழித்து தர்மனேத் திருச்சிருப்பள்ளியில் டிப்டி கலெக்டராக ஏற்படுத்தினர்கள்.

## உபஸம்ஹாரம்.

அதற்குள் தர்மாம்பாள் ஒரு ஆண் குழந்தை பெற்றனள். அவள் தன் வீட்டு வேலைக்கு வேண்டுமட்டில் வேலைக்காரர்களும் வேலைக்காரியும் இருந்தபோதிலும், தனது பர்த்தாவுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைத்தானே குறையன்றியில் செய்து கொண்டு ஒழிந்தவேளையில் தர்மசாஸ்திரங்களையும், புராணங்களையும் பார்த்துக்கொண்டு, தன்னிடத்தில் பிரேமை நிறையான தனது பர்த்தாவுடன் நிர்வாண பாஷையிலேயே வியவகாரம் செய்துகொண்டு இல்லறசுகம் இனிபாக்கியில்லையென்று சொல்லும்படி சகல சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு தனது குரல் தனது பர்த்தாவைத்தவிர மற்ற புருஷர்களுக்குத் தெரியாமல் பிராசீன சாஸ்திரப்படி ஸ்திரீ தர்மங்களை ஒழுங்காய் நடத்தி வந்தனள். அவளுக்கு த்ரிமூர்த்திகள்போல் மூன்று புருஷப்பிள்ளைகளும் ஸாக்ஷாத் தான் மாயையோ வெனச்சொல்லத் தகுந்த ஒரு கன்யாரத்னமும் பிறந்தன. அவைகளில் ஒரு குழந்தையை வல்லபசாஸ்திரிகள் தன் புத்ரனாகச் செய்துகொண்டார். ஜானகியம்மாள் தர்மாம்பாளைவிட்டு ஒருக்ஷணமேனும் இருக்க சக்தியற்றவளாதலால், அவளுக்குத் தனது பணத்தையும் கொடுத்து அவளுடன்கூட இருந்தே தன் ஆயுளை தள்ளினாள். ஸாவித்ரீ தனது சொந்தப்பெண்ணின் வயிற்றில் பிறந்த குழந்தைகளையும் தர்மனுடைய குழந்தைகளையும் குளித்தலைக்குக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு தாலாட்டி சீராட்டி வளர்த்து ஆனந்தித்தாள். சுந்தரம் M. A. பாஸ் செய்துவிட்டு அநேக வேலைகள் கிடைத்தபோதிலும் அவைகளை யெல்லாம் மறுத்துவிட்டு ஒரு டிப்டி கலெக்டருக்குப் பூராவாக வேலை கொடுக்கக்கூடிய தனது குடும்பத்தைத் தானே சீருடன் பார்த்துக்கொண்டு, முன்னிலும் மூன்று மடங்கு ஜாஸ்தியான

நப்படி யடைந்துகொண்டும், தனது பிதாவுக்கு வேண்டிய பணிவிடைகளைத் தானேசெய்து கொண்டு, தனது தர்மபத்னியுடன் தர்மங்களையும் இல்லற சுகங்களையும் அனுபவித்து கொண்டும், மதுரையில் பெரும் கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கும் மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தன. அவற்றில் ஒன்றை வெங்கட்டராம ஐயர் தனது புத்திரனாக்கிகொண்டு தானும் மதுரையில் ஒரு வீடு வாங்கிக்கொண்டு சர்க்காரில் பென்ஷன் பெற்று சுகமாய் வாழ்ந்து வந்தார். சுப்புவின் குமாரனும் பி-ஏ-பி. எல். பரீக்ஷையிற்றேறி திருச்சியிலேயே பெயர்பெற்ற வக்கீலாக விளங்கி வந்தான்.

ஓம், தர்மோ ஜயதி.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1